வரு.73 இல. 41 ★

www.vaaramanjari.lk

/Thinakaran.lk /ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன்

வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

தினகரன் வாரமன்ஜரி

2021 ஒக்டோபர் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

October 10 Sunday, 2021

32பக்கங்கள் 40/-

05

ஐவரை பலியெடுத்த இராகலை தீவிபத்து

17

இராணுவத்தின் 72 ஆவது ஆண்டு நிறைவு!

18

ரவுடி பேபியாக ஹன்சிகா

24

400 சிக்சர்கள்; ரோகித் சாதனை!

மருத்துவர்களின் மேற்பார்வையின் கீழ் மாணவர்களுக்கு பாடசாலைகளிலே தடுப்பூசி

18,19 வயதுடையோருக்கு 21ம் திகதி முதல் ஆரம்பம்

ஜனாதிபதி கோட்டாபய சுகாதார அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கல்

பாடசாலை மாணவர்களுக்கு மருத்துவரின் மேற்பார்வையின் கீழ் பாடசாலை வளாகத்திலேயே தடுப்பூசி செலுத்தப்பட வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுகாதார அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளதாவது,

18 மற்றும் 19 வயதுக்கு இடைப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கையை 21ஆம் திகதி

04

தமிழக அகதி முகாம்களிலிருந்து தப்பியோடிய 64 பேர் கைது!

தென்னாபிரிக்காவுக்கு படகு மூலமாக செல்கையில் சர்வதேச கடலில் சிக்கினர்

இந்தியாவில் இருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் முகாம்களில் இருந்து 64 பேர் படகு மூலமாக தென்னாபிரிக்காவுக்கு தப்பிச் செல்ல முயன்று மாலைதீவு அருகே சர்வதேச பொலிஸாரிடம் சிக்கியதாக கூறப்படுகிறது. இது குறித்து தமிழக கியூ பிரிவு பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்தியாவில் இருக்கும் இலங்கைத் தமிழ்

04

மாகாணசபைத் தேர்தல் அறிவிப்பு வெளியான நிமிடத்திலிருந்து

வடமாகாண முதலமைச்சர் வேட்பாளர் போட்டி ஆரம்பம்

மாகாணசபைத் தேர்தலை அடுத்த வருட முற்பகுதியில் நடத்த அரசாங்கம் விடுத்த அறிவிப்பினைத் தொடர்ந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் முதலமைச்சர் வேட்பாளர் யார் என்ற சர்ச்சை மீண்டும் உருவாகத் தொடங்கியுள்ளது.

வடமாகாண முதலமைச்சர் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா அவர்களே என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியாகிய

மாவை, சரவணபவன், சித்தா, கணேஷ், செல்வம், கஜேந்திரகுமார் ஆகியோரது பெயர்கள் முன்னணியில்

சில நிமிடங்களிலேயே வெளிப்படையாக ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார்.இவரது அறிவிப்பைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சிக்குள்ளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளுக்குள்ளும் பாரிய சர்ச்சை உருவாகியுள்ளது.

பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு படுதோல்வி அடைந்த மாவை சேனாதிராஜா முதலமைச்சர் வேட்பாளருக்கு எவ்வகையிலும் பொருத்தமற்றவர் என தமிழரசு கட்சிக்குள் இருந்து குரல்கள் எழத் தொடங்கியுள்ளன.

அதேபோன்று தமிழர் விடுதலைக் கழகமான டெலோ கட்சியின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளரை நிறுத்த வேண்டும் என அக்கட்சி வலியுறுத்தி வருகின்றது.

இல்லாவிடில் தனித்துப் போட்டியிடுவதாகவும் டெலோ முன்னர் அச்சுறுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

04

பணம் அனுப்புவதை இலகுபடுத்த மத்திய வங்கியின் புதிய செயலி

04

முப்பெரும் தேவிகளுக்குரிய நவராத்திரி விரதத்தையொட்டி கொழும்பு மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்தில் வைக்கப்பட்டுள்ள அலங்கார கொலுவினைப் படத்தில் காணலாம்.

(படம்: கொழும்பு கோட்டை நிருபர்)

இந்திய அரசின் தேசிய பாதுகாப்புச் சபையின் ஆலோசகர் ஸ்ரீ அஜித் குமார் டுவாலை, இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட டெல்லியில் சந்தித்து உரையாடிய போது எடுக்கப்பட்ட படம்.

'நாங்கள் ஏன் ஓடி ஒளிய வேண்டும்?'

-வதந்திகளுக்கு நடேசன் பதிலடி

பென்டோரா ஆவணங்களில் எமது பெயர் வந்துள்ளமை குறித்து சுயாதீன விசாரணை நடத்தப்படவேண்டும்எனநான் கோரியுள்ளேன். அதனால் நானும் என் மனைவி யும்

04

ஆசிரியர் சங்கங்களுக்கு பிரதமருடன் பேச வாய்ப்பு

பட்ஜட்டுக்கு முன் ஏற்பாடு என்கிறார் தினேஷ்

பட்ஜட்டுக்கு முன்னர் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்த ஆசிரியர் தொழிற்சங்கங்களுக்கு வாய்ப்பு வழங்க எதிர்பார்ப்பதாகக் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் (08) அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேநேரம், தேசிய வேதன

04

வைத்தியர்களின் ஓய்வுபெறும் வயது 63 ஆக மாற்றம்

அரச வைத்தியர்களின் ஓய்வுபெறும் வயதெல்லை தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது. அதனடிப்படையில் அரசாங்க சேவையிலுள்ள வைத்தியர் ஒருவர் ஓய்வுபெறும் வயதெல்லை

04

பாடசாலை மாணவருக்கு ஒரு தடுப்பூசி போதுமானது

-டாக்டர் அசேல குணவர்தன

04

அமைதிக்கான நோபல் பரிசு இரு ஊடகவியலாளருக்கு!

04

ஒக்டோபர் 15ஆம் திகதி முதல் புகையிரத சேவை வழமைக்கு!

21க்கு பின்னரே மாகாணங்களுக்கிடையில்

சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கு அமைய எதிர்வரும் 15ஆம் திகதி முதல் அனைத்து புகையிர சேவைகளையும் முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக இலங்கை புகையிர சேவைகள் திணைக்களத்தின் பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

எனினும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை

04

நாட்டில் குண்டு வெடிப்பு, குழப்பங்களுக்கு காரணம் யார்?

முஸ்லிம்களை கறிவேப்பிலையாக மாற்றும் அவலத்திற்கு இடமில்லை

முகம்கொடுக்க தயார் என்கிறார் அதாவுல்லா MP

ஏ.ஜி.எம் தௌபீக்

இந்த நாடு உலகில் உள்ள பலருக்கும் தேவைப்பட்டதனால் பல காலங்கள் யுத்த ரீதியாக அடிமைப்படுத்தி பின்னர் மீண்டு போனாலும் கூட தொடர்ந்தும் காலாகாலமாக

04

வந்தான் வரத்தான்கள் முஸ்லிம்களை வழிநடத்துவதா?

ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்கிறார் ஹரீஸ் MP

நாங்கள் அரசுக்கு சார்பான எம்.பிக்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் இருக்கின்ற போதிலும் இந்த உயரிய சபையில் உறுப்பினர்களாக சிரேஷ்ட அரசியல்வாதிகளான இம்தியாஸ் பாக்கீர் மாக்கர், கபீர் காஸிம், ரவூப் ஹக்கீம் போன்றோர்களும் முஜிபுர் ரஹ்மான் போன்றோர்களுக்கும் இருக்கிறார்கள். இவர்களுக்கு இல்லாத ஞானமா இவருக்கு வந்துள்ளது.

04

பல மில்லியன் ரூபா செலவில் புனரமைத்த வீதியின் அவலம்!

நான்கு வருடங்களில் பயணம் செய்ய முடியாத நிலை

கிளிநொச்சி விசேட நிருபர்

கிளிநொச்சியில் மக்கள் விசனம்

கிளிநொச்சி கரைச்சி பிரதேசத்தின் ஸ்கந்தபுரம் முட்கொம்பன் பிரதான வீதி பல மில்லியன் ரூபா செலவில் காபெற் வீதியாக புனரமைப்புச் செய்யப்பட்டு நான்கு வருடங்கள் முடியும் முன்னரே வீதி முற்றாக சேதமடைந்து சாதாரண துவிச்சக்கர வண்டியில்

04

கோடரியை காட்டி 21 பவுண் கொள்ளை

யாழ். இணுவிலில் மூவர் கைது

யாழ் குறூப் நிருபர்

யாழ். இணுவில் பகுதியில் நள்ளிரவு வீடு புகுந்து கோடரியை காட்டி அச்சுறுத்தியதுடன்

04

புலிகளின் சொத்துக்கள் எதுவும் என்னிடமில்லை

-வெளிப்படையாக அறிவித்தார் கே.பி

விடுதலைப் புலிகள் அமைப்பின் சொத்துகள் எதுவும் தன்னிடம் இல்லை எனவும் இறுதிப்போரின்போது தான் மலேசியாவில் தலைமறைவாகியிருந்ததாகவும் புலிகள் அமைப்பின் சர்வதேச வலையமைப்பின் பிரதானியாக கருதப்பட்ட கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி இரணைமடுவில் அமைந்துள்ள செஞ்சோலையில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர், இறுதி யுத்தத்துக்கு பிறகு புலிகளின்

04

விக்கல் வீராச்சாமி

கட்சியிலிருந்து என்னை வெளியேற்ற நீங்க யார் எண்டு டயானா எம். பி சஜித் ஜயாவை பாத்து கேட்டிருக்கிறா.....

அவ மட்டுமா, ஏற்கனவே பலர் கேட்டு ரணில் ஜயாவோட பேச்சுவார்த்தை– யும் நடத்தி முடித்து விட்டனர், நீங்க எந்த உலகத்தில இருக்கிறீங்க...!!!

சமூக ஊடக செல்வாக்கை உலகுக்கு உணர்த்திய அந்த 6 மணித்தியாலங்கள் !

- பேஸ்புக் செயலிழப்பால் உலகே ஸ்தம்பித்தது
- உலகில் சனத்தொகையில் 57 வீதமானோர் சமூக ஊடகப் பாவனையாளர்கள்.
- அவர்களில் 7.9 மில்லியன் பேர் இலங்கையர்
- பேஸ்புக்கின் ஆரம்பம் 2004.
- தற்போதைய பாவனையாளர்கள் 2853 மில்லியன் பேர்
- உலக செல்வந்தர்கள் பட்டியலில் 3 வது இடத்தில் இருந்த மார்க்கை 05 வது இடத்திற்கு பின்தள்ளிய செயலிழப்பு

மலேசிய நாட்டின் முன்னாள் பிரதமரான கலாநிதி மஹாதீர் முஹம்மட் 1990களில் ஒரு தடவை இவ்வாறு குறிப்பிட்டார்.

'19 ஆம் நூற்றாண்டில் எவரிடம் கடற்படை இருந்ததோ அவர்கள் தான் அந்நூற்றாண்டின் பலசாலிகள். 20 ஆம் நூற்றாண்டில் எவரிடம் விமானங்கள் இருந்தனவோ அவர்கள் அந்நூற்றாண்டின் பலசாலிகளாக விளங்கினர். அந்த வகையில் 21 ஆம் நூற்றாண்டில் எவரிடம் ஊடகம் இருக்கின்றதோ அவர்கள் தான் அந்த நூற்றாண்டின் பலசாலிகளாவர்'

முன்னாள் பிரதமரான மஹாதீர் முஹம்மட் ஊடகத்தின் பலத்தையும் முக்கியத்துவத்தையும் அன்றே அடையாளம் கண்டிருந்தார் என்பதற்கு இவ்வாசகங்கள் நல்ல எடுத்துக்காட்டாகும். அதாவது இந்த 21 ஆம் நூற்றாண்டு ஆரம்பமாவதற்கு ஒரு தசாப்தத்திற்கு முன்னரே அவர் இந்த உண்மையை அறிந்திருந்தார். அந்தளவுக்கு சக்தி மிக்கது தான் ஊடகம். அவரது எதிர்வுகூறல்படி, உலகில் பலம் மிக்க சக்தியாக மனித வாழ்வுக்கு தேவையான எந்தவொரு விடயத்தையும் அறிந்து கொள்ள தகவல் என்பது இன்றியமையாத ஒன்றாக திகழுகின்றது. அந்த வகையில் தகவல்களை வழங்கும் பிரதான மார்க்கமாக வெகுஜன ஊடகங்கள் விளங்குகின்ற போதிலும் இந்த ஊடகங்களை விடவும் விரைவாகவும் வேகமாகவும் மனித வாழ்வுக்கு தேவையான அனைத்து தகவல்களையும் பெற்றுக்கொள்ளக்கூடிய தளமாக சமூக ஊடகங்கள் காணப்படுகின்றன. அதாவது செய்திகள், ஆவணங்கள், தகவல்கள், விளம்பரங்கள், நாடகங்கள், சினிமாப் படங்கள் உள்ளிட்ட அனைத்தையும் தன்னகத்தே கொண்டிருக்கும் சமூக ஊடகங்கள், நேரடி ஒளி ஒலி பரப்பு செய்யப்படக்கூடிய வசதிகளை மாத்திரமல்லாமல் வெகுஜன ஊடகங்களை ஒருங்கிணைக்கும் தளங்களாகவும் உள்ளன.

அதாவது இணைய வலைத்தளங்களின் வழியாகத் தகவல்கள், கருத்துக்கள், தொழில்சார் நலன்கள் மற்றும் வெளிப்பாட்டின் பிற வடிவங்களை உருவாக்கவும் பதிவேற்றங்கள், தவறான பதிவுகள், அடிமையாதல், குணாதிசய மாற்றம், கலாசார கலப்பு தணிக்கை தொடர்பான பதிவுகள், இனவாத, மதவாத கருத்துக்கள், வெறுப்பு பேச்சுக்களை பரப்புதல் போன்றவாறான பல தீமைகளும் இடம்பெறவே செய்கின்றன.

ஆன போதிலும் கூட சமூக ஊடகங்களின் பயன்பாடு 2020 முதல் பெரிதும் அதிகரித்துள்ளன. அதற்கு கொவிட் 19 தொற்று பரவுதல் முக்கிய காரணமாகும்.

அந்த வகையில் இன்றைய உலக சனத்தொகையில் 57 வீதமானோர், அதாவது 4.48 பில்லியன் மக்கள் 2021 ஜூலையாகும் போது சமூக ஊடகப் பாவனையாளர்களாக இருந்தனர் என்று குறிப்பிட்டுள்ள 'டேட்டா ரீபோட்டல்' இணையதளம், இலங்கையில் 2021 ஜனவரியாகும் போது 7.90 மில்லியன் பேர் சமூக ஊடகப் பாவனையாளர்களாகக் காணப்பட்டதாகவும் இப்பாவனையாளர்களின் எண்ணிக்கை 2020, 2021 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 1.5 மில்லியன்களால் அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேநேரம் உலகிலுள்ள சமூக ஊடகங்களில் அதிகூடிய பாவனையாளர்களைக் கொண்ட சமூக ஊடகமாக 'முகநூல்' என்ற 'பேஸ்புக்' திகழ்வதாகச் சுட்டிக்காட்டியுள்ள இந்த இணையதளம், 2021 ஜூலையாகும் போது 2853 மில்லியன் பேரைப் பாவனையாளர்களைக் கொண்டிருந்த பேஸ்புக் முதலாமிடத்தையும் இரண்டாமிடத்தைப் பெற்றுள்ள 'யூரியூப்' என்ற சமூக ஊடகம் 2291 மில்லியன் பாவனையாளர்களையும் மூன்றாமிடத்தைப் பிடித்துள்ள 'வட்ஸ்அப்' என்ற சமூக ஊடகம் 2000 மில்லியன் பேரையும், நாலாமிடத்தைப் பிடித்துள்ள 'இன்ஸ்டகிராம்' என்ற சமூகம் ஊடகம் 1386 மில்லியன் பேரையும் பாவனையாளர்களாகக் கொண்டிருக்கின்றது எனவும் குறிப்பிட்டுள்ளது.

இத்தரவுகளின் படி, உலகில் அதிகளவிலானோர் பயன்படுத்தும் சமூக ஊடகங்களாக பேஸ்புக், வட்ஸ்அப், இன்ஸ்டகிராம் என்பன விளங்குகின்றன. இந்த மூன்று சமூக ஊடகங்களும் பேஸ்புக் நிறுவன உரிமையாளரான மார்க் சுக்கர்பேர்க் (Mark Zuckerberg) என்பவருக்குரியதாகும்.

இவர் அமெரிக்காவின் நிவ்யோர்க் நகரைப் பிறப்பிடமாகக் கொண்டவராவார். 1984 ஆம் ஆண்டு மே மாதம்14 ஆம் திகதி பிறந்த இவர், ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொண்டிருக்கும் போது இணையவழி சமூக ஊடக வலையமைப்பாக 2004 பெப்ரவரி 04 ஆம் திகதி பேஸ்புக்கை அறிமுகப்படுத்தினார். முதலில் தமது பல்கலைக்கழக நண்பர்களான எடுடாரோ சாவ்ரின், டஸ்ரின் மாஸ்கோவிட் போன்ற நண்பர்களுடன் இவ்வலையமைப்பை அவர் ஆரம்பித்தார். அதன் பின்னர் ஐவி லீக், ஸ்டேர்ன்போர்ட் பல்கலைக்கழக மாணவர்களும் அதனைத் தொடர்ந்து 'அப்பல்', 'மைக்ரோசொப்ட்' நிறுவனங்களின் ஊழியர்களும் இணைந்து பாவனையாளர்கள் வட்டம் விரிவடையத் தொடங்கியது. இந்தப் பின்புலத்தில் 2004 இல் 7 பேருடன் ஆரம்பமான இச்சமூக ஊடகம், 2006 இல் 150 ஊழியர்களைக் கொண்டிருந்ததோடு 2020 டிசம்பராகும் போது 58,604 பேரை முழு நேர ஊழியர்களாகக் கொண்டுள்ள பாரிய நிறுவனமாக வளர்ச்சி பெற்றுள்ளது.

இன்று முழு உலகிலும் ஆழ அகலமாகக் கால்பதித்துள்ள சமூக ஊடகமாக விளங்கும் பேஸ்புக், கடந்த 17 வருட காலப்பகுதிக்குள் உலகில் அதிகூடிய சமூக ஊடகப் பாவனையாளர்களைத் தம் பக்கம் ஈர்த்துள்ளது. அத்தோடு உலகில் அதிக செல்வாக்கு மிக்க சமூக ஊடகமாக விளங்கும் இந்த பேஸ்புக் இற்றை வரையும் 111 மொழிகளில் பயன்படுத்தப்படுகின்றன.

இந்தப் பின்னணியில் சமூக ஊடக வலைத்தளங்களின் முக்கியத்துவத்தை நன்குணர்ந்திருந்த பேஸ்புக் உரிமையாளரான மார்க், 2009 இல் அறிமுகமான 'வட்ஸ்அப்' சமூக வலைத்தளத்தை 2014 இலும், 2010 இல் அறிமுகமான 'இன்ஸ்டகிராம்' என்ற சமூக வலைத்தளத்தை 2012 இலும் வாங்கி தம் நிறுவனத்தின் கீழ் கொண்டு வந்தார்.

இவ்வாறு உலகின் விசாலமான சமூக ஊடக வலையமைப்பாக விளங்கும் பேஸ்புக் வலையமைப்பு (2021) ஒக்டோபர் மாதம் 04 ஆம் திகதி இலங்கை நேரப்படி இரவு 08.00 மணியளவில் திடீரென செயலிழந்தது. இதன் விளைவாக பேஸ்புக், வட்ஸ்அப், இன்ஸ்டகிராம் ஆகிய மூன்று சமூக ஊடகங்களும் முடக்கமடைந்தன. இதன் விளைவாக அவற்றின் பாவனையாளர்கள் செய்வதறியாது அங்கலாய்து திகைத்து நின்றனர். இதற்கு பாவனையாளர்களின் பதிவேற்றங்களும் கருத்துக்களும் நல்ல சான்றுகளாக உள்ளன. இச்சமூக ஊடகங்களின் செயலிழப்பு வெறும் ஆறு மணித்தியாலங்கள் தான் நீடித்தன. ஆனால் அக்காலப்குதிக்குள் மாத்திரம் 10.6 மில்லியன் பேர் இந்நிலைமை குறித்து தம் முறைப்பாடுகளைத் தெரிவித்திருக்கின்றனர். ஆனால் கடும் முயற்சியுடன் 06 மணித்தியாலங்களில் இவை வழமை போன்று செயற்பட தொடங்கின. 'இந்த செயலிழப்புக்கு ரவுட்டரில் ஏற்பட்ட முறைமாற்ற தொழில்நுட்ப கோளாறே காரணம்' எனக் குறிப்பிடப்பட்டதோடு பேஸ்புக் நிறுவன உரிமையாளர் மார்க் பாவனையாளர்களிடம் மன்னிப்பும் கோரினார்.

ஆனால் உலக பணக்காரர்களில் மூன்றாவது இடத்தில் இருந்த மார்க்கை, இச்செயலிழப்பு ஐந்தாவது இடத்திற்கு பின்தள்ளியது. அதேநேரம் அவருக்கு 06 பில்லியன் அமெரிக்க டொலர்கள் சொத்து நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. அமெரிக்க பங்கு சந்தையில் பேஸ்புக்கின் மதிப்பு சரிந்ததால் அவருக்கு இந்நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது. அத்தோடு விளம்பரம் மூலமான வருமானத்தை மணித்தியாலயத்திற்கு 7 கோடி ரூபா படி இழந்த இந்நிறுவனம், குறித்த 06 மணித்தியாலயங்களிலும் 42 கோடி ரூபா இழப்பையும் சந்தித்துள்ளது. ஆனால் 2019 இல் 14 மணித்தியாலயங்கள் செயலிப்பை இந்நிறுவனம் ஏற்கனவே சந்தித்திருப்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

ஆகவே சமூக ஊடகங்கள் மனித வாழ்வில் மேற்கொண்டிருக்கும் ஆக்கிரமிப்பு, செல்வாக்கு என்பவற்றை பேஸ்புக் சமூக ஊடக வலையமைப்பின் திடீர் செயலிழப்பு தெளிவாகவே வெளிப்படுத்தின. அதனால் இன்றைய நவீன டிஜிட்டல் தகவல் தொழில்நுடப யுகத்தில் சமூக ஊடகங்கள் ஒரு பெருவெடிப்பு என்றால் அது மிகையாகாது. அதற்கு பேஸ்புக், வட்ஸ்அப் மற்றும் இன்ஸ்டகிராமின் பங்களிப்பு அளப்பரியதாகும்.

மர்லின் மரிக்கார்...✍



வெகுஜன ஊடகங்கள் விளங்கிக் கொண்டிருக்கின்றன.

இந்த வெகுஜன ஊடகப் பரப்பில் 'சமூக ஊடகம்' என்றொரு புதிய வடிவம் 2000 களில் தோற்றம் பெற்றதோடு முழு உலகையும் ஒரு குக்கிராமமாகவும் உருவாக்கிவிட்டது. அதுவும் மனித வாழ்வில் இரண்டறக் கலந்த ஒன்றாக மாறியுள்ளது. பெரும்பாலானவர்களின் நேர காலம் அதில் தான் கழிகின்றன. நாளொன்றுக்கு ஒரு தடவையாவது சமூக ஊடகங்களில் உலாவாதவர்களை விரல்விட்டெண்ணி விடக்கூடியளவுக்கு நிலைமை காணப்படுகின்றது. பெரும்பாலானவர்கள் சமூக ஊடகங்களின் அடிமைகளாக இருக்கின்றனர். அந்தளவுக்கு மனிதனை ஆகர்ஷித்திருக்கின்றன இந்த சமூக ஊடகங்கள்.

இவ்வாறு இச்சமூக ஊடகங்கள் முக்கியத்துவம் பெற்று விளங்க, அவற்றில் என்ன தான் இருக்கின்றது என்பதை அதன் தாக்கத்தையும் செல்வாக்கையும் அறியாதவர் தான் வினவுவர்.

இன்றைய நவீன யுகத்தில் 'தகவல்' என்ற சொல் வேறு எந்தவொரு சொல்லும் பெற்றிராத முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. பகிரவும் உதவுவனவாக சமூக ஊடகங்கள் இருக்கின்றன. ஆனால் இச்சமூக ஊடகங்களின் தோற்றத்திற்கு முன்னர் வெகுஜன ஊடகங்கள் குறிப்பிட்ட ஒரு சிலரின் கட்டுப்பாட்டிலும் நிர்வாகத்திலும் இருந்தன. ஆன போதிலும் அக்கட்டுப்பாட்டை தகர்தெறிந்துள்ளன இந்த சமூக ஊடகங்கள். கையடக்கத் தொலைபேசி வைத்திருப்பவர் அனைவரும் ஊடகவியலாளர், தகவல் பரிமாற்றாளர், கருத்துக்களை உருவாக்குபவர், பகிர்பவர் என்ற நிலையைத் தோற்றுவித்திருக்கின்றன.

இவ்வாறு நவீன மனித வரலாற்றில் புரட்சிகர மாற்றங்களுக்கு வித்திட்டுள்ள சமூக ஊடகங்களில் நன்மைகள் இருப்பது போன்று தீமைகளும் இருக்கவே செய்கின்றன. குறிப்பாக தகவல் பரிமாற்றம், நிகழ்ப்படம் பதிவேற்றம், கருத்துக்கள் பரிமாற்றம், குழு உரையாடல், வேலைவாய்ப்புத் தகவல்கள், பொழுதுபோக்கு, உலக சமூகங்கள் அல்லது சர்வதேச நபர்களின் நட்புறவு, சிறந்த படைப்புகள் அனைத்தையும் சமூகத்தில் பரப்புதல் போன்றவான நன்மைகள் காணப்படுவது போன்று தனிநபர் தகவல் திருட்டு, சட்டவிரோதப்

தெலங்கானா மாநிலத்தின் சுற்றுலா மற்றும் கலாசார அமைச்சரான வி.ஸ்ரீனிவாஸ் கவுட்டை 2021 செப்டம்பர் 30 ஆம் திகதியன்று ஹைதராபாத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் இந்தியாவுக்கான துணை உயர் ஸ்தானிகர் துரைசுவாமி வெங்கடேஸ்வரன் சந்தித்தார். துணை உயர் ஸ்தானிகரும் அமைச்சரும் தங்கள் கருத்துகளையும், தெலங்கானா மற்றும் இலங்கைக்கிடையே பௌத்தமத, சுற்றுலா வளர்ச்சிக்கான திட்டங்களையும் பரிமாறிக்கொண்டனர். தனது மாநிலத்தில் உள்ள பனிகிரி, கோடி லிங்கலா, நெலகொண்டப்பள்ளி மற்றும் போதன்குர்த்தி போன்ற பௌத்த தலங்கள் பற்றி கவுட் இச்சந்திப்பில் மேலும் விபரித்தார். தெலங்கானா சுற்றுலா சபைத் தலைவர் உப்பலா ஸ்ரீனிவாஸ் குப்தாவும் உடனிருந்தார்.

பிரிவினை நிகழ்ச்சித் திட்டத்திலேயே ஐ.நா மனித உரிமைகள் குழு உள்ளது

இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம அளிக்கும் விளக்கம்

கொரோனா பெருந்தொற்று ஆபத்து நிலவுகின்ற சூழலில், சிறிய தவறுகளையும் பெரிதுபடுத்தி அரசியல் ஆதாயம் தேடும் ஒரேயொரு அரசியல் கட்சி இலங்கையின் எதிர்க் கட்சியாகுமென்று வாகன ஒழுங்குறுத்துகை, பேரூந்து போக்குவரத்துச் சேவைகள், புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். எமக்கு வழங்கிய செவ்வியிலேயே இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கே: உலகம் எதிர்கொண்டுள்ள கொவிட் தொற்று பரவல் குறித்து கவனம் செலுத்தாது இலங்கையின் உள்ளக விடயங்களுக்கு முன்னுரிமை அளிப்பதில் சில சர்வதேச அமைப்புகள் செயல்படுகின்றன. இது தொடர்பில் உங்கள் நிலைப்பாடு?

பதில்: அனைத்து நாடுகளிலும் இந்த சர்வதேச அமைப்புகள் உள்ளக விடயங்கள் தொடர்பில் மதிப்பீடுகளை மேற்கொள்ளும். இதில் எந்தப் பிரச்சினையும் கிடையாது. இருந்த போதும் சில அமைப்புகள் அனைத்தையும் விமர்சனமாகவே பார்க்கும் சுபாவத்தைக் கொண்டுள்ளன. மறு பக்கத்தில் சில சுயாதீன அமைப்புகள் கொவிட் தொற்று நோய் சூழலை அரசாங்கம் கையாண்ட விதத்தை பாராட்டியுள்ளன.

ஆதரவாகவும் எதிராகவும் இருப்பவர்கள் காணப்படுகின்றனர். தங்களுக்கு வேறு ஏதும் நிகழ்ச்சி நிழல்கள் இருந்தால் நாம் மேற்கொள்ளும் அனைத்தையும் அவர்கள் எதிர்ப்பார்கள். பொதுவாக நமது நாட்டில் முன்னெடுக்கப்பட்டுள்ள தடுப்பூசி செயற்பாடுகளை மிகவும் சுயாதீனமான அரசு சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் பாராட்டியுள்ளன. தற்பொழுது நிலைமைகள் முன்னேற்றம் கண்டுள்ளன. சாதகமான அபிவிருத்திகள் தொடர்பில் சில சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் பாராமுகமாக இருக்கின்றன. எல்.ரி.ரி.ஈயினர் தோல்வியடைவதை அவர்கள் விரும்புவதில்லை. சில நாடுகள் எமக்கு எதிராக மனித உரிமை பிரேரணைகளை நிறைவேற்றும். ஆனால் அவ்வாறு நிறைவேற்றும் நாடுகளே ஏனைய நாடுகள் மீது ஏவுகணைத் தாக்குதல்களை நடத்துகின்றன. இறைமை உள்ள நாடுகள் மீது ஏவுகணைத் தாக்குதல்களை நடத்திக் கொண்டு ஏனைய நாடுகள் மீது மனித உரிமை குறித்த பிரேரணைகளை நிறைவேற்றுவது நகைப்புக்கிடமானது.

கே: புலம்பெயர்ந்து வாழ் தமிழர்களுக்கு அண்மையில் ஜனாதிபதி அழைப்பு விடுத்த விடயம் தொடர்பில் தனது நிலைப்பாட்டைப் பகிரங்கப்படுத்த ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிஷேல் பச்லெட் தவறியுள்ளார். இது தொடர்பில் என்ன நினைக்கின்றீர்கள்?

பதில்: இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை. ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் எல்.ரி.ரி.ஈயினருக்கு ஆதரவாக உள்ளார் என்பது தெளிவாகிறது. பிரிவினை என்ற நிகழ்ச்சித் திட்டத்திலேயே அவர்கள் தொடர்ந்தும் இருப்பதால் புலம்பெயர்ந்து வாழ் தமிழர்களுடன் மேற்கொள்ளப்படக் கூடிய சாதகமான விடயங்களை அவர்கள் விரும்பவில்லை.

> **புலம்பெயர்ந்து வாழ் தமிழர்களுடன் சாதகமான விடயங்களை மேற்கொள்வதை அவர்கள் விரும்பவில்லை. எல்.ரி.ரி.ஈயினருக்கு ஆதரவாகவே உள்ளனரென்பது தெளிவாகிறது**

கே: அரிசிக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டை நீக்குவதற்கும், அரிசித் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் ஒரு தொகுதி அரிசியை இறக்குமதி செய்வதற்கும் அமைச்சரவை தீர்மானித்தது. இதனை சற்று விளக்க முடியுமா?

பதில்: இது சிறந்ததொரு செயற்பாடாகும். குறிப்பிட்ட விலையொன்றை அனைத்துக்கும் நிர்ணயிக்க முடியாது. குறிப்பாக அரிசி போன்ற உணவுப் பொருட்களுக்கு அவ்வாறு நிர்ணயிக்க முடியாது. உணவுப் பொருட்கள் உள்ளடங்கலான பொருட்களுக்கு சந்தையில் காணப்படும் கேள்வி மற்றும் நிரம்பலின் அடிப்படையிலேயே விலைகள் தீர்மானிக்கப்படுவதால் அனைவரும் இதற்காக செயற்பட வேண்டும். அரசாங்கம் எப்பொழுதும் நுகர்வோரின் பக்கமே உள்ளது. நுகர்வோரின் பக்கத்திலிருந்தே நாம் விடயங்களைப் பார்க்கின்றோம். நுகர்வோரின் பக்கத்திலிருந்து நாம் பார்க்கும் போது விவசாயிகள் பாதிக்கப்படுவதுடன், ஏனைய குழப்பங்களும் ஏற்படுகின்றன.

இதனால் சந்தையே அதற்கான விலையைத் தீர்மானிக்க விடுவதற்கும், தேவையான அரிசிக் கையிருப்பை இறக்குமதி செய்வதற்கும் பிரதமரினால் நல்லதொரு முடிவு எடுக்கப்பட்டது. சந்தையில் போலியான தட்டுப்பாட்டை ஏற்படுத்த 'டீலர்கள்' முயற்சித்தால் கையிருப்பில் உள்ள அரசி சந்தைக்கு வெளியிடப்படும். இந்த முடிவு இதற்கு முன்னரே எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

கே: அரிசி ஆலை உரிமையாளர்களால் அரிசிக்கான சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டமை நியமற்றது என்றும் அரிசிக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்கும் அரசாங்கத்தின் முயற்சியை மழுங்கடிக்கும் முயற்சி என்றும் சிலர் விமர்சிக்கின்றனர். இது பற்றி உங்கள் கருத்து?

பதில்: இதனை இவ்வாறு ஒரு பக்கம் சார்பிலும் கூறலாம். எனினும், இது இரு தரப்பு சார்பில் பார்க்கப்பட வேண்டும். உணவுப் பொருட்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதால், அவற்றுக்கான விலைகளை அல்லது தரத்தினை நியமிக்க முடியாது. விலையைத் திணிப்பது அரசாங்கத்துக்கும், அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் சிரமமானது. அரிசி ஆலை உரிமையாளர்கள் விலைகள் குறித்துக் கருத்துத் தெரிவிப்பதை நான் கண்டுள்ளேன். எனினும், சந்தையில் அரசியின் விலை இதை விடக் குறைவாக இருக்கலாம். இதனால் ஏற்படக் கூடிய நன்மை விவசாயிகளுக்குச் சென்றடையுமாயின் அது சிறந்த நடவடிக்கையாகும்.

கடந்த போகத்தில் ஒரு கிலோ நாடு நெல் 50 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. இம்முறை ஒரு கிலோ நாடு 60 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்டது. ஒரு கிலோவை அரசாங்கம் 60 ரூபாவுக்குக் கொள்வனவு செய்வதாயின் தனியார் துறையினர் தமது இருப்புக்களுக்காக அதனை விடக் கூடுதலாகச் செல்ல வேண்டும். ஒரு கிலோ நெல்லை 65 ரூபா அல்லது 70 ரூபாவுக்குக் கொள்வனவு செய்தால் ஒரு கிலோ அரசியை 95 ரூபா அல்லது 98 ரூபாவுக்கு விநியோகிப்பது சாத்தியமானது. இவ்வாறான நிலையில் விலையை சந்தையே தீர்மானிக்க இடமளிப்பது சிறந்த முடிவாகும். எனினும், தற்காலிக தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டால் அதற்கு இடமளிக்காது சமாளிப்பதற்குப் போதுமான அரசி கையிருப்பில் இருப்பது அவசியம்.

> **கொவிட் பெருந்தொற்று காலத்தில் சடலங்களின் மேல் நின்று அரசியல் செய்வதை எதிர்க்கட்சி நிறுத்த வேண்டும்**

கே: நாடு முன்னேறிச் செல்ல முடியாத நிலைக்குப் பொருளாதார ரீதியில் தள்ளப்பட்டுள்ளது என எதிர்க் கட்சியினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கு நீங்கள் எவ்வாறு பதிலளிப்பீர்கள்?

பதில்: 2015ஆம் ஆண்டு அரசாங்கத்தை நாம் கையளிக்கும்போது மொத்தத் தேசிய உற்பத்தி 7.5 வீதமாகக் காணப்பட்டது. மீண்டும் அரசாங்கத்தை எம்மிடம் கையளிக்கும்போது மொத்தத் தேசிய உற்பத்தி 3.2 ஆகக் குறைக்கப்பட்டிருந்தது. எந்த வித தொற்றுநோயோ அல்லது வேறெந்த நிலைமையும் இல்லாமல் இவ்வாறு வீழ்ச்சி கண்டிருந்தது. இது தற்பொழுது ஒரு வீதமாகியுள்ளது. கொவிட் சூழ்நிலையை விட எதிர்க்கட்சியினர் ஆட்சி செய்த காலத்தில் பொருளாதாரம் மோசமாக வீழ்ச்சியடைந்திருந்தது. மத்திய வங்கியின் அறிக்கையை எடுத்துப் பார்த்தால் இது தெளிவாகப் புரியும். அவ்வாறானதொரு கட்சியே, குழுவே எமக்கு ஆலோசனை வழங்குவது நகைப்புக்கிடமானது. இதனை நாம் பெரிதாக எடுத்துக் கொள்ளத் தேவையில்லை.

இதனை விடுத்து நாளுக்கு நாள் வீழ்ச்சி கண்டு வரும் தமது கட்சிக்குள் என்ன நடை பெறுகிறது என்பது பற்றியே அவர்கள் கவனம் செலுத்த வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லையென்றும், சடலங்களின் மேல் நின்றி அரசியல் செய்யக் கூடாது என்றும் சில நாட்களுக்கு முன்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி கூறியிருந்தார். இது அவருடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களாலேயே கூறப்பட்டுள்ளது. தொற்றுநோய் சூழல் காலப் பகுதியில் சடலங்களின் மேல் நின்று அரசியல் செய்வதை அவர்கள் நிறுத்த வேண்டும்.

பொருளாதாரத்தை விரிவு படுத்துவதற்கான அழுத்தம் சமூகத்திலிருந்து வரவேண்டும்

இனித வரலாற்று கதை பற்றி டெஸ்மன்ட் மொரிஸ் எழுதிய நூலொன்றை நிர்வாண மனிதன் என்னும் பெயரில் எஸ்.எம். பந்துசீல சிங்கள மொழியில் மொழி பெயர்த்துள்ளார். ஆரம்ப யுகம் தொட்டு ஆடை அணியத் தொடங்கிய, நெருப்பை பாவிக்கும் வரையான மனித பரிணாமம் பற்றிய அடிப்படை கட்டமைப்பு அதில் குறிப்பிடப் பட்டிருந்தது.

பொருளாதாரம் மற்றும் சமூகத்தை வழிநடத்தும் முறைகளை கற்ற அறிஞர்கள் உலகை பாரிய மாற்றத்துக்கு உட்படுத்தியுள்ளார்கள். அடிக்கடி ஏற்படும் சவால்களும் கூர்மையானவை. காலநிலை அனர்த்தங்கள், யுத்த மோதல்கள் மற்றும் தற்போது காணப்படும் கொவிட் தொற்றும் சரித்திர சான்று கூறும். ஆனால் பின் தங்கிவிடவில்லை. மீண்டும் எழும். புதிய கட்டமைப்புடன் எதிர் காலம் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச நடத்தை வேறான விடயம். இலங்கை மக்களின் அன்றாட நடவடிக்கை குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்.

எம் அனைருக்கும் எதிர்பார்ப்புகள் உண்டு. அன்றாடம் நிம்மதியாக வாழ வேண்டியது அவசியமாகும். சிறியவர் பெரியவர்,ஏழை பணக்காரன் என்ற பேதமில்லை. பணம் சம்பாதிப்பதும் அப்பணத்தை செலவளித்து மகிழ்ச்சியுடன் சமாதானமாக காலத்தை கழிப்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும். போதுமானளவு பணம் இருந்தால் வாங்குவது உள்நாட்டு பொருட்களா வெளிநாட்டு பொருட்களா என்பது முக்கியமல்ல. நல்ல தரத்தை கருத்தில் கொண்டு குறைந்த விலைக்கு கிடைப்பதை வாங்குவார்கள். பிள்ளைகளின் எதிர்காலம், அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு போதுமான சக்தி குறித்தே அனைத்து குடிமக்களுக்கும் அக்கறை உண்டு.

மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். கடமையாகும். தேசிய சக்திகள், பலவித பதவிகள், பல விதமான கருத்துகளின் அழுத்தங்களுக் கேற்பவே முடிவுகளை எடுக்கிறார்கள். மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவது எவ்வாறு,எங்கு என்பது குறித்து மக்களுக்கு அக்கறையில்லை, தொலைபேசி வந்தது எவ்வாறு என்பதை பாவனையாளர்கள் கருத்தில் கொள்வதில்லை. வெளிநாட்டவர்களினது என இணையதளத்தை ஒதுக்குவார்களா? உணவு,ஆடை அணிகலன்கள் மற்றும் வாகனங்கள் பற்றியும் வேறு விதமாக சிந்திப்பதாகத் தெரியவில்லை.

சிறு அளவிலான வெளியாரின் கருத்துக்களுக்கு அமைய எழுப்பப்படும் கிளர்ச்சி குறித்து கவனம் செலுத்தும் ஆட்சியாளர்கள் முடிவு எடுக்கும்போது தங்களின் பிரபல்யம் குறைந்து விடும் என பயப்படுகிறார்கள். பாவனையாளர்களின் நலன் குறித்து அக்கறை கொள்வதில்லை. அது பெரும் தவறாகும். நீண்ட நாட்களாக முடிவு காணப்படாதிருந்த அக் கட்டமைப்பு ஒரு திருப்பு முனையை அடைந்துள்ளது. தற்போது பொருளாதாரம் பலவீனமாகவுள்ளது. தேவைகள் பெரும் கட்டுப்பாட்டுக்கு ஆளாகியுள்ளன. ஆரம்பத்தில் பொருளாதாரம் விசாலமானது. மக்களின் தேவைகளை பூர்த்திசெய்தது. ஆடையொன்றை தயாரிக்கும் அளவுக்கு போதுமான பொருளாதாரம் என்ற துணிவு காணப்பட்டது. தொடர்ந்து பொருளாதாரம் சுருங்கியதால் சிறிய அளவுக்கு ஏற்ப ஆடை தயாரிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இருக்கும் பொருளாதாரத்தில் பெரிதாக எதுவும் செய்ய முடியாது.

தெளிவு படுத்திக் கொள்ள வேண்டிய முக்கிய விடயமொன்றுள்ளது. வீடு வாசல், வாகனம், நல்ல விடுமுறை சுவையான உணவுகள். பெறுமதி வாய்ந்த வீட்டு உபகரணங்கள் என அனைவருக்கும் இலக்குண்டு. பொருளாதாரம் காரணமாக அனைத்தும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மக்களுக்கும் தேவைகளுள்ளன.

எல்லா மதங்களிலும் வாழ்க்கையை வாழும் விதம் பற்றி கூறப்பட்டுள்ளது. வரவு செலவுக்கேற்ப வாழும் முறை குறித்த புரிந்துணர்வு மக்களிடம் உண்டு.

சமூகத்தை திறக்க வேண்டும். மனித வாழ்வுக்கு சுதந்திரம் அவசியம். இருக்கும் பொருளாதாரத்துக்கு ஆடை தயாரிப்பது ஆட்சியாளர்கள் செய்ய வேண்டியதில்லை. பெரும்பான்மையான மக்களின் தேவைகளை ஆராய்ந்து அதனை நிறைவேற்றக்கூடிய பொருளாதாரத்தை உருவாக்குவதே தேவையாகும். அசாதாரணமான பீதியால் பீடிக்கப்பட்டுள்ள சிறு பிரிவினரின் ஆய்வின்படி பொருளாதாரத்தை கட்டுப்படுத்துவது சரியல்ல. கடந்த காலத்தில் ஆட்சி செலுத்திய எல்லா அரசாங்களும் மக்களை கட்டுப்படுத்தியதோடு இறுதியில் அதன் எல்லைக்கே வந்துள்ளது. அரசாங்கமோ அல்லது அரசியல் தலைவர்களோ மாத்திரமல்ல, சமூகமாக நாம் அனைவரும் இதற்கு பொறுப்பு கூறவேண்டியவரகள். பொருளாதாரத்தை விரிவு படுத்த,சரியான கொள்கைகளுக்கான அழுத்தமொன்று சமூகத்திலிருந்து அவசியமாகும்.

தமிழில்: வீ.ஆர்.வயலட்

அமைதிக்கான நோபல் பரிசு இரு ஊடகவியலாளர்களுக்கு

2021 ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு, இரண்டு ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

அமைதிக்கான நோபல் பரிசு, பிலிப்பீன்ஸைச் சேர்ந்த மரியா ரெஸ்ஸாவிற்கும் ரஷ்யாவைச் சேர்ந்த டிமிட்ரி முரட்டோவுக்கும்) வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகத்திற்கும் நீடித்த அமைதிக்கும் அடித்தளமாகக் கருதப்படும் கருத்துச் சுதந்திரத்தை பாதுகாக்கும், இவர்கள் இருவரின் முயற்சியை அங்கீகரித்து, இந்த விருது வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகமும் பத்திரிகைச் சுதந்திரமும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகிவரும் இந்த உலகில், அதைப் பாதுகாக்க முயற்சி செய்யும் அனைத்து ஊடகவியலாளர்களினதும், பிரதிநிதிகளே இவர்கள் இருவரும் என்று நோபல் பரிசுக் குழுவின் தலைவி கூறியுள்ளார்.

58 வயதான, ரெஸ்ஸா, பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி றொட்ரிகோ டுட்டார்ட்டே அரசாங்கத்தின் சர்ச்சைக்குரிய போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையை எதிர்த்துப் போராடியவர் என்பதும், 59 வயது முரட்டோவ், ரஷ்யாவில் பல ஆண்டுகளாகக் கருத்துச் சுதந்திரத்துக்காக போராடி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

புலிகளின் சொத்துக்கள்...

சொத்துகள் உங்கள் வசமானது என தகவல்கள் வெளியாகின. அந்த சொத்துகளுக்கு என்ன நடந்தது என ஊடக வியலாளர்களால் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே கே.பி. மேற்கண்ட வாறு தெரிவித்தார். இறுதிப்போரின்போது நான் மலேசியாவில் தலைமறைவாகியிருந்தேன். எனக்கு எந்தவொரு சொத்தும் வழங்கப்படவில்லை. நாளாந்த செலவுக்கே பணம் வழங்கப்பட்டது.

அவ்வாறு சொத்துகள் இருந்திருந்தால் எமது மக்களை அழிவில் இருந்து மீட்டிருக்கலாம். அவர்கள் (புலிகள்) எவ்வாறான சொத்துக்களை விட்டுச்சென்றனர் என்பது எவருக்கும் தெரியாது. எனவே, இப்பிரச்சினைக்கு இத்துடன் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

அத்துடன் புலம்பெயர் தமிழ் மக்களுக்கு அண்மையில் ஜனாதிபதி விடுத்த அழைப்பு தொடர்பில் இதன்போது ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். ஜனாதிபதியின் தூர நோக்கு தான் இது. அதனை வரவேற்பது தமிழர்களாகிய தமது பொறுப்பு எனவும் படிப்படியாக கைகோர்த்து பயணிக்க வேண்டும் எனவும் கூறிய அவர், இந்த வாய்ப்பை நழுவவிடக்கூடாது என்றார்.

ஆசிரியர் சங்கங்களுக்கு...

கொள்கையைப் பாதுகாக்கும் வகையில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதிபர், ஆசிரியர்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரித்த அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய மற்றும் ஊடகக்குழு உறுப்பினரான வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் இதனைக் குறிப்பிட்டார். இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒக்டோபர் 15ஆம் திகதி...

மாகாணங்களுக்கு இடையிலான பஸ் சேவை ஆரம்பிக்கப்படாது என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கு அமைவாகவே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.ஒக்டோபர் முதலாம் திகதி முதல் மாகாணங்களுக்குள் முன்னெடுக்கப்படும் பஸ் போக்குவரத்து, சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கு அமைவாகவே முன்னெடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மருத்துவர்களின் மேற்பார்வையின் கீழ்...

வியாழக்கிழமை முதல் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு, அவர்கள் கல்வி கற்கும் அந்தந்தப் பாடசாலைகளிலேயே தடுப்பூசியைச் செலுத்திக் கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் சுகாதார மற்றும் கல்வி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளேன். நேற்று முன்தினம் நடைபெற்ற கொவிட் ஒழிப்புக்கான விசேட செயலணியின் மெய்நிகர் கூட்டத்தின் போதே இந்த முடிவுகள் எடுக்கப்பட்டதுடன் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது, அனைத்துப் பாடசாலைகளிலும் முன்னெடுக்கப்படும் தடுப்பூசி செலுத்தல் வேலைத்திட்டமானது வைத்தியர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படும்.

பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியுள்ள மேற்படி வயதுப் பிரிவினருக்கான தடுப்பூசி செலுத்தல் வேலைத்திட்டம் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும்.

இதுவரையில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கான தடுப்பூசி செலுத்தல் 100 சதவீதமளவிலும் 30 வயதுக்கு மேற்பட்டோருக்கான தடுப்பூசி செலுத்தல், 98 சதவீதமளவிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 20 முதல் 30 வயதுக்கு இடைப்பட்டோரில், இதுவரை தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத மக்களுக்குத் தடுப்பூசி செலுத்தல் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளேன்.

12 முதல் 19 வயதுக்கு இடைப்பட்ட மாற்றுத்திறனாளி சிறுவர்களில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோருக்குத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்பதனையும்

நாட்டிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் காணப்படும் சிகிச்சை நிலையங்களின் ஊடாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பதனையும் மாகாண சுகாதாரப் பணிப்பாளர்கள் தெரிவித்தனர். இதேவேளை தற்போது நாட்டில் நடைமுறையில் உள்ள மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை இம்மாதம் 21ஆம் திகதி வரையில் நீடிக்கவும், கொவிட் ஒழிப்புச் செயலணி தீர்மானித்தது.

தடுப்பூசி செலுத்தலை வெற்றிகரமானதாக்க ஒத்துழைப்பு வழங்கிய சுகாதார மற்றும் பாதுகாப்புத் துறையினர் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும் ஜனாதிபதி தனது நன்றிகளையும் தெரிவித்தார்.

பணம் அனுப்புவதை இலகுபடுத்த மத்திய வங்கியின் புதிய செயலி

'SLRemit' என்ற பணம் அனுப்பும் செயலியொன்றை இலங்கை மத்திய வங்கி விரைவில் அறிமுகம் செய்யவுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

முறைசாரா வழிகளைப் பயன்படுத்தி பணம் அனுப்பும் முறையை இழக்கச் செய்யும் குறிக்கோளுடன் புதிய, குறைந்த செலவிலான பண அனுப்பும் முறைகள், வழிகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

இலங்கைக்கென புதிய பண அனுப்பும் வழிகளை ஆய்வுசெய்து பரிந்துரைகளை மேற்கொள்வதற்கும் இலங்கை மத்திய வங்கி குழுவொன்றினை நியமித்துள்ளது.

இலங்கையின் அரச மற்றும் தனியார் வணிக வங்கிகள் மற்றும் இலங்கை மத்திய வங்கி என்பவற்றில் உள்ள அனுபவம்பெற்ற தொழில்சார் நிபுணர்களை இந்தக் குழு உள்ளடக்குகின்றது.

இது வெளிநாட்டுக்கு பணம் அனுப்புவதையும் இலகுபடுத்தும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

'வவுனியம்' விருதுகளுக்கு விண்ணப்பம் கோரல்

ஓமந்தை விஷேட நிருபர்

"வவுனியம்", "வவுனியம் முதுஇளவல்", "வவுனியம் கலை இளவல்", ஆகிய விருதுகளுக்கு மாவட்ட மட்டத்திலிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எனவே தங்களது பிரதேசத்திற்குட்பட்ட விண்ணப்பங்களை இம்மாதம் 25 ஆம் திகதிக்குமுன்னர் அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

வழங்கப்படவுள்ள குறித்த விருதுகளில் வவுனியம் 2 விருதுகள் (60 வயதுக்கு மேற்பட்டோர்), வவுனியம் முது இளவல் 2 விருதுகள்(40 60 வயதுக்கு இடைப்பட்டோர்) வவுனியம் கலைஇளவல் 2 விருதுகள் (40 வயதுக்கு கீழ்பட்டோர்). தகுதியானவர்கள் விண்ணப்பிக்கும் துறையை குறிப்பிட்டு அவரது கலை, பணி, வரலாற்று சுருக்கத்தையும் இணைத்து ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னதாக பிரதேச செயலகம் வவுனியா என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கும் படி கோரப்பட்டுள்ளது.

பல மில்லியன் ரூபா செலவில்...

கூட பயணிக்க முடியாத நிலையில் காணப்படுவது தொடர்பில் பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். தினமும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்தும் குறிப்பிட்ட வீதியானது பொது மக்களின் நீண்டகால கோரிக்கைக்கு அமைவாக முதற்தடவையாக காப்பெற் வீதியாக புனரமைப்புச் செய்யப்பட்டது.மிக மோசமான நிலையில் காணப்பட்ட வீதி காபெற் வீதியாக புனரமைப்புச் செய்யப்பட்டதனால் பொது மக்கள் மிகுந்த மகிழ்ச்சியில் இருந்தனர்.

ஆனால் அப்பிரதேச மக்களின் மகிழ்ச்சி மூன்று வருடங்கள் கூட நிலைத்திருக்கவில்லை. காரணம் குறித்த வீதி பல இடங்களில் மிக மோசமாக சேதமுற்றுள்ளது. அத்தோடு வீதியின் பல இடங்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டு அப் பகுதிகளும் சேதமடையும் நிலையில் காணப்படுகிறது.

அபிவிருத்தியின் போது குறிப்பிட்டப்பட்ட நியமங்களுக்கு அமைவாக தரமான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படாமையும் அபிவருத்திப் பணிகளை கண்காணிக்க வேண்டிய அரச திணைக்களங்கள் உரிய முறையில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடாமையுமே இவ்வாறான நிலைமைகளுக்கு காரணம் எனவும் பொது மக்கள் தரப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடமாகாண முதலமைச்சர்...

இம்முறையும் தமது கட்சி ஏமாற்றப்பட்டால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்து தமது தலைவர் செல்வம் அடைக்கலநாதன் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுவார் என கட்சியின் முக்கியஸ்தர் ஆவேசமாக தெரிவித்துள்ளமையும் சில ஊடகங்களில் பதிவாகியுள்ளது.

அதேபோன்று கடந்த மாநகரசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற தமிழரசுக் கட்சியின் சில உறுப்பினர்களது பெயர்களும் முன்மொழியப்பட்டுள்ளன.

அதனை விடவும் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ஈஸ்வரபாதம் சரவணபவனை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்த வேண்டும் எனவும் ஊடக பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

எது எவ்வாறு இருப்பினும் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் இவ்விடயம் தொடர்பாக மௌனம் சாதித்து வருகிறார். தாம் பங்காளிக் கட்சிகளாக இருந்து இத்தகைய கருத்துக்களை முன்வைத்தாலும் இறுதியில் அவரது முடிவின்படியே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இறுதி முடிவை எடுப்பார் என்று பங்காளி கட்சிகள் விசனம் தெரிவித்துள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்து வட மாகாண முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட முன் வருமாறு தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பியை கூட்டமைப்பில் உள்ள சிலர் வலியுறுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வட மாகாண சபையின் முதல மைச்சர் வேட்பாளராக முன்னாள் மேல் நீதிமன்ற நீதியரசர், தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் சி. வி. விக்னேஸ்வரனும் தனது பாராளுமன்ற பதவியை இராஜினாமாச் செய்து போட்டியிட இருப்பதாகவும் தெரியவருகிறது.

எனினும் அவர் தனது முதலமைச்சர் பதவி காலத்தில் எந்த விதமான ஆக்க பூர்வ நடவடிக்கைகள் எடுக்கவில்லை எனும் குற்றச்சாட்டு அவரது கட்சிக்குள் இருந்து எழுந்து உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அதேபோன்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அணியினரும் ஒரு பெண் வேட்பாளரை நிறுத்துவதற்கு முனைப்புடன் செயல்பட்டு வருவதாகவும் அறியக் கிடைக்கிறது.

இல்லாவிடில் பாராளுமன்ற பதவியை ராஜினாமா செய்து முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட முன்வருமாறு கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை அக்கட்சி வலியுறுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது . இது தவிர வட மாகாணத்தில் பல தேர்தல்களில் போட்டியிட்ட அனுபவசாலியான சமூக சேவகர் கணேஸ்வரன் வேலாயுதம் முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்க உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவருக்கு ஆதரவு வழங்குவதற்கு பல அமைப்புகள் முன்வந்துள்ளதாக அவரது அணி தெரிவித்திருக்கிறது.

குகஸ்ரீ குமாரதாஸ மாப்பாண முதலியார் சிவபதமடைந்தார்

யாழ்.விசேட நிருபர்

நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் பத்தாவது நிர்வாக அதிகாரி குகஸ்ரீ குமாரதாஸ மாப்பாண முதலியார் சிவபதமடைந்தார். 1929ம் ஆண்டு ஜனவரி 15ம் திகதி பிறந்த அவர் தனது 92ஆவது அகவையில் நேற்று இறைவனடி சேர்ந்தார்.

இவர் 1964 டிசம்பர் 15 முதல் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் பத்தாவது நிர்வாக அதிகாரியாக பணியாற்றி கொண்டிருந்தார்.

பாடசாலை மாணவருக்கு ஒரு தடுப்பூசி போதுமானது

- டாக்டர் அசேலகுணவர்தன

பாடசாலை மாணவர்களுக்கு ஒரு தடுப்பூசியை மட்டும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களின் நோயெதிர்ப்பு சக்திக்கு ஒரு தடுப்பூசி மட்டும் போதுமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 18 மற்றும் 19 வயதுடைய பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் ஆரம்பிப்பதற்கு நேற்று முன்தினம்(08) இடம்பெற்ற கொவிட் ஒழிப்பிற்கான விசேட செயலணி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதுவரை 32.69 மில்லியன் தடுப்பூசிகள் இலங்கைக்கு கிடைத்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

வைத்தியர்களின் ஓய்வுபெறும் வயது...

63 ஆக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சினால் நேற்று முன்தினம் (08) இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. கடந்த ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி முதல் இந்த நடைமுறை அமுலுக்கு வந்துள்ளதாகவும் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழக அகதி முகாம்களிலிருந்து...

அகதிகள் முகாம்களில் வசிக்கும் 64 பேர் கடந்த செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் கேரளத்தில் 45 இலட்சம் ரூபாவுக்கு இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட படகை விலைக்கு வாங்கி இலங்கைத் தமிழர்கள் 20 பேரை ஏற்றிக் கொண்டு கனடாவில் தஞ்சம் புகத் திட்டமிட்டுள்ளனர்.

மாலைதீவு மற்றும் மொரீஷியஸ் நாடுகளுக்கு இடையிலான கடற்பரப்பில் இவர்கள் சென்ற படகு மோசமான வானிலை காரணமாக, சர்வதேச பொலிஸாரிடம் சிக்கியுள்ளது. மாலைதீவு அருகே உள்ள டிக்கோ கார்சியா என்ற தீவு அமெரிக்கா நாட்டின் வசம் உள்ளது. அமெரிக்காவின் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள இந்தத் தீவில் அத்து மீறி இவர்களின் படகு நுழைந்ததாகக் கூறி அமெரிக்க படைகளால் இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் தெரிகிறது. இதுவரை இந்தியத் தூதரகத்துக்கு இது குறித்து எந்தவிதமான தகவலும் உறுதியாக தெரிவிக்கப்படவில்லை. தமிழகத்தில் உள்ள முகாம்களில் இருந்து 64 அகதிகள் சட்டவிரோதமாக வெளி நாட்டுக்கு தப்ப முயன்றதாக வந்த தகவலையடுத்து க்யூ பிரிவு பொலிஸார் தென் மாவட்டங்களில் உள்ள அகதி முகாம்களில் கடந்த 3 நாட்களுக்கும் மேலாக தீவிர சோதனை நடத்தி உள்ளனர்.

ஆனால் இதுவரை இந்த 64 பேரும் யார் என்பதை உளவுத்துறை பொலிஸாரால் உறுதி செய்ய முடியவில்லை. அதே நேரத்தில் கடற்பரப்பில் சிக்கிக் கொண்ட தாகக் கூறப்படும் அந்த 64 பேர்களின் விவரங்களைப் பெறுவதற்காக தமிழக பொலிஸார் சர்வதேச பொலிஸார் உதவியை நாடி இருக்கின்றனர்.

கோடரியை காட்டி...

சுமார் 21 பவுண் தங்க நகைகளை கொள்ளையிட்ட சம்பவத்தில் 3 பேர் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொள்ளையடிக்கப்பட்ட 13 பவுண் நகையுடன் சந்தேகநபர் ஒருவர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் சட்டத்தரணி ஒருவர் ஊடாக சரணடைந்த நிலையில் மேலும் 3 பேர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இந்நிலையில் கொள்ளை சம்பவத்துடன் தொடர்புடையவர் மற்றும் கொள்ளைக்கு உதவியவர் என 4 பேர் தற்போது பொலிஸாரின் விசாரணையின் கீழ் உள்ளனர். கடந்த 3ம் திகதி இணுவில் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் நள்ளிரவில் 3 பேர் கொண்ட கொள்ளை கும்பல் வீடு புகுந்துள்ளதுடன் வீட்டிலிருந்தவர்களை கோடரியை காண்பித்து அச்சுறுத்திவிட்டு சுமார் 21 பவுண் தங்க நகைகளை கொள்ளையிட்டு சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாரிடம் முறையிடப்பட்டிருந்தது. இதனடிப்படையில் தலைமை பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்ஸிஸ் தலைமையிலான யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் ஒருவர் தனது சட்டத்தரணி ஊடாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்.

அவர் 13 தங்கப் பவுண் நகைகளை பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தார். இந்நிலையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவர் அன்றிரவு கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்கள் இருவரிடமிருந்தும் 2 கைக்கோடாரிகள் மற்றும் 6 பவுண் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டன.

வந்தான் வரத்தான்கள்...

நிதானமாக பேசக்கூடிய தமிழ் தலைமைகளும் இந்த சபையில் இருக்கிறார்கள். இந்த சபையில் எதைப்பேச வேண்டும் எதைப் பேசக்கூடாது என்று தெரியாமல் ஒருவர் மட்டும் காவடி எடுத்து ஆடுவதை அனுமதிக்க முடியாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரதித்தலைவரும், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

கடந்த 6ஆம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கும் போது, இலங்கையில் வாழும் ஏனைய சமூகங்களுடன் நல்லிணக்கமாக வாழும் சமூகமாக 1000 வருடங்களுக்கு மேலாக முஸ்லிம் சமூகம் வாழ்ந்து வருகிறது. அப்படியான சமூகத்தை நோக்கி ஞானசார தேரர் போன்றோர்கள் இழிசொற்களை பேசிவருவதுடன் அண்மையில் அல்லாஹ் தான் ஈஸ்டர் தாக்குதலுக்குக் காரணம் என்று பேசியுள்ளார். இவருக்கு எவ்வகையான நடவடிக்கையை எடுப்பது என்று முஸ்லிம் புத்திஜீவிகளும், மார்க்க அறிஞர்களும், நாங்களும் பேசி பாராளுமன்ற கலறிக்கு பேசாமல் உரிய சட்டநடவடிக்கை எடுக்க முடிவெடுத்து பொலிஸிலும், குற்றப்புலனாய்வு திணைக்களத்திலும் முறைப்பாடு செய்துள்ளோம்.

அந்த சட்ட நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளை செய்த போது பாராளுமன்றத்தில் ஒரு மாற்று சமூக உறுப்பினர் இவ்விடயம் தொடர்பில் கடுமையாக பேசினார். அவரின் உரைக்கு நாங்கள் தடைபோட்டவர்கள் அல்ல. அவருக்கு அதற்கான உரிமை இருக்கிறது. அவர் அநாகரிகமாக முஸ்லிம் எம்.பிக்கள் ஊருக்கு வந்தால் தாக்குங்கள் என பேசி முஸ்லிம்கள் மத்தியில் குழப்பத்தை உண்டுபண்ணுவதற்கு முயற்சி செய்கிறார். இதனால் முஸ்லிம் சமூகம் கொதிப்பதடைந்துள்ளது.

அவர் பொதுவெளியில் பேசமுதலில் முஸ்லிம் வரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். சிங்கள, முஸ்லிம் உறவு ஆயிரம் வருடங்களை விட கூடியது. எம்.சி. அப்துல் ரஹ்மானில் தொடங்கி இந்த நாட்டின் முன்னேற்றத்தில் பல முஸ்லிம் தலைவர்கள் பங்களிப்பு செய்துள்ளார்கள்.

கடந்த காலங்களில் 2014 இல் அலுத்கம பிரச்சினையின் போது நாங்கள்தான் போராடினோம், 2001 இல் மாவனெல்லை பிரச்சினை வந்தபோது தலைவர் ஹக்கீம் அமைச்சு பதவிகளை தூக்கி வீசினார். 2019 இல் சஹ்ரானின் பிரச்சினை வந்தபோதும் நானுட்பட சகல முஸ்லிம்களும் அமைச்சுக்களை தூக்கி வீசிவிட்டு சமூகத்தின் நலனுக்காக நின்றோம்.

முஸ்லிம் எம்.பிக்களான நாங்கள். கண்டி, மினுவான்கொட, திகன, காலி ஜிந்தோட்ட அம்பாறை போன்ற பிரதேசங்களில் பிரச்சினை வந்த போதும் சமூக உரிமைக்காக களத்தில் இறங்கி போராடினோம். அதுமாத்திரமின்றி கிழக்கில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற மாவட்டங்களில் முஸ்லிம்களை விடுதலை புலிகள் கொன்று குவித்த போது முஸ்லிம் எம்.பிக்களே அதற்கு முகம் கொடுத்தார்கள் என்பது வெளிப்படையான வரலாறு.

விவாக விவாகரத்து, மாடறுப்பு என முஸ்லிம்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் இருக்கும் இந்த கால கட்டத்தில் அரசுடன் பேசி தீர்வுகாண முற்படும் போது இளைஞர்களை குழப்பி திசைதிருப்ப முயற்சிக்கிறார் அவர்.

இந்த நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களென யாராக இருந்தாலும் முதலில் அவர்களின் வறுமையை ஒழித்துக்கட்ட வேண்டும். அதற்காகவே தூய்மையான அரசியலை முன்னெடுக்க முயல்கின்ற போது காட்டிக்கொடுப்பாளர்கள், துரோகிகள் என்ற பட்டங்கள் எல்லாம் கடந்த காலங்களில் தமிழ் அரசியலிலிருந்து தோற்றுப்போனது வரலாறு. அதே போன்று முஸ்லிம் அரசியலிலும் காட்டிக்கொடுப்பு அரசியல் கலாச்சாரத்தை முஸ்லிம் சமூகத்தின் மீது திணிக்க யாரையும் அனுமதிக்க முடியாது கடந்த 04 பாராளுமன்ற தேர்தல்களில் வென்று உறுப்பினராகியது மட்டுமின்றி கல்முனை முதல்வராகவும் இருந்துள்ளேன்.

எங்களை சமூகத்திலிருந்து ஓரங்கட்ட முடியும் என்றால் அது அவர்களின் பகற்கனவு. அவருக்கு எதிராக பேச இந்த சபையில் யாருமில்லை என்று நினைத்து விடக்கூடாது. இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் மற்றும் முஜீப் ரஹ்மான் அவர்களே ! நீங்கள் முஸ்லிம் சமூகத்தை வழி நடத்தும் பொறுப்பினை வந்தான் வரத்தான்களின் கையில் ஒப்படைக்க விரும்புகிறீர்களா? தயவு செய்து இடமளிக்காதீர்கள்.

ஏனென்றால் தமிழ் இளைஞர்களையும் இவ்வாறுதான் கடந்த காலங்களில் உசுப்பேற்றிஅந்த இளைஞர்கள் பல்லாயிரக்கணக்கில் அழிய நேரிட்டது. அவ்வாறான ஒரு ஆபத்து முஸ்லிம் சமூகத்திற்கு வர இடமளிக்க முடியாது என்றார்.

'நாங்கள் ஏன் ஓடி...

ஏன் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என திருக்குமார் நடேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

பண்டோரா ஆவண சர்ச்சையில் சிக்கிய தொழிலதிபர் திருக்குமார் நடேசன் அவரது மனைவியான முன்னாள் பிரதி அமைச்சர் நிரூபமா ராஜபக்ஷ ஆகியோர் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளனர்.

இது குறித்து எழுந்த சர்ச்சைக்கு விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,நானும், எனது மனைவியும் நாட்டை விட்டு தப்பிச் சென்றமை போலியான செய்தி என தெரிவித்தார். நானும், எனது மனைவியும் இலங்கையில் அதிகம் இருந்ததால் இந்த நாட்டை விட்டு வெளியேறும் எண்ணம் இல்லை.

நாங்கள் வேறு எந்த நாட்டிற்கும் ஓடி ஒளியவில்லை.

முஸ்லிம்களை கறிவேப்பிலையாக...

பல பிரச்சினைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகள் என்ற பெயரிலும் இன்னும் எத்தனையோ பெயர்களைக் கொண்ட ஆயுதக்குழுக்களின் பெயரிலும் நடத்தப்பட்ட யுத்தம் விடுதலைக்கான யுத்தமல்ல. இதுவிடயம் தொடர்பில் பேச யாராவது தயாராக இருந்தால் அவர்களுக்கு முகம் கொடுக்க நாங்கள் தயாராக உள்ளோம். இன்றும் முஸ்லிம்களே கறிவேப்பிலையாக பயன்படுத்தப்பட்டுள்ளார்கள்.

கிறிஸ்தவ தேவாலயத்தில் குண்டு வீச முஸ்லிம் உலமா என்ற பெயரில் அவர்கள் பாவிக்கப்பட்டு முஸ்லிம்கள் மீது பயங்கரவாதிகள் எனும் முத்திரை குத்தப்பட்டிருப்பதும் இந்த நாட்டின் சொத்துக்களையும், வளங்களையும் கொள்ளையடிக்கவே தவிர வேறில்லை என்பதை நாம் அறிந்துகொள்ளாமல் இருக்க முடியாது என தேசிய காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா தெரிவித்துள்ளார்.

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையாக தர முயர்த்தப்பட்டு 29 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு சர்வதேச ஆசிரியர் தினத்தன்று கல்லூரியின் "அதா உல்லா கேட்போர் மண்டபத்தில்" தேசிய பாடசாலை தின விழா கொண்டாடப்பட்ட போது அந்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

கல்வியில் மிகமுக்கியமான கல்வி, நாம் ஏன் படைக்கப்பட்டோம் என்பதை அறிந்துகொள்ளும் கல்வியே. இன்றைய காலங்களில் நாம் என்ன பட்டங்களை, பதவிகளை பெற்றாலும் மனங்கள் தூய்மையாக்கப்படாமல், எண்ணங்கள் சீராக இல்லாமல் இளைஞர்கள் வெவ்வேறு திசைகளில் திசைமாற்றப்பட்டு வருகிறார்கள். உலமா என்ற பெயரில் ஸஹ்ரான் பாவிக்கப்பட்டிருக்கிறார். வரலாறுகளை பின்னோக்கி பார்க்கின்ற போது இந்த நாடு அழகும், செழிப்பும் நிறைந்த நாடு. இந்த நாட்டில் தான் இஸ்லாமியர்கள் நம்பும் நபி ஆதம் (அலை) இறக்கப்பட்டார். இந்த மண் வரலாற்றில் மறக்கமுடியாத வளங்களையும், பண்புகளையும் கொண்ட மண்.

காய்த்த மரத்திற்கே கல்லெறி என்பதுபோல இந்த நாடு வளங்களினால் காய்த்த மரம். இந்த நாட்டில் உள்ள வளம் வேறு நாடுகளில் காணமுடியாது. சொர்க்கபுரியாக திகழும் எமது நாட்டில் மற்றவர்கள் கண் வைப்பதில் நியாயம் இருக்கிறது. உலகின் முக்கிய அமைவிடங்களில் ஒன்றாக இலங்கை இருக்கிறது. கடந்த காலங்களில் பண மோகம் கொண்ட முஸ்லிம்

இராகலையை உலுக்கிய கோரத் தீ விபத்து!

விபத்தா கொலையா என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணைகள் முன்னெடுப்பு

இரு சிறுவர்கள் உட்பட ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐவர் பரிதாப மரணம்



இராகலையிலிருந்து
ஆ.ரமேஸ்

இராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இராகலை இலக்கம் (01) தோட்ட பிரிவில் மண்ணால் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக தனி வீடொன்று கடந்த வியாழனன்று (07) இரவு பத்து மணியளவில் தீப்பற்றி எரிந்தது

இந்த திடீர் தீ விபத்து சம்பவத்தில் இவ் வீட்டில் வசித்த ஆறு பேரில் இரண்டு சிறுவர்கள் உட்பட ஐவர் தீயில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

தீயினால் தாய், தந்தை மற்றும் மகள், மகளது ஒரு வயது மற்றும் 12 வயதுடைய இரு ஆண் பிள்ளைகள் என ஐவர் தீயில் எரிந்து உயிரிழந்துள்ளனர்.

அதேநேரத்தில் இச் சம்பவத்தில் வீட்டில் வசித்து வந்த பெற்றோர்களின் 27 வயது மதிக்கத்தக்க மகன் தங்கையா இரவீந்திரன்(புளொக்கல் அடிக்கும் தொழில் செய்பவர்) உயிர் தப்பியுள்ளார்.

வீட்டில் இருந்து இராகலை நகருக்கு சென்ற இவர் குடிபோதையில் வீடு திரும்பிய பின் உணவு உண்ணத் தயாராகிய போது வீட்டுக்கு வெளியே ஏதோ வெடிக்கும் சத்தம் கேட்டு வீட்டை விட்டு வெளியில் ஓடி வந்துள்ளார். அப்போது வீடு தீப் பற்றி எரிந்ததாகவும் பயத்தில் கூச்சலிட்டு அயல வர்களை அழைத்ததாகவும் இராகலை பொலிஸா ரின் விசாரணையில் அவர் தெரிவித்துள்ளார்.

அருகில் உள்ளவர்கள் விரைந்து வந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தும் பய னளிக்கவில்லை. வீட்டின் சுவரை உடைத்துத்தான் சடலங்களை மீட்டுள்ளனர்.

உயிரிழந்த ஒருவயது குழந்தை மோகன்தாஸ் ஹெரோஷனுக்கு கடந்த 07 ஆம் திகதியன்று இரவு முதலாவது பிறந்த நாள் கொண்டாடப்பட் டுள்ளது.

இராமையா தங்கையா (வயது 61) அவரின் மனைவி செவனமுத்து லெட்சுமி (வயது 57), ஆகி யோருடன், மகளான தங்கையா நதியா (வயது 34) அவரது பிள்ளைகளான, சத்தியநாதன் துவாரகன் (13), (முதல் கணவரின் பிள்ளை) மற்றும் மோகன்தாஸ் ஹெரோசன் (வயது 01) ஆகியோரே தீயில் கருகி உயிரிழந்துள்ளதாக

அடையாளம் காணப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் இராகலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சம்பவ இடத்திற்கு நுவரெலியா மாவட்ட பொலிஸ் அதியட்சகர் உடுகமசூரிய உள்ளிட்ட தடயவியல் இரசாயன பகுப்பாய்வு பொலிஸார் வரவழைக்கப் பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதையடுத்து காலை 11.46 மணியளவில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த வலப்பனை நீதி மன்ற நீதவான் டி.ஆர்.எஸ்.குணதாச மரண விசா ரணையை முன்னெடுத்தார். சம்பவத்தில் உயிர் தப்பிய மகன் தங்கையா இரவீந்திரன் இறந்தவர் களை அடையாளம் காண்பித்தார்.

பின் சட்ட வைத்தியரின் விசாரணைக்கு பின் சடலங்களை நுவரெலியா மாவட்ட வைத்தியசா லைக்கு கொண்டு செல்ல உத்தரவிடப்பட்டது.

இச்சம்பவத்தையடுத்து இராகலை இலக்கம் ஒன்று தோட்டத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள் ளமையும் குறிப்பிடத்தக்கது.

அதேநேரத்தில் தீயை அணைப்பதற்கான முயற் சியில் பொதுமக்கள் ஈடுபட்டபோதும் முயற்சி கைகூடவில்லை. வீட்டில் சமயல் எரிவாயு கசிந்து தீ பரவியதாகவும் வீடு முற்றாக எரிந்து சாம்பலா னதாகவும் அயலவர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பம் இத்தோட்ட மக்களை துக்கத்தில் ஆழ்த்தியுள்ள நிலையில் தொழிலாளர்கள் பணிக்கு செல்லாது பணியை புறக்கணித்துள்ள னர். கொரோனா சுகாதார சட்டவிதிகளை மக்கள் மீறக்கூடாது என்பதற்காக அங்கு பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் கடமையில் ஈடுப்படுத்தப் பட்டு மக்களை கட்டுப்படுத்தினர்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்த இரண்டு பிள்ளை களின் தாயான தங்கையா நதியா இரண்டு தட வைகள் திருமணம் முடித்தவர்.

முதல் கணவர் உயிரிழந்த பின் மறுமணம் முடித்த இவர் வலப்பனை பிரதேச ஆடை தொழிற் சாலை ஒன்றில் பணியாற்றியதுடன் தற்போது பணியிலிருந்து விலகி கொழும்பிற்கு வேலைத் தேடி செல்ல ஆயத்தமாக இருந்த நிலையில் தற் போதைய கணவருடன் முரண்பட்டிருந்ததாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தனது தந்தையின் பாதுகாப்பில் அவர் குறித்த தற்காலிக வீட்டில் பிள்ளைகளுடன் வசித்து வந் துள்ளார். மின்சார ஒழுக்கு ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகப்படும் நிலையில் இராகலை பொலிஸார் பல கோணங்களில் விசாரணைகளை முன்னெ டுத்து வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை இருப்பினும் உயிரிழந்த பெண்ணின் கணவரை பொலிஸார் தடுத்து வைத்து விசாரணை செய்து வருகின்றனர்.

அவர் தனது மகனின் பிறந்த நாளுக்கு (07) காலையில் கேக் ஒன்றை வாங்கி கொடுத்துவிட்டு சென்றதாகவும் பின்னர் அவர் பொலிஸாரால் தேடிக் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் தெரியவருகின் றது.

அதேபோல சம்பவத்தில் உயிர் தப்பிய சகோத ரன் சம்பவம் இடம்பெற்ற நேரத்தில் மது அருந் திவிட்டு வீட்டுக்கு வெளியே வீழ்ந்து கிடந்ததாக விசாரணையில் பொதுமக்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

இலங்கையில் இப்போது கிடைக்கும்
PRIME FIFTY®
22 அவசியமான விட்டமின்கள் மற்றும்
கனிப்பொருட்களுடன் இணைந்த மருந்து வில்லைகள்
YOUR BEST IMMUNITY BOOSTER
NUTRITIONAL INFORMATION
PER DOSE %NRV*
Vitamin D 20µg 400
Vitamin E 12mg α-TE 100
Vitamin C 160mg 200
Thiamin (Vitamin B1) 3.2mg 300
Riboflavin (Vitamin B2) 4.2mg 300
Niacin (Vitamin B3) 38mg NE 325
Vitamin B6 5mg 357
Folic Acid 200µg 100
L-Methyl Folate 85µg 25
Vitamin B12 (Methyl Cobalamin) 25µg 1000
Biotin 50µg 100
Pantothenic Acid 6mg 100
Calcium 240mg 30
Magnesium 68mg 16
Iron 3mg 21
Zinc 7mg 70
Selenium 70µg 127
Chromium 30µg 75
Iodine 100µg 67
Bioperine 3mg -
Co-Enzyme Q10 5mg -
Grape Seed Extract 25mg -
NRV* - Nutrient Reference Value
µg - microgram, mg - milligram
IU - International Units
PRIME FIFTY
FIGHTS FATIGUE
FOR DELIVERIES
0773 833 404 | 0774 596 554 | 0765 313 145
From Cambridge Nutraceuticals, Ravenscroft House, 59-61 Regent Street, Cambridge, CN21AB United Kingdom
Imported & Marketed By
Maxwell Healthcare (Pvt) Ltd
32, Station Road, Dehiwala.
Tel : 011 783 9915
Mob : 0773 487 414
Available at
HARCOURTS PHARMACY

LITRO GAS
"உங்களுக்காக உங்கள் வாழ்க்கை சுமையை நாங்கள் சுமப்போம்"
ரூபாய்
ஆயிரத்து நூறு கோடி
(11,000,000,000)
மாறாத மனிதகுலத்தின் பெருமையை நாங்கள் போற்றுகிறோம்
உங்கள் சமையல் எரிவாயுவின் சுடரை ஒளிரச் செய்வது எங்களின் பொறுப்பு என்பதை புரிந்துகொண்டுள்ள லிற்ரோ உலக சந்தைமில் எரிவாயுவின்விலை அதிகரித்தபோதும் கோவிட்-19 அச்சுறுத்தலின் மத்திமிலும் அதிகரித்த விலையை உங்கள் மீது சுமத்தாமல் உங்களுக்காகவும், நாட்டுக்காகவும் அதனை நாம் தாங்கிக் கொண்டுள்ளோம்.
சுபிட்சத்தை நோக்கிச் செல்லும் தேசத்தின் நீல சுடர் ஒளிமின்செழிப்பு லிற்ரோ
1311
லிற்ரோ வாழ்க்கைக்கு வரவேற்கிறோம்

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI தினகரன் வாரமஞ்சரி
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429294, 2429296
பெக்ஸ் : 2429329
பிலவ வருடம் புரட்டாதி மாதம் 24ம் நாள் ஞாயிற்றுக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரபீஉனில் அவ்வல் பிறை 03

தேச பக்தியை புரிந்து கொள்தல்

தேச பக்தி என்பது பலராலும் பல வகையாக புரிந்து கொள்ளப்டும் சொல். சில சமயம் அது மேலாதிக்கத்தைப் புலப்படுத்துவதாகவும், அடக்கி வைக்கப்படுவதற்கான ஆயுதமாகவும், பயங்கரவாத தன்மை கொண்டதாகவும் பயன்படுத்தப்படுகிறது. கடுமையான நடைமுறைகளைக் கொண்ட ஒரு மதத்தைப்போல பிரயோகிக்கப்படுவதும் உண்டு. தேச பக்தியில் இருந்தே தேசத்துரோகி, தேசத் துரோகம் என்பன பிறக்கின்றன. மென்மையான பொருளில் பயன்படுத்தப்படும் போது தென்றலாகத் தவழக் கூடிய தேசபக்தி தவறாகப் பயன்படுத்தப்படும் போது சூறாவளியாகிறது.

பக்தி, நம்பிக்கை, விசுவாசம் என்பனவற்றின் அர்த்தத்தை பகுத்து பார்த்தோமானால் ஒருவருக்கு ஒரு விஷயத்தை நூறு சதவீதம் உறுதிப்படுத்த முடியாத நிலையில், அதன்மேல் தான் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் பக்தி பூண்டிருப்பதாகவும் சொல்வார். நாம் இந்த மட்டத்துக் போகத் தேவையில்லை. தேச பக்தியை எளிமையான வகையில் புரிந்து கொள்வ தன் மூலம் மட்டுமே அதனை போலித்தனம் அகற்றி ஏன் அது அவசியம் என்பதை அறிய முடியும்.

தேச பக்தியை ஒரு குடும்பத்தோடு ஒப்பிட முடியும். ஒரு குடும்ப அங்கத்தவர்களை அக் குடும்பத்தின் மீது அவர்களுக்கு இருக்கும் பற்றும், அந்த அமைப்பைத் தொடர்வதன் மூலம் கிடைக்கும் பாதுகாப்பு உணர்வும் அந்த அமைப்பு அவர்களுக்கு வழங்கக் கூடிய வசதிகளுமே ஒன்றிணைக்கிறது. காலையில் வெளியே செல்லும் ஒரு குடும்ப அங்கத்தவர் மாலையில் வீடு திரும்புவது, அமைதியையும் பாதுகாப்பு உணர்வையும் அந்த வீடு அவருக்குத் தரும் என்பதால்தான். இது அப்படியே ஒரு நாட்டுக்கும் பொருந்தும். நாட்டை விட்டு வெளியேறும் ஒருவர் அந்நியனாகிறார். அவர் நாடு திரும்பும் போதே 'அந்நியன்' என்ற பட்டத்தை அவர் இழக்கிறார். சொந்த நாடு, பிறந்த நாடு என்ற எண்ணமே ஒருவருக்கு நிம்மதியையும் பெருமையையும் அளிக்கிறது. வீடு என்ற அமைப்பு தரும் அதே திருப்தியை நாடும் தருகிறது. இந்தப் பெருமைக்குரிய நிறைவு தரும் விஷயமே அந்நாட்டின் மீது அந்நாட்டவர் வைக்கும் அன்பாக மாறுகிறது. இத்தன்னலமற்ற அன்பு – அன்னையை நேசிக்கும் அன்பு – தேச பக்தியாக உணரப்படுகிறது.

தேசத்தை நேசித்தல் என்பது வெகு இயல்பானது. பிரத்தியேகமானதல்ல. ஒரு நாட்டின் அனைத்துப் பிரஜைகளுக்குமானது. நாட்டின் குறிப்பிட்ட ஒரு சாராருக்கு மட்டுமானதல்ல. ஆனால் தேச பக்தியை அரசியல்வாதிகள் சில நாடுகளில் அது இனம் அல்லது மதம் சார்ந்ததாகப் பார்க்கப்படுகிறது. இந்தியாவின் ஒரு பகுதி பிரிக்கப்பட்டு பாகிஸ்தானாகிய போது இரு விதமான தேசபக்தி துளிர்விட்டு பெருந்தீயாக வளர்ந்ததில் பல்லாயிரக் கணக்கான அப்பாவிகள் இந்துக்களும் இஸ்லாமியரும் மடிந்தனர். தற்போதும் பாகிஸ்தானில் தேசபக்தி மதம் சார்ந்ததாகக் கருதப்படுவதால் இந்தியாவின் தேசபக்தி உணர்வும் இந்து மதம் சார்ந்ததாக பா.ஜ.க., சிவசேனா போன்ற இந்துக் கட்சிகளினால் வட இந்தியாவில் கட்டமைக்கப்படுகிறது.

ஆனால் தேசத்தை நேசித்தல் இயல்பான பற்றுதலே தவிர அது வெளிப்படுத்த முடியாதது. தேசத்தை நேசித்தல் என்பது தேசிய கீதத்தை இசைத்தலும் தேசிய கொடிக்கு தலை வணங்குவதும் மட்டுமல்ல. அறுபதுகளில் இலங்கை திரையரங்குகளில் திரைப்படம் ஆரம்பமாவதற்கு முன்னர் திரையில் தேசிய கொடி பறக்கவிடப்பட்டு கீதம் இசைக்கப்படும். படம் பார்க்க வந்த ரசிகர்கள் எழுந்து நிற்பார்கள். காலப்போக்கில் சிலர் எழுந்து நிற்பதைத் தவிர்க்க ஆரம்பித்தனர். சிலர் சிகரெட் பிடித்தபடியும் எதையாவது மென்றபடியும் அல்லது தொடர்ந்து நிறுத்தாமல் பேசிக் கொண்டும் இருந்தனர். இதை ஒரு இம்சையாகக் கருதிய சிலர் தேசிய கீதம் இசைக்கப்பட்ட பின்னரேயே அரங்கினுள் பிரவேசித்தனர். அதன் பின்னர் தான் சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளுக்கு கேளிக்கை உணர்வுடன் வருபவர்களிடம் தேசிய உணர்வை எதிர்பார்ப்பது தவறு என்பது புரிபடவே திரையரங்குகளில் தேசிய கீதம் இசைக்கும் வழக்கம் நிறுத்தப்பட்டது.

எனவே தேச பக்தி என்பதை தலை வணங்குதல் என்பதாக வரையறை செய்யக் கூடாது. ஆனால் அப்படித்தான் பார்க்கப்படுகிறது. தேசத்தை நேசித்தல் என்பது, நாட்டின் வளர்ச்சிக்கு குந்தகம் விளைவிக்காமல் இருப்பது, தேச செல்வத்தை சுரண்டாமல் இருப்பது, நாட்டின் வளங்களைப் பயன்படுத்தி முன்னேறிவிட்டு பின்னர் வேறொரு நாட்டில் குடியேறுவதைத் தவிர்ப்பது, நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக செயல்படுவது, நாட்டின் வளங்களை சூறையாடாதிருப்பது, நாட்டின் இறைமைக்கு கேடு விளைவிக்காதிருப்பது என்பனவும் இதற்குள் அடங்கும்.

ஒரு நாட்டில் தேச நேசர்கள் மட்டுமே இருக்க முடியுமே தவிர முதன்மை தேச பற்றாளர்கள், இரண்டாம் நிலைப் பற்றாளர்கள் என இரு வகையான தேச நேசர்கள் இருக்க முடியாது. இந்தியாவில் இந்துக்கள் அல்லாதோர் குறைவான தேசபக்தி கொண்டவர்கள் அல்லது சந்தேகத்துக்கு உரியவர்கள் என்ற இன, மத ரீதியான பார்வை உண்டு. அது போலவே இலங்கையிலும் தலை சிறந்த தேசபக்தி கொண்டவர்கள் சிங்களவர்களும் பௌத்தர்களும் என்ற ஒரு தவறான மனப்பான்மை அரசியல் ரீதியாகக் கட்டமைக்கப்பட்டு வந்துள்ளது. யுத்த காலத்தின் போது இந்த உணர்வு மிகையாகக் காணப்பட்டது.

தேசபக்தி என்பது உருவாக்கப்படக் கூடிய, வெளியில் இருந்து புகப்படக் கூடிய ஒன்றல்ல, மத, இன, வர்க்க ரீதியானதுமல்ல. சில வருடங்களுக்கு முன்னர் பனாமா பேப்பர்ஸ் மூலமும் தற்போது பண்டோரா பேப்பர்ஸ் மூலமும் தத்தமது நாடுகளில் தாம் சுரண்டிய, மக்களுக்கு சேர வேண்டிய, ஏழ்மையை ஒழிக்க பயன்பட்டிருக்கக் கூடிய செல்வங்களை கோடீஸ்வரர்களும் உயர்மட்ட அரசியல்வாதிகளும் நாட்டுக்கு வெளியே எடுத்துச் சென்று பதுக்கி வைத்திருப்பது பற்றிய ஆதாரபூர்வமான தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இவர்கள் அனைவருமே தம்மை தேசபக்தர்களாகக் காட்டிக் கொள்பவர்கள் தான். எனவே தேச பக்தி என்பது நாட்டுக்கு ஊறு விளைவிக்காமல் நடந்து கொள்வதே தவிர, அதை வெளிப்பகட்டாகக் காட்டிக் கொள்வதல்ல.

தேச நேர உணர்வை பாடசாலைக் கல்வி வழியாகவோ, தலை வணங்குவதாலோ ஊட்ட முடியாது. ஒரு நாட்டில் வாழும் ஒவ்வொரு பிரஜைக்கும் சம வாய்ப்பு, சம உரிமை, சம செல்வ பங்கீடு வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்படுவதன் மூலமே ஒருவருக்கு தமது நாட்டின் மீது அபிமானமும் பெருமையும் ஏற்படும். நாட்டில் காணப்படும் சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதன் மூலமும், பொருளாதார வளர்ச்சியின் பலன்கள் சாதாரண மனிதர்களை எட்டும் போதும் நாட்டின் மீதான அபிமானம் பரந்த அளவில் மக்கள் மத்தியில் உருவாகும்.

தினகரன் விளம்பரம் : 0112429367 | விற்பனை பிரிவு : 0112429444, 0112429378 | விளம்பர முகாமையாளர் : 0112429673 | தினகரன் ஆசிரியபீடம் : editor.vm@lakehouse.lk

'பன்டோரா பேப்பர்ஸ்' விவகாரத்தில் நடுநிலை தன்மையில் அரசாங்கம்!

உலக நாடுகள் பலவற்றின் இரகசிய செயற்பாடுகள் மற்றும் முக்கிய பிரமுகர்களின் நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் குறித்த இரகசிய ஆவணங்களின் பகிரங்க வெளியீடுகள் அவ்வப்போது உலகை பரபரப்பாக்கி வந்துள்ளன. விக்கிலீக்ஸ், பனாமா பேப்பர்ஸ் போன்றவை இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

இந்த இரகசியத் தகவல்கள் வெளிவந்ததன் காரணமாக உலக நாடுகள் பலவற்றில் முக்கிய பிரமுகர்கள் பலரது அந்தரங்கங்கள் அம்பலத்துக்கு வந்ததுமுண்டு. சிலரது இரகசியங்கள் சில நாட்களில் அமுங்கிப் போனதுமுண்டு.

உலகில் இந்த பரபரப்பு வரிசையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் வெளியான 'பன்டோரா பேப்பர்ஸ்' தகவல்கள் உலகில் உள்ள பல்வேறு முக்கிய பிரமுகர்களின் இரகசியத் தகவல்களை வெளிப்படுத்தியுள்ளன. குறிப்பாக வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்களில் பெருந்தொகையான நிதியை இரகசியமான முறையில் கொடுக்கல் வாங்கல் செய்த மிக முக்கிய புள்ளிகள் பலருடைய பெயர்கள் இந்தப் பத்திரிகையின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளன.

இதன் ஊடாக 11.9 மில்லியன் இரகசிய ஆவணங்கள் வெளியுலகுக்கு கசிந்துள்ளன. புலனாய்வு ஊடகவியலாளர்களுக்கான சர்வதேச கூட்டமைப்பு கடந்த ஒக்டோபர் 03 ஆம் திகதி இந்த 'பன்டோரா' பத்திரிகையை வெளியிட்டுள்ளது.

உலகம் முழுவதிலும் உள்ள 117 நாடுகளில் அமைந்துள்ள 91 ஊடகங்களின் புலனாய்வு ஊடகவியலாளர்களுடன் இணைந்து இந்தப் பத்திரிகை தயாரிக்கப்பட்டுள்ளது. இப்போது கசிந்துள்ள இந்த இரகசிய ஆவணங்களில் உலக நாடுகள் பலவற்றில் தற்பொழுது பதவியில் உள்ள சில ஜனாதிபதிகள், முன்னாள் ஜனாதிபதிகள், பிரதமர்கள், நாடுகளின் தலைவர்கள் உள்ளடங்கலான 35 உலகத் தலைவர்கள் அடங்குகின்றனர். அத்துடன் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 336 அரசியல்வாதிகள், 100 இற்கும் அதிகமான கோடீஸ்வரர்கள், முக்கிய பிரமுகர்கள், வணிகத் தலைவர்கள் எனப் பலருடைய பெயர்கள் அந்தத் தகவல்களில் வெளியாகியுள்ளன.

பனாமா, சுவிட்சர்லாந்து மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் உட்பட வெளிநாடுகளில் உள்ள நிதி சேவை வழங்கும் 14 நிறுவனங்களின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டே இப்பத்திரிகை வெளியிடப்பட்டிருப்பதாக புலனாய்வு ஊடகவியலாளர்களுக்கான சர்வதேச கூட்டமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

2016ஆம் ஆண்டு 11.5 மில்லியன் இரகசிய ஆவணங்களுடன் 'பனாமா பேப்பர்ஸ்' வெளியிடப்பட்டிருந்தது. தற்பொழுது வெளியிடப்பட்டுள்ள 'பன்டோரா பேப்பர்ஸ்' தகவலின் அடிப்படையில் ஒவ்வொரு நாடுகளையும் சேர்ந்த பலருக்கு வெளிநாடுகளில் ஒட்டுமொத்தமாக 5.6 ட்ரில்லியன் அமெரிக்க டொலர்கள் முதல் 32 ட்ரில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையான பணம் இருக்கலாம் என குறித்த கூட்டமைப்பு மதிப்பீடு செய்துள்ளது.

இரகசியத் தகவல்கள் வெளியானதைத் தொடர்ந்து பல்வேறு நாடுகளில் இது பற்றிய செய்திகளே இப்போது அதிகம் பேசப்படுகின்றன. 'பன்டோரா பேப்பர்ஸ்' தகவல்களில் இலங்கையர்கள் இருவருடைய பெயரும் உள்ளடங்கியிருப்பதால், இந்நாட்டின் அரசியல் அரங்கத்தில் அதிகம் பேசப்படும் விடயமாக இது மாறியுள்ளது.

முன்னாள் அமைச்சர் நிரூபமா ராஜபக்ஷ மற்றும் அவருடைய கணவர் திருக்குமார் நடேசன் ஆகியோர் பற்றிய தகவல்களும் இதில் வெளியாகியுள்ளன. பன்டோரா பேப்பரில் குறிப்பிடப்பட்டிருப்பதாகக் கூறப்படும் முன்னாள் அமைச்சர் நிரூபமா ராஜபக்ஷ, இலங்கையின் முக்கிய அரசியல் குடும்பத்தின் நெருங்கிய உறவினர் என்பதால் எதிர்க் கட்சியில் உள்ள அரசியல்வாதிகள் பலரும் இவ் விடயத்தை கையிலெடுத்து அரசியல் செய்ய முயற்சிக்கின்றனர்.

ஆனால் இந்த விவகாரத்தில் அரச தரப்பு எந்தவொரு பக்கமும் சாராமல் நடுநிலையிலேயே உள்ளது. 'உறவுமுறை வேறு, அரசியல் வேறு' என்று ஆளும் கட்சியில் அமைச்சர் ஒருவரே உறுதிபடத் தெரிவித்து விட்டார். அதாவது அரசு இந்த விவகாரத்தில் நடுநிலைமைப் போக்கையே கடைப்பிடிக்குமென்பது உறுதியாகி விட்டது.

இவ்வாறான நிலையிலேயே 'பன்டோரா பேப்பர்ஸ்' விவகாரத்தில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் இலங்கையர்கள் குறித்து உடனடியான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலஞ்ச ஊழல்மோசடி விசாரணை ஆணைக்குழுவுக்குப் பணிப்புரை விடுத்திருந்தார்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய விசேட குழுவொன்று தயார்படுத்தப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதேநேரம், பன்டோரா பேப்பர்ஸ் உடன் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் திருக்குமார் நடேசன் தனிப்பட்ட ரீதியில் ஜனாதிபதிக்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தார்.

தானும், தனது மனைவியும் எவ்வித மான தவறான செயற்பாடுகளிலும் ஈடுபடவில்லையென்றும், தம் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரிப்பதற்கு ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் சுயாதீன விசாரணைக் குழுவொன்றை நியமிக்குமாறும் அவர் கோரியிருந்தார். சுயாதீன விசாரணைகள் மூலம் தம் மீது ஏற்படுத்தப்பட்டிருக்கும் களங்கத்தைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவர் அதில் கோரிக்கை விடுத்திருந்தார்.

தானும் தனது மனைவியும் நாட்டை விட்டு வெளியேறியிருப்பதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ள திருக்குமார் நடேசன், இவ்வாறான பின்னணியில் கடந்த வெள்ளிக்கிழமை திருக்குமார் நடேசன் இலஞ்ச ஊழல்மோசடி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்திருந்தார்.

இது இவ்விதமிருக்க, இந்த விவகாரம் தற்போது அரசியல் அரங்கில் பரபரப்பாகப் பேசப்படும் விடயமாக மாறியுள்ளது. இவ்விவகாரம் குறித்து சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். இன்டர்போலின் ஊடாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என எதிர்க் கட்சியினர் வலியுறுத்தத் தொடங்கியுள்ளனர்.

ஆவணத்தில் கூறப்படுகின்ற விடயம், உண்மையாயின், அது பாரிய மோசடி என்பதுடன், அது வரலாற்று ரீதியிலான குற்றமும் ஆகும். இந்த மோசடியுடன் தொடர்புடைய அனைத்து நபர்களும், ஒரே தடவையில் வெளிக்கொண்டு வரப்பட வேண்டும். இது இலங்கைக்கு கறுப்புப் புள்ளி என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தரப்பினர் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்குப் பதிலளித்துள்ள அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, 'உறவு முறை வேறு, அரசியல் வேறு' எனக் கூறியுள்ளார். திருமணம் செய்துள்ள திருக்குமார் நடேசன் ஊடாக கிடைக்கின்ற சொத்துக்கள் குறித்து தமக்கு எதுவும் செய்ய முடியாது என்றும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ சுட்டிக் காட்டியிருந்தார்.

'உறவுமுறை வேறு, அரசியல் வேறு'. 'பன்டோரா பேப்பர்ஸ்' விவகாரத்தில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் இலங்கையர்கள் குறித்து உடனடி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலஞ்ச ஊழல்மோசடி விசாரணை ஆணைக்குழுவுக்கு பணிப்புரை

திருக்குமார் நடேசன் நடத்தியதாகக் கூறப்படும் நிதி நிறுவனம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதிகளான ஆர்.பிரேமதாச மற்றும் சந்திரிகா பண்டார குமாரதுங்க ஆகியோரிடமே கேட்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இலங்கையின் நிலைமை இவ்வாறு இருக்க, உலகின் ஏனைய நாடுகளின் தலைவர்களும், சம்பந்தப்பட்ட தமது நாடுகளின் பிரஜைகள் மீதான குற்றச்சாட்டு குறித்து விசாரணைகளை நடத்துவது பற்றி கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

குறிப்பாக பாகிஸ்தான் அரசியல்வாதிகள் சிலரின் பெயர்களும் இதில் உள்ளடங்கியிருப்பதால் அவர்கள் பற்றி விசாரணை நடத்தப்படும் என அந்நாட்டு ஜனாதிபதி இம்ரான் கான் தெரிவித்துள்ளார். இதுபோன்று பல்வேறு நாடுகளின் தலைவர்களும் இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்துக் கவனம் செலுத்தியுள்ளனர்.

திருக்குமார் நடேசன், நிரூபமா ராஜபக்ஷ ஆகியோர் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்று விட்டதாக வெளிவந்த செய்தி புனையப்பட்ட கதை! இலஞ்ச ஊழல்மோசடி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் நேரில் தோன்றி சாட்சியம்!

பி.ஹர்ஷன்...✍

வார இறுதி

அரசியல் குறிப்பேடு

சம்யுக்தனி

மீண்டும் வலுவடைந்து வரும் இலங்கை–இந்திய நல்லுறவு

இந்து சமுத்திர பிராந்தியத்தில் கேந்திர நிலையமாக அமைந்து–ள்ளமையால், இலங்கை மீது ஏனைய நாடுகளின் அக்கறைக்கு எப்பொழுதும் குறைவு இருந்ததில்லை. பூகோள அமைவிடம் காரணமாக இலங்கையு–டனான உறவுகளைப் பலப்படுத்துவதற்குப் பெரும்பாலான நாடுகள் எப்பொழுதும் விரும்பம் காண்பித்தே வந்துள்ளன. குறிப்பாக அயல்நாடான இந்தியா இலங்கையுடன் நெருக்கமான நட்புப் பாராட்டியே வந்துள்ளது.

இலங்கைக்கு எப்பொழுது உதவி தேவைப்பட்டாலும் உடனடியாக அதனை வழங்குவதற்கு இந்தியா எப்பொழுதும் தயங்கியதில்லை. இரு நாடுகளிலும் மத்திய அரசாங்கத்தில் யார் ஆட்சிக்கு வந்தாலும் இரு நாடுகளுக்கும் இடையில் பரஸ்பர உறவு தொடர்ந்துகொண்டே வருகிறது. இந்த வரிசையில் இந்திய வெளியுறவு செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ வர்தன் ஷ்ரிங்லா அவர்களின் அண்மைய இலங்கை விஜயம் இரு நாட்டு உறவுகளில் மேலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்றே கூற வேண்டும்.

கொழும்புத் துறைமுகத்தின் முனைய விடயத்தில் இரு நாட்டுக்கும் இடையில் ஒரு சில மனக்குறைகள் ஏற்பட்டிருந்தாலும், தற்பொழுது மேற்கு முனையத்தின் அபிவிருத்திப் பணிகள் இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளன. இது தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னணியிலேயே இந்திய வெளியுறவு செயலாளரின் சமீபத்திய இலங்கை விஜயம் அமைந்திருந்தது.

வெளியுறவு செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ வர்தன் ஷ்ரிங்லாவின் வருகையினால் இருநாட்டு நெருக்கத்தில் மலர்கின்ற புதிய அத்தியாயம்

கடந்த 02ஆம் திகதி முதல் 05ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்த இந்திய வெளியுறவு செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ வர்தன்ஷ் ரிங்லா பல்வேறு உயர்மட்டச் சந்திப்புக்களை மேற்கொண்டிருந்ததுடன், பல்வேறு துறைகளில் இரு நாட்டுக்கும் இடையிலான ஒத்துழைப்புகள் பற்றிய கலந்துரையாடல்களையும் மேற்கொண்டிருந்தார்.

கொவிட்19 உலகத் தொற்றுநோய் காரணமாக நாடு சமூக மற்றும் பொருளாதார சவால்களைச் சந்தித்திருக்கும் நிலையில், இந்திய உயர்மட்ட அதிகாரி ஒருவரின் விஜயத்தின் போது பல்வேறு துறைகளில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கான உறுதிமொழிகள் இந்திய தரப்பினால் வழங்கப்பட்டுள்ளன. இந்தியாவின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் பல்வேறு திட்டங்களும் அவருடைய விஜயத்தின் போது அங்குரார்ப் பணம் செய்து வைக்கப்பட்டமை விசேட அம்சமாகும். இவற்றுக்கும் அப்பால் அவர் மேற்கொண்டிருந்த சந்திப்புக்களின் போது குறிப்பாக தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போது அரசியல் விடயங்கள் குறித்த கலந்துரையாடல்களும் முக்கியத்துவம் பெற்றிருந்தன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை கடந்த 05ஆம் திகதி சந்தித்திருந்த இந்திய வெளியுறவுச் செயலாளர், இரு நாட்டுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளை விஸ்தரிப்பதன் முக்கியத்துவம் குறித்து விரிவாகக் கலந்துரையாடியிருந்தார். மாகாண சபைத் தேர்தல்களை விரைவில் நடத்த வேண்டியதன் அவசியத்தையும், 13வது அரசியலமைப்புத் திருத்தத்தின் சரத்துக்கள் அனைத்தையும் முழுமையாக அமுல்படுத்துவது பற்றிய இந்திய அரசாங்கத்தின் நிலைப்பாட்டையும் அவர் மீண்டும் வலியுறுத்தியிருந்தார்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் பலவீனங்களைப் போன்றே அதில் காணப்படும் பலம் தொடர்பிலும் கண்டறிந்து செயற்படுவதன் தேவை தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்துரைத்திருந்தார். நன்மை, தீமைகளை எடுத்துரைத்து, பெரும்பான்மையான மக்களின் விருப்பத்துடன் செயலாற்றுவது அத்தியாவசியமென்றும், தற்போது காணப்படும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை விரைவாக அடையாளம் காண்பதுடன், மீனவச் சமுதாயத்துக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகளைப் பெற்றுக் கொடுத்து, இரு நாடுகளினதும் மீனவர்கள் எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

வடக்கு – கிழக்கு அபிவிருத்திக்காகத் தமது அரசாங்கம் கடந்த காலங்களில் முன்னெடுத்திருந்த நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்திய ஜனாதிபதி, யுத்த காலத்தின் போது பாதுகாப்புத் தரப்பினரால் கைப்பற்றப்பட்டிருந்த காணிகளில் 90 சதவீதத்துக்கும் மேலானவை, அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்திருந்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் இந்திய வெளியுறவுச் செயலாளர் நடத்திய சந்திப்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான கலாசார உறவுகளைப் பலப்படுத்துவது உள்ளிட்ட விடயங்கள் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன. பௌத்தமத மேம்பாட்டுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் 15 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடை உதவி தொடர்பாக அரசாங்கங்களுக்கு இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையை கைச்சாத்திடுவதன் மூலம் இருநாட்டு மக்களிடையிலுமான உறுதியான தொடர்புகள் மேலும் வலுவாக்கப்படும்.

அதேநேரம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் பலப்படுத்தப்படும் என்பதும் இங்கு சுட்டிக் காட்டப்பட்டது. இது தவிரவும் இந்தியாவின் நன்கொடை உதவியுடன் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டு வரும் இந்திய கலாசார நிலையத்தைப் பராமரிப்பதற்கு இந்தியா தொடர்ந்தும் உதவிகளை வழங்கும் என்ற உறுதிமொழியும் இங்கு வழங்கப்பட்டது.

இந்திய வெளியுறவுச் செயலாளருக்கும், நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வலுவான பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருந்தது. இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நன்கொடை அடிப்படையிலானதும் கடன் அடிப்படையிலானதுமான

யாழ்ப்பாணம் சென்றிருந்த அவர், இந்திய அரசின் நன்கொடையில் அமைக்கப்பட்டு வரும் இந்திய கலாசார நிலையத்தைப் பார்வையிட்டதுடன், கண்டியில் தலதாமாளிகைக்குச் சென்று வழிபாடுகளிலும் கலந்து கொண்டார். திருகோணமலையில் இந்தியாவின் ஐ.ஒ.சி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ள எண்ணெய் குதங்களை நேரடியாகச் சென்று பார்வையிட்டிருந்த அவர், அவற்றின் தற்போதைய நிலைமைகள் குறித்துக் கேட்டறிந்து கொண்டிருந்தார்;.

இது தவிரவும் இந்திய வெளியுறவுச் செயலாளரின் விஜயத்தின் போது, தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு கட்சிகளின் முக்கியஸ்தர்களுடன் நடத்திய சந்திப்பு குறிப்பிடத்தக்கதாக அமைந்தள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நடைபெற்ற சந்திப்பில் இலங்கையின் பிந்திய அரசியல் நிலைவரம் உள்ளிட்ட பல விடயங்கள் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டன. வடக்கு, கிழக்கு தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியாவின் முழுமையான ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக கூட்டமைப்பினர் வலியுறுத்தியிருந்தனர். 13வது திருத்தச் சட்டமூலத்துக்கு அமைய அதிகாரப் பகிர்வின் அவசியத்தை இலங்கை அரசாங்கத்திடம் தாம் வலியுறுத்துவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதற்கும் அப்பால், பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதிநிதிகள் குழு, மற்றும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் கௌரவ ஜீவன் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகள் குழு ஆகியோருடன் இந்திய வெளியுறவுச் செயலாளர் சந்திப்புக்களை நடத்தியிருந்தார்.

13ஆவது திருத்தத்திற்கு அமைவாக ஐக்கிய இலங்கைக்குள் சமாதானம்,நீதி,சமத்துவம் மற்றும் கௌரவம் ஆகியவற்றுக்கான தமிழ் சமூகத்தின் சகல அபிலாசைகளையும் பூர்த்தி செய்கின்ற நல்லிணக்கத்துக்கு இந்தியாவின் நிலையான ஆதரவு கிடைக்கும் என்ற விடயமும் இச்சந்திப்புக்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்திய வெளியுறவுச் செயலாளரின் வருகைக்கு சமாந்தரமாக இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்புக் கூட்டு நடவடிக்கையொன்றும் முன்னெடுக்கப்படவுள்ளது.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவுகள் நெருக்கமடைந்து வருவது இந்தியாவுக்கு சிறியதொரு நெருடலைக் கொடுத்திருந்தாலும், இலங்கையின் நீண்டகால நட்பு நாடு என்ற ரீதியில் இந்தியா தொடர்ந்தும் இலங்கைக்கு ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கைக்கான இந்திய உதவிகள் மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்பு

உதவித் திட்டங்கள் உட்பட சகல கூட்டுத் திட்டங்களையும் துரிதமாக முன்னெடுத்துச் செல்வதற்கு இணக்கம் காணப்பட்டது.

இதேபோல வெளிவிவகார அமைச்சர் மற்றும் வெளிவிவகார செயலாளர் ஆகியோருடனான சந்திப்புக்களின் போது, கொவிட் பெருந்தொற்றினால் ஏற்பட்டிருக்கும் பொருளாதார விளைவுகளை எதிர்கொள்வதற்கும் கொவிட்டினால் ஏற்பட்டிருக்கும் சவால்களை எதிர்கொள்ளுதல் உட்பட பரஸ்பர நலன்கள் அடிப்படையிலான சகல விடயங்கள் தொடர்பாகவும் பரந்தளவிலான பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அத்துடன், இந்திய நன்கொடை உதவித் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட நான்கு அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டங்களும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன. இந்த நிகழ்வு அலரிமாளிகையில் நடைபெற்றதுடன், சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் மெய்நிகர் மார்க்கமாக இணைந்து திட்டங்களை அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர். வடமாகாணத்திலுள்ள வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, கண்டி புசல்லாவை சரஸ்வதி மத்திய கல்லூரி ஆகியவை கல்வி அமைச்சருடன் இணைந்தும், இந்திய வீடமைப்பு திட்டத்தின் மூன்றாம் கட்டமாக முன்னெடுக்கப்பட்ட திட்டங்களின் ஒரு பகுதியான 1235 வீடுகளை தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் கௌரவ ஜீவன் தொண்டமானுடன் இணைந்தும், வவுனியா மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட மாதிரிக் கிராம அமைப்பு திட்டத்தின் கீழான வீடுகள் மெய்நிகர் மார்க்கமூடாக இணைந்திருந்த கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருட்கள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த ஹேரத்துடன் இணைந்தும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.

இலங்கையின் அயல்நாடு என்பது மாத்திரமன்றி இக்கட்டான சூழ்நிலைகளில் இந்தியா எப்பொழுதும் உதவியுள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்த ஒத்துழைப்புக்களைக் குறிப்பிட முடியும். இதற்கும் அப்பால் இரு நாடுகளுக்கும் இடையிலான கலாசார ஒற்றுமைகளைப் பலப்படுத்துவதிலும் இந்தியாவின் உறுதியான நிலைப்பாடு இந்த விஜயத்தின் மூலம் புலப்பட்டதையும் காண முடிந்தது. இந்திய வெளியுறவுச் செயலாளர், யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் கண்டி ஆகிய பகுதிகளுக்குச் சென்றிருந்தமை இதற்கு சிறந்த உதாரணமாக அமைந்தது.

13வது அரசியலமைப்புத் திருத்தத்தை இலங்கை உரியபடி நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதே புதுடில்லியின் என்றும் மாறாத நிலைப்பாடு!

தொழிலாளர்கள் மீது அழுத்தம் கொடுக்கும் கம்பனிகள்

கண்டுகொள்ளாத தொழிற்சங்கங்கள்

தலவாக்கலை தோட்டத்தின் கட்டுக்கலை பிரிவில் இடம்பெற்ற தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்துக்கும் இடையிலான கைகலப்பு காரணமாக தோட்டத் தொழிலாளர்கள் 11 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டு நேற்று முன்தினம் (07) அவர்கள் கடும் நிபந்தனைகளுக்கு அமைய விடுவிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். அதற்கமைய குறித்த தொழிலாளர்கள் அனைவரையும் ஒருவருக்கு மூன்று சரீர பிணையில் வீதம் பிணையாக வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். அதற்கமைய எதிர்வரும் டிசம்பர் 7ஆம் திகதி மீண்டும் நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என்ற தீர்ப்பையும் நீதவான் வழங்கியுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

கட்டுக்கலை தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ச்சியாக பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது. அதேபோல் கடந்த மாதம் தொழிலாளர்களுக்கு மிகக் குறைந்த சம்பளமே கிடைத்துள்ளதாகவும் தற்போது அவர்கள் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதன் காரணமாக எதிர்வரும் மாதத்திலும் குறைந்த சம்பளத்தையே பெறக்கூடிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில மாதங்களாகவே இந்த தோட்டத்தில் இரு தரப்பினருக்கும் இடையில் இடம்பெற்று வந்த பரஸ்பர முரண்பாடுகள் காரணமாக தற்போது தொழிலாளர்கள் பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். மேலதிக வருமானத்திற்காக தாம் முன்னெடுத்து வந்த விவசாயக் காணிகள் தோட்ட நிர்வாகத்தினால் மீளப்பெற்றுள்ள நிலையில் அவர்களின் வாழ்வாதாரம் குறித்து பல்வேறு சர்ச்சைகள் எழுந்துள்ளன. தேயிலைச் செடிகளை பாதுகாக்கும் வகையிலேயே இந்த நடவடிக்கைகளை தோட்ட நிர்வாகம் முன்னெடுத்துள்ளதாக தோட்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கூட்டு ஒப்பந்தம் இல்லாத நிலையிலும் தொழிற் சங்கங்களுக்கு சந்தா பணம் அறவிட முடியாத சூழ்நிலை காரணமாகவும் தோட்ட தொழிலாளர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் சம்பந்தமாக தொழிற்சங்க பிரதிநிதிகள் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்தார்கள் என்பது குறித்து பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே மலையக பகுதிகளிலுள்ள பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் இவ்வாறான பிரச்சினைகள் குறித்து தொழிற்சங்கங்கள் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் தோட்ட நிர்வாகத்திற்கு அல்லது தொழிலாளர்களுக்கு சார்பாக சேர்ப்பது நடுநிலைமை வகித்து பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இறங்க வேண்டும் என்றும் தொழிலாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் கூட்டு ஒப்பந்தத்தினூடாகவே வழங்கப்பட்டு வந்தது. தற்போது அரசாங்கத்தின் தலையீட்டுடன் அடிப்படைச் சம்பளமாக நாளாந்தம் ரூபா 1000 வழங்கப்பட வேண்டும் என்ற விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டு அதனை பெருந்தோட்ட நிறுவனங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற உத்தரவும் இதுவரை காலமும் தொழிலாளர்களுக்கு கிடைத்து வந்த சலுகைகள் மற்றும் உரிமைகளையும் அனுபவிக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கூட்டு ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் தொழிலாளர்கள் மத்தியில் சங்கங்கள் தெளிவுபடுத்தவில்லை. ஒருசில தொழிற்சங்கவாதிகளுக்கே இவ்விடயத்தில் போதிய தெளிவில்லை என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

இதேவேளை மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனிக்கு சொந்தமான தலவாக்கலை தோட்டத்தின் கட்டுக்கலை பிரிவில் இதுவரை காலமும் தேயிலைச் செடிகளுக்கு கிருமிநாசினி தெளிப்பதற்காக ஒரு நாளைக்கு ஒருவருக்கு 8 கலன்கள் மாத்திரமே வழங்கப்பட்டு வந்தது. தற்போது தோட்ட நிர்வாகம் ஒரு நாளைக்கு 14 கலன்கள் கிருமிநாசினி தெளிக்க வேண்டும் என பணித்திருக்கிறது. இதனை மருந்து தெளிக்கும் பணியில் ஈடுபட்ட 8 ஆண் தொழிலாளர்கள் ஏற்க மறுத்தனர். இதனால் மருந்து தெளிக்கும் பணியில் ஈடுபட்டவர்களை தற்காலிக பணி நீக்கம் செய்வதாக அறிவித்தது. தோட்ட நிர்வாகம் எடுத்த முடிவினை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என வலியுறுத்தி தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 200 தொழிலாளர்கள் 5 தினங்களாக பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

தோட்ட நிர்வாகம் தொடர்ச்சியாக தம்மை கஷ்டப்படுத்தி வருவதாகவும் இதுவரை காலமும் தாம் செய்த வேலை நேரம் மற்றும் வேலையின் அளவில் அதிகரிப்பை ஏற்படுத்தி அதன்மூலம் கூடிய வருமானத்தை நிர்வாகம் பெற்றுக்கொள்வதற்கு தம்மை பயன்படுத்தி வருவதாகவும் தொழிலாளர்கள் குற்றம் சுமத்தினர்.

தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் தொழிற்சங்க காரியாலயங்களில் முறைப்பாடு செய்தபோதிலும் தற்போது தனது சம்பளப் பணத்திலிருந்து தொழிற்சங்கங்களுக்கு செலுத்த வேண்டிய சந்தாப் பணம் அறவிடப்படாமையால் தொழிலாளர்களின் பிரச்சினைகளை பேசுவதில் பின்வாங்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. ஆனால் தொழிற்சங்கங்களுக்குரிய சந்தாப் பணத்தை அறவிட வேண்டாம் என எந்தவொரு தொழிலாளியும் தெரிவிக்கவில்லை. இது தொடர்பில் குறித்த தொழிற்சங்கங்கள் தோட்ட நிர்வாகத்துடன் கலந்துரையாடி தேவையான முன்னேற்பாடுகளை செய்திருக்க வேண்டும் என்பது தொழிலாளர்கள் தரப்பு நியாயம்.

எந்தவொரு தொழில் நிறுவனமும தமது ஊழியர்களுக்கு வழங்கும் சம்பளத்திற்கு ஏற்ற வேலையை பெற்றுக் கொள்ளவே முனையும். தமது உயர் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கு அமையவே தாம் செயற்பட வேண்டியிருப்பதாக தோட்ட நிர்வாகியொருவர் தெரிவித்தார். தற்போது நிர்வாகத்தினால் ஒவ்வொரு தொழிலாளிக்கும் சகல அளவீடுகளும் உட்பட நாளாந்தம் ரூபா 1150 வழங்கப்பட்டு வருவதாகவும் அந்த சம்பளத்திற்காக வேலையை செய்யவேண்டிய பொறுப்பு தொழிலாளிக்கு இருப்பதாகவும் வேலையை வாங்க வேண்டிய கடமை நிர்வாகத்திற்கு இருப்பதாகவும் கம்பனி கம்பனி தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் தலவாக்கலை தோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கும் தோட்ட பிரிவுகளிலுள்ள தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய அனைத்து சலுகைகளும் உரிமைகளும் எவ்வித தடங்கலுமின்றி வழங்கப்படுவதுடன் அவர்களுக்கு செலுத்தவேண்டிய சம்பளமும் முறையாக வழங்கப்படுவதாக நிர்வாகம் தெரிவித்தது. எனவே வாங்கும் சம்பளத்திற்கேற்ப முழுமையாக வேலையை செய்ய வேண்டிய வேண்டிய கடமையும் பொறுப்பும் இருக்க வேண்டும். அப்போதுதான் நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் எவ்வித முரண்பாடுகளும் ஏற்படாது என நிர்வாகத்தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பணி பகிஷ்கரிப்பு சம்பந்தமாக நுவரெலியா மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகளிடம் தொலைபேசி மூலம் உரையாடியபோது இது தொடர்பில் சம்பந்தப்பட்ட கம்பனி, நிர்வாகம் உள்ளிட்ட பலருடன் துரிதமாக பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து நியாயமான தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதாக தெரிவித்தனர்.

பெரும்பாலான ஆண் தொழிலாளர்கள் தமது கடமையை முழுமையாக செய்வதை தவிர்த்து வருவதன் காரணமாகவே இவ்வாறான பிரச்சினைகள் எழுவதாக தோட்ட நிர்வாகத்தினரும்

லிந்துலை நிருபர்....

தொழிற்சங்கத்தினரும் கூறுகின்றனர். தலவாக்கலை, கட்டுக்கலை பிரிவிலும் இதுபோன்ற ஒரு நிலைமை இருப்பதாக தோட்ட நிர்வாகம் தெரிவித்தது. தொழிலாளர்கள் தமது வேலைகளை உரிய நேரத்தில் செய்து முடித்தால் எவ்வித பிரச்சினைகளும் யாருக்கும் ஏற்பட வாய்ப்பில்லை என்கிறது நிர்வாகத்தரப்பு. இதே நிலைப்பாட்டில் தான் தொழிற்சங்க பிரதிநிதிகளும் இருந்து வருகின்றனர். பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட போதிலும் இணக்கப்பாடு எட்டப்படவில்லையென தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இருப்பினும் தற்போதைய covid19 தொற்று காரணமாக பலரும் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தமது வாழ்வாதாரம் எவ்விதத்திலும் பாதிக்கக் கூடாது என்ற எண்ணத்தில் வழமைபோல் பணிக்கு செல்ல தொழிலாளர்கள் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தனர். தற்போதைய வாழ்க்கை செலவுடன் ஒப்பிடும்போது தொழிலாளர்களுக்கு கிடைக்கும் சம்பளம் போதுமானதாக இல்லாத நிலையில் தோட்ட நிர்வாகம் அதனை உணர்ந்து தொழிலாளர்களுக்கு உரிய முறையில் பணிகளை வழங்கி அதற்குரிய வேதனத்தையும் வழங்கும் பட்சத்தில் ஒவ்வொரு தொழிலாளியும் தாம் வாழும் தோட்டத்திற்கு உண்மையாக நேர்மையாக இருப்பார்கள் என்பது யதார்த்தமே.

தற்போதைய நிலையில் நிரந்தர மாத சம்பளத்தை பெறும் நபர்கள் கூட மேலதிக வருமானத்தை பெற்றுக்கொள்ளும் வகையில் பகுதிநேர தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் தலவாக்கலை தொட்ட பிரிவுகளில் வாழும் தொழிலாளர்களும் மேலதிக வருமானத்தை பெற்றுக்கொள்ளும் முகமாக விவசாயம், கால்நடை வளர்ப்பு, வியாபாரம் மற்றும் சொந்த வாகனங்கள் மூலம் கிடைக்கும் வருமானம் போன்ற பல்வேறு வழிகளில் தமது வாழ்வாதாரத்தை கொண்டு நடாத்த முயற்சித்து வருகின்றனர். அதன்படி தோட்ட நிர்வாகத்தினால் பறிக்கப்படும் வேலைகளை உரிய நேரத்தில் செய்து முடித்துவிட்டு மேலதிக வருமானத்தை பெற்றுக் கொள்ளும் வாய்ப்புகளை சரியான வகையில் பயன்படுத்துவதற்கு தோட்ட நிர்வாகமும் இடையூறு ஏற்படுத்தாமல் செயல்பட்டால் அனைவரும் நலமாக இருக்கலாம் என்பது உண்மை.

எனவே, தலவாக்கலை தோட்ட கட்டுக்கலை பிரிவு மக்கள் மாத்திரமன்றி ஏனைய பெருந்தோட்ட பகுதிகளில் வாழும் தொழிலாளர்களுக்கும் இவ்வாறான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டிய பொறுப்பு தோட்ட நிர்வாகத்திற்கு மாத்திரமல்ல மக்கள் பிரதிநிதிகளிடமும் உள்ளது என்பதை உணர்ந்து சகலரும் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

சம்பளம் மட்டும்தானா மலையகத்தில் பிரச்சினை ?

சிறுவர் உரிமைகளுக்காக பேச வேண்டும் மலையக பிரமுகர்கள்

கடந்த முதலாம் திகதி சர்வதேச சிறுவர் தினம் இடம்பெற்றது. வழமைபோல இது ஒரு சம்பிரதாயபூர்வமான அம்சமாகவே அணுகப்பெற்றது. மலையத்தைப் பொறுத்தவரை இது சகஜமாகிவிட்ட ஒரு அனுட்டிப்பு. தவிர பெருந்தோட்டப் பிள்ளைகளின் ஆரோக்கியமான உடல், உள வளர்ச்சிக்கு உரமிடுவாக எதுவுமே நடப்பது கிடையாது.

சிறுவர் உரிமைகள் பேணப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு 1989 இல் ஐ.நா. சிறுவர் உரிமை சாசனத்தை பிரகடனப்படுத்தியது. 1991 இல் இலங்கை அதை அங்கீகரித்துக் கொண்டது. 1999இல் இலங்கையும் ஒரு சிறுவர் சாசனத்தை ஏற்படுத்தியது. இதனையடுத்து சிறுவர் நலனைப் பாதுகாப்பதற்கென நிறுவனமும் அதிகாரியும் நியமிக்கப்பட்டார். முன்பள்ளி வசதிகள் இல்லை. முந்தைய கணிப்பின்படி மலையக சிறுவர் எண்ணிக்கை 5 இலட்சமாக காணப்படுகின்றது. இதில் பலர் அடிப்படைக் கல்வியறிவைக்கூட பெறமுடியாத அவல நிலை இன்னும் அகலவில்லை. இதற்கு குடும்பத்தின் வறுமை மட்டம் அடிப்படைக் காரணமாக அமைகின்றது. அத்துடன் பாடசாலை இடைவிலகல் என்பது சமூக அபிவிருத்திக்கு ஆனால் இந்த உரிமை மலையக சிறுவர்களுக்கு இல்லை.

2012 இலான ஒரு கணிப்பீட்டின் படி சுமார் 4 மில்லியன் சிறுவர் இலவச கல்வியில் உள்ளனர். ஆரம்பக் கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ள இன்றைய நிலையிலும் 25,0000க்கு மேற்பட்ட சிறுவர் பாடசாலைக்குச் செல்லாதிருப்பது ஓர் அதிர்ச்சித் தகவல். இதேவேளை பாடசாலை இடைவிலகல் (2011) தொகை 126000 ஆக காணப்படுகின்றது. பாடசாலை செல்லாதோர் தொகையிலும் இடை விலகுவோர் தொகையிலும் 60 சதவீதமானோர் வடகிழக்கு மற்றும் மலையகம் சார்ந்த சிறுவர்களே ஆவார்கள்.

பன். பாலா...

பெருந்தோட்டப் பகுதியிலுள்ள பிள்ளைகளில் 8 வீதமானோர் வலது குறைந்த சிறுவர்கள் என ஆய்வொன்று கூறுகின்றது. மலையகத்தைப் பொறுத்தவரை வலது குறைந்த சிறுவர்களில் 20 வீதமானோர் மட்டுமே கல்வியைப் பெறுகின்றனர். 80 வீதமானோருக்கு அந்த வாய்ப்பு கிட்டுவதில்லை.

சிறுவர் உரிமை மீறல்களுக்கான அடிப்படை காரணங்கள் பொருளாதார அமைப்பு முறையிலிருந்தே தோன்றுவதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். மலையகத்தைப் பொறுத்தவரை இந்நிலைமை மிகவும் மோசமானதாகவே காணப்படுகின்றது. வறுமையிலிருந்து விடுபட வேண்டி மலையக தாய்மார் பலர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளார்கள். கணிசமானோர் பணக்கார வீடுகளில் பணிப்பெண்களாக இருக்கிறார்கள். இதனால் பல குடும்பங்களில் சிறுவர்கள் பெற்றோர்களின் பாசம், பராமரிப்பு, பாராட்டின்றி தனிமைப்பட்டுப் போகின்றார்கள். இத்தனிமைச் சூழல் பிள்ளைகளை உளவியல் ரீதியாக பாதிக்கச் செய்கிறது. அவர்களின் அறிவு வளர்ச்சி, ஆற்றல் வெளிப்பாடு அமுக்கப்பட்டு விடுகிறது. தன்னம்பிக்கை தளர்வடைகின்றது. இதனால் சிறுவர்கள் சிலர் மனம் விரக்தியடைந்து மரணத்தை நோக்கி பயணிக்கவும் செய்கின்றார்கள்.

தவிர போஷாக்கின்மை, முறையான உணவு பழக்கவழங்கள் பின்பற்றப்படாமை என்பன சிறுவர் சமூகத்தை இலகுவில் நோய் பீடிக்கும் சமூகமாக மாற்றுகின்றன. இன்று மலையகத்தைப் பெரிதும் மருட்சி கொள்ள வைத்திருக்கும் மதுபாவனை, போதைப்பொருள் பாவனை, புகையிலைப் பாவனை குடும்ப அங்கத்தினரிடையே குறிப்பாக சிறுவர்களிடையே போஷாக்குக் குறைபாட்டை ஏற்படுத்துவதாக கண்டறியப்பட்டுள்ளது. இதனால் மந்தபோஷண குறைபாடு ஏற்பகின்றது. பெற்றோர் தமது வருமானத்தில் பெருந்தொகைப் பணத்தை போதைதரும் பொருட்களுக்காக செலவிடுவதால் குடும்ப வறுமை அதிகரிக்கிறது.

அத்துடன் சிறுவர்களின் உயிருக்கு உலை வைக்கும் நோய்களும் இங்கு தாராளமாக ஊடுருவுகின்றன. இளம்பிள்ளை வாதம், வயிற்றோட்டம், தொண்டைக்கரப்பான், டெங்குக் காய்ச்சல், மூளை வளர்ச்சியற்ற பிள்ளைகள் பிறப்பு என்று பல்வேறு அச்சுறுத்தல்கள் அலைமோதுகின்றன. நோய்வாய்ப்படும் குழந்தைகளுக்கு உரிய நேரத்தில் வைத்தியம் செய்யாமல் உதாசீனமாக இருந்து விடுவதால் அதிகமான உயிரிழப்புகள் இடம்பெற்று வருகின்றன. கைவைத்தியம், மந்திர நம்பிக்கை என்று பொறுப்பற்று நடந்து கொள்ளும் பெற்றோர் இன்னும் இருக்கின்றார்கள். சிறுபராயத்திலேயே குழந்தைகளின் உடலுறுப்புகளில் ஏற்படும் பாதிப்பினை உணர்ந்து உரிய வைத்தியம் செய்யாமல் நோய் நன்கு முற்றியதும் பதறித்துடிக்கும் பாவங்களும் இடம் பெறுகின்றன.

பற்றாக்குறைக்கு தொற்றா நோய்களின் தாக்கமும் மலையக சிறுவர்களிடத்தே அதிகமாக ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

(10ஆம் பக்கம் பார்க்க)



உணர்ச்சி அரசியலைத் தோற்கடித்து நாட்டுப்பற்றில் இணையும் நேரமிது

தேசிய காங்கிரஸ் என்பது ஒரு சமூகத்துக்கான கட்சி மட்டுமல்ல சகல சமூகங்களையும் நாட்டுப்பற்றுடன் அணைத்துச் செல்வது பற்றிச் சிந்திக்கும் கட்சி

பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம் அதாஉல்லா

சேதனப்பசளை உற்பத்தி ஊக்கு விக்கப்படும் இன்றைய சூழ்நி லையில், பாலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு வரும் நெருக்கடிகளில் கைவிடப்பட்டுள்ள விவசாயக் காணிகள் தொடர்பில் குரல் கொடுப்பது, அல்லது அது பற்றிய தீர்வுக்கு அவசரப்படு வது ஆரோக்கியமாக அமை யாதென தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம் அதா உல்லா தெரிவித்தார். தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய நேர்காணலில் பாராளுமன்ற உறுப் பினரும் முன்னாள் அமைச்சருமான ஏ,எல்,எம். அதா உல்லா தெரிவித் தவை.

ஏ.ஜீ.எம்,தௌபீக்

கேள்வி: உள்ளூராட்சி சபைக ளின் ஆயுட்காலம் நிறைவடையவுள் ளது. இந்தச் சூழ்நிலையில் மீண்டும் தேர்தல் நடத்தப்படுமென்று எதிர்பார்க் கலாமா?

பதில்: மொத்தமாக உள்ள 341 உள் ளூராட்சி சபைகளில், 241 சபைகள் இந்த அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ளன. கொரோனா தொற்றின் அபாயத்திலி ருந்து முற்றாக மீளாத நிலையில்,தேர் தலை நடாத்தும் சாத்தியம் இப்போது இல்லை. எனவே, உள்ளூராட்சி சபைகளை இன்னும் ஒரு வருடத்துக்கு நீடிப்பது பற்றித்தான் அரசாங்கம் சிந்திக் கும். ஏதாவதொரு தேர்தலைச் சந்திக்க நேரிட்டால், உள்ளூராட்சி சபைகளின் அதிகாரம் உதவும்தானே!

கேள்வி: அடையாளம் காணப் பட்டுள்ள முஸ்லிம் தலைமைகளில்,தே சிய காங்கிரஸும் ஒன்று. இருந்தாலும் ஏனைய தலைமைகளின் போக்குகளி லிருந்து, தேசிய காங்கிரஸ் வேறுபடுகி றதே?

பதில்: சிரிக்கிறார்...ஏனைய தலை மைகள், அதிகாரங்கள், சொகுசுகளை முன்னிறுத்தி அரசியல் காய்களை நகர்த் துகின்றன. உணர்ச்சி அரசியலும், கோஷ அரசியலும்தான் இத்தலைமைகளின் அடிப்படைகளாக உள்ளன. இதனால், இலகுவாக மக்களை இவர்களால் ஏமாற்ற முடிகிறது. ஆனால், நாங்கள் அவ்வாறில்லை.

மக்களின் அறியாமை, வயிற்றுப்பசி, மத உணர்வுகளை மூலதனமாக்கி அரசி யல் ஆதாயம் தேடுவது எமது நோக்க மில்லை.

இத்தலைமைகளின் மலின அரசிய லால் வந்த வினைகளையே நமது சமூ கங்கள் அனுபவித்து வருகின்றன. தேசிய காங்கிரஸ் என்பது ஒரு சமூகத்துக்கான கட்சி மட்டுமல்ல,சகல சமூகங்களையும் நாட்டுப்பற்றுடன் அணைத்துச் செல்வது பற்றிச் சிந்திக்கும் கட்சி.

கேள்வி: பெரும் ஆவலுடன் உங்களது பாராளுமன்றப் பிரவேசம் எதிர் பார்க்கப்பட்டது.ஆனால், அண்மைக் காலமாக நீண்ட அமைதியுடன் பயணிக் கிறதே உங்களது அரசியல்?

பதில்: அமைதியிலும் அர்த்தம் இருக்கிறது. எனினும்,இன்றைய காலங் களில் அர்த்தம் இல்லாவிட்டாலும் அமைதியாகத்தான் இருக்க நேரிட்டுள் ளது. நான், ஏற்கனவே குறிப்பிட்டது போன்று மலின அரசியல் ஏற்படுத்திய வினைகளில் ஒன்றாகத் தான், இந்நிலை மைகளைக் கருத முடிகிறது. இதனால், நமது பிரச்சினைகளுக்கு சுடச்சுட தீர்வை எதிர்பார்ப்பதும், தீர்வுக்காக அவசரப்படு வதும் ஆரோக்கியமாக அமையாது.

கேள்வி: அப்படி, அவசரமாக முஸ்லிம்கள் அல்லது சிறுபான்மை சமூகத்தினர் எந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வை எதிர்பார்க்கின்றனர்.?

பதில்: சேதனப்பசளை ஊக்கு விப்பு, பாலுக்கான தட்டுப்பாடு,கடும் போக்கு சக்திகளின் நெருக்குவாரங்கள் என்பவற்றுக்குத்தான், தீர்வுகள் அவசர மாகத் தேவைப்படுகின்றன.

நாட்டில், பயங்கரவாதம் தோற்கடிக் கப் பட்டு ஒரு தசாப்தத்தின் பின்னர் நடத்தப்பட்ட மதவாதிகளின் தாக்குத லால், இன்னுமொரு சிறுபான்மை இனத் தவரை ஆபத்துகள் சூழத்தொடங்கின. இதனால்,எதற்கெடுத்தாலும்

அடிப்படைவாதம், பயங்கரவாதம் எனக் கூறி,தேசப்பற்றிலிருந்து முஸ்லிம் களைத் தூரமாக்க சதிகள் நடைபெறும் சூழலிது.

இதிலிருந்து முஸ்லிம் சமூகம் பாது காப்படைய வேண்டும். உணர்ச்சி அர சியலைத் தோற்கடிப்பதில்தான்,இந்தப் பாதுகாப்பு உள்ளது.

அடுத்ததாக, பாலுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு. கால்நடை வளர்ப்பு,மாடு வளர்ப்புக்களில் ஆர்வம் செலுத்தி, இந்தத் தட்டுப்பாடுகளைப் போக்க முடியும். சேதனப்பசளை உற்பத்தி ஊக் குவிக்கப்படுவதால்,எரு பயன்பாடுகள் பிரயோசனமாக இருக்குமே! இன்னும், இந்தச் சேதனப்பசளை விடயத்தில் விவ சாயிகள் போதிய அறிவின்றி உள்ளனர். இதனால், காணிகளின் குத்தகையும் குறைந்துள்ளது. இந்தச் சந்தர்ப்பங்கள் தான், பாலுற்பத்தி,பண்ணை வளர்ப்புக் களில் கவனம் செலுத்தத் தூண்டுகின் றன.

கேள்வி: கிராமங்களின் அழகு, இயற்கை எழில்களைப் பாதுகாப்பது உங்களது அரசாங்கத்தின் நோக்கம். அந்த விதத்தில்,உங்களது கட்சியின் பங்களிப் புக்கள் எவை?

பதில்: மக்கள் பெருகுவதற்கு ஏற்ப காணிகள் அதிகரிப்பதில்லைதான். இதனால்,குடியிருப்பதற்காக சில காடு கள்,காணிகளை அழிக்க நேரிடுகிறது. ஆனால்,வியாபார நோக்கத்தில்,இயற் கைத் தளங்களை மண்ணிட்டு நிரப்பு தல்,காடுகளை அழித்தல் என்பவற்றைத் தடுத்தே ஆக வேண்டும்.மண்,நீர் வளங் களைப் பாதுகாப்பதற்காகத்தானே, அர சாங்கம் சேதனப்பசளைப் பாவனையை ஊக்குவிக்கிறது.

இந்நிலையில், காடுகள், குளங்கள், ஏரிகள், ஆறுகளை அழிப்பது, நாம் வாழும் சூழலுக்கு ஆரோக்கியமானதாக அமையுமா? இதைத்தானே எதிர்க்கி றோம். ஒரு துண்டுக்காணி, ஒரு சோடி மாடு போதும் ஆரோக்கிய உணவுக்கு.

கேள்வி: மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றால், முஸ்லிம் கட்சிகள் ஒன் றிணைந்து போட்டியிடுவது பற்றி பேசப் படுகிறதே?

பதில்: ஒன்றுபட்டு இவர்கள் அழித் தது போதும்.இனங்களின்பேரில், மதங் களின் உணர்வில் மக்களைச் சூடேற்றும் அரசியல், கடந்த காலங்களில் ஏற்படுத்தி யவற்றை நாம், பார்த்தோம்தானே!நாட் டுக்காக மக்களை ஒன்றுபடுத்தும் அரசி யலை ப்பற்றிப் பேசுவோமே!

நிதி, நோய் நிலைமைகளிலுள்ளதா உள்ளூராட்சி தேர்தலின் தலைவிதி?

சுஜப் எம்,.காசிம்

அரசியல் கட்சிகளின் மக்கள் செல்வாக்குகளை அளவீடு செய் கின்ற அடித்தளமாகப் பார்க்கப்ப டுவது உள்ளூராட்சி தேர்தல். எம். பிக்களாக இருந்தவர்களும், இதில் போட்டியிடுவது இதற்காகத்தான். இந்தச் சபைகளின் தலைவர்க ளாக இருந்த பலர் எம்.பிக்களாக, அமைச்சர்களாக, ஏன் நாட்டின் தலைவர்களாக (பிரேமதாஸ) உயர் வதற்கு அடித்தளமாக அமைவதும் இதன் அதிகாரங்கள்தான்.

1987 ஆம் ஆண்டு அறிமுகப்ப டுத்தப்பட்ட இந்த தேர்தல் முறை, கடந்த நல்லாட்சி அரசில் மாற்றம் செய்யப்பட்டு வட்டாரம், விகிதா சாரம் கலந்த கலப்பு முறையாக அறி முகம் செய்யப்பட்டது. அதுவரைக் கும் விகிதாசார அடிப்படையிலே இந்தத் தேர்தல் நடத்தப்பட்டது. சிறிய, புதிய கட்சிகளைப் பலப்ப டுத்தல், பெண்களின் பிரதிநிதித்து வங்களை உள்வாங்கல் உள்ளிட்ட நோக்கங்களுக்காக மாற்றஞ் செய் யப்பட்ட இந்த கலப்பு முறையில், நடைமுறைச் சிக்கல்கள் இருக் கவே செய்கின்றன. இதனால்தான், மாகாண சபைத் தேர்தல்களையும் இன்னும் நடாத்த முடியாமல் இருக் கின்றது.

சிறிய, புதிய கட்சிகளைப் பலப் படுத்துவது என்ற கருத்தியலில், பலமுள்ள கட்சிகளைப் பலவீனப் படுத்தல் என்ற பொருளும் உள் ளதுதான். இந்த, யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள, கலப்பு முறையின் முதலாவது தேர்தலே உதவியிருந் தது. 2018 பெப்ரவரியில் நடத்தப் பட்ட உள்ளூராட்சி தேர்தலில், உருவாகி மூன்றே மூன்று மாதங் களான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற புதிய கட்சி, மொத் தமாக உள்ள 341 உள்ளூராட்சி சபைகளில் 241 சபைகளைக் கைப் பற்றியது. புதிய கட்சிகளைப் பலப் படுத்தல் என்ற ரணிலின் கலப்பு முறைத் தேர்தலை இது உண்மைப் படுத்தியதுடன், பெரிய கட்சிக ளைப் பலவீனப்படுத்தியதையும் பார்க்க முடிந்தது.

நல்லாட்சி அரசின் பிரதான பங்கா ளிக் கட்சிகளிகளாக இருந்த ஐக்கிய தேசிய கட்சி 34, ஐக்கிய மக்கள் சுதந் திரக் கூட்டமைப்பு 02, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 07 சபைகளை யுமே கைப்பற்றின. இப்பொழுது, இந்தச் சபைகளின் ஆட்சிக்காலங் கள் ஆயுளை நெருங்கிக்கொண்டி ருக்கின்றன. 2022 பெப்ரவரியில் இவை கலைக்கப்பட வேண்டும். கலைக்கப்பட்டால், உடன் தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என்பதும் இல்லை. சபைகளை, உள்ளூராட்சி ஆணையாளர்களிடம் ஒப்படைத்து, தேவையான நேரத்தில் நடத்தவும் முடியும். மறுபக்கம், உடன் கலைக் காது ஒரு வருடத்துக்கு சபைகளின் ஆயுட்காலத்தை அதிகரிக்கவும் சட்டத்தில் இடமிருக்கிறது. இந்த, அரசாங்கம் எதைச் செய்யும் என்ற ஆரூடங்கள்தான் அதிகரித்து வரு கின்றன.

எதிர்நோக்கப்படும் உச்சக்கட்ட நிதி நெருக்கடி, கொரோனாத் தொற்றுக்களில் தேர்தலை நடத்த முடியுமா? அல்லது சபைகளை ஒரு வருடம் நீட்டிவிட்டு, சுமார் எட்டாயிரத்துக்கும் அதிகமான உறுப்பினர்களுக்கு சம்பளம் வழங் குவது சுலபமானதா? அதிக சபைக ளைக் கைப்பற்றியுள்ள இந்த அரசு, சபைகளைக் கலைக்க விரும்புமா? வந்துபோன இந்திய வெளியுறவு செயலரின் அழுத்தத்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்த நேரிடின், இந்த சபைகள் உதவுமா? என்றும் சிந்திக்கலாம். அவ்வாறு கலைத்தா லும் தேர்தலுக்கான செலவுகளுக்கு என்ன செய்வது? என்ற சிந்தனை களிலே சில ஊடகங்கள், இந்தத் தேர்தல் தொடர்பில் ஊகங்களை வெளியிடுகின்றன.

இப்போதுள்ள நிலையில், சபைகளின் ஆயுட்காலம் முடிந்த கையுடன், ஆணையாளர்களிடம் ஒப்படைப்பதுதான் உகந்ததென, அரசாங்கம் கருதுமென ராஜபக்ஷக் களுக்கு நெருக்கமான ஊடகங்கள் ஊகிக்கின்றன. இதற்கும் சில கார ணங்கள் இல்லாமலில்லை. எந்த வேளையிலும் ராஜபக்ஷக்கள் தேர் தலுக்கு அஞ்சியதில்லை. உரிய வேளைக்கும், வேளைக்கு முன்ன ரும் மக்கள் ஆணைகளுக்கு மதிப்ப ளித்து, வழங்கிய வாக்குறுதிகளைக் காப்பாற்றி தேர்தல்களை நடத்திக் காட்டியவர்கள் ராஜபக்ஷக்கள். இன்னும் நான்கு வருடங்கள் ஆட் சியில் இருக்கப்போகும் இந்த அர சுக்கு, உள்ளூராட்சித் தேர்தல் ஒரு பொருட்டும் இல்லை என்பதால், மக்கள் ஆணைக்கே இந்த அரசு மதிப்பளிக்கும் என எதிர்வு கூறப் படுகிறது. என்னவானாலும், நிதி நிலைமைகளும்,நோய் நிலைமைக ளுமே இத்தேர்தலை தீர்மானிக்கப் போகின்றன.

85%க்கும் அதிகமான பெருந்தோட்ட மக்களுக்கு முதல் கட்ட தடுப்பூசி

63% பேர் இரண்டு தடுப்பூசியையும் பெற்றுள்ளனர்

இலங்கை பெருந்தோட்ட உரிமையாளர் சங்கம் மற்றும் பெருந்தோட்ட மனித மேம்பாட்டு அறக்கட்டளை (PHDT) ஆகியவற்றின் கூட்டு முயற்சியினால் அனைத்து பெருந்தோட்ட சமூகங்களையும் பாதுகாக்க பெரும் நடவடிக்கை எடுக்கும் வகையில், செப்டம்பர் 10, 2021க்குள், 7 பிராந்தியங்களில் உள்ள 85%க்கும் மேற்பட்ட பெருந்தோட்ட சமூகத்தினருக்கு முதலாவது கொவிட் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகளை நிறைவு செய்துள்ளதாகவும் 63% பேர் இரண்டு தடுப்பூசிகளும் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கான தடுப்பூசி வழங்கும் திட்டத்தை துரிதப்படுத்த சுகாதார அமைச்சு, மாகாண சுகாதார அதிகாரிகள் மற்றும் தோட்ட மனித மேம்பாட்டு அறக்கட்டளை, பிராந்திய தோட்ட நிறுவனங்கள் (RPCs) ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

'கொவிட் தொற்றுநோய் தீவிரமாக மீண்டும் பரவியதால், எமது தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அனைத்து பிராந்திய தோட்ட நிறுவனங்களினதும் முன்னுரிமையான நடவடிக்கை ஆகிவிட்டது.

தடுப்பூசி வழங்கும் திட்டம் முறையாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதில் நாங்கள் தொடர்ந்து முதலீடு செய்கிறோம் என இலங்கை பெருந்தோட்ட உரிமையாளர் சங்கத்தின் ஊடக பேச்சாளர் கலாநிதி ரொஷான் ராஜதுரை தெரிவித்தார்.

'இந்த தடுப்பூசி வழங்கும் திட்டத்தை வெற்றிகரமாகச் செய்வதில் அரசாங்கமும் மற்ற அதிகாரிகளும் அளிக்கும் மகத்தான பங்களிப்பிற்காக நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம், எங்கள் தோட்டத் தொழிலாளர்கள் அனைவரின் பாதுகாப்பிற்கும் நலனுக்கும் நாங்கள் முழுமையாக உறுதிபூண்டுள்ளோம்.'

செப்டம்பர் 10ஆம் திகதி ஆகும் போது, 30-59 வயதுக்குட்பட்ட வர்களில் 87%க்கும் அதிகமானோர் கொவிட் தடுப்பூசியின் முதலாவது ஊசியை ஏற்றிக் கொண்டனர் மற்றும் 58%க்கும் அதிகமானோர் இரண்டாவது தடுப்பூசியை ஏற்றிக் கொண்டனர். 60 வயதுக்கு மேற்பட்ட வர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டது, 92%க்கும் அதிகமான தோட்ட மக்கள் முதலாவது தடுப்பூசியையும் 79% இரண்டாவது தடுப்பூசியையும் பெற்றுள்ளனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அதிக அளவில் வசிக்கும் நுவரெலியா மாவட்டத்தில் (ஹட்டன் மற்றும் நுவரெலியா உள்ளடக்கிய) தடுப்பூசி வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதாக இலங்கை பெருந்தோட்ட உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

3060 வயதிற்குட்பட்ட 85%க்கும் அதிகமான மக்கள் ஏற்கனவே முதலாவது தடுப்பூசியை எடுத்துள்ளனர் மற்றும் 54%க்கும் அதிகமானோர் இரண்டாவது தடுப்பூசியை பெற்றுள்ளனர்.

இதற்கிடையில், இதே வயதை ஒத்த பெருந்தோட்ட ஊழியர்களை கொண்டுள்ள ஏனைய தோட்ட நிறுவனங்களை வைத்திருக்கும் மற்ற மாவட்டங்களில் 89%க்கும் அதிகமான மக்கள் முதலாவது தடுப்பூசியையும், 62% இரண்டாவது தடுப்பூசியையும் பெற்றுள்ளனர்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்வியில் முதுகலைமாணி பட்டம் - மட்டம் 10
2021/2022 ஆம் கல்வியாண்டு

கல்வியில் முதுகலைமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டம் மட்டம் 10, 2021/ 2022 ஆம் கல்வியாண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிப்பதற்கான காலப்பகுதி 10-10-2021 தொடக்கம் 09-11-2021 ஆம் திகதி வரையாகும். கல்வியில் முதுகலைமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டம் அறுபது (60) திறமைச்சித்திகளையும் இரண்டு (02) வருட காலப்பகுதியையும் கொண்டதாகும். இது இரண்டு மட்டங்களைக் கொண்டது (மட்டம் 09 – பாடநெறிகளை மட்டும் உள்ளடக்கியதாகும். மட்டம் 10 - இரண்டு பாடநெறிகளையும் ஆய்வுக் கட்டுரையினையும் உள்ளடக்கியதாகும்). இந்த நிகழ்ச்சித் திட்டம் கொழும்பு பிராந்திய நிலையத்தில் மாத்திரம் நடத்தப்படும்.

கல்வியில் முதுமாணி (SLQF-9) பட்டத்தினைப் பூர்த்தி செய்து குறைந்தபட்சம் 3.00 GPA புள்ளிகளைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மட்டம் ஒன்பதிலிருந்து (09) விலக்களிப்பு வழங்கப்படும்.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மட்டம் 10 இற்காக பதிவு செய்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 100 ஆகும்.

மட்டம் 10 இற்கான அனுமதித் தகைமைகள்

1. இலங்கை திறந்த பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் பல்கலைக்கழகங்களில் கல்வி முதுமாணி பட்டத்தினை (SLQF-9) பூர்த்தி செய்த குறைந்தபட்சம் 3.00 GPA புள்ளிகளைப் பெற்றுக் கொண்டிருத்தல் வேண்டும்.
   அல்லது
2. மேற்படி தகைமைக்குச் சமமான அல்லது பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட உயர் கல்வித் தகைமை.

நிகழ்ச்சித்திட்டத்திற்கான காலம்: ஒரு வருடம்

கல்வி நடவடிக்கைகள்
சகல கல்வி நடவடிக்கைகளும் கொழும்பு பிராந்திய நிலையத்தில் மாத்திரம் மூன்று மொழிகளிலும் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) இடம்பெறும்.

விண்ணப்ப விதிமுறைகள்

அனைத்து அனுமதித் தகைமைகளையும் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக பதிவு செய்யும் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அனுமதித் தகைமைகளை பூர்த்தி செய்து கொண்டவர்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் தெரிவுப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். (தேவையேற்படின்) தெரிவுப் பரீட்சை ஒன்று நடத்தப்படுமாயின் அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு பதிவு செய்து கொள்ளப்படுவதற்கு முன்னர் நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

குறிப்பு: விண்ணப்பதாரிகள் இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கு முன்னர் தங்களது அனுமதித் தகைமைகளை உறுதி செய்துக்கொள்ளல் வேண்டும். இந்த தெரிவுப் பரீட்சையில் சித்தியடைதல் நீங்கள் இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கான அனுமதித் தகைமையைப் பெற்றுக் கொண்டுள்ளீர்கள் என்னும் கருத்தினைத் தரமாட்டாது என்பதைக் கவனத்தில் கொள்ளவும். அனுமதித் தகைமைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையின் போது நிராகரிக்கப்படுவர்.

விண்ணப்பப் படிவம் இணையத்தளத்தில் மட்டும்

விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை பின்வரும் எங்களுடைய இணையத்தளத்தினுள் பிரவேசிப்பதன் மூலம் விண்ணப்பம் செய்யலாம்:
https://ums.omis.site

விண்ணப்பங்கள் விநியோகிக்கும் தொடக்கத் திகதி: 10 ஒக்டோபர் 2021
விண்ணப்ப முடிவுத் திகதி: 09 நொவெம்பர் 2021
விண்ணப்பக் கட்டணம்: ரூபா 1050.00

- விண்ணப்பக் கட்டணத்தை நிகழ்நிலையூடாக வரவட்டை அல்லது கடனட்டை (debit/ credit card) ஆகியவற்றைப் பயன்படுத்திச் செலுத்தலாம்.
- நிகழ்நிலையூடாக (முடெநெ) மாத்திரமே விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.
- நிகழ்நிலையூடாக விண்ணப்பிப்பதற்கு உதவிகள் தேவைப்படுவோர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு பிராந்திய மற்றும் கற்கை நிலையத்துடன் பின்வரும் விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
  - விண்ணப்பதாரியின் முழுப்பெயர்
  - முகவரி
  - தேசிய அடையாள அட்டை இலக்கம்
  - மின்னஞ்சல் முகவரி
  - செல்லிடத் தொலைபேசி இலக்கம்

- வரவட்டை / கடனட்டை ஆகியவற்றைக் கொண்டிராதவர்கள் விண்ணப்பக் கட்டணத்தை அருகில் உள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய / கற்கை நிலையங்களில் பணமாகச் செலுத்தலாம். நிகழ்நிலை ஊடான விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்தல் தொடர்பான உதவிகள் தேவைப்படுவோர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அருகிலுள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய / கற்கை நிலையங்களுக்கு சென்று உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

- பொதுத் தகவல் அலுவலகம்: இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட, காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரை (பொது விடுமுறை தினங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து தினங்களிலும்).
- ஏனைய அனைத்து நிலையங்களும்: காலை 9.00 தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரை (சனி, ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்கள் தவிர்ந்த ஏனைய சகல நாட்களும்)
- நிகழ்நிலையூடாக விண்ணப்பம் செலுத்துதல் தொடர்பான விபரங்கள் மற்றும் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக பின்வரும் ஏதாவது பிராந்திய / கற்கை நிலையங்களுக்கு விஜயம் செய்யுங்கள்.

கொழும்பு (நாவல), அனுராதபுரம், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கண்டி (பொல்கொல்ல), மாத்தறை (நுபே), பதுளை, குருநாகல், அம்பாறை, பண்டாரவளை, கம்பஹா, காலி, அம்பலாந்தோட்ட, ஹட்டன், திருகோணமலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, களுத்துறை, கேகாலை, மொனராகலை, பொலன்னறுவை, புத்தளம், இரத்தினபுரி, மன்னார், குளியாபிட்டிய, அம்பலாங்கொடை, மாத்தளை மற்றும் வவுனியா.

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்.

- https://ou.ac.lk/proinfo-sectertiary/ எனும் இணையத்தளத்தினுள் பிரவேசித்து மாணவர் கையேட்டினை பதிவிறக்கம் செய்து கொள்ளவும்.
- பொதுத் தகவல் அலுவலகம்: 011 2881000 / 256
- தலைவர் / இடைநிலை, மூன்றாம்நிலை கல்வித்துறை: 011 2881425, hdste@ou.ac.lk
- இணைப்பாளர் / கல்வியில் முதுகலைமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டம்: dvsil@ou.ac.lk / 0718414494

தெரிவுப் பரீட்சை

- நிகழ்நிலை தெரிவுப்பரீட்சை (தேவையேற்படின்) 28-11-2021 அன்று நடத்தப்படும்.
- நிகழ்நிலை தெரிவுப் பரீட்சை தொடர்பான மேலதிக விபரங்கள் நீங்கள் விண்ணப்பப் படிவத்தில் வழங்கிய மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ஆதலால் உங்களுடைய மின்னஞ்சல் முகவரியை மிகவும் தெளிவாக விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடவும்.

பதிவாளர் – இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட

சிறுவர் உரிமைகளுக்காக ... (08ஆம் பக்கத் தொடர்)

இரத்த அழுத்தம், ஆஸ்துமா, நீரிழிவு, சிறுநீரக நோய், மாரடைப்பு, பக்கவாதம், புற்றுநோய் என்று பட்டியல் நீள்கின்றது. தவிர பாடசாலை மாணவர்களிடையே போதைவஸ்து பாவனையும் காணப்படுவதாக தெரியவந்துள்ளது.

பெற்றோரின் பராமரிப்பின்றி உளவியல் ரீதியிலான பாதிப்புக்குள்ளாகும் மாணவர்களே இப்பழக்கத்துக்கு அதிகமாக அடிமைப்படுவதாக ஆய்ந்தறியப்பட்டுள்ளது.

ஒரு பக்கம் கல்வி ரீதியிலான பின்னடைவு, இன்னொரு பக்கம் நோய்களினால் தாக்கம். இதனால் இளைய சமூகம் ஒன்று எதிர்காலத்துக்கேற்ற தகுதியோடு நுழையக்கூடிய வாய்ப்பு இல்லாமல் போகிறது. மலையகத்தைப் பொறுத்தவரை தமது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கக்கூடியளவு கல்வியறிவு பெற்ற பெற்றோர் குறைவு. இதனூடே வறுமையும் பொறுமையின்றி சோதனைச் செய்கின்றது. போஷாக்கின்மை குறைபாடு மிக மோசமான பின் விளைவுகளை உண்டாக்கும். உடல், உளவியல் ரீதியிலான தாக்கங்களை ஏற்படுத்தும். இதனால் கற்றல் ஆர்வம் களை குன்றிப்போகும். முறையான பராமரிப்பும் சரியான வழிநடத்தலும் இல்லாவிட்டால் ஆரோக்கியமான சமூகம் ஒன்றின் ஆக்கம் இல்லாமலே போகும்.

இது சமூகம் சார்ந்த ஒரு சவால். இலவசக் கல்வியின் பயன்பாடுகளை மலையக சிறுவர்களும் பெற்று உயர்வுகாண உருப்படியான வேலைத்திட்டங்கள் அவசியம். குறிப்பாக பெற்றோர் மத்தியில் போதிய விழிப்புணர்வு தேவை. வறுமையை விரட்டி புதிய வரலாறு படைக்க பாதை வகுத்தாக வேண்டும். போதையிலும் மமதையிலும் குழந்தைகளின் நல்வாழ்வை வதை செய்யாமலும், வசைபாடும் சமூகம் ஒன்றின் வாரிசுகளாக வளரவிடாமலும் தளரா நெஞ்சோடு தாம் ஆற்ற வேண்டிய பணி குறித்து இனியாவது மலையக பெற்றோர் சிந்திக்க வேண்டும். இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகளே உங்களை நிந்திக்க காலம் தூண்டும். இது நிச்சயம்.

இதுவரை காலமும் பெருந்தோட்ட சிறுவர் அபிவிருத்திக்கான உருப்படியான நடவடிக்கைகள் எதனையுமே மலையகத் தலைமைகள் மேற்கொள்ளவில்லை. சம்பள விவகாரம் மட்டுமே சமூகம் சார்ந்த பாரிய பிரச்சினையாக அவர்கள் வடிவமைத்துக் கொண்டு அரசியல் செய்கிறார்கள். இந்நிலைமையை மாற்றும் வல்லமை மலையக இளைஞர் சமூகத்தையே நல்ல பலனை தரும். அப்பொழுதுதான் மலையத்தைப் பொறுத்தவரை சிறுவர் தினம் என்பது அர்த்தமுள்ளதாக அமையும். அதற்குப் பொருத்தமான வேலைத்திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

இலங்கை இராணுவத்தின்... (17ஆம் பக்கத் தொடர்)

ஐ.நா. அமைப்பிற்கு தங்களது படையினரை வழங்குவதற்கு அப்பால், உலகளாவிய தொழில்நுட்பத்திற்கு சவாலாக இலங்கை இராணுவம், யூனிபஃபெல் (Unibuffel) கவச வாகனத்தை தயாரித்தது. இதன்மூலம் இலங்கையானது இராணுவ கண்டுபிடிப்புகளின் ஒர் அடையாளமாக மாறியுள்ளது. அவசர தேவையின் பிரகாரம், இலங்கை இராணுவத்தின் மின்சார மற்றும் இயந்திரவியல் பொறியியலாளர் படையணியினரால் தயாரிக்கப்பட்ட ஒன்பது யூனிபஃபெல்ஸ் (Unibuffels) கவசவாகனங்கள், மாலியில் உள்ள (மினுஸ்மா) அமைதிகாக்கும் பணிக்கு பயன்படுத்துவதற்காக கடந்த வருடம் இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வாவினால் கையளிக்கப்பட்டது.

இவ்வாறு பல அர்ப்பணிப்புமிக்க சேவைகளை முன்னெடுத்து வரும் இலங்கை இராணுத்தின் 72 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு இராணுவத்துக்கு ஆசிவேண்டி சர்வமத வழிபாடுகள் கடந்த மாதம் 27 ஆம் திகதி கண்டி தலதாமாளிகையிலும், 30 ஆம் திகதி கொள்ளுப்பிட்டி ஜூம்மா பள்ளிவாசல் மற்றும் பொரளை அனைத்து புனிதர்கள் தேவாலயத்திலும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி கொழும்பு ஸ்ரீ மயூராபதி பத்ரகாளி அம்மன் ஆலயத்திலும், இரண்டாம் திகதி கிரிவேஹர விகாரை மற்றும் கதிர்காமகந்தன் ஆலயத்திலும் இடம் பெற்றன. பத்தரமுல்லையில் உள்ள உயிர்நீத்த படையினர் நினைவு தூபியில் நினைவஞ்சலி, இரவு பிரித் பாராயணம் தானம் வழங்கல் யுத்த நடவடிக்கையினால் ஊனமுற்ற படையினர் கௌரவிப்பு என்பனவும் இடம்பெற்றன.

72வது இராணுவ தினம் புராதன நகரமான அனுராதபுரத்தில் இராணுவ சம்பிரதாயங்களுக்கு அமைவாக இன்று 2021 ஒக்டோபர் 10 ம் திகதி கொண்டாடப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட பிரதேச அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவரும் பொதுஜன பெரமுனவின் மாவட்ட பொறுப்பாளருமான பி.சந்திரகுமார்

ஆளும் அரசு மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தியில் அக்கறைகாட்டிவருகிறது. அதற்கு பொறுப்பாக செயற்பட்டு வருபவராக பொதுஜன பெரமுனவின் மாவட்ட பொறுப்பாளரான பி.சந்திரகுமார் இருக்கிறார். மட்டு மாவட்ட அபிவிருத்தி தொடர்பான கருத்துக்களை சந்திரகுமார் தனது நேர்காணலில் தருகின்றார்.

எஸ்.எஸ்.தவபாலன்
புளியந்தீவு குறூப் நிருபர்

கேள்வி: உங்களைப்பற்றி எமது மக்கள் அறிய விரும்புகிறார்கள். ஆதலால் அதுபற்றி தெரிவியுங்கள்?

பதில்: நான் மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்தவன். அங்கு வாழ்பவன். மட்டக்களப்பு மாவட்டத்தையும் அதன் மக்களையும் முழுமையாக நேசிப்பவன். அங்கு வாழும் பல்இன கலாசாரங்கள், மொழிகள், சமயங்களைச் சேர்ந்த மக்கள் அன்னியோன்னியத்துடனும் பரஸ்பர ஒற்றுமையோடும் வாழவேண்டும் என்ற எண்ணத்தோடும் கருமத்தோடும் செயற்படுபவன். வர்த்தகம் எனது தொழில். இந்த நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் ஏனையோர் என்னை நம்புகின்றனர். அதனால் மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்திக்கு பொறுப்பாக என்னை நியமித்துள்ளனர். இதற்குள் தமிழ் மக்கள் வாழும் 10 பிரதேச செயலகங்கள் இருக்கின்றன. அவற்றின் பிரதேச அபிவிருத்திக் குழுவுக்கு பிரதித் தலைவராக அரசு என்னை நியமித்திருக்கிறது. அதனை வைத்து எமது மக்களுக்கு தேவையானவற்றை நிறைவேற்றி வருகிறேன். நானும் தமிழர்களில் ஒருவன். நான் தமிழ் மக்களுக்கோ அவர்களின் அபிவிருத்திக்கோ அல்லது முன்னேற்றத்திற்கோ எதிரானவனல்ல என்பதை கூறிக்கொள்கிறேன்.

கேள்வி: மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்திக்கு பொறுப்பாக இருக்கிறீர்கள். அது வரவேற்கத்தக்கது. நீங்கள் முன்னெடுக்கும் அபிவிருத்திப் பணிகள் பற்றியும் அவை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பது பற்றியும் தெரிவிப்பீர்களா?

பதில்: அரசின் திட்டம் அபிவிருத்தியை அரசின் திட்டம் அபிவிருத்தியை முன்னெடுப்பதாகும். அரசு மக்களோடு சேர்ந்து உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை மக்களின் அபிப்பிராயங்களோடும் ஆலோசனைகளோடும் செய்ய இருக்கிறது. இதனால் மக்களின் தேவைகள் அதே மக்களின் அபிப்பிராயத்தோடு செய்ததாகவே இருக்கும்

இதனை அரசு மூன்று வடிவங்களில் செயல்படுத்த இருக்கிறது. கிராம மட்டத்திலும் கிராம சேவகர்களின் வட்டார மட்டத்திலும், பிரதேச சபை மட்டத்திலும். இதற்கு அப்பால் பாராளுமன்றப் பிரதிநிதிகள் மட்டத்திலும் இடம்பெறும். அவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் ஒவ்வொரு கிராமத்திற்கும் 30 இலட்சம் ரூபாவாகும் அடுத்ததாக கிராமங்கள் இணைந்த ஒரு வட்டாரத்திற்கு 70 இலட்சம். ஒரு பிரதேச சபையின் இணைத் தலைவருக்கு 100 மில்லியனாகும். இதே போன்று பாராளுமன்ற அங்கத்தவரொருவருக்கு 100 மில்லியனாகும். ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் மக்களின் தேவைகள் மக்களின் சம்மதத்தோடு இலகுவாக நிறைவேற்றப் பட்டுவிடும். சின்னச் சின்ன பிரச்சினைகளை வைத்துக்கொண்டு சில அபிவிருத்தி வேலைகளை இழந்து விடக் கூடாது.

நல்லாட்சி அரசோடு ஒட்டிக் கொண்டிருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இவ்விடயத்தில் ஏதாவது சாதித்தார்களா

கேள்வி: அபிவிருத்தி பற்றிப் பேசுகிறீர்கள். தமிழ் மக்களின் தேசிய பிரச்சினைகளில் ஒன்றான தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சிறைக் கைதிகள் பற்றி உங்களது கட்சி எவ்வாறு செயற்படவிருக்கிறது. இதுபற்றி விபரிப்பீர்களா?

பதில்: எங்களது கட்சி இந்த நாட்டை இன்னும் சில கட்சிகளோடு ஒன்றிணைந்து ஆளுகிறது. தமிழர்களுக்கான பிரச்சினைகள் தொக்கி நிற்கிறன. அவற்றை அப்படியே விட்டுவிடலாகாதென நாம் அரசை வலியுறுத்தி வருகிறோம். மிக விரைவாக தடுத்து வைக்கப்பட்டிருப்போர் விடுதலையாவார்கள். அதற்கான செயற்பாடுகளும் ஆவணப்படுத்தல்களும் மிக விரைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறதென்பதை சந்தோசத்தோடு கூறிக் கொள்கிறேன்.

எமது அரசு நல்லாட்சி அரசாங்கம் செய்யாத வேலையைச் செய்திருக்கிறது. நாம்தான் 16 கைதிகளை பொதுமன்னிப்பளித்து விடுதலை செய்தோம். நல்லாட்சி அரசோடு ஒட்டிக் கொண்டிருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இவ்விடயத்தில் ஏதாவது சாதித்தார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

நான் அரசோடு இணைந்திருக்கிறேன். சில சாதுரியமான வழிகள் மூலம் என்னாலான உதவிகளை தமிழ் சமூகத்துக்கு செய்து கொண்டிருக்கிறேன். அவை தொடரும். இன்னும் ஓரிரு நாட்களில் நான் அனுராதபுரம் சிறையிலிருக்கும் தமிழ்க் கைதிகளை சந்தித்து அவர்களது விடுதலை பற்றிய நல்ல செய்தியைக் கூறுவேன்.

கேள்வி: நீங்கள் அண்மையில் செய்து முடித்த அபிவிருத்தி வேலைகள் பற்றி விளக்குவீர்களா?

பதில்: 103 கி.மீ நீளமான யானைவேலி மற்றும் 86 கி.மீ நீளமான கொங்கிறீட் வீதிகள் என்பன எனது முயற்சியால் நிறைவேறியுள்ளன. இன்னும் 83 கி.மீ. நீளமான யானை வேலியை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. இது தவிர சில கொங்கிறீட் வீதிகள் விரைவாக நிறைவு பெற இருக்கின்றன.

கேள்வி: இனிமேல் என்ன செய்வதாக உத்தேசம்.?

பதில்: மக்களோடும் அரசியலோடும் இப்போது இணைந்திருக்கிறேன். மக்கள் எனக்கு ஆதரவளித்தார்கள். இப்போது அந்த ஆதரவு பன்மடங்காக பெருகியிருக்கின்றது என்பதை யதார்த்தமாக உணர்கிறேன். ஆதலால். அதனை உதறித் தள்ளிவிட முடியாதே. எனது வழமையான மக்கள்பணி தொடரும். அதே போன்று என்னை நம்பிய தலைவர்களை நான் கைவிட முடியாதே. நாம் என்னதான் முடிச்சுப் போட்டாலும் அவற்றை அவிழ்ப்பதற்கு இறைவன் ஒருவன் இருக்கிறானே இந்த இடத்தில் அவரை நான் மறக்கவில்லை.

கேள்வி: உங்களது அரசியல் வாழ்வில் நீங்கள் திருப்தியுற்ற சில சம்பவங்கள்பற்றி கூறமுடியுமா?

பதில்: மட்டக்களப்பு மாவட்டம் தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என்கின்ற மூவினத்தவரையும் உள்ளடக்கியிருகின்றது. கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களுக்கு மேலாக புலிகள் ஆளும் அரசுகளை ஆட்டிப் படைத்தார்கள். இதனை யாரும் மறுப்பதற்கில்லை. அந்த மூன்று தசாப்த காலத்தில் சில அரசியல்வாதிகள் எந்த விடயமாக இருந்தாலும் தமிழர்களுக்கு புலிச்சாயம் பூசி ஆளும் அரசுக்கும் தமிழர்களுக்குமிடையிலான விரோதத்தை வளர்த்து அரசால் கிடைக்கக் கூடிய அனைத்து சலுகைகளையும் தங்களுக்கு சொந்தமாக்கிக் கொண்டார்கள். தமிழர்களுக்காக குரல் கொடுக்கக் கூடிய அரசியல் பிரதிநிதித்துவம் இருந்தாலும் அவர்களுடைய அபிப்பிராயங்களை சிங்களத் தலைமைத்துவங்கள் நம்பத் தயாராக இருக்கவில்லை. அந்தத் தலைவர்களுக்கு தமிழர்கள்மீது எந்தப் பச்சாதாபமும் ஏற்படவில்லை. ஒரு சிலர் அதற்கு விதிவிலக்கு. அதேபோன்று கிராமிய வைத்தியசாலைகள் தரமுயர்த்தப்பட்டன. அதிலும் அதே மாதிரித்தான். இன்று அந்த நிலை மாறிவிட்டது. இனிமேல் அது போன்ற காரியங்கள் நடக்காது. நடக்கவும் விட மாட்டோம். தமிழர்கள் அரசியலில் பிரவேசித்து கொடிகட்டிப் பறந்தாலும் சில விடயங்களை அவர்களுக்கு சாதிக்கத் தெரியாது என்று கூற முடியும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உள்ளக சண்டைக்கு பிரசித்திபெற்றது. இப்போதும் அதற்குள் அதுதான் நடக்கிறது அது ஒயாது. எல்லோருக்கும் தலைமை வேண்டுமென்றால் என்ன செய்வது. அவர்கள் எல்லோருமே புலிகளின் பெயரை வைத்து பிழைப்பு நடத்தியவர்கள் என்று மக்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இது நடக்கக் கூடாது. அரசியலில் மக்கள் செல்வாக்கும் தேவை. சரியாக காய்நகர்த்தவும் தெரிந்திருக்க வேண்டும். நான் எதனால் திருப்தியடைகிறேன். இப்போது அதை நான் கூறித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை. இப்போது எமது மாகாணத்தில் தமிழர்களுக்கு 14 தேசியப் பாடசாலைகள் உள்ளன. அது என்று மில்லாதவாறு படுவான்கரையிலும் தடம்பதித்துள்ளது. இப்படி இன்னும் சில தரவுகளைத் தரலாம் இப்போதைக்கு இதுபோதும்.

தமிழ்க் கைதிகள் விரைவில் விடுதலை செய்யப்படுவர்

16 கைதிகளை பொதுமன்னிப்பளித்து அரசு விடுதலை செய்தது

பதுக்கி வைக்கப்பட்ட நெற்களஞ்சியங்களை வேட்டையாடிய அரசு; இருந்தும் செயற்கைத் தட்டுப்பாட்டை பேணும் வர்த்தகர்கள்

கருணாகரன்

தாம் இலாபத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள் பழியை அரசாங்கத்தின் மேலே போட்டு விடுகிறார்கள் இது நாட்டுக்கு மிகச்சவாலான ஒரு காலம்

நாட்டில் பகிரங்கமாகவே ஒரு தளம்பல் நிலை ஏற்பட்டுள்ளது. கொவிட் தொற்று, அதனாலும் பிற காரணங்களாலும் உருவான பொருளாதார நெருக்கடி, அரசியல் முரண்பாடுகள், ஜனநாயக நெருக்கடி போன்ற வற்றினால் ஏற்பட்டது இந்தத் தளம்பல். இதனைப் பயன்படுத்தி மேலும் தளம்பலை உருவாக்க முயற்சிக்கும் போக்கு பல தரப்புகளிலும் உருவாகியுள்ளது.

இதனால் அரசாங்கத்தின் தீர்மானங்கள், திட்டங்கள், அறிவிப்புகளையெல்லாம் மீறிய, மிஞ்சிய நடைமுறைகளே நாட்டில் நிலவுகின்றன. உதாரணமாக, நிர்ணய விலையை அரசாங்கம் அறிவித்தாலும் கடைகளில் அந்த விலைக்கு அரிசியைப் பெற முடியாது. கேட்டால் இந்த விலைக்குத்தான் மில்களிலிருந்து அரிசியைக் கொள்வனவு செய்ய வேண்டியிருக்கு என்கிறார்கள் கடைக்கார்கள். அரிசி ஆலையினரிடம் இதைப்பற்றிக் கேட்டால், நெல்லை நாங்கள் கூடிய விலைக்கே பெற வேண்டியுள்ளது என்கிறார்கள். நெல்லை உற்பத்தி செய்யும் விவசாயிகளிடம் கேட்டால் எங்களுக்குரிய விலை கிடைக்கவில்லை என்கிறார்கள்.

அப்படியென்றால் எங்கே உள்ளது பிரச்சினை? இதைக் கண்டறிவதற்குக் கடவுள் கூட இல்லை.

காரணம், இதை முறைப்படுத்தக் கூடிய பொறிமுறை இல்லாதிருப்பதே இதற்குக் காரணமாகும். இது அரசாங்கத்துக்கும் தெரியும். அப்படித் தெரிந்த படியால்தான் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு அரசாங்கத் தரப்பிலிருந்து பதுக்கி வைக்கப்பட்ட நெற்களஞ்சியங்களை வேட்டையாடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இருந்தாலும் அதை முழுமையான அளவில் கட்டுப்படுத்த முடியவில்லை.

இப்படித்தான் ஏனைய பொருட்களின் நிலவரமும். பால்மா தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு சரியாகத் தெரியவில்லை. இதனால் அருந்தலாகக் கிடைக்கின்ற பால்மாவை அதி உச்ச விலையில் விற்கிறார்கள். இது கறுப்புச் சந்தையன்றி வேறென்ன?

இதைப்பற்றிக் கேட்டால் பால்மாவே கிடைக்காது. பால் மா வேண்டும் என்றால் எந்தப் பேச்சும் பேசக் கூடாது. சொல்லுகின்ற விலையைக் கொடுத்து விட்டு போக வேண்டியதுதான்.

இந்தத் தளம்பல் கட்டடப்பொருட்கள், மின்சாரப் பொருட்கள், இலத்திரனியல் பொருட்கள், வாகன உதிரிப்பாகங்கள் என அனைத்திலும் காணப்படுகிறது. 600 க்கு மேற்பட்ட பொருட்களுக்கு இறக்குமதித் தீர்வை மற்றும் கட்டுப்பாடுகள் குறித்த அறிவிப்பை அரசாங்கம் விடுத்த நாளிலிருந்தே இந்தப் பிரச்சினை தொடங்கி விட்டது.

எல்லாப் பொருட்களுக்கும் ஒரு செயற்கைத் தட்டுப்பாட்டை வர்த்தகர்கள் உருவாக்கியுள்ளனர். காரணம் கேட்டால் மேலே கையைக் காட்டுகின்றனர். மேலே என்பது அரசாங்கத்தையாகும். ஆகவே தாம் இலாபத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். பழியை அரசாங்கத்தின் மேலே போட்டு விடுகிறார்கள். இதனால் சனங்களுக்கு அரசின் மீதே வெறுப்பு ஏற்படுகிறது.

இதை ஒத்த போக்குத்தான் நிர்வாக மட்டத்திலும் காணப்படுகிறது. கொவிட் தொற்றைத் தவிர்ப்பதற்கான பொது முடக்கத்தை அறிவித்த காலத்திலிருந்து அநேகமான அரச திணைக்களங்களும் அதிகாரசபைகளும் பணித் தளம்பலுக் குள்ளாகியுள்ளன. இந்தக் காலத்தில் அர்ப்பணிப்பாக நின்று வேலை செய்த திணைக்களங்களும் உத்தியோகத்தர்களும் உள்ளனர். அவர்கள் உச்ச அளவுக்கு றிஸ்க் எடுத்தவர்கள். ஏனையோர் இந்தப் பொது முடக்கத்தைத் தமக்கான வாய்ப்பாக எடுத்துக் கொண்டு தங்கள் காரியத்தைப் பார்க்கத் தொடங்கி விட்டனர். தங்களுடைய பணிக்கு இவர்கள் வரவில்லையே தவிர, வீடுகளில் முடங்கியிருக்கவில்லை. வெளியே தங்களின் தனிப்பட்ட விவகாரங்களைப் பார்த்தனர். சிலர் இந்த வாய்ப்பான சூழலைப்பயன்படுத்தி அரச நிலங்களை அபகரித்தனர். ஒப்பந்த வேலைகளைச் செய்தனர். காணிகளை வளமாக்கினர். சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டனர். பிற தொழில் துறைகளை ஆரம்பித்தனர்.

இப்பொழுது பொது முடக்கம் விலக்கப்பட்டு, பழையபடி அலுவலகங்கள் அனைத்தும் இயங்கலாம் என்று அரசாங்கம் அறிவித்தாலும் முடங்கிப் பழகிய (சோம்பேறியாகிப்போன) குதிரையை ஓட்ட முடியவில்லை. சனங்கள் தங்களுடைய தேவைகளுக்காக இந்தப் பணிமனைகளுக்குச் சென்றால் அந்த வேலைகளைச் செய்து கொடுப்பதற்குப் பதிலாகச் சாட்டுப் போக்குகளே சொல்லப்படுகின்றன. இந்தப் பழக்கம் தொடரப் போகிறதா? கைவிடப்படுமா என்பதைச் சொல்ல முடியவில்லை. இந்த மாதிரி பொறுப்பற்ற தனம் சமூகத்திற்குள் பரவி விட்டால் அதை உடனடியாக விலக்கி விட முடியாது. இதைக் கண்காணிப்பதற்கு உள்ள ஒரே மார்க்கம் பொறுப்புச் சொல்லக் கூடிய பொறிமுறையை உருவாக்குவதே. அதைச் செய்யவில்லை என்றால் எதிர்காலத்தில் மிகப் பெரிய ஊழலே நிர்வாகத்துக்குள் உச்சமடைந்திருக்கும். அவசியமான வேலைகளை எப்படியாவது வேளைக்கு முடிக்க வேண்டும் என்று கருதுவோர் தவிர்க்க முடியாமல் இது நேரடியாக நாளாந்த வாழ்க்கையோடு தொடர்பு பட்டது. அதன் வழியாக மக்களும் மக்களோடு தொடர்பு படும் சக்திகளுக்கும் இடையில் மோதல்களை உண்டாக்கக் கூடியது.

எனவே இவற்றைக் கவனத்தில் எடுத்து இவற்றுக்கு உடனடியாகத் தீர்வு காணவேண்டும். இதுதான் நாட்டையே சிறப்பாக இயக்கும் தரப்புகளாகும்.

அரசாங்கம் எதிர்கொள்கின்ற பொருளாதார நெருக்கடிகளை அனைவரும் நன்றாக அறிவோம். இதற்கு சதொச கடைகளைப் பார்த்தால் நாட்டின் நிலை எப்படியிருக்கிறது என்று தெரியும் எனப் பகடியாகச் சொல்கிறார் ஒரு சமூகச் செயற்பாட்டாளர். உண்மையில் அவருக்கு இது துக்கமளிக்கும் ஒரு விசயமாகும். சதொச கடைகளின் வெறுமை அவருடைய மனதைப் பாதிக்கிறது. ஆனால்

கையூட்டுக் கொடுக்க முனைவர். இந்த ஆரம்பம் மிகப் பெரிய பாதிப்பை – ஊழல் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கப்போகிறது. ஆகவே இதை இப்பவே முளையில் கிள்ளி எறிய வேண்டும்.

அரசியற்தீர்வு தொடக்கம் ஏராளம் அதி முக்கியமான பிரச்சினைகள் நமக்கு முன்னே இருக்கும்போது இந்த மாதிரிச் சிறிய விடயங்களைப் பற்றி நாம் பேசலாமா? என்று சிலருக்குத் தோன்றலாம். அவை உடனடியாகத் தீர்த்து விடக் கூடியன அல்ல. அவற்றின் பரிமாணமும் அடிப்படைகளும் வேறு. இது வேறு. அந்த நிறுவனம் என்ன செய்யமுடியும்? அந்தக் கடைகளில் பொருட்களே இல்லை. உழுந்து, பயறு, மீன், கருவாடு, பருப்பு போன்ற பொருட்களுக்குக் கூடத் தட்டுப்பாடு வந்திருக்கிறது என்றால் பாருங்களே.

அரசியல் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி, வெளியுலக அழுத்தங்கள் என ஏகப்பட்ட நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை அரசுக்குத் தீவிரமாகியுள்ளது. பிராந்திய சக்திகளின் போட்டிகளுக்கு ஈடுகொடுப்பது ஒரு பெரும் சவால். இதையெல்லாம் செய்ய வேண்டும் என்றால் திறந்த மனதோடு அனைத்தையும் அணுகுகின்ற ஒரு அரசியற் பண்பாடு மலர வேண்டும்.

இந்தப் பண்பாட்டை எப்படி விரிந்த தளத்தில் உருவாக்குவது? இதற்கு அவசியமானது பன்மைத்துவமும் சமூக சமத்துவச் சிந்தனைகளும் ஜனநாயக உள்ளடக்கமும் ஆகும். இவை எங்கெல்லாம் உரிய முறையில் சிறப்பாகத் தொழிற்படுகின்றனவோ அங்கெல்லாம் வளர்ச்சியும் மக்கள் மகிழ்ச்சியும் மேலோங்கும்.

கொவிட் தொற்று அபாயமும் பொருளாதார முடக்கமும் ஏதோ இலங்கைக்கு மட்டுமே வந்த தீவினை அல்ல. இது உலக அளவில் ஏற்பட்ட ஒரு நெருக்கடியாகும். ஆனால், அந்தந்த நாடுகள் தங்களால் முடிந்த அளவுக்கு பொருத்தமான முறைமைகளை உருவாக்கி அதன் வழியாகக் கடந்து சென்று கொண்டிருக்கின்றன. சில நாடுகளில் இலங்கையை விடப் பன்மடங்கினர் தொற்று அபாயத்தினால் உயிரிழந்துள்ளனர். அப்படியிருந்தும் அவை அவற்றைக் கடந்து சென்று கொண்டிருக்கின்றன.

இலங்கை என்ன செய்யப்போகிறது? முன்னே செல்லப் போகிறதா? அப்படியே தேங்கப்போகிறதா? பின்தங்கிவிடப் போகிறதா?

இது நாட்டுக்கு மிகச்சவாலான ஒரு காலமாகும். ஏறக்குறைய இது போர்க் காலத்தை ஒத்த சூழலாகும். போரையும் விடப் பயங்கரமானது.

சீன கடன் பொறிக்குள் இலங்கை சிக்கிவிட்டதா?

இலங்கையின் கடன் சுமை பற்றி இப்போது பேசாத நபர்கள் இல்லை. நாடு கடன் சுமையில் மூழ்கிக் கொண்டிருக்கிறதென்றும் சீனாவின் கடன் பொறியில் சிக்கிக்கொண்டு வங்குரோத்து நிலையை அடைந்துவிடும் என்றும் இலங்கையில் இருந்து மட்டுமல்ல, இந்தியாவிலிருந்தும் தமிழ்பேசும் மக்கள் வாழும் நாடுகளிலிருந்தும் பொருளியலின் அரிச்சுவடி கூடத்தெரியாத பிரகிருதிகளெல்லாம் சமூக ஊடகங்களில் நிபுணர்களாக நினைத்துக் கொண்டு கருத்துச் சொல்வதை கவலையோடு பதிவு செய்ய வேண்டியிருக்கிறது.

இலங்கையின் அரசபடுகடன் உயர்மட்டத்தில் உள்ளதென்பது உண்மைதான். ஆனால் அதற்காக நாட்டின் பொருளாதாரம் ஒரு கட்டடம் சரிந்து விழுவதைப்போல சரிந்து விடும் என்று கனவு காண்பதெல்லாம் சுத்த அபத்தமானது. ஒரு நாட்டின் அரசாங்கம் கடன் பெறுவதென்பது காலாகாலமாக நடைபெறும் ஒரு விடயம் தான். உலகிலேயே அதிக கடன் சுமைகொண்ட நாடு ஐக்கிய அமெரிக்கா தான் என்றால் பலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் அந்த நாடுதான் உலகின் முதன்மைப் பொருளாதாரம். கடன் வாங்குவதொன்றும் பிழையான விடயம் கிடையாது. ஆனால் அக்கடன் எதற்காக வாங்கப்படுகிறது, அது எவ்வாறு மீளச் செலுத்தப்படுகிறது என்பதுதான் மிக முக்கியமானது. அந்த வகையில் இலங்கை தான் பெற்ற கடன்களை உற்பத்தியை ஈட்டித்தரும் துறைகளில் முதலீடு செய்வதற்காக பயன்படுத்தவில்லை என்பதால் பெற்ற கடன்களை மீளச் செலுத்துவதற்குரிய வருமானப்பாய்ச்சலை உருவாக்கத்தவறிவிட்டது. இதனால் ஏற்கெனவே பெற்ற கடன்களை மீளச்செலுத்துவதற்கு மீளவும் கடன் பெறவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளது. ஆயினும் இற்றைவரையில் இலங்கை ஒரு தடவையாவது கடன் தவணையை மீளச் செலுத்தத் தவறியதில்லை.

பொதுவாக ஒரு நாட்டின் கடன் சுமையை அந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியோடு தொடர்புபடுத்தி அதன் சதவீதமாகக் கூறுவார்கள். கடந்த 2019ல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அரசாங்கத்தின் மொத்தக் கடன் 86.6 சதவீதமாக இருந்தது. அது 2020 இல் 101 சதவீதமாக உயர்ந்தது. கடன் தரமிடல் நிருவனங்களின் மதிப்பீட்டின் படி 2021 இது 108 சதவீதமாக அதிகரிக்கலாம் என்று கூறப்படுகிறது. சிலவேளை இது ஒரு மிகைப்படுத்தப்பட்ட எதிர்வுகூறலாகக் கூட இருக்கலாம்.

> 'இலங்கை தான் பெற்ற கடன்களை உற்பத்தியை ஈட்டித்தரும் துறைகளில் முதலீடு செய்வதற்காக பயன்படுத்தவில்லை என்பதால் பெற்ற கடன்களை மீளச் செலுத்துவதற்குரிய வருமானப்பாய்ச்சலை உருவாக்கத்தவறிவிட்டது. இதனால் ஏற்கெனவே பெற்ற கடன்களை மீளச்செலுத்துவதற்கு மீளவும் கடன் பெறவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளது. ஆயினும் இற்றைவரையில் இலங்கை ஒரு தடவையாவது கடன் தவணையை மீளச் செலுத்தத் தவறியதில்லை'

எவ்வாறாயினும் கடன் சுமை அதிகரித்துள்ளது என்பதில் மாற்றுக் கருத்துகள் இல்லை. இவ்வாறு பெறப்பட்ட கடன்களை உள்நாட்டுக் கடன்கள் மற்றும் வெளிநாட்டுக் கடன்கள் என இருவகையாக பிரிக்கலாம். அந்த வகையில் 2019ஆம் ஆண்டில் உள்நாட்டிலிருந்து பெறப்பட்ட கடன்கள் 52 சதவீதமாகவும் வெளிநாட்டுக் கடன்கள் 48 சதவீதமாகவும் இருந்தன. 2020 ஆம் ஆண்டில் இவை முறையே 60 சதவீதமாகவும் 40 சதவீதமாகவும் மாற்றமடைந்தன. இதிலிருந்து இலங்கை அரசாங்கம் உள்நாட்டுக்கடன் மூலாதாரங்களை நோக்கி நகர்வது தெளிவாகத் தெரிகிறது.

இவற்றுள் அரசாங்கம் பெற்ற வெளிநாட்டுக் கடன்களே பெரும்பாலும் அனைவரதும் அதிக கரிசனைக்கும் கவலைக்கும் உள்ளாகின்றன. இலங்கையின் மொத்த கடன்களில் 40 சதவீதமான வெளிநாட்டுக் கடன்கள் பல்வேறு நாணய அலகுகளில் பெறப்படுகின்றன. ஆயினும் இலகுதன்மை கருதி அவை பொதுவாக ஐக்கிய அமெரிக்க டொலர்களில் மதிப்பிடப்பட்டு வெளிப்படுத்தப்படுகின்றன.

இதன்படி இலங்கையின் வெளிநின்ற வெளிநாட்டுக்கடன்களின் அளவு 2019 ஆண்டின் இறுதியில் 54.8 பில்லியன் அமெரிக்க டொலர்களாகவும் 2020 ஆண்டின் இறுதியில் 49.2 பில்லியனாகவும் இருந்தது. 2021 ஆண்டின் ஏப்ரல் மாத இறுதியின் போது இது 35.1 பில்லியனாக வீழ்ச்சியடைந்தது. ஆகவே இலங்கை வெளிநாடுகளுக்கும் நிறுவனங்களுக்கும் மீளச்செலுத்த வேண்டியுள்ள வெளிநின்ற கடன்கள் படிப்படியாகக் குறைவடைந்து சென்றுள்ளன. செலுத்தப்பட வேண்டியுள்ள கடன் தவணைகளை இலங்கை முறையாக மீளச்செலுத்தியமையே வெளிநாட்டுக்கடன்கள் குறைவடையக் காரணமாகும்.

உதாரணமாக, 2021இல் 4.4 பில்லியன் டொலர்களும் 2020 இல் 5.8 பில்லியன் டொலர்களும் மீளச் செலுத்தப்பட்டுள்ளன. 2021 ஆண்டில் டொலர் வடிவில் மீளச்செலுத்த வேண்டியிருந்த கடன்கள் 6.8 பில்லியன் டொலர்களாக இருந்தன. அதில் உள்நாட்டவர்களுக்கு சொந்தமான கடன்கள் 2.5 பில்லியன் டொலர்களாகவும் வெளிநாட்டவர்களுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய 4.15 பில்லியன்களும் உள்ளடங்கியிருந்தன. இவற்றுள் சுமார் 600 மில்லியன் மார்ச் மாதமளவில் மீளச் செலுத்தப்பட்டு விட்டன. உள்நாட்டவர்களுக்கு மீளச்செலுத்தப்பட வேண்டியுள்ள டொலர் வடிவிலான கடன்களின் மீள்செலுத்தல் காலம் நிடிக்கப்பட்டுள்ள நிலையில் 2021 இறுதிவரையில் இன்றும் சுமார் 3.5 பில்லியன் டொலர்கள் கடன் மீளச் செலுத்தப்படவேண்டிய நிலையில் உள்ளது.

அதேபோன்று எதிர்வரும் 2026 வரையில் இலங்கை வருடாந்தம் சுமார் 4.3 பில்லியன் டொலர்களை மிளச்செலுத்த வேண்டியுள்ளதாக மதிப்பீடுகள் கூறுகின்றன. அடுத்துவரும் காலப்பகுதியில் அதுவே இலங்கைக்கு மிகப்பெரிய சவாலாக அமையக் கூடும். ஆயினும் உலக வங்கி உள்ளிட்ட நிறுவனங்களும் நட்பு நாடுகளும் இலங்கைக்கு உதவுவதாகக் கூறியுள்ளன. இலங்கை தன்னிடமிருந்த டொலர் கையிருப்புகளை இழந்தமைக்கு கடன் மீளச் செலுத்தல் தேவைப்பாடுகளும் மிகப்பெரிய காரணியாக அமைந்தமையையும் மறக்க முடியாது. இலங்கையின் கடன் மீளச்செலுத்தலில் எழக்கூடிய மேற்படி சிக்கல்களைக் கருத்திற்கொண்டே தரமிடல் நிறுவனங்கள் இலங்கையின் கடன் தர மிடலைக் குறைத்தன என்பதையும் இங்கு சுட்டிக்காட்டலாம்.

இவ்வாறு இலங்கை பெற்றுக் கொண்ட வெளிநாட்டுக் கடன்கள் எங்கிருந்து பெறப்பட்டன? அக்கடன்களுக்கு சொந்தக்காரர்கள் யார்? உண்மையிலேயே சீனா இலங்கையைக் கடனுக்கு வாங்கிவிட்டதா போன்ற சந்தேகங்களை தீர்ப்பதற்கு அட்டவணையிலுள்ள தரவுகள் பயன்படும்.

இலங்கையின் வெளிநாட்டுக்கடன்களின் உரிமையாளர்

வகை	கடன் சதவீதம்
1 சந்தைக் கடன்கள்	47
2 ஆசிய அபிவிருத்தி வங்கி	13
3 ஜப்பான்	10
4 சீனா	10
5 உலக வங்கி	09
6 இந்தியா	02
7 ஏனையவை	09
மொத்தம்	100

அட்டவணையிலுள்ள தரவுகளின் படி இலங்கைகளின் வெளிநாட்டுக் கடன்களில் கிட்டத்தட்ட அரைப்பங்கு சந்தைக் கடன்களாக உள்ளன.

அதாவது சர்வதேச நிதிச்சந்தைகளில் சந்தை வட்டிவீதங்களில் பெறப்பட்ட கடன்களாகும். இவற்றின் கடன் மீளச்செலுத்தற்காலம் குறைவாகவும் வட்டிவீதம் அதிகமாகவும் இருக்கும்.

இலங்கை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தும் உலக வங்கியிடமிருந்தும் கடன்களைப் பெற்றுள்ளது. இது மொத்த வெளிநாட்டுக் கடன்களில் 22 சதவீதமாகும். ஜப்பானும் இலங்கைக்கு தொடர்ச்சியாக சலுகைக் கடன்களை வழங்கிவரும் ஒரு நாடாகும். எனவே மொத்த வெளிநாட்டுக் கடன்களில் சுமார் மூன்றில் ஒரு பகுதி சலுகைக் கடன்களாக இருப்பதாக எடுத்துக் கொள்ளலாம்.

சீனாவைப் பொறுத்தமட்டில் இலங்கையின் வெளிநாட்டுக் கடன்களில் அதன் பங்கு 10 சதவீதமாகும். ஆயினும் கடன்கள் சார்பளவில் உயர்ந்த வட்டிவீதத்திலும் சந்தை நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டதாகவும் இருக்கும். தற்போதைக்கு ஜப்பான் வழங்கியுள்ள அதே சதவீதத்தையே சீனாவும் வழங்கியுள்ளது. இருப்பினும் ஜப்பான் இலங்கைக்கு கடன் வழங்கும் நோக்கத்திற்கும் சீனா கடன் வழங்கும் நோக்கத்திற்கும் இடையே பாரிய வேறுபாடுகள் உண்டு.

எனவே சீனாவின் கடன் பொறிக்குள் இலங்கை சிக்கிவிட்டதென்றோ கடனில் முழ்கப்போகிறது என்றோ கூறப்படும் கூற்றுகள் மிகைப்படுத்தப்பட்டனவாகும். அவ்வாறான ஒரு நிலைமை ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்வதே புத்திசாலித்தனமானது.

முடிந்தவரை சந்தைக் கடன்களைத் தவிர்த்து உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச நிதி நிறுவனங்களின் துணையை நாடுவதே இலங்கைக்கு மீட்சியை தரக்கூடும்.

பொருளியலாளர்கள் தொடர்ச்சியாக IMF இனை நாடுமாறு ஆலோசனை கூறுவதற்கும் இதுவே காரணமாகும்.

பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

தைவான் மீதான சீனாவின் இராணுவ வியூகம்

மீண்டும் ஒரு போருக்கு வழிவகுக்குமா?

சர்வதேச அரசியல் போக்கில் மீண்டும் ஒரு உலகப்போருக்கான வாய்ப்பு காணப்படுகிறதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அதில் அடையாளப்படுத்தப்படும் களங்களில் ஒன்றாக தைவான், தென்சீனக்கடல் முதன்மைப்படுத்தப்படுகிறது. சீனாவின் ஓர் அரசு கொள்கையை மையப்படுத்தி தொடரும் சீனா, தைவான் நெருக்கடியும் சர்வதேச தலையீடுகளும் தென்சீனக்கடலை தொடர்ச்சியாக பதட்டத்துக்குள் வைத்துள்ளது. இக்கட்டுரையும் சீனா, தைவான் நெருக்கடியின் அண்மைய நிகழ்வுகளை அடிப்படையாய் கொண்டு அதன் அரசியல் தாக்கங்களை தேடுவதாக உருவாக்கப்பட்டுள்ளது.

அக்டோபர் 14(2021) வரையான நாட்களில், சீனா சுமார் 158 போர் விமானங்களை தைவானின் வான் பாதுகாப்பு அடையாள மண்டலத்திற்கு அனுப்பியுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக, இப்பிராந்தியத்தில் சீனாவின் மக்கள் விடுதலை இராணுவம் அதன் செயல்பாட்டை அதிகரித்துள்ளது. தினசரி ஏ.டி.ஐ.எஸ் பகுதிக்கு போர் விமானங்களை அனுப்புதல் மற்றும் அருகிலுள்ள கடல் பகுதிகளில் இராணுவ பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றமை சீனாவின் அணுகுமுறைகளை கோடிட்டுக் காட்டுகிறது. ஆரம்பத்தில் கண்காணிப்பு விமானங்கள் அடிக்கடி அனுப்பப்பட்டாலும் தற்போது போர் விமானங்களூடாக ஆதிக்கம் செலுத்த முனைந்துள்ளது. அணு ஆயுதங்களை சுமக்கும் திறன் கொண்ட குண்டுவீச்சு விமானங்களின் பிரவேசம் அதிகரித்துள்ளது. பெரிய அளவிலான நடவடிக்கைகள் பெரும்பாலும் குறிப்பிட்ட நிகழ்வுகளுடன் இணைக்கப்படுகின்றன. கடந்த 01.10.2021 அன்று சீனாவின் தேசபக்தி விடுமுறை தினமாகும். அன்றைய தினமே சீன இராணுவம் தைவான் மீதான பதட்டத்தை அதிகரித்தது. அன்றைய தினம் 39 விமானங்களிலும் 02.10.2021 அன்று 38 விமானங்களிலும் தைவானின் ஏ.டி.ஐ.எஸ் பகுதிக்கு ஊடுருவல்களை மேற்கொண்டன. இதனை அமெரிக்கா கண்டித்ததைத் தொடர்ந்து, 04.10.2021 அன்று 56 விமானங்களை ஏ.டி.ஐ.எஸ் பகுதிக்கு அனுப்பியிருந்தது.

இது சீனாவின் நெருக்கடிகள் தைவான் தலைமையின் மீது அழுத்தத்தை அதிகரிக்க தயாராக இருப்பதையே காட்டுகிறது. இந்நிலைமையை தைவானின் பாதுகாப்பு அமைச்சர் சியு குவோசெங் தனது 40 வருட இராணுவ வாழ்க்கையில் மிகக் கடினமானதென விவரித்தார். தைவானின் ஜனாதிபதி சாய் இங்வென், சீனாவிடம் சுய ஆட்சி தீவு விழுந்தால் பேரழிவு விளைவுகள் ஏற்படும் என எச்சரித்து தைவானின் ஜனநாயகத்தையும் வாழ்க்கை முறையையும் காக்க எதை வேண்டுமானாலும் செய்வேன் என்று வலியுறுத்தினார்.

தைவானின் சீனா மீதான நெருக்கடிக்கு சீனாவின் 'ஒற்றை அரசு' கொள்கை என்பனவற்றை கடந்து தைவானின் அமைவிடம் சர்வதேச நெருக்கடிகளிலிருந்து சீனாவை பாதுகாத்து கொள்ள அது சீனாவின் பிடிக்குள் இருக்க வேண்டிய தேவைப்பாடு காணப்படுகிறது. சமீபத்திய சர்வதேச அரசியல் அதிகமான சமுத்திரங்களை மையப்படுத்திய அரசியலாகவே காணப்படுகிறது. குறிப்பாக 21ஆம் நூற்றாண்டு ஆசிய நூற்றாண்டு என்பதை மையப்படுத்தி இந்து சமுத்திரமும் பசுபிக் சமுத்திரமும் சர்வதேச அரசியலில் முதன்மை பெறுகின்றன. அதனடிப்படையில் இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் உள்ள தீவுகளின் நிலப்பரப்புக்களில் வல்லாதிக்க அரசுகள் தங்கள் பாதுகாப்பு அரண்களை அமைப்பதில் போட்டி போட்டு வருகின்றன. இந்நிலையிலேயே தைவானின் புவிசார் அரசியல் அமைவிடம் சீனாவிற்கு பிரதானமாக பாதுகாப்பு அரணாகவும் மேற்கு நாடுகளுக்கு சீனாவை தகர்ப்பதற்கான மையமாகவும் காணப்படுகிறது. எனினும் தைவானின் அரசியல் விருப்பு சீனாவிற்கு நேர்மாறாக காணப்படுவதனால் சீனா தைவான் மீதான நெருக்கீடுகளையும் அதிகரித்த வருகின்றது.

தைவானின் வான் பாதுகாப்பு அடையாள மண்டலத்திற்குள் சீனாவின் ஊடுருவல்களுக்கு சீனாவிற்கு பல அரசியல் நோக்கங்கள் காணப்படலாம். பிரதானமாக தென்சீனக்கடலை மையப்படுத்தி சமீபத்தில் எழுந்துவரும் சீனாவிற்கான நெருக்கடிகளும் அதனை தீர்ப்பதற்கான உபாயமாக தைவான் மீதான அழுத்தத்தை பிரயோகிப்பதற்கான வாய்ப்புக்களும் காணப்படுகின்றது. அதனடிப்படையில் அண்மையில் தென்சீனக்கடலை மையப்படுத்தி சீனாவிற்கு எழுப்பப்பட்டுள்ள நெருக்கடிகளை அவதானிக்க வேண்டும்.

முதலில், லிதுவேனியா வில்னியஸில் தைவானிய தூதரகத்தை வரவேற்றது போல மேற்குலக நட்பு சக்திகள்; சமீபத்தில் தைவானுக்கு அதிக ஆதரவை வழங்கிவருகின்றன. இது சீனாவின் 'ஒரே சீனா கொள்கைளை' நிராகரிப்பதாக தெரிகிறது. ஆகஸ்ட் மாதத்தில் வில்னியஸ் தைவானின் பிரதிநிதி அலுவலகத்தை அமைப்பதற்கான கோரிக்கையை அங்கீகரித்துள்ளது. இந்நடவடிக்கை சீனாவின் ஒரே சீனா என்ற கொள்கைக்கு சவாலை பிரதிபலிக்கவில்லை என லிதுவேனியா வலியுறுத்தினாலும், இந்த முடிவு ஐரோப்பிய நாடுகள் தைவானை அங்கீகரிப்பதற்கான முதல் படியாக அமைந்துவிடுமா என சீனா கருதுகிறது. சீனா லிதுவேனியாவிலிருந்து தனது தூதரை மீளழைத்துள்ளதுடன் லிதுவேனியாவுடனான பொருளாதார உறவுகளையும் நிறுத்தியுள்ளது. மேலும், செப்டம்பர் 20 முதல் 30வரை சைப்ரஸின் லிமாசோலில் நடைபெற்ற 27 வது நீர்மூழ்கி உலக சாம்பியன் போட்டியில் ஐந்து தைவான் வீரர்கள் பங்கேற்றனர். செப்டம்பர்28 அன்று சீனாவின் தலையீட்டில் நிகழ்வின் அமைப்பாளர்கள் முன்னறிவிப்பின்றி நேரடி ஒளிபரப்பில் தைவான் கொடியை லீடர் போர்டில் இருந்து அகற்றினர். எனினும் தைவானிய வீரர்கள், தங்கள் கொடியை தடை செய்த பின்னர் தங்கள் தைவானிய சகாக்களை ஆதரித்து ஒற்றுமையின் அடையாளங்களை வெளிப்படுத்தியமை தைவானின் அங்கீகாரத்துக்கான தைவானின் முயற்சி மீது அதிக கவனத்தை செலுத்துகிறது. இந்நிலையிலேயே அண்மைய சீனாவின் தைவான் மீதான விமான ஊடுருவல்கள் தைவானிய தலைமை மற்றும் பொதுமக்கள் ஆகிய தரப்புக்களுக்கு தைவானைப் பாதுகாப்பதில் அதிக விலை கொடுக்க வேண்டும் என்பதை நினைவூட்டும் முயற்சியாகவு முள்ளது.

இரண்டாவது,சீன அதிகாரிகள் சீன மக்களிடையே தைவானை அரசியல் பாதுகாப்பின் ஒரு வடிவமாக அடையாளப்படுத்துவதில் அதிக கவனம் கொண்டுள்ளனர். தைவான் சீனாவின் ஓர் அலகு என்பதுவும் சீன மக்களிடையே கருத்தியல் ரீதியாக ஆழமாக பதிந்து விட்டது. இந்நிலையில் சீனாவின் ஒவ்வொரு வெற்றியும் தைவானின் நிலப்பரப்பின் தேவையை உருவாக்குகிறது. இது சீன மக்கள் எண்ணங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்திவிடும் என்ற அச்சம் சீன அதிகாரிகளிடம் காணப்படுகின்றது. ஆதலால் தொடர்ச்சியாக தைவானை சீனாவின் அலகு என்ற எண்ணத்தை சீன மக்களிடையே உருவாக்குவதில் சீனா அதிகாரிகள் மும்மரமாக உள்ளனர். இதன் சான்றே, கடந்த ஆண்டு ஒகேனியாவில் நடந்த விருந்துக்கு வந்திருந்த சீன இராஜதந்திரி துரதிர்ஷ்டவசமாக அங்கு தைவானின் கொடியுடன் ஒரு கேக் இருந்ததை கண்டதும் குழப்பமடைந்து பேரைத் தொடங்குமாறு அரசுக்கு அறிவித்தமை. இவ்வாறானதொரு மனநிலை காணப்பட்டதுடன்; சீனாவின் தைவான் மீதான நெருக்கீடு அவதானிக்கப்படுகிறது. மேலும் சீன மக்கள் குடியரசின் ஸ்தாபனத்தை நினைவுகூரும் பொன் வாரத்தின் போது தைவான் மீதான ஊடுருவலை தொடங்கியமை கட்சி விசுவாசத்தையும் அரசியல் நல்லொழுக்கத்தையும் சீன மக்களிடையே வெளிப்படுத்துகின்றன.

மூன்றாவது, தென் சீனக்கடலில் பிலிப்பைன்ஸ் கடற்கரை பகுதியில் அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் ஒன்றிணைந்து போர் ஒத்திகை நடத்தியுள்ளனர். தென்சீனக் கடலில் சீனா தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட விரும்பும் சூழலில் அமெரிக்க மற்றும் மேற்கு கூட்டு நாடுகளின் பயிற்சி சீனாவின் கோபத்தையே அதிகரிக்க செய்கிறது. பிரிட்டிஷ் விமானம் தாங்கி கப்பலான எச் எம்.எஸ் ராணி எலிசபெத் பிலிப்பைன்ஸ் கடலில் இரண்டு அமெரிக்க போர்க் கப்பல்களான யு.எஸ்.எஸ் ரொனால்ட் ரீகன், யு.எஸ்.எஸ் கார்ல் வின்சன் மற்றும் ஜப்பானின் ஹெலிகாப்டர் அழிப்பான் ஜே.எஸ் ஐஸ் என்பவற்றுடன் கூட்டுப்பயிற்சியில் ஈடுபட்டுள்ளதாக தனது டுவிற்றர் தளத்தில் வெளிப்படுத்தியுள்ளது. இக்கூட்டுப்பயிற்சியில் நியூசிலாந்து, நெதர்லாந்து மற்றும் கனடாவிலிருந்து கடற்படை கப் பல்கள் மற்றும் பணியாளர்களும் பங் கேற்றனர். ஆறு நாடுகளைச் சேர்ந்த 15,000க்கும் மேற்பட்ட மாலுமிகள் இந்த நடவடிக்கையில் பங்கேற்றதாக அமெரிக்க கடற்படை தெரிவித்துள்ளது. இதற்கு சீனா தனது எதிர்ப்பையும் வெளியிட்டிருந்து. அமெரிக்கா பிலிப்பைன்ஸின் பாதுகாப்பு ஒப்பந்தப் பங்குதாரர் மற்றும் அதன் கூட்டாளிகள் ஆகியோர் தொடர்ந்து தென்சீனக்கடலில் 'வழிசெலுத்தல் சுதந்திரம்' நடவடிக்கைகளை நடத்தி வருகின்றனர். இது, பிலிப்பைன்ஸ் மற்றும் வியட்நாம் மீன வர்களை துன்புறுத்துவதாக அமைவதுடன், தென்கிழக்கு ஆசிய நாடுகள் சர்ச்சைக்குரிய கடலில் சட்டவிரோத எரிசக்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக கருதுவதாகவும் சீனா குற்றம் சாட்டியுள்ளது.

நான்காவது, அமெரிக்க, பிரிட்டன் கூட்டில் அவுஸ்ரேலியா மேற்கொண்டுள்ள ஆக்கஸ் பாதுகாப்பு ஒப்பந்தமும் அதன் உள்ளடக்கங்களும் சீனா, தைவானின் சமகால முரண்பாட்டில் ஒருவகையிலான தாக்கத்தை செலுத்தியுள்ளது. செப்டெம்பர் மாதம் அமெரிக்க, பிரிட்டன், அவுஸ்திரேலியா கூட்டில் உருவாக்கப்பட்ட ஆக்கஸ் எனும் ஒரு புதிய இந்தோ, பசிபிக் மூலோபாய கூட்டணியின் ஒரு பகுதியாக அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களைப் பெற ஆஸ்திரேலியாவுக்கு உதவுவதாக அமெரிக்கா அறிவித்தது. இது சீனாவின் வளர்ந்து வரும் செல்வாக்கை எதிர்கொள்வதற்காக வாஷிங்டனின் இப்பகுதியில் கவனம் செலுத்தும் ஒரு பகுதியாக இருக்கும் என்று பெயர் தெரியாத நிலையில் பேசிய ஒரு அமெரிக்க அதிகாரி ஊடகங்களில் தெரிவித்துள்ளார். அத்துடன் இந்தோ, பசுபிக் பிராந்தியத்தை முதன்மைப்படுத்தி அமெரிக்க தலைமையில் முன்னெடுக்கப்படும் குவாட் மற்றும் ஆக்கஸ் போன்ற பாதுகாப்பு கூட்டுக்களை சீனாவிற்கு எதிராக கட்டமைக்கப்படும் நேட்டோ 2 என்ற புதிய பார்வையையும் சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் உருவாக்கியுள்ளனர். ஆக்கஸ் அறிவிக்கப்பட்டதிலிருந்து, தைவானுக்கு அருகிலுள்ள சீன விமானங்கள் கணிசமாக அதிகரித்து புதிய முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளன.

எனவே, தைவானின் வான் பாதுகாப்பு அடையாள மண்டலத்திற்கு சீனாவின் விமானங்களின் ஊடுருவலை அதிகரித்தமையானது, சர்வதேச ரீதியாக தென்சீனக்கடலில் அதிகரித்துவரும் சீனாவின் ஆதிக்கத்திற்கு எதிரான நெருக்கீடுகளுக்கு பதிலீடாகவே அமைந்துள்ளது. மேலும், தைவான் அதிக உலகளாவிய ஆதரவையும் அங்கீகாரத்தையும் கோருவதால், தைவான் ஆட்சியாளர்களுக்கும் மக்களுக்குமான எச்சரிக்கை செய்தியாகவும் சீன ஊடுருவலை பயன்படுத்தியுள்ளது. தைவானிற்கான அமெரிக்க மற்றும் மேற்கு நாடுகளின் ஆதரவானது அதிகமாய் அறிக்கைகளுடனேயே கடந்து செல்கிறது. மாறாக சீனாவை எதிர்த்து உலக நாடுகள் ஆயுதம் தரிக்க வாய்ப்பில்லை என்பது யதார்த்தமானதாகும். ஏனெனில் பெய்ஜிங்கின் 'ஒரே சீனக் கொள்கை' தைவான் மீதான தனது உரிமையை முறையாக அறிவிக்கிறது.

கிராம சேவகரின் உயிரை பறித்த புகையிரத நிலைய பொறுப்பதிகாரி?

"ஐயோ.... ஏன் எமது தந்தைக்கு இப்படி ஒரு அநியாயத்தைச் செய்தீர்கள்..... எமது தந்தை எவருக்கும் அநியாயம் செய்யும் ஒருவரல்ல.... எமது தந்தைக்கு இப்படியொரு அநியாயத்தைச் செய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி எமக்கு நியாயத்தைப் பெற்றுத்தருமாறு நான் எல்லோரிடத்திலும் வேண்டிக் கொள்கிறேன்...."

இது கடந்த வாரம் முழு அம்பன் பொல பிரதேசத்தையுமே சோகத்திற் குள்ளாக்கி படுகொலை செய்யப் பட்ட கிராம அதிகாரி கபில குமார சபுகுமாரவின் மகள் அழுது புலம் பிய நிகழ்வாகும்.

கடந்த 4ம் திகதி காலை 8.30 மணியளவில் சபுகுமார, அநுரா தபுரம் பாதெனிய வீதியில் அம் பன்பொல, உதங்காவ பிரதேசத்தில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்குச் சொந்த மாக இருந்த கஹம்பிலியாவெட் டிய வத்தை கேட்டின் முன்னாள் "எச்டி" ரக சிறிய வேன் ஒன்றில் வந்தவர்களால் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு வீதியில் வீழ்ந்திருந்த நிலையில் பிரதேச மக்களால் உட னடியாக வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டார். அவர் அந்நேரமே உயிரிழந்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து பிரதேசவாசி கள் அம்பன்பொல பொலிஸ் நிலை யத்திற்கு இது தொடர்பில் தகவல் வழங்கினர்.

"சேர்.... சிலர் வேன் ஒன்றில் வந்து ஒருவரை மோதிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்....." என்ற தகவலை பொலிஸாருக்கு வழங்கிய நபர், குறித்த வேனின் இலக்கத்தையும் பொலிஸாரிடம் தெரிவித்திருந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் அப் பிரிவுக்குப் பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரிகளின் உத்தரவின் பிரகாரம் அம்பன்பொல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் சமன் பெரேரா தலை

மையில் விசாரணைகள் ஆரம்பிக் கப்பட்டன. பொலிஸார் குறித்த இடத்திற்கு விரைந்த நேரம் சபுகு மார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தார். வைத்திய சாலைக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட போது, சபுகுமாரவின் உடல் முழு வதும் வெட்டுக்காயங்கள் காணப் பட்டுள்ளன. இதனால் இது ஒரு கொலையாக இருக்கலாம் என்பதை பொலிஸார் முடிவு செய்து கொண் டனர். அதன் பின்னர் அம்பன் பொல பொலிஸாரினால் சபுகுமா ரவை மோதிவிட்டுத் தப்பிச் சென்ற வேனின் இலக்கத்தை அடிப்படை யாக வைத்து விசாரணைகள் ஆரம் பிக்கப்பட்டன. இதன் போது குறித்த வாகன இலக்கத்தை அடிப்படையா கக் கொண்டு வாகன போக்குவரத்து திணைக்களத்திடமிருந்து பெறப் பட்ட தகவல்களின் பிரகாரம் அந்த வாகனம் நிகவெரட்டி பொலிஸ் பிரி வுக்குட்பட்ட பொலிஸ் நிலையம் ஒன்றில் கடமையாற்றும் கல்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த பொலிஸ் உத் தியோகத்தர் ஒருவருக்குச் சொந்தமா னது என்ற விடயம் தெரியவந்துள் ளது.

பின்னர் குறித்த பொலிஸ் உத்தி யோகத்தரிடம் மேற்கொண்ட விசா ரணையின் போது அந்த வாகனத்தை வாடகை அடிப்படையில் வாகனங் களை வழங்கும் நிறுவனம் ஒன் றிற்கு வழங்கியிருந்த விடயத்தை பொலிஸார் தெரிந்து கொண்டனர். கல்கமுவ பிரதேசத்தில் இயங் கும் அந்த நிறுவனத்திற்குச் சென்ற பொலிஸார் அங்கு மேற்கொண்ட விசாரணையின் போது குறித்த வாகனம் அம்பன்பொல புகையிரத நிலையத்தில் பயிற்சி பெற்றுவரும் புகையிரத நிலைய பொறுப்பதிகாரி யான 27 வயதுடைய சானக திலான குமார என்பரால் வாடகைக்குப் பெறப்பட்டிருந்த விடயம் தெரிய வந்துள்ளது.

கொலை இடம்பெற்ற அன்று இரவாகும் போது குறித்த வேனை வாடகைக்குப் பெற்றிருந்த சானக என்ற நபர் அம்பன்பொல பொலி ஸாரால் கைது செய்யப்பட்டிருந் தான். இதேவேளை பொலிஸார் சம்பவம் இடம்பெற்ற பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த சீசீடிவி கெம ராக்களில் பதிவாகியிருந்த காட் சிகளை அடிப்படையாக வைத்து மேற்கொண்ட விசாரணைகளைய டுத்து குறித்த வாகனம் கல்கமுவ, பாளுகடவள, குருந்தேவ எனும் பிர தேசத்தில் காட்டுப் பகுதியில் கைவி டப்பட்டிருந்த நிலையில் பொலிஸா ரால் மீட்கப்பட்டது.

அத்துடன் சீசீடிவி கெமராக்களில் பதிவாகியிருந்த காட்சிகளிலிருந்து கொலை இடம்பெற்ற இடத்திற்கு மற்றொரு சிவப்பு நிறக் கார் ஒன்றும் வந்துள்ளமை தெரிய வந்துள்ளது. கைது செய்யப்பட்ட சானகவிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது இக்கொலையின் அனைத்து விடயங்களும் பொலிஸாரால் வெளிக்கொண்டுவரப்பட்டது. கொலை இடம்பெற்ற இடத்திற்கு சிகப்பு நிறக் காரில் சானகவும், கல்க முவ பிரதேசத்தைச் சேர்ந்த சானகவு டன் ஒன்றாக இருக்கும் நண்பர் ஒரு வரான சந்துன் என்பருமே வந்ததாகத் தெரிய வந்துள்ளது. இக்கொலை தொடர்பில் சானக வெளிப்படுத்திய விடயங்களிலிருந்து இக்கொலை யானது காணி பிரச்சினை ஒன்றை அடிப்படையாகக் கொண்டு இடம் பெற்றுள்ளமை தெரிய வந்துள்ளது.

சானகவின் மனைவிக்குச் சொந் தமான காணியில் சானக இரு மாடி வீடு ஒன்றை நிர்மாணித்து அங்கு வசித்து வருகிறான். அவர்கள் அக் காணியை சில காலத்திற்கு முன்னர் விலைக்கு வாங்கியிருந்துள்ளனர். அக்காணியின் ஒரு பகுதியில் அக் காணியை விற்றவரின் சிலர் வசித்து வந்துள்ளதாகவும், அவர்களுடன் கொலை செய்யப்பட்ட சபுகுமார என்ற கிராம உத்தியோகத்தர் நெருக் கமாகப் பழகி வந்துள்ளமையே இப் பிரச்சினைக்கு காரணமாக அமைந் துள்ளது. இப்பிரச்சினை தொடர்பில் உயர் அதிகாரிகளும் விசாரணை களை மேற்கொண்டுள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது.

இதனடிப்படையில் சபுகுமார என்ற கிராம உத்தியோகத்தரை பய முறுத்தி எச்சரிப்பதற்காக சானகவி னால் ஹிக்கடுவை பிரதேசத்தைச் சேர்ந்தவனான ரெக்சி என்பவனிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

(15 ஆம் பக்கம் பார்க்க)



அமில மலவிசூரிய
தமிழில்
எம். எஸ். முஸப்பிர்
(புத்தளம் விசேட நிருபர்)

மலேரியாவுக்கு தடுப்பூசி

ஒரு நூற்றாண்டு ஆய்வுகள், போராட்டங்களுக்குப் பிறகு முதல் முறையாக ஆபிரிக்க குழந் தைகளுக்கு மலேரியாவுக்கான தடுப் பூசி போட அனுமதி வழங்கப்பட்டி ருக்கிறது.

ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக குழந்தைகளையும் சிசுக்களையும் கொல்லும், மனித குலத்தை அச்சு றுத்தும் நோயாக மலேரியா இருந்து வருகிறது.



நூறு ஆண்டுகால ஆராய்ச்சிகளுக் குப் பிறகு மலேரியாவுக்கு தடுப் பூசி கண்டுபிடித்திருப்பது மருத்துவ உலகின் குறிப்பிடத் தகுந்த சாதனை யாகும்.

RTS, S என்று அழைக்கப்படும் இந்தத் தடுப்பூசி மலேரியாவுக்கு எதிராகச் சிறப்பாகச் செயல்படுவ தாக ஆறு ஆண்டுகளுக்கு முன்பு நிரூபிக்கப்பட்டது.

கானா, கென்யா மற்றும் மலாவி ஆகிய நாடுகளில் முன்னோட்டத் நோய்த்தடுப்புத் திட்டங்களின் வெற்றிக்குப் பிறகு, இப்போது மலேரியா அதிகமாகப் பரவும் சஹா ராவுக்கு கீழே இருக்கும் ஆப் பிரிக்க நாடுகளிலும் தடுப்பூசி போட வேண்டும் என உலக சுகாதார நிறுவனம் வலியுறுத் தியுள்ளது.

"இது ஒரு வரலாற்றுத் தருணம்" என்று உலக சுகாதார நிறுவனத்தின் டெட்ரோஸ் அதனோம் கூறியுள்ளார்.

"நீண்டகாலமாக எதிர்பார்க் கப்பட்ட மலேரியா தடுப்பூசி, அறிவியல், குழந்தை ஆரோக்கியம் மற்றும் மலேரியா கட் டுப்பாடு ஆகி யவற்றில் ஒரு மை ல் க ல் " என்று அவர் கூறினார்.

"ஒவ்வோர் ஆண்டும் பல் லாயிரக்கணக் கான இளம் உ யி ர் க ளை க ா ப் பாற்ற முடியும்." என்றார் அவர்.

மலேரியா நமது உடலில் புகுந்து பல்கிப் பெருகுவதற்காக நமது ரத்த அணுக்களை ஆக்கிரமித்து அழிக் கும் கொடிய ஒட்டுண்ணியாகும். ரத்தத்தை உறிஞ்சும் கொசுக்கள் கடிப்பதன் மூலம் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவுகிறது.

மலேரியா கிருமியைக் கொல்லும் மருந்துகள், கொசுக்கள் கடிப் பதைத் தடுக்கும் வகையிலான படுக்கை வலைகள், கொசுக்க ளைக் கொல்லும் பூச்சிக்கொல்லி கள் போன்றவை மலேரியாவைக் குறைக்க உதவின.



ஆனாலும் ஆபிரிக்காவில் இந்த நோயைக் கட்டுப்படுத்த முடிய வில்லை. 2019ஆம் ஆண்டுக் கணக் குப்படி ஆப்பிரிக்க நாடுகளில் 2.6 லட்சத்துக்கும் மேற்பட்ட குழந்தை கள் மலேரியாவுக்கு பலியாகினர்.

ஒவ்வோர் ஆண்டும் மலேரியா வால் 4 லட்சம் உயிர்கள் பறி போகின்றன. இயற்கை யான நோய் எதிர்ப்பு சக்தி உருவாக வேண்டுமானால் மீண்டும் பல ஆண்டுகளுக்கு தொற்று ஏற்பட வேண்டும். இதுவும் நோய்த் தொற்று ஏற்ப டுவதை ஓரளவு மட்டுமே குறைக்கும்.

கானாவில் முன்னோட்டத் திட்டத்தை செயல் படுத்தி, மலேரியா வுக்கு வெகுஜன அளவிலான தடுப்பூசி வழங்குவது சாத்திய மானதா என்று மருத்துவர் குவாமே அம்போன்சா மதிப்பீடு செய்தார்.

"இது எங்களுக்கு மிகவும் உற் சாகமான தருணம், பெரிய அளவி லான தடுப்பூசி மூலம் மலேரியா

எண்ணிக்கை குறைந்தபட்சமாக குறைக்க முடியும் என்று நான் நம்பு கிறேன்" என்று அவர் கூறினார்.

குழந்தை பருவத்தில் தொடர்ந்து மலேரியா தொற்று ஏற்பட்டதால், கானாவைச் சேர்ந்த அம்போன்சா வுக்கு மருத்துவராகும் கனவு உருவா னது.

"அது வேதனையாக இருந்தது. ஒவ்வொரு வாரமும் பள்ளிக்குச் செல்ல முடியாமல் போனது. நீண்ட காலமாக அது எங்களை பாதித்தது" என்று அவர் கூறினார். குழந்தைக ளின் உயிரைக் காப்பாற்றும் திறன் கொண்டது.

100க்கும் மேற்பட்ட மலேரியா ஒட்டுண்ணி வகைகள் உள்ளன. ஆப் பிரிக்காவில் பொதுவாகக் காணப்ப டும் மிகக் கொடிய பிளாஸ்மோடி யம் ஃபால்சிபாரம் என்ற வகையைக் குறிவைத்து RTS, S தடுப்பூசி உரு வாக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடுப்பூசி பத்தில் நான்கு போருக்கு மலேரியா வருவதைத் தடுக்கும், பத்தில் மூன்று பேருக்கு நோய் தீவிரமாவதைத் தடுக்கும் ரத்தம் ஏற்றும் தேவை ஏற்படும் குழந்தைகளின் எண்ணிக்கையை மூன்றில் ஒரு பங்கு குறைக் கும் என்று 2015இல் நடத்தப் பட்ட பரிசோதனை முடிவு கள் தெரிவித்தன.

எனினும் நடைமு றையில் இது எப்படி வேலை செய்யும் என்ப தில் சந்தேகம் இருந்தது. ஏனென்றால் மொத்தம் நான்கு தவணை தடுப்பு மருந்து அளிக்கப்பட வேண்டும். முதல் மூன்று தவணை தடுப்பூசி ஐந்து, ஆறு மற்றும் ஏழு மாதங் களில் வழங்கப்படுகிறது. இறுதி பூஸ்டர் 18 மாதங்க ளில் வழங்கப்படும்.

முன்னோட்டத் திட்டங்களில் கிடைத்த முடிவுகள் கடந்த புதன்கி முமையன்று உலக சுகாதார நிறுவன விஞ்ஞானிகள் கூட்டத்தில் விவாதிக் கப்பட்டது.

23 லட்சத்துக்கும் அதிகமான டோஸ்களில் இருந்து கீழ்கண்ட முடிவுகள் கிடைத்தன.

கடுமையான மலேரியா தொற்று ஏற்பட்டவர்களில் 30% மரணங்கள் குறைய தடுப்பூசி காரணமாக இருந் தது. பாதுகாப்பானதாகவும் இருந் தது

படுக்கை வலை இல்லாத குழந் தைகளில் இந்த அளவு குழந்தைக ளில் மூன்றில் இரண்டு பங்கைத் தொட்டது.

மற்ற வழக்கமான தடுப்பூசிகள், மலேரியாவைத் தடுப்பதற்கான பிற நடவடிக்கைகளில் எந்தவிதமான எதிர்மறைத் தாக்கமும் இல்லை.

(15 ஆம் பக்கம் பார்க்க)

கல்லாகிக் காதலாகிக்

ரதிதேவி, மானிப்பாய்

"அம்மா, அதெப்படி கடவுள்
கல்லுளையும் இருக்கார்
உன்னிலையும் இருக்கார்
அப்ப நீ கல்லா ?
அந்தப் படத்துல வர்ற மாறி
நீ கல்லாய்ப் போய்டிவியாமா ?"

"நான் கல்லா போறது
இருக்கட்டும்
உண்ட கொப்பர்
உங்க பார்
ஏற்கனவே கல்லு மாறி
காலைல இருந்து
லப்டப்புக்கு முன்னால
கேட்டா வேர்க் பிரோம் ஹோம்
ஆனா பேஸ்புக்க பார்த்து
இழிச்சுக்கொண்டு கிடக்கிறது.
நீ தமிழ்புத்தகத்தை எடு
உடல் அங்கங்களைச் சொல்லு"

ஆயிரம் சிறகுகள்
ஒன்றாய்க் கோர்த்து
கட்டப்பட்டதுபோல் உள்ள
புத்தகத்தின் பக்கங்களை
விரல்களால் விசிறினாள்

"சரி அம்மா,
இது எண்ட கண்
இது எண்ட காது
இது எண்ட விரல்
இது எண்ட நகம்
இது எண்ட இதயம்
ஆனா
'என் பெயர் சிவா சக்திலிங்கம்.
நான் ஆண்டு ஒன்றில் படிக்கிறேன்
எண்டு சொல்லேக்க
ஏன் எண்ட இதயத்தை மட்டும்
தொட்டுக்காட்டுறன்"

"அப்பிடிக் கேளுடா
என் கன்னுக்குட்டி
அப்பிடியே அப்பரிண்ட மூளை"

அம்மா முறைத்தார்
அப்பர் மீண்டும்
பெட்டிப்பாம்பாய்
மடிக்கணனிப் பெட்டிக்குள்
அடங்கினார்

"டேய் சிவா
கண்ணத் தொட்டாலும் நீதான்
காதத் தொட்டாலும் நீதான்
காலத் தொட்டாலும் நீதான்
கால் நகத்தைத் தொட்டாலும் நீதான்"

"அப்பிடியெண்டா
கல்லு
கடவுளிண்ட கால்நகம்
நீ
கடவுளிண்ட கண்"

பாய்ந்து
அவள் மார்பில் சாய்ந்து
கட்டிப்பிடித்துக்கொண்டான்
ஏதோ
கல்லாய்ப் போன தாய்
உயிர்த்ததுபோல்
ஒரு ஆனந்தத்துடன்

"ஓமிடா
என் செல்லக்குட்டி "
இழுத்து அரவணைத்துக்கொண்டாள்

"நீ கண்ணிண்டா
நான் கடவுளிண்ட என்ன?"

"நான் கண்ணில்லடா
கொழும்புத்துறைக் கொட்டில்ல
பார்க்கப்போவமே
யோகசுவாமிகள் தாத்தா
அவர் மாறி ஞானிகள்தான்
கடவுளிண்ட கண்"

"அப்ப நீயும் நானும் ?"

"ஹ்ம்ம்
நான் கடவுளிண்ட முலை
நீ கடவுளிண்ட
கொவ்வைச் செவ்வாய்"

"அப்ப நான் ?"
மடிக்கணினிப் பெட்டிக்குள்
இருந்து மீண்டும்
பாம்பு
சற்றுத் தலையைத் தூக்கியது

"ரைட்டு விடு
இங்க கேளன்
எஸ்.பி.பி பாடின
சிவபுராணம்
யாரோ ஷேர் செய்திருக்காங்கள்"

அந்த இனிமையான குரலில்
ஒலித்தது
"கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்"

ஈசனே
இவ்பிரபஞ்சத்தின் உயிர்
நாம் அனைவரும்
அவன் உடல் உறுப்புக்கள்
நகத்தைப் பேர்ப்பினும்
சிவனை சித்திரவதை செய்கிறோம்
கண்ணைப் பேர்ப்பினும்
சிவனை சித்திரவதை செய்கிறோம்
உணர்வுசூழ் கடந்த அவ்வல்லோன்
உணரானோ
நாம் கல்லில் முத்தமிட்டாலும்

முதுமைக் காதலன்!

பொத்துவில் அஜ்மல்கான்

அழகிய காதல்
என்பதால்,
அளவுக்கு மிஞ்சி
இருக்கின்றது முதுமையெனப்
பார்க்காது.

அழகு சிரிப்பில்
அகிலங்கள் எங்கும்
பறந்து போன
சந்தோசம் நான்
பார்த்து உணர்கின்றேன்
இந்தப் புன்னகையின்
வழியில் இன்று.

புத்தாடையில் பூக்கவில்லை
இந்த காதல்.
புதுமையான முறைகளிலும்
கூறவில்லை நானும்,
புத்தியுள்ள மனிதனாய்
என் பத்தினியிடம்
பத்திரமாய் பகிர்ந்து
போனதால் கிடைத்துப்
போன ஞாபகம்
இதுவென்பதால்.

அவள் ஆசை
கொண்டு எதுவும்
கேட்டதில்லை,
கோபம் கொண்டு
நான் பேசியதுமில்லை
இன்றுவரை என்போல்
யாருமில்லை.

மச்சான் என
அழைத்து பாத்திரமாய்
என உரைத்து
பத்தினியவளின் முத்தனையில்
வியர்வையினை நான்
துடைத்து போனதனை
யார் உணர்வார்
இன்று!

இளமையில் பூக்கும்
காதலை முதுமையில்
நான் பார்ப்பதுதில்லை,
அதனை நான்
பார்த்துப்போனால் காமக்
காதல் மாய்ந்து
போய் விடும்
என்பதினாலோ!

இசையின் காதலன் நான்

இவன்
அங்கனூர்
ராஜி குட்டி

நானும் காதல் செய்கின்றேன்
கண்களில் கண்ணீர்
வர வைக்கும் மங்கையை
அல்ல.!

தாலாட்டுப் பாட்டு பாடி
என்னை உறங்க வைக்கும்
உந்தன் இசையை.!

தலைவா
ஏனோ? உன் இசையில்
எனக்கு எண்ணற்ற பிரியம்?

உன் இசையின்றி
என் ஜீவன் இல்லை.!
ஒவ்வொரு நாட்களும்
எந்தன் இதயம் துடிக்கும்
துடிப்பானது உன் பெயரை
மட்டுமே சொல்லும்
இசைஞானி இளையராஜா
என்று..!

தாலாட்டுப் பாடும் தாயின்
அன்பு கூட தோற்றுவிடும்
உன் இசையில் வரும்
ஓசையை கேட்டு..!

எத்தனை சோகங்கள்
எனக்குள் வந்தாலும்?
என் இருவிழிகளை
மூடிக் கொண்டு
உமது பாடல்களை கேட்டால்
போதும் அத்தனை வலிகளும்
நீங்கிவிடும்
அந்த ஐந்து நிமிடத்தில்.!

அம்மா

சோதிகா.ரெ (ஆகிஷா)
கொக்குவில்

கருவினிலே எனை சுமந்து
கைகளினால் சட்டை தைத்து நான்
வரும் நேரம் எதிர்பார்த்து
காத்திருந்த என் ஆத்தா

வயிற்றில் எட்டி நான் உதைக்க
பன்னீர்க்குடம் உடைந்தொழுக
எந்த சாமியை நீ வேண்டினாயோ
என்ன வலிகள் தாங்கினாயோ

பிஞ்சுப் பாதம் தொட்டணைத்து
உச்சி முகர்ந்து முத்தமிட
பெற்ற ரணம் பறந்ததென்று
பாலூட்டி வளர்த்தவளே எனை
பக்குவமாய் பார்த்தவளே

தோள் தாண்டி வளர்ந்த பின்னும்
தோல்வி என்று நான் வந்தால்
ஆறுதலாய் எனக்கிருந்து
உன் மடிமீது தூங்க வைத்தே
வழிந்தோடும் அழுகையினை
சேலை நுனி கொண்டு துடைத்தவளே

நாலெழுத்து நான் படிக்க
ராவெல்லாம் முழிச்சிருந்து
நாட்டுக்கோழி வதக்கி வைச்சு
வரும் பாதையிலே தவம் கிடப்பாய்

பட்டிக்காடு என்று திட்டி
உனை பலவாறு சபிக்கையிலும்
பட்டினியா நீயிருந்து
எனக்காக பாடுபட்டாய்

நீ எண்ணெய் தேய்த்து விடுகையிலே
என் கண்ணு ரெண்டும் எரிஞ்சிருக்கு
எண்ணி இப்போ பார்த்தால் தான்
எரிஞ்ச கண்ணு குளிர்ந்திருக்கு

பிள்ளை என்று நீ அழைக்க
பெற்றிடலாம் எத்தனையும் ஆனால்
அம்மா என்று நான் தேட
நீ ஒருத்தி தானே எனக்கிருக்காய்.

வினையமாய் வேண்டிக்கொள்கிறேன்

ஏரூர் கவிமொழி
இஷாதா முஹம்மத்

என் சங்கடங்களை நான்
உங்களுக்கு அன்பளிப்புச் செய்யவில்லை
என் துயர்களை நான்
உங்களுக்கு பங்கு
பிரிக்கவில்லை
என் அபாண்டங்களை
உங்களை நான் எடுத்துக்கொள்ளச்
சொல்லவுமில்லை
என் பிரிவுகளில் உங்களை
ஒரு போதும் நான் பரிந்து பேச கேட்கவில்லை
என் தாகங்களில் உங்களை
நான் ஒரு சொட்டு நீர்
புகட்டச்சொல்லவில்லை
என் அறியாமைகளில்
உங்களை நான் வழிகாட்டிட
வேண்டிக்கொள்ளவில்லை
என் கண்ணீர்களில் உங்கள் பரிதாபங்களை
நான் எதிர்பார்த்திருக்கவுமில்லை

இன்று
காலத்தின் பிடியில் நானொரு
அடிமையாய் இருக்கலாம்
விதியின் கையில் நானொரு
ஏழையாகவும் இருக்கலாம்
இறைவனின் நாட்டத்தில்
நானொரு யாசகனாயும் இருக்கலாம்

இந்தவொரு நாளில் நான்
வினையமாய் கேட்பதெல்லாம்
உங்கள் பழிச்சொல்களையும்
உங்கள் கேளிக்கைகளையும்
உங்கள் துரோகங்களையும்
உங்கள் புறம்பேசல்களையும்
என்னை விட்டு தூரமாக்கிடுங்கள்
நிலைமாற்றங்கள் நிகழக்கூடியவை
நிலைமாற்றங்கள் நிதர்சனமானவை
இன்று நானாகிப்போகிறேன்
இதைக்கடந்து விட்டிடும் பின்னொரு
நாளில் நீங்களாயும் இருக்கலாம்

ஆக...
அன்பால் ஆதரவு செய்யுங்கள்
வரங்கள் வாய்த்திடுவதெல்லாம்
ஆறுதலாய் சிறு அன்பொன்றைத்தவிர
பிறிதொன்றில்லைதான்
என்பேன் நான்

கவிதை மஞ்சரி

கிருஷா

வாழ்த்து மழை பொழிகிறேன்!

கவியரசி
எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா
பஸ்யாலை

கல்விக் கூடத்தில் மாணவர்
கல்விக் கல்லூரியில் பயிலுனர்
காலங்கள் பல காத்திருந்து
கல்லானாலும் கணவன் என
கண்ணென எம்.ஏ. முஹம்மது றிப்தியை
கணவனெனப் பெற்றேன் நானும்!

கடவுள் அமைத்துத் தந்தவர்
காதலெனும் அன்பு பொழிந்தவர்
கணவனென அன்பு கொண்டவர்
கல்விக் கடமையில் கைகோர்த்து
கண்ணியம் தான் காத்து
கடமைகள் பல நிறைவேற்றி
காதல் விலக்கேற்றியவர்!
உயிருக்குள் உயிரானவர்!
உறவுக்குள் உறவானவர்!
உண்மையின் ஒளியானவர்!

ஆங்கில அறிவை அள்ளி
மாணவர்களுக்கு வழங்கும் ஆசிரியராக
நற்பண்புகளை போதிக்கும் போதகராக
ஆசிரியர்களுக்கு ஆலோசனை கூறும்
ஆங்கில ஆசிரிய ஆலோசகராக
ஆளுமை மிகு அதிபராக
இருவரும் பதவிகளில் ஒன்றாய்
உள்ளத்தால் ஒன்றித்து ஒருமித்து
சேவைப்பயணத்திலோ
வெவ்வேறு இடங்களில்!
காலத்தின் கணிந்த தேவையாய்
கடவுளின் ஆசியாய் பதவியுயர்வு
"கல்வியாளர்" எனும் ஆசிகள்
ஆண்டவன் அருளால் அமைந்திட
அன்பின் அடையாளமாய் என்றும்
நல்ல கணவராய் அன்புத் தந்தையாய்
குடும்பத்தில் சிறந்த உறவாய்
உலகில் சிறந்த மனிதராய்
ஆயுள் நீண்டு ஒருங்கே
ஆரோக்கியம் செல்வம் மனச்சாந்தி பெற்று
சந்தோஷம் நிலைக்க
அகிலம் போற்றும் வாழ்வு பெற
வாழ்த்து மழை பொழிகிறேன்!

வகுப்பறை நிலவு

சி. மேகவர்னன்
(மார்க்கோணி)
கனடா

முகில்கள் ஓடுது
முகவரி தேடுது
நிலவே நீ எங்கே
கனவுகள் நூறு
கண்கள் தேடுது
நிலவே நீ எங்கே

இருளில் ஒழிந்தேன்
அம்மா கருவறையில்
பௌர்ணமி நிலவை
கண்டேன் எந்தன்
வகுப்பறையில்

சிதறா சில்லறை
உந்தன் சிரிப்பினில் கேட்குதடி
நான் எழுதா கவிதை ஒன்று
வந்து உந்தன் பெயரை
எழுதி செல்லுதடி

உந்தன் மூக்கின் நுனியின்
வேர்வைத் துளியில் உந்தன்
வெட்கம் தெரிந்ததடி
எந்தன் முளைக்கா மீசை
வேர்வைத் துளியில்
அரும்பு விட்டதடி

காலநிலை மாற்றம்

அ. ஜெகன்
சுவிஸ்

வானம் தொடாத
முகிலின்
பெருமூச்சுப் பட்டதால்
கறுத்த வானம்
வடிக்கும் கண்ணீர்
மழையாக நிலம்
நனைக்கும்

வாடி நின்ற செடிகள்
மழையை வரவேற்று
பூக்கள் விரித்து
மகிழ்ச்சியை
வெளிப்படுத்தும்

வீடு இல்லா
உயிரினங்களுக்கும்
கூடு இல்லா
பறவைகளுக்கும்
குடியிருப்பாகும்
கிளை மூடிய மரத்தின்
நிழல் விரிப்பாகும்
காடுகள்

மழையோடும் மரத்தோடும்
முட்டி மோதிய காற்று
தோல்வி கண்டு
தவழ்ந்து சென்று
முகில் கலைக்கும்

இருள் விலகிய
மேகம் ஒதுங்கி
சூரியனுக்கு வழி விடும்
மலர்தலுக்கு தயாரான
மொட்டுக்கள்
சூரியக் கதிர்களின்
வரவு கண்டு
இதழ் விரிக்கும்

இயற்கையின்
சுழற்சி முறை
மாற்றங்களால்
வானம் கறுப்பதுவும்
வெளுப்பதுவும்
இயற்கையானது என்றால்
மனங்களும் அப்படியே

விடியல் வெகு சீக்கிரத்தில்

ஷப்ரா இல்முத்தீன்

துவண்டு போய்
தூர விலகிய காலத்தையெல்லாம்
தூர வீசிடு..
துணிச்சலான பாதை
உன் முன்னால் விரிந்து கிடக்கிறது
மிகக் கச்சிதமாக..
பிறரின் கருத்துக்கள்
புரள வைக்க வேண்டாம் உன்னை..
பிறரின் ஏளனங்கள் தடைப்படுத்திட
வேண்டாம் உன் இலக்கை..
பிறரின் குத்தல்கள் குத்திக் கிழிக்க
வேண்டாம் உன் பாதச் சுவடுகளை..
நேற்றைய நாள் கடந்து விட்ட பக்கம்
இன்றைய நாள் படித்துக்கொண்டிருக்கும் பக்கம்
நாளைய நாள் படிக்கப் பட வேண்டிய பக்கம்..
நொடிகள் மாறினாலும் கடந்து
வந்த காலத்தை மறவாதே..
நாளைய விடியலுக்கு
நேற்றைய பொழுது தான்
மிகப் பெரிய ஆசான்..

கிராமத்துக் காத்து!

ஷெல்லிதாசன்

என்னடி....
குக்கிராமத்திலிருந்து
வந்திருக்கும்
உனது அக்காவே
உன்னைவிட
எவ்வளவு அழகாய்
இளமையாய்.

நகரத்தில் சொகுசாக வாழ்ந்தும்
நீ ஏனடி இப்படி....?

போடி விசரி
அது எனது
அக்கா இல்லையடி
அம்மா....!

தலைமைத்துவப் பண்புகள்...

(19 ஆம் பக்கத் தொடர்)

அப்போதைய கட்சித் தலைவரும் பிரதமருமான ரணில் விக்ரமசிங்க வுடன் சிறந்த நட்புறவைக் கொண் டிருந்த ஆதில் சர்வதேச உறவுகள், விவகாரங்களில் கட்சி சார் செயற் பாடுகளை பலப்படுத்துவதில் பக் கபலமாக செயற்பட்டார். ஐக்கிய தேசியக் கட்சி இந் நாட்டு இளை ஞர்களுக்கு கட்டமைத்த வேலைத் திட்டங்களின் அடுத்த கட்ட பரி மாணம் குறித்து தொடர்ச்சியாக பல்வேறு கட்ட கலந்துரையாடல் களை கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியேயும் மேற்கொண்டு புதிய செயற்திட்டத்திற்கான கொள்கை சார் உள்ளீடுகளை(Inputs for policy) வரைவதற்கான செயன்முறையில் பங்களித்தார்.

அப்போதைய ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன முன்னாள் ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட ஆளும் கட்சி, எதிர்க் கட்சி அரசி யல்வாதிகளுடன் நல்ல தொடர்பு வைத்திருந்த இவர் எல்லா அரசியல் வாதிகளாலும் மதிக்கப்பட்டார்.

எத்தகைய வேறுபாடுகளாலும் அவர் பின்தள்ளப்படவில்லை.இத் தகைய இளம் ஆளுமைகளின் அங் கீகரிப்பே இன்றைய இளம் சமூகம் இவரிடம் கற்றுக் கொள்ள வேண்டி யதாகும்.

எத்தகைய வித்தியாசமான வேறு பாடுகளாலும் புறம் ஒதுக்காத, சக லரினதும் ஏற்புடமையைப் பெறும் தேசிய மட்ட அங்கீகரிப்புகளைப் பெறும் இளம் ஆளுமைகளையே இன்று நாடு வேண்டி நிற்கிறது.

தான் நம்பிக்கை கொண்ட மதத் தின் மீதான அதீத பற்று அதனோ டிணைந்த நடுநிலை சிந்தனை, சமூக நீதி,கொள்கை சார்ந்த பற்று, ஜனநாயகம், ஐக்கியம், பல் மொழி யாற்றல், சிறந்த அரசியல், சமூக தொடர்பாடல் திறன், சமகால விவகார உணர் திறன்,விழுமியம் பேணல், சிறந்த ஊடக தொடர்பா டல், சர்வதேச தொடர்புகள் மற்றும் மனிதநேயம் என்பனவற்றை தன் னகத்தே கொண்டு செயற்பட்ட மையே ஆதில் பாக்கிர் மாக்காரை 26 வயதில் நாடும் உலகும் அறிய உதவியது.

இன்றைய இளைஞர்கள் இத் தகைய விடயங்களில் கவனம் செலுத்தி பரந்த மட்டங்களில் செயற்பட முன்வர வேண்டும். ஆளுமைகளால் நாட்டையும் உல கையும் வெல்ல வேண்டும்.குறுகிய கால லண்டன் கற்கையில் அவரு டைய ஆளுமையால் இன்றும் கூட London School of Economics and Political Science பல்கலைக்கழகம் இவரின் நினைவாக தனது இணை யதள பக்கத்தில் நினைவுக்குறிப் பொன்றை தொடர்ச்சியாக பேணி வருகிறது. இங்கு இனமே, நாடோ, மதமோ, அரசியலோ செல்வாக்குச் செலுத்தவில்லை.

அவரது தனிப்பட்ட பன்முக ஆளுமையும் உள்ளார்ந்த ஈடு பாடுமே அங்கீகரிப்புகளைப் பொற்றுக் கொடுத்தது.இளைஞர்க ளின் நேரிய செல்வாக்கு இங்கு முக் கியம்.

தேசிய ஐக்கியத்திற்கான பாக்கீர் மாக்கார்நிலையம்,அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி களின் சம்மேளனம், பலஸ்தீன ஒருமைப்பாட்டு இயக்கம் ஆகி யவற்றில் தன்னை வொகுவாக ஈடுபடுத்தி முற்போக்கு ரீதியான கருத்துக்களை முன்வைத்து சிவில் இயக்க செயற்பாடுகளின் வினைதி றனான முன்னேற்றத்திற்கு பாரிய பங்களிப்பை செய்தார்.

இலங்கையில் வதிவிட தூதரகங் களைக் கொண்டுள்ள முஸ்லிம் நாட்டு இராஜதந்திரிகளுடன் தொடர்புகளை கொண்டிருந்த தோடு தேசிய மட்ட சமூக நிகழ்வுக ளில் அவர்களின் ஒத்துழைப்புகளை பெற்றுக் கொடுப்பதில் இணைப் புப் பாலமாக செயற்பட்டார்.

பிரிவினைவாத உணர் திறனிலி ருந்து இளைஞர்களை மீட்டு இந் நாட்டிலுள்ள சகல இன இளைஞர் யுவதிகளும் ஒன்றாக இணைந்து பணியாற்ற முடியுமான தேசிய பரப்பொன்றை உருவாக்குவதற் கான முன்னாயத்த செயற்பாடுக ளில் ஈடுபட்டார்.

இதில் முற்போக்கு சிந்தனை மற்றும் செயற்பாடுகள் உள்ள சகல துறை சார் இளைஞர்களை கட்சி அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் இணைத்துச் செயற்ப டும் ஆர்வத்தை வெளிப்படுத்தி யமையை அவரோடு இணைந்து பணியாற்றியவர்கள் நன்கு அறிவர்.

பிரிவினைவாதங்களால் நாட் டிற்கு சாதகமான நிலைபோறுகளை அடைய முடியாது என்பதை அடிக் கடி நினைவூட்டினார். அதிதியாக தந்தை கலந்து கொள்ள வேண்டிய பல்வேறு நிகழ்வுகளில் தந்தையின் வேலைப்பழு காரணமாக இவர் கலந்து கொண்டு ஆற்றிய உரைக ளில் எதிர்கால தலைவருக்குரிய சிந்தனை தூர நோக்கை வெளிப்ப டுத்தினார்.

பல்வேறு பல் கட்சி இளைஞர் கள் கலந்து கொள்ளும் கலந்துரை யாடல்களில் பங்கேற்று ஆக்கபூர் வமான கருத்துக்களால் பலரின் நன்மதிப்பை பெற்றுக் கொண்டார்.

இன்று இலங்கையில் கட்சி அர சியல் பரந்த கட்டமைப்பில் முன் னோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் தருணத்தில் ஆதில் மாக்கிர் மாக்கா ரின் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

இலங்கை இளைஞர்களுக்கு அபார ஆற்றல் உள்ளது என்றும் சவால்களை எதிர்கொள்ளவும், பொதுவான குறிக்கோள்களை அடைய முன்னேறவும் எங்க ளுக்கு உறுதியும் திறனும் உள்ளது என்பதை ஆதில் பாக்கிர் மாக்கார் அடிக்கடி சுட்டிக்காட்டுவார்.

அவருடைய மறுமை நலனிற்காக அவருடைய குடும்பத்தினர், நண் பர்கள் இணைந்து ஆதில் பாக்கிர் மாக்கார் (Adhil Bakeer Markar Foundation) அறக்கடளை என்ற பொதுவான ஒரு கட்டமைப்பை உருவாக்கி பல்வேறு தேசிய மட்ட முயற்சிகளை ஆரம்பித்துள்ளனர்.

சர்வதேச அங்கீகாரமுள்ள பேச் சாளரின் பேச்சைக் கேட்பதற்கும், கற்றுக்கொள்வதற்கும், ஊக்கமளிப் பதற்கும், எதிர்காலத்திற்கு நம் நாட் டிற்காக "ஆதில் பார்த்த எதிர்காலத் திற்கான தூர நோக்கு முகவர்களாக" இருப்பதற்கான வாய்ப்பை இளம் இலங்கையர்களுக்கு வழங்குவ தற்கான வாய்ப்பை வழங்குவதை இலக்காகக் கொண்டு துருக்கியின் முன்னாள் பிரதமர் பேராசிரியர் அஹ்மத் தாவுத் ஒக்லோவுடனான "பன்முக கலாசார சமூகங்களை வடிவமைப்பதில் இளைஞர்களின் பங்கு" என்ற தலைப்பில் சகல இன இளைஞர் உரையாடல் நிகழ் வென்றை 2017 ஆம் ஆண்டு நடத் தினர்.

தொடர்ந்து "இளைஞர்களை உள்ளூர் மயமாக்குதல் ஐ.நா இளைஞர் வியூகம் 2030" எனும் தலைப்பில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரின் இளைஞர் விவகார தூதுவர் திருமதி ஜயத்மா விக்கிரமநாயக்கவின் பங் குபற்றலுடன் கலந்துரையாடல் நிகழ்வொன்றை 2019 இல் நடத்தி னர்.

தொடர்ந்து உள்ளூர் மட்ட இளைஞர் மேம்பாட்டுத் திட்டங் களை வடிவமைத்து செயற்படுகின் றனர்.

ஆதில் பாக்கிர் மாக்கார் போன்ற ஆளுமைகளிலிருந்து சமகால இளைஞர் யுவதிகள் கற்றுக் கொள் வதோடு முற்போக்கு ரீதியாக தமது துறைகளில் செயற்பட்டு தேசத் தின் தேவைகளை பூர்த்தி செய்யும் இளைஞர்களாக தற்துணிவுடன் நிலைபோறான அடைவுகளில் ஆற்றலை குவித்து குடும்பத்திற் கும், சமூகத்திற்கும், நாட்டிற்கும் பயனுள்ள மனிதர்களாக வாழ உறு திபூணுவோம்.

தேசிய நலனிற்கும் தேசிய ஐக்கியத்திற்குமான இணைப்பு பாலமாக அறிவார்ந்த பங்க ளிப்பை வழங்குவதோடு பங் கேற்புக்கான திறந்த வெளிகளை காணுவோம் அல்லது உருவாக்க உறுதிபூணுவோம்.

கிராம அதிகாரியின் உயிரை...

(13 ஆம் பக்கத் தொடர்)

இந்த பொறுப்பை ஏற்ற ரெக்சி என்பவன், ஹிக்கடுவை பிரதேசத்திலிருந்து கார் ஒன்றை வாடகைக்கு எடுத்து ஹிக்கடுவை பிரதேசத்தைச் சேர்ந்த மேலும் இருவரை அழைத்திருந்துள்ளான். அவ்வாறு ஹிக்கடுவையிலி ருந்து வாடகைக்கு பெற்று வந்த சிகப்பு நிறக் காரிலேயே கொலை இடம்பெற்ற இடத்திற்கு சானகவும், அவனது நண்பனும் சென்றிருந்தமை பொலிஸாரின் விசாரணைக ளிலிருந்து தெரிய வந்துள்ளது.

சபுகுமார கொலை செய்யப்பட்ட தினத்திற்கு முன்னைய தினம் ஹிக்கடுவையிலிருந்து வந்தவர்கள் அம்பன்பொல பிரதேசத்தில் அமைந்துள்ள சுது வதுல என்ற ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அந்த ஹோட்டலுக்குச் சென்ற சானக, இந்த கொலையைச் செய்வதற்காகப் பேசப்பட்டிருந்த ஒரு இலட்சம் ரூபாவில் எழுபதாயிரம் ரூபாவை அவர்களிடம் வழங் கியுள்ளான். அத்துடன் சானகவினால் வாடகைக்குப் பெறப்பட்டிருந்த எச்டி ரக வேனை அவர்களிடம் ஒப்ப டைத்துவிட்டு அவர்கள் வந்திருந்த சிகப்பு நிறக்காரை சானகவும் நண்பரும் எடுத்துச் சென்றுள்ளனர்.

அதன் பின்னர் சானகவின் நண்பன் சந்துன், கிராம உத் தியோகத்தர் சபுகுமாரவுக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு அவர் போய் வரும் இடங்களைத் ஆராய்ந்துள்ளான். இதனடிப்படையில் சபுகுமார 4ம் திகதி காலை அம்பன்பொல பிரதேச செயலகத்திற்குச் செல்ல இருந்த விடயத்தை அவர்கள் அறிந்து கொண் டுள்ளனர். இத்தகவல் கொலைசெய்ய ஒப்பந்தம் செய் யப்பட்டவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவ தினம் காலை 8.00 மணிக்கு பிரதேச செயலகம் செல் வதற்காக வீட்டிலிருந்து புறப்பட்ட சபுகுமார, வீட்டிலி ருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் பயணித்திருந்துள் ளார். அந்நேரம் உதங்காவ பிரதேசத்தில் வேனில் வந்த சானகவின் ஒப்பந்தகாரர்கள் தமது வேனை சபுகுமார வின் மோட்டார் சைக்கிள் பக்கமாகத் திருப்பி நிறுத்தி யுள்ளதோடு, சபுகுமாரவின் மீது கத்திகளால் வெட்டி தாக்கியுள்ளனர். பின்னர் அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்ற அவர்கள் தாம் பயணித்த வேனை களுந்தேவ பிர தேசத்தில் கைவிட்டுவிட்டு தாம் ஹிக்கடுவையிலிருந்து வந்த சிகப்பு நிறக்காரில் ஹிக்கடுவைக்குத் தப்பிச் சென் றுள்ளனர்.

இதேநேரம் சானகவினால் வாடகைக்குப் பெறப்பட்டி ருந்த எச்டி ரக வேன் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸாரைத் திசை திருப்பும் நோக்கில் அன்றைய தினம் மாலையில் அம்பன்பொல பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு செய்வதற்காக சானக வீட்டிலிருந்து புறப்பட ஆயத்தமானான். அந்நேரம் அனைத்து விட யங்களையும் அறிந்த பொலிஸார் அந்நேரத்திலேயே சானகவை அவனது வீட்டில் வைத்து கைது செய்தனர். அதேநேரம் ஹிக்கடுவை ஒப்பந்தகாரர்கள் வந்திருந்த காரும் வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த வாக னமாகும். அந்த காரை வாடகைக்கு வழங்கிய நிறுவனத் திடம் மேற்கொண்ட விசாரணையின் பின்னர் சபுகுமா ரவை கொலை செய்வதற்காக வந்த ரெக்சி என்பவனும் கைது செய்யப்பட்டான். பின்னர் செவ்வாய்க்கிழமை சபுகுமாரவைக் கொலை செய்வதற்காக ஹிக்கடுவையி லிருந்த வந்த மற்றைய இருவரையும் கைது செய்வதற் காக விசாரணைகளை மேற்கொண்டு செல்வதாக அம் பன்பொல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் பெரேரா எம்மிடம் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட பயிற்சி பெறும் புகையிரத நிலைய பொறுப்பதிகாரி சானக திலான் குமார என்ப வன் மறுநாள் 5ம் திகதி மாஹோ நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டான். இதன் போது சந்தேக நபரை இம்மாதம் 18ம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக் குமாறு நீதவான் நுதினன் சிரிவர்தன உத்தரவிட்டார்.

அம்பன்பொல ரொலவ பிரதேசத்தில் அநுராதபுரம் பாதெனி வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் வசித்த 51 வயதுடைய சபுகுமார இரண்டு பெண் பிள்ளைகளின் தந்தையாகும். அவரது மூத்த மகள் உயர் தரத்தில் கல்வி கற்று வருகின்றார். சபுகுமார மாஹோ கல்வி அலுவல கத்தில் பணியாற்றும் ஒருவரைத் திருமணம் செய்திருந் துள்ளதோடு, அவரது தாய் சில காலங்களுக்கு முன்னர் உயிரிழந்திருந்தார். தனது ஒரே சகோதரி அனுராதபுரத் தில் வசிப்பதாகவும், சபுகுமாரவின் தந்தையும் அவரு டனேயே வசிப்பதாகவும் சபுகுமாரவின் மனைவி தெரி வித்தார்.

"எனது கணவர் எந்நேரத்திலும் கடமைகளுக்கே முன் னுரிமை வழங்குவார்..... எந்த விலங்குகளுக்குக் கூட தீங்கு எண்ணாதவர் எனது கணவர்..... மக்களுக்கு இயன் றளவுக்கு உதவிகளையே செய்து வந்தார்..... அவர் தான் அறுவடை செய்யும் விதை நெல்லையும் கூட விவசாயி களை வீட்டுக்கே வரவழைத்து இலவசமாகவே கொடுப் பார்.... இப்போது இந்த இரண்டு பிள்ளைகளும் நானும் அநாதையாகிவிட்டோம்....."

2000ம் ஆண்டில் கிராம உத்தியோகத்தர் பதவிக்கு நிய மனம் பெற்ற சபுகுமார, இற்றைக்கு இரண்டு வருடங்க ளுக்கு முன்னர் அம்பன்பொல தெற்கு கிராம உத்தியோ கத்தர் பிரிவில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். தனது கிராம உத்தியோகத்தர் பதவிக்குப் புறம்பாக சபுகு மார, ஒரு விவசாயியாக பிரதேசத்திலேயே பிரபலமாகி யிருந்தார்.

சுமார் 20 வருடங்களுக்கு மேலாக விவசாயத் துறையில் ஈடுபட்ட கிராம உத்தியோகத்தரான சபுகு மார, சுமார் 100 ஐ அண்மித்த உள்நாட்டு நெல் வகை களைப் பாதுகாத்த ஒரு விவசாயியாகும். அவற்றினுள் 12 ஹீனாட்டி வகைகள், ஹீன் குலு துட, ரன்தெல், கஹவடு, மசூரன், மடதாவலு, புஷ்பராக, முத்து போன்ற பழங்கால உள்ளூர் நெல் விதைகளும் அடங் கும். அவர் வசித்த இடத்தில் பழங்கால விவசாய உபகர ணங்களைக் கொண்டு வைக்கோலினால் கூரை போடப் பட்ட அழகிய விவசாய வீடு ஒன்றையும் நிர்மாணித்து, இந்த விதை நெல்லை போத்தல்களில் அடைத்து அந்த வீட்டில் காட்சிப் படுத்தி வைத்துள்ளார். அதேபோன்று அவர் அவற்றைச் செய்கை பண்ணி லேபல் ஒட்டி காட்சிப் படுத்தியிருந்தது முற்று முழுதாக இயற்கை உரத் தைப் பயன்படுத்தியாகும். சபுகுமார இவ்வாறு விவசா யத்தில் காட்டிய திறமைகளைப் பார்வையிட அனேகமா னவர்கள் அங்கு வருகை தருகின்றனர்.

இதற்கு மேலாக சபுகுமார மரக்கறிகள், பழவகைகள் போன்றவற்றையும் பயிரிட்டுள்ளார். சபுகுமார விவ சாயத்துறையில் காட்டிய திறமைகள் தொடர்பில் பல சந்தர்ப்பங்களில் ஊடகங்களும் செய்தி வெளியிட்டு அவருக்கு இடமளித்திருந்தன. அவ்வாறான ஒரு சந்தர்ப் பத்தில் சபுகுமார என்ற இந்த கிராம உத்தியோகத்தர் விவசாயத்தில் தான் பெற்ற அனுபவத்தை இவ்வாறு கூறியிருந்தார்,

நான் மிகவும் சந்தோஷத்துடனேயே விவசாயத் தில் ஈடுபடுகின்றேன். நஞ்சு எதுவுமற்ற உணவுகளை உட்கொள்வதற்கு எமது நாட்டு மக்களை பழக்கப்ப டுத்துவதே எனது ஒரே குறிக்கோள். பாரம்பரிய நெல் வகைகளை செய்கை பண்ண நான் விவசாயிகளுக்கு விதை நெல்லினை இலவசமாகவே வழங்குகின்றேன். அதேபோன்று சுமார் 300க்கும் அதிகமான விவசாயிக ளுக்கு நான் இவ்வாறு விதை நெல்லினை வழங்கியிருக் கின்றேன்.... அதுவும் இலவசமாகவே..... இவ்வாறு என்னிடம் விதை நெல்லைப் பெற்றவர்கள் யாழ்ப்பா ணம், மன்னார், காலி, மாத்தறை போன்று நாடு முழு வதிலும் பரந்திருக்கின்றார். நெற் கதிர்கள் நீர்த்தாவரம் என்றே அனேகமானவர்கள் தவறாகப் புரிந்து வைத்திருக் கின்றனர். நெற் கதிர்களுக்கு பெருமளவில் நீர் தேவை யில்லை. ஓரளவு நிலம் ஈரமாக இருந்தாலே போதும். எனினும் நாட்டின் பெரும்பாலான விவசாயிகளுக்கு இது தெரியாது...."

இது அவரது விவசாயத் துறையின் அனுபவமாகும். இதற்கு மேலாக சபுகுமார என்ற கிராம உத்தியோகத்தர் காடாக வளர்ந்த சுமார் 20 ஏக்கர் தரிசு நிலத்தில் எள் பயி ரிட்டிருந்தார்.

அவருக்கு இந்தக் காணியை நாகொலகனே விகா ரையின் விகாராதிபதி வலன்வெட்டே ராகுல தேரரே வழங்கியிருந்தார். அந்தக் காணியில் எள் செய்கைக்குப் புறம்பாக காட்டு யானைகளின் பயன்பாட்டிற்கான பூச ணிக்காய், வெள்ளரிக்காய், கெக்கரி போன்றவற்றை மேலதிக செய்கையாகப் பயிரிட்டிருந்தார்.

அரச அதிகாரிகளிடையே கிராமம், நகரம் என அனைத்து மூலை முடுக்குகளில் எல்லாம் சுற்றி மக்க ளோடு இணைந்து கடமையாற்றும் கிராம மட்ட அரச ஊழியரே கிராம உத்தியோகத்தராகும். இவ்வாறு மக் களோடு இணைந்து தமது கடமைகளைச் செய்யும் போது கிராம உத்தியோத்தர்கள் மீது சுமத்தப்படும் அழுத்தங்களும், அச்சுறுத்தல்களும் எண்ணிலடங்காத வையாகும்.

எனினும் வரலாற்றில் ஒருநாளும் கிராம உத்தியோ கத்தர்கள் இவ்வாறான கடமை ரீதியான பிரச்சினை யின் காரணமாக இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட செய்திகளை நாம் கேள்விப்பட்டதில்லை. சபுகுமார என்ற கிராம உத்தியோகத்தர் இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் அம்பன்பொல கிளையின் உப செயலாளராகும். அவரது படுகொலை தொடர்பில் இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் டப்ளிவ். ஜீ. கமல் கித்சிரி இவ்வாறு தெரிவித் தார்.

"அதாவது, இந்தப் படுகொலையானது கடமையுடன் தொடர்பு பட்டிருக்கும் விடயத்தை நாமும் ஊடகங்கள் மூலமே அறிந்து கொண்டோம். நாம் கூறவேண்டியிருப் பது என்னவெனில், இவ்வாறான நிலைமையின் கீழ் கிராம உத்தியோகத்தர்களின் கடமைகள் தொடர்பில் பொது மக்கள் தீர்மானங்களை மேற்கொள்வது தொடர் பிலும், சட்டத்தைக் கையில் எடுப்பது தொடர்பிலும் நாம் மிகவும் வேதனையடைகிறோம்.

எவருக்கேனும் பாதிப்புக்கள் ஏற்படுத்தப்படுமாயின் செய்ய வேண்டியது அந்த அரச அதிகாரியை படுகொலை செய்வதல்ல.

அதற்கு முறையான வழிகள் உள்ளன. எவரேனும் ஒரு அதிகாரி தவறு செய்தால் அவருக்கு மேல் உயர் அதிகா ரிகள் இருக்கின்றார்கள். அதேபோன்று நாட்டில் சட்டம் ஒன்றும் உள்ளது. அதன் அடிப்படையில் செயற்பட வேண்டிய நிலையில் தாம் விரும்பும் வகையில் செயற் படப் போனால் நாகரிமுள்ள சமூகத்தில் செயற்பட முடியாது. எனவே எமது சகோதர கிராம உத்தியோகத்தர் சபுகுமாரவின் படுகொலையினை வன்மையாகக் கண் டிக்கின்றோம்...."

அதேபோன்று இந்நாட்டில் உள்ள 332 பிரதேச செய லகங்களுக்கு உட்பட்ட 14022 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளினுள் தற்சமயம் சுமார் 12000 கிராம உத்தி யோகத்தர்களே கடமையாற்றுகின்றனர். அனேக கிராம உத்தியோகத்தர்கள் இரண்டு, மூன்று பிரிவுகளைப் பொறுப்பேற்றுக் கொண்டு மிகவும் கஷ்டங்களுக்கு மத் தியில் தமது கடமைகளை முன்னெடுத்துச் செல்வதாக இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் டப்ளிவ். ஜீ. கமல் கித்சிரி எம்மிடம் தெரிவித் தார்.

மலேரியாவுக்கு தடுப்பூசி...

(13 ஆம் பக்கத் தொடர்)

தடுப்பூசி சிக்கனமானதாக இருந்தது.

"ஓர் அறிவியல் கண்ணோட்டத்தில், இது ஒரு மகத்தான முன்னேற்றம், பொது சுகாதாரக் கண்ணோட்டத்தில் இது ஒரு வரலாற்று சாதனை" என்று கூறுகிறார் உலக சுகாதார நிறுவனத்தின் மலேரியா திட்ட இயக்குநர் பெட்ரோ அலோன்சோ.

"மலேரியா தடுப்பூசியைத் தேடி 100 ஆண்டுகளுக்கும் மேலாக போராடிக் கொண்டிருக்கிறோம். இந்தத் தடுப் பூசி உயிர்களைக் காப்பாற்றும், ஆப்பிரிக்க குழந்தை களுக்கு நோய் ஏற்படாமல் தடுக்கும்"மலேரியாவைத் தடுப்பது ஏன் கடினம்?

கொரோனாவுக்கு ஓராண்டுக்குள்ளாகவே தடுப்பூசிக ளைக் கண்டறிந்ததைப் பார்த்த நீங்கள், மலேரியாவுக்கு ஏன் இவ்வளவு காலம் ஆனது என்று நினைக்கிறீர்களா?

மலேரியா ஓர் ஒட்டுண்ணியால் ஏற்படுகிறது. இது கொவிட் நோயை ஏற்படுத்தும் வைரஸை விட கொடூர மானது. இவ்விரண்டையும் ஒப்பிடுவது ஒரு மனிதரை யும் முட்டைக்கோஸையும் ஒப்பிடுவதைப் போன்றது.

மலேரியா ஒட்டுண்ணி நமது நோயெதிர்ப்பு சக்தியை உடைக்கும் வகையில் பரிணாம வளர்ச்சி பெறுகிறது. அதனால்தான் பல முறை மலேரியா தொற்று ஏற்பட்ட பிறகும் குறைந்த அளவே பாதுகாப்பு கிடைக்கிறது.

நுளம்புகள், மனிதர்கள் என இரு உயிரினங்களில் தனது வாழ்க்கைச் சுழற்சியைக் கொண்டிருக்கிறது மலேரியா ஒட்டுண்ணி. கல்லீரல் செல்கள், ரத்தச் சிவப்பு அணுக் களைப் பாதிக்கும்போது நம் உடலுக்குள் கூட அது வெவ்வேறு இடைநிலை வடிவங்களில் உருமாறுகிறது.

மலேரியாவுக்கு தடுப்பூசியை உருவாக்குவது என்பது கடினத்துக்கும் சாத்தியமின்மைக்கும் இடைப்பட்டது எனலாம். ஒட்டுண்ணியின் ஒரு குறிப்பிட்ட வடிவத்தை மட்டுமே தடுப்பூசியால் குறிவைக்க முடியும்.அதனால் தான் இந்தத் தடுப்பூசி 40% செயல்திறனை மட்டுமே கொண்டிருக்கிறது. இருப்பினும் இது குறிப்பிடத்தகுந்த வெற்றியாகும். மருந்து நிறுவனமான ஜிஎஸ்கே உருவாக் கியுள்ள தடுப்பூசியானது, நுளம்புகளை ஒழிக்கும் பூச்சிக் கொல்லி, படுக்கை வலைகள் போன்ற மலேரியாவைக் கட்டுப்படுத்த உதவும் மற்ற அனைத்து நடவடிக்கைக ளையும் மாற்றிவிடப்போவதில்லை. மலேரியாவால் இறப்புகளே இல்லை என்ற நிலையை ஏற்படுத்துவதற்கு மற்ற நடவடிக்கைகளுடன் இது இணைந்து செயல்படும்.

இது ஆப்பிரிக்காவுக்கு வெளியே பயன்படுத்தப்படாது. ஏனெனில் உலகின் பிற பகுதிகளில் தடுப்பூசியால் தடுக்க முடியாத, தீவிரமான பல்வேறு வகையான மலேரியா ஒட்டுண்ணி வகைகள் அதிகம் காணப்படுகின்றன.

தடுப்பூசியை அறிமுகப்படுத்துவது "வரலாற்று நிகழ்வு" என்று கூறுகிறார் பாத் அமைப்பின் மலேரியா திட்டத் தைச் சேர்ந்த ஆஷ்லே பிர்கெட். இது மக்களின் அச்சத்தை அகற்றும் என்கிறார் அவர்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

முன்பள்ளி கல்வி உயர் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல் 2021 / 2022

அனுமதித் தேவைகள்/தகைமைகள்

1. விண்ணப்ப முடிவுத் திகதி அன்று விண்ணப்பதாரிகள் 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
2. இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் முன்பள்ளி கல்வி சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களும் விபரங்களும்.

Apply Online

பின்வரும் எங்கள் வலையமைப்புக்குள் சென்று நிகழ்நிலை மூலம் விண்ணப்பிக்கவும் - **https://ums.omis.site**
விண்ணப்பக் கட்டணம் - ரூபா. 250.00
2021.10.10 முதல் **2021.11.09** வரை நிகழ்வழி மூலம் விண்ணப்பிக்க முடியும். இந்நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான விபரங்கள் அடங்கிய கையேட்டினைப் பின்வரும் இணையத்-தளம் மூலம் பதிவிறக்கம் செய்யமுடியும் - www.ou.ac.lk

விண்ணப்பத்திற்குரிய பணம் டெபிட் / கிரடிட்அட்டை பணம் மூலம் நிகழ் நிலையினூடாக செலுத்த முடியும்.

டெபிட் கிரடிட்அட்டை வசதி இல்லாதோர் நிகழ்வழி மூலம் விண்ணப்பித்துவிட்டு பின்னர் அருகிலுள்ள திறந்த பல்கலைக்கழக பிரதேச/ கற்கை நிலையத்தில் பணம் செலுத்த முடியும். நிகழ் நிலை மூலம் விண்ணப்பிக்க உதவி தேவைப்படுவோர் பின்வரும் திறந்த பல்கலைக்கழகப் பிரதேச/ கற்கை நிலையங்களில் உதவி பெற்று விண்ணப்பிக்கலாம்.

இந்நிகழ்ச்சித்திட்டம் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் கொழும்பு, கண்டி ஆகிய பிராந்திய நிலையங்களில் நடைபெறும். சிங்கள மொழிமூலம் மாத்தறை, அனுராதபுரம், குருநாகல், பண்டாரவளை, அம்பாறை, இரத்தினபுரியிலும் தமிழ் மொழி மூலமும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, புத்தளம், வவுனியா, ஹற்றன் நிலையங்களிலும் (போதுமானளவு மாணவர்கள் பதிவுசெய்தால்) நடத்தப்படும்.

விண்ணப்ப முடிவுத்திகதி
2021.11.09

மேலதிக தொடர்புகளுக்கு

1. பொதுஜன தகவல் நிலையம், திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட. மு.ப 9.00 முதல் பி.ப 3.00 வரை (போயா தினம், அரச விடுமுறை தினம் தவிர்ந்த ஏனைய நாட்களில்)
2. ஏனைய நிலையங்களில் மு.ப 9.00 முதல் பி.ப 3.00 வரை (ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை, பொது விடுமுறை தவிர்ந்த ஏனைய நாட்களில்)

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் - 011 288 1000
பொதுஜன தகவல் அலுவலகம் - 011 288 1400 / 077 505 1290

பதிவாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட.

வாகனங்கள் விற்பனைக்கு

KADAWATHA VEHICLE YARD

THREE WHEEL

AAA-55XX	AAO-91XX	AAW-62XX	QE-70XX	QP-14XX	QZ-97XX	YS-47XX
AAB-65XX	AAP-19XX	AAX-65XX	QG-05XX	QQ-25XX	YA-32XX	YS-58XX
AAD-15XX	AAP-22XX	AAX-93XX	QG-39XX	QQ-84XX	YE-91XX	YV-61XX
AAD-18XX	AAP-54XX	AAY-52XX	QH-20XX	QR-25XX	YF-17XX	YW-00XX
AAD-60XX	AAP-55XX	AAY-83XX	QH-29XX	QS-83XX	YI-76XX	YW-87XX
AAF-24XX	AAQ-46XX	AAZ-17XX	QH-86XX	QT-18XX	YJ-34XX	YY-97XX
AAG-24XX	AAQ-54XX	ABB-06XX	QI-38XX	QT-21XX	YJ-80XX	YZ-18XX
AAG-54XX	AAS-01XX	ABD-25XX	QJ-60XX	QT-45XX	YL-45XX	YZ-21XX
AAG-75XX	AAS-10XX	ABD-68XX	QJ-78XX	QV-36XX	YL-61XX	YZ-67XX
AAH-93XX	AAT-16XX	ABE-74XX	QK-02XX	QV-66XX	YM-88XX	YZ-71XX
AAJ-09XX	AAT-87XX	JV-88XX	QK-09XX	QW-69XX	YN-03XX	YZ-87XX
AAJ-20XX	AAT-93XX	JY-46XX	QK-29XX	QX-88XX	YN-24XX	
AAN-53XX	AAU-06XX	QA-18XX	QK-65XX	QX-90XX	YO-15XX	
AAN-86XX	AAU-57XX	QB-33XX	QN-49XX	QZ-86XX	YP-41XX	
AAO-63XX	AAV-18XX	QE-56XX	QO-44XX	QZ-86XX	YQ-12XX	

OTHER VEHICLES

VEHICLE NO	MODEL	MAKE	VEHICLE NO	MODEL	MAKE
CAF-15XX	TATA	NANO	BHY-66XX	HERO	MOTOR CYCLE
CAI-86XX	TATA	NANO	BIA-53XX	HONDA	MOTOR CYCLE
CAT-77XX	TATA	NANO	BIA-82XX	HONDA	MOTOR CYCLE
KQ-55XX	TATA	NANO	BID-47XX	TVS	MOTOR CYCLE
KU-76XX	TATA	NANO	BIG-62XX	TVS	MOTOR CYCLE
LC-61XX	KIA	MOTOR LORRY	BII-96XX	TVS	MOTOR CYCLE
LD-06XX	SUZUKI	MOTOR LORRY	BIJ-97XX	TVS	MOTOR CYCLE
BET-59XX	DEMAK	MOTOR CYCLE	BIM-20XX	YAMAHA	MOTOR CYCLE
BHG-99XX	HERO	MOTOR CYCLE	BIP-53XX	TVS	MOTOR CYCLE
BHL-97XX	HERO	MOTOR CYCLE	BIR-80XX	TVS	MOTOR CYCLE
BHO-14XX	TVS	MOTOR CYCLE	BIW-29XX	TVS	MOTOR CYCLE
BHU-51XX	BAJAJ	MOTOR CYCLE	17-26XX	DAIHATSHU	MOTOR CAR

HORANA VEHICLE YARD

THREE WHEEL

AAB-60XX	AAJ-17XX	AAW-08XX	QL-76XX	QP-44XX	QV-79XX	YQ-58XX
AAD-48XX	AAJ-19XX	AAY-54XX	QL-83XX	QP-53XX	QX-94XX	YR-75XX
AAF-23XX	AAK-21XX	ABC-63XX	QM-37XX	QR-37XX	QZ-18XX	YR-84XX
AAF-85XX	AAL-81XX	JX-53XX	QM-88XX	QS-45XX	QZ-74XX	YU-69XX
AAF-87XX	AAO-09XX	JZ-14XX	QN-40XX	QS-66XX	YA-18XX	YV-94XX
AAH-61XX	AAO-86XX	QB-40XX	QN-78XX	QS-73XX	YD-10XX	YW-63XX
AAH-77XX	AAP-80XX	QG-83XX	QN-79XX	QU-56XX	YJ-63XX	YZ-75XX
AAH-94XX	AAQ-62XX	QL-03XX	QN-86XX	QU-69XX	YK-83XX	YZ-78XX
AAH-99XX	AAS-19XX	QL-11XX	QN-89XX	QV-19XX	YM-24XX	
AAI-01XX	AAT-90XX	QL-13XX	QP-12XX	QV-51XX	YO-53XX	
AAI-06XX	AAV-67XX	QL-71XX	QP-40XX	QV-54XX	YP-25XX	

OTHER VEHICLES

VEHICLE NO	MODEL	MAKE	VEHICLE NO	MODEL	MAKE
42 SRI 04XX	ISUZU	MOTOR LORRY	BIE-51XX	TVS	MOTOR CYCLE
LB-18XX	MITSUBISHI	MOTOR LORRY	BIE-67XX	TVS	MOTOR CYCLE
BHC-70XX	HERO	MOTOR CYCLE	BIF-67XX	YAMAHA	MOTOR CYCLE
BHF-69XX	HERO	MOTOR CYCLE	BIG-24XX	HONDA	MOTOR CYCLE
BHH-11XX	DIO	MOTOR CYCLE	BIV-82XX	TVS	MOTOR CYCLE
BHN-96XX	APACHE	MOTOR CYCLE	BIW-63XX	TVS	MOTOR CYCLE
BHW-94XX	BAJAJ	MOTOR CYCLE	BIX-73XX	TVS	MOTOR CYCLE
BIC-78XX	TVS	MOTOR CYCLE	14 SRI 62XX	COROLLA	MOTOR CAR

NITTAMBUWA VEHICLE YARD

THREE WHEEL

AAA-31XX	AAI-43XX	QC-39XX	QP-95XX	QU-87XX	YD-62XX	YW-21XX
AAA-58XX	AAK-44XX	QF-31XX	QP-95XX	QV-29XX	YF-16XX	YX-30XX
AAC-28XX	AAP-74XX	QH-01XX	QR-72XX	QV-92XX	YG-16XX	YX-31XX
AAC-55XX	AAQ-16XX	QH-87XX	QR-93XX	QW-06XX	YI-02XX	YX-40XX
AAC-66XX	AAQ-51XX	QJ-60XX	QS-30XX	QX-29XX	YI-28XX	YX-98XX
AAD-20XX	AAQ-95XX	QJ-66XX	QS-40XX	QX-78XX	YJ-03XX	YY-27XX
AAD-63XX	AAR-34XX	QK-25XX	QS-42XX	QX-88XX	YK-57XX	YY-38XX
AAD-89XX	AAT-04XX	QL-30XX	QS-49XX	QX-96XX	YM-93XX	YZ-10XX
AAD-90XX	AAT-60XX	QM-00XX	QT-08XX	QZ-30XX	YP-94XX	YZ-12XX
AAF-49XX	AAU-88XX	QN-20XX	QT-14XX	QZ-62XX	YT-12XX	YZ-43XX
AAG-63XX	AAX-66XX	QN-40XX	QT-38XX	QZ-98XX	YT-43XX	YZ-45XX
AAH-17XX	ABD-15XX	QO-70XX	QU-59XX	YA-74XX	YT-92XX	
AAH-98XX	ABE-19XX	QO-90XX	QU-76XX	YB-73XX	YV-89XX	

OTHER VEHICLES

VEHICLE NO	MODEL	MAKE	VEHICLE NO	MODEL	MAKE
LL-09XX	FAW	MOTOR LORRY	BIG-18XX	YAMAHA	MOTOR CYCLE
LY-99XX	RENAULT	MOTOR LORRY	BIL-04XX	TVS	MOTOR CYCLE
BGX-07XX	SALUTO	MOTOR CYCLE	BIU-65XX	YAMAHA	MOTOR CYCLE
BHO-96XX	APACHE	MOTOR CYCLE	DAC-18XX	MAHINDRA	MINI TRUCK
BIB-78XX	HONDA	MOTOR CYCLE	DAD-61XX	MAHINDRA	MINI TRUCK
BIE-29XX	TVS	MOTOR CYCLE	RD-97XX	MAHINDRA	TRACTOR
BIF-85XX	HERO	MOTOR CYCLE			

KULIYAPITIYA VEHICLE YARD

THREE WHEEL

AAA-25XX	ABT-22XX	QM-73XX	QT-26XX	QV-81XX	YM-89XX	YW-56XX
AAA-53XX	QA-99XX	QO-04XX	QT-30XX	QV-82XX	YN-77XX	YX-11XX
AAD-81XX	QE-82XX	QO-33XX	QT-56XX	QX-17XX	YO-52XX	YX-38XX
AAF-59XX	QF-41XX	QO-96XX	QT-75XX	QX-40XX	YO-95XX	YY-27XX
AAL-35XX	QF-58XX	QR-15XX	QU-20XX	QX-42XX	YQ-25XX	
AAO-75XX	QH-39XX	QR-20XX	QU-73XX	YF-69XX	YQ-71XX	
AAO-93XX	QI-67XX	QR-22XX	QV-13XX	YK-72XX	YS-46XX	
AAW-28XX	QK-94XX	QS-03XX	QV-66XX	YL-09XX	YU-37XX	
AAX-13XX	QM-10XX	QS-06XX	QV-69XX	YL-68XX	YV-43XX	

OTHER VEHICLES

VEHICLE NO	MODEL	MAKE	VEHICLE NO	MODEL	MAKE
LB-07XX	HONDA	MOTOR LORRY	BIM-19XX	YAMAHA	MOTOR CYCLE
BHG-15XX	HONDA	MOTOR CYCLE	BIO-60XX	HERO	MOTOR CYCLE
BHZ-06XX	TVS	MOTOR CYCLE	BIP-56XX	TVS	MOTOR CYCLE
BIB-10XX	HONDA	MOTOR CYCLE	BIV-42XX	YAMAHA	MOTOR CYCLE
BIB-84XX	HONDA	MOTOR CYCLE	PS-74XX	TATA	MINI TRUCK
BIB-95XX	BAJAJ	MOTOR CYCLE	PU-41XX	MAHINDRA	MINI TRUCK
BIF-63XX	HERO	MOTOR CYCLE	RE-24XX	MAHINDRA	TRACTOR
BIG-49XX	HERO	MOTOR CYCLE	RE-42XX	MAHINDRA	TRACTOR
BIH-00XX	SUZUKI	MOTOR CYCLE			

ANURADHAPURA VEHICLE YARD

THREE WHEEL

AAB-23XX	AAO-39XX	ABE-63XX	QM-93XX	QU-74XX	YK-27XX	YO-14XX
AAB-70XX	AAS-50XX	PZ-02XX	QO-14XX	QV-06XX	YK-89XX	YO-59XX
AAC-75XX	AAU-19XX	QA-74XX	QR-47XX	QX-86XX	YL-95XX	YQ-38XX
AAD-07XX	AAU-39XX	QE-10XX	QS-76XX	YD-29XX	YM-04XX	YX-33XX
AAJ-26XX	AAW-28XX	QK-92XX	QT-53XX	YF-61XX	YM-51XX	YY-00XX
AAK-59XX	AAY-12XX	QM-18XX	QT-57XX	YG-11XX	YN-20XX	

OTHER VEHICLES

VEHICLE NO	MODEL	MAKE	VEHICLE NO	MODEL	MAKE
BFJ-61XX	HERO	MOTOR CYCLE	BID-88XX	TVS	MOTOR CYCLE
BGN-72XX	HONDA	MOTOR CYCLE	BIE-18XX	TVS	MOTOR CYCLE
BGR-86XX	WEGO	MOTOR CYCLE	BIE-62XX	HERO	MOTOR CYCLE
BHA-91XX	GIXXER	MOTOR CYCLE	BII-14XX	HERO	MOTOR CYCLE
BHH-36XX	GRAZIA	MOTOR CYCLE	BIL-06XX	TVS	MOTOR CYCLE
BHI-64XX	HERO	MOTOR CYCLE	BIL-06XX	TVS	MOTOR CYCLE
BHK-62XX	PLEASURE	MOTOR CYCLE	BIM-34XX	TVS	MOTOR CYCLE
BHS-60XX	TVS	MOTOR CYCLE	BIM-70XX	HERO	MOTOR CYCLE
BHX-19XX	HERO	MOTOR CYCLE	BIM-81XX	TVS	MOTOR CYCLE
BHZ-09XX	BAJAJ	MOTOR CYCLE	BIM-91XX	TVS	MOTOR CYCLE
BIA-43XX	YAMAHA	MOTOR CYCLE	BIN-43XX	BAJAJ	MOTOR CYCLE
BIC-01XX	TVS	MOTOR CYCLE	BIO-01XX	TVS	MOTOR CYCLE
BIC-10XX	YAMAHA	MOTOR CYCLE	BIV-65XX	HERO	MOTOR CYCLE
BIC-39XX	HERO	MOTOR CYCLE	PV-55XX	MAHINDRA	MINI TRUCK
BIC-66XX	YAMAHA	MOTOR CYCLE	PX-51XX	CHANA	MINI TRUCK
BID-42XX	HERO	MOTOR CYCLE	RE-85XX	SONALIKA	TRACTOR
BID-63XX	HONDA	MOTOR CYCLE			

வாகனபரிசோதனை

Kadawatha Vehicle Yard - No. 125/F, Ragama Road, Kadawatha.
Horana Vehicle Yard - No. 166, Aguruwathota Road, Horana.
Anuradhapura Vehicle Yard - Chanal 05, Rathmale, Shrawasthipura.
Nitambuwa Vehicle Yard - No.655, Jayasuriya Mawatha, Nitambuwa.
Kuliyapitiya Vehicle Yard - No.259, Madampe Road, Kuliyapitiya.

மேற்படி வாகனங்கள் எதிர்வரும் 2021 ஒக்டோபர் 11 ஆம் 12 ஆம் 13 ஆம் 14 ஆம் திகதிகளில் மு:ப 09.00 முதல் பி:ப 4.00 வரை பார்வையிடலாம். (கேள்வி 2021 ஒக்டோபர் 14 ஆம் திகதி பி:ப: 4.00 க்கு முடிவடையும்)

கேள்விமனு படிவங்களை மஹர, நிட்டம்புவ, குளியாப்பிட்டி, ஹொரண மற்றும் அநுராதபுரத்தில் அமைந்துள்ள C D B கிளைகளில் பெறலாம். ஒவ்வொரு கேள்விமனு படிவத்திற்குமான மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 250.00.

விண்ணப்பதாரிகள் வாகனங்களை அந்த நேரத்தில் காணப்படும் நிலையிலேயே ஏற்றுக் கொள்ள வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் தொலைபேசி மூலம் அறிவிக்கப்படுவார்கள். அறிவிக்கப்பட்டு 07 நாட்களுக்குள் வாகனத்தின் முழுக் கட்டணத்தையும் செலுத்திக் கொண்டு செல்ல வேண்டும். மேலும் வாகனங்களில் நிலுவையாக உள்ள அரசாங்க வரி மற்றும் வருமான வரி என்பவற்றை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

**** The company decision of the tender will be final***

CITIZENS DEVELOPMENT BUSINESS FINANCE PLC
No. 125/F, Ragama Road, Kadawatha.
Tel: 0112 920 665 / 0112 925 044 / 034- 22 66 244 / 025-205 26 32

யானை - மனித மோதல் என்று தீரும்?

எமது நாட்டில் மேற்கொள்ளப்பட்ட நாகரிக மயமாக்கலின் விரிவாக்கம் காரணமாக அரச நிருவாகக் கட்டமைப்பில் பல்வேறு வகைப்பட்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவைகள் ஏற்பட்டன .

இவற்றில் ஒன்றாக அரச கட்டமைப்புக்குள் உள்வாங்கப்பட்டுள்ள வன விலங்குகள் மற்றும் காடுகளைப் பாதுகாக்கும் அமைச்சினையும் குறிப்பிடலாம் . இதேபோன்று மத்திய சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையும் எமது நாட்டில் அரச கட்டமைப்புக்குள் உள்வாங்கப்பட்டுள்ள அரச நிறுவனமாகும் . பொதுமக்களின் நலன்களில் இவ்வாறான நிறுவனங்கள் தத்தமது கடமைகளை மேற்கொள்வதில் பல்வேறு வகையான சவால்களை அடிக்கடி எதிர்கொள்ள வேண்டிய நிலைமைகளும் ஏற்பட்டு வருகின்றன .

எமது நாட்டின் மழைவீழ்ச்சி , காடுகள , நீர் நிலைகள் என்பன நாகரிக மயமாக்கல் மற்றும் நகர அபிவிருத்தியின் போது பலவகைகளிலும் பாதிக்கப்பட்டு வருகின்றன. கடந்த மூன்று தசாப்த காலங்களாக எமது தேசம் இவ்வாறான இடர்களில் சிக்கியிருப்பதையும் நாங்கள் அறிந்து வருகின்றோம் இதற்காக மீளெழும் முயற்சிகளையும் அரச நிருவாக கட்டமைப்புக்கள் மேற்கொண்டும் வருகின்றன என்பதையும் மறுக்க முடியாது.

எமது தேசத்தின் அடர்ந்த காடுகள் சார்ந்த பிரதேசங்களில் வாழுகின்ற யானைகளுக்கும் குடியிருப்பாளர்களுக்கும் இடையில் உணவு மற்றும் உறைவிடம் சார்ந்த விடயங்களில் பலத்த பலப் பரீட்சைகள் ஆங்காங்கே இடம்பெற்று வருகின்றன என்பது நாட்டு மக்கள் அனைவரும் அறிந்த உண்மையாகும் . அடர்ந்த காடுகளே தமது வாழ்விடங்கள் என நம்பியிருந்த யானைகள் தற்போது ஏமாந்து போயுள்ளன . பாரிய உடல் பலத்தைக் கொண்ட பாலூட்டி வகையைச் சார்ந்த விலங்கினமாக யானைகள் திகழ்கின்றன . அவை காடுகள் சார்ந்த நிலப் பரப்புக்களில் தமக்குத் தேவையான உணவு வகைகளை தேர்ந்தெடுத்தும் கொள்கின்றன . இதேபோன்று தமக்கு ஏற்படும் நோய்களுக்காக சுயமாக தேடிக் கண்டுபிடித்து உட்கொள்ளும் தாவரப் பயிர் வகைகளையும் அவற்றிற்கே உரித்தான காட்டு நிலங்களில் அவை தேடிப் பெற்றுக் கொள்கின்றன . இரவு நேரத்தில் நிம்மதியாகத் தூங்குவதற்காக பொருத்தமான இடங்கள் எவை என்பவற்றை அவையே தீர்மானிக்கின்றன . கூட்டுக் குடும்பங்களாகவும், கூட்டங்களாகவும் யானைகள் அவற்றுக்கே உரித்தான காடுகளில் பவனி வருகின்றன .



எமது தேசமான இலங்கைத் தீவின் காடுகளில் யானைகள் சுமார் 50 ஆயிரம் வருடங்களாக வாழ்ந்து வருவதாக வன விலங்குகள் பாதுகாப்பு திணைக்களத்தின் அதிகாரிகள் சில விஞ்ஞான ஆய்வுகள் மூலம் சுட்டிக் காட்டியுள்ளனர் . நிகழ் காலத்தில் எமது நாட்டில் வாழ்ந்து வருகின்ற யானைகள் தமது வாழ்விடங்களாக காடுகளுக்கு அண்மையிலுள்ள மனித குடியிருப்பு பிரதேசங்களையே நாடிச் செல்கின்றன. எமது நாட்டின் வடமேல் மாகாணம் , வடமத்திய மாகாணம் , கிழக்கு மாகாணம் மற்றும் தென் மாகாணம் ஆகிய மாகாணங்களிலுள்ள பாரிய அடர்ந்த காடுகள் காட்டு யானைகளுக்கே உரித்தான காட்டுப் பிரதேசங்களென குறிப்பிடப்பட்டன. காட்டு யானைகள் அவ்வாறான காடுகளிலேயே அதிகமாக வாழ்கின்றன என்றும் நாம் அறிந்தும் வைத்திருக்கின்றோம். ஆனால் தற்போது அவ்வாறான கருத்தை நாம் மறுபரிசீலனை செய்ய வேண்டியுள்ளது . காரணம், மேற்படி மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்ட தூரநோக்கங்களற்ற திட்டமிடப்படாத குடியேற்றங்களினால் யானைகளின் வாழ்விடங்கள் மனிதக் குடியிருப்புக்களாக மாறியுள்ளன. அவ்வாறான மாகாணங்களில் அவை படிப்படியாக அழிந்தும் வருகின்றன . இதனால் காட்டு யானைகள் ஏனைய மாகாணங்களுக்கும் இடம்பெயர்ந்து வருகின்றன என்பதையும் ஊடகங்கள் எமக்கு தெரிவிக்கின்றன . பொதுமக்கள் தமது வாழ்விடங்களுக்காக அடர்ந்த காட்டுப் பிரதேசங்களில் தமக்கு ஏற்றவாறு தாமாகவே குடியிருப்புக்களை உருவாக்கிக் கொண்ட னர் . இதனால் காட்டு யானைகளின் வாழ்விடங்களும் மனித குடியிருப்புக்களாக மாறின . இவ்வாறான குடியேற்றங்களினால் வனவிலங்குகளுக்கு மாத்திரமின்றி இயற்கையான மழைவீழ்ச்சிக்கும் பலத்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது . இதன் விளைவாக குளங்களில் நீர் பற்றாக்குறை , பசுமையான காடுகள் அழிந்தமை போன்றவைகளையும் குறிப்பிட்டுக் கூறலாம் . அடர்ந்த காடுகள் அழிந்து வருவதனால் ஏற்பட்ட பிரதிபலனாக மக்கள் யானைகளின் திடீர் தாக்குதலால் அன்றாடம் பல்வேறு வகையான துன்பங்களையும் அனுபவித்துக் கொண்டு வருகின்றனர் . காட்டு யானைகளிலிருந்து தத்தமது குடும்பங்களை பாதுகாப்பதற்காக குடியிருப்பாளர்கள் இரவு தூக்கத்தையும் நாளாந்தம் தொலைத்து கண்விழித்து வாழ்ந்து வருகின்றனர் . காட்டு யானைகளின் தாக்குதல்களிலிருந்து மீள்வதற்கு அவர்கள் பலத்த முயற்சிகளை முன்னெடுக்கின்றனர். பசி பட்டினியால் வாடுகின்றனர் . பல வகையான பாதுகாப்பு முறைகளையும் கையாண்டு வருகின்றனர் .

ஆனால் அனைத்து முயற்சிகளும் தோல்வியிலேயே முடிகின்றது. திட்டமிடப்படாத குடியேற்றங்களே இதற்கு பிரதான காரணம் எனவும் குறிப்பிடலாம் . இவ்வாறான குடியேற்றங்களை மேற்கொள்ளும் போது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய கவனம் எடுக்க வேண்டும் . எதிர்காலத்தில் யானை மனிதன் மோதல் ஏற்படாமல் கவனத்தில் கொள்வது மிகவும் பிரதானமாகும் . அப்பாவி மனிதர்கள் மட்டுமின்றி நூற்றுக்கும் மேற்பட்ட காட்டு யானைகளும் அழிந்துள்ளன . இவை மிகவும் வேதனைக்குரிய விடயங்கள். பொதுமக்களை காட்டு யானைகளின் அட்டகாசத்திலிருந்து பாதுகாப்பதற்காக அரசாங்கம் சிறந்த நடவடிக்கைகளை குறுகிய காலத்துக்குள் முன்னெடுக்க வேண்டும் . இவ்வாறான பிரதேசங்களில் மின்சார வேலிகளை சிறந்த தொழில் நுட்பத்துடன் அமைக்க வேண்டும் .

யானைகளுக்கே உரித்தான காட்டு பிரதேசங்களில் எதிர்கால மனிதக் குடியிருப்புக்களை அமைப்பதைப் பற்றி பல முறை யோசிக்க வேண்டும்.

காட்டு யானைகளின் வாழ்விடங்களுக்கு சேதங்களை ஏற்படுத்தும் மனித நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய முறையில் கண்காணித்து வர வேண்டும். எமது தேசத்திற்கே உரித்தான வன விலங்குகள் யாவும் எமது எதிர்கால சந்ததியினரின் சொத்துக்களே என்ற மனப்பான்மையை நாம் அனைவரும் வளர்த்துக் கொள்ள வேண்டும் . இதனை வளர்த்துக் கொள்ள நாம் கடும் பிரயத்தனங்களை எடுக்க வேண்டிய காலத்திலேயே தற்போது இருக்கின்றோம் என்பதையும் மறுக்க முடியாது .

படங்கள்:
நீர்கொழும்பு தினகரன் நிருபர்
ருஸ்மான்

கொவிட் -19 தொற்றுடன் தாய்ப்பால் கொடுப்பது: செய்ய வேண்டியவை, செய்யக்கூடாதவை

தாய்ப்பால் கொடுப்பது என்பது குழந்தைகள் மற்றும் சிறு குழந்தைகளின் உயிர், ஊட்டச்சத்து மற்றும் வளர்ச்சி, மற்றும் தாய்வழி ஆரோக்கியத்தில் முக்கிய காரணியாகும். சமீபத்திய யுனிசெஃப் கணக்கெடுப்பின்படி, இலங்கையில் 99% குழந்தைகள் தாய்ப்பால் அறிவிக்கப்பட்டுமை மகிழ்ச்சியான காரணியாகும்.

உலக சுகாதார அமைப்பு (WHO) பிரசவத்திற்கு பின்னர் முதல் 6 மாதங்களுக்கு தாய்ப்பால் போதுமானது என்றும், தாய்ப்பால் 2 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேற்பட்ட உணவுகளுடன் தொடர வேண்டும் என்றும் பரிந்துரைக்கிறது. ஆரம்ப கட்டங்களில், தாயிடமிருந்து குழந்தைக்கு கிடைக்கும் அரவணைப்பு மற்றும் சருமத்தில் இருந்து சருமத்திற்கான தொடர்பு, அத்துடன் கங்காரு தாய் தன் குழந்தையை கவனித்துக்கொள்வதால் தாயிடமிருந்து குழந்தைக்கு அரவணைப்பு கிடைப்பது போல, புதிதாகப் பிறந்த குழந்தைகளின் உயிர்வாழ்வு மற்றும் நோயுற்ற தன்மையைக் குறைப்பதற்கு தாயின் உடல் வெப்பமும் கணிசமாக பங்களிக்கிறது.

தாய்ப்பால் கொடுப்பதனால் ஏற்படும் நன்மைகள் காரணமாக COVID19 உள்ள தாய்மார்கள் கூட தாய்ப்பால் கொடுப்பதைத் ஆரம்பிக்கவோ அல்லது தொடரவோ ஊக்கு விக்கப்பட வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம் பரிந்துரைக்கிறது. குறிப்பாக குழந்தை பிறந்த பின்னர் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு, கொவிட் 19 தொற்றுநோய் ஏற்பட்டுள்ளதா என பரிசோதிக்கப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும்.

தொற்றுநோய்களின் போது தாய்ப்பால் கொடுப்பதன் நன்மைகள்

- தாய்ப்பால் குழந்தைகளில் ஏற்படும் தொற்றுநோய்களிலிருந்து இயற்கையான பாதுகாப்பை வழங்குகிறது. தாய்ப்பால் குழந்தைகளை COVID19 இலிருந்து பாதுகாக்குமென இன்னும் நிரூபிக்கப்படவில்லை என்றாலும், பல ஆய்வுகள் தாய்ப்பாலில் வைரஸை எதிர்க்கும் சக்தி இருப்பதாகக் கண்டறிந்துள்ளன. மேலும், தாய்ப்பால் கொடுக்கும் குழந்தைகளுக்கு நோய்வாய்ப்பட்டால் கடுமையான சுவாசக் கோளாறுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைவு.
- தாய்ப்பால் கொடுப்பது தாய்மார்களுக்கும் நல்லது. தாய்ப்பால் கொடுக்கும் போது தாயின் உடலில் இருந்து வெளியாகும் ஹார்மோன்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதோடு மன அழுத்தத்தையும் பதட்டத்தையும் போக்கும்.
- தாய்ப்பால் எளிதில் கிடைக்கும். அவசரகாலங்களில் இது முக்கியமானதாக இருந்தாலும், கூடுதல் உணவு மற்றும் பிற உணவுகளை வாங்குவது இன்னும் சவாலாக இருக்கும்.

ஒரு COVID19ஆல் பாதிக்கப்பட்ட தாய் தனது குழந்தைக்கு உணவளிக்கும் போது குழந்தையின் பாதுகாப்பு குறித்து கவனிக்க வேண்டியவை

ஒரு கொவிட்19ஆல் பாதிக்கப்பட்ட தாய் தன் குழந்தையை தனது அறையில் வைத்திருக்க முடிவு செய்தால், முடிந்தவரை அவள் விலகி இருக்க முயற்சி செய்ய வேண்டும். நீங்கள் நேரடியாக உங்கள் குழந்தையை கவனித்துக் கொள்ளும்போதெல்லாம் முகக்க வசம் அணிவது மற்றும் கைகளை கழுவுவது அவசியம். காய்ச்சல் வருவதற்கு 24 மணி நேரத்திற்கு முன்போ, அல்லது கொவிட் 19 அறிகுறிகள் தோன்றிய பிறகு குறைந்தது 10 நாட்களிலோ, எந்த மருத்துவ சிகிச்சையும் இல்லாமல் பெற்றோர்கள் இந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும். ஒரு தாய்க்கு கொவிட்19 தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டாலும், அறிகுறிகள் இல்லாதிருந்தால், நேர்மறையான சோதனை முடிவைப் பெற்ற பிறகு குறைந்தது 10 நாட்களுக்கு மேல் குழந்தையுடன் வெளியே செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்.

இலங்கை இராணுவத்தின் 72 ஆவது ஆண்டு நிறைவு!

72 ANNIVERSARY

இன்று ஒக்டோபர் 10ஆம் திகதி

காலனித்துவ ஆட்சியில் இருந்துவிடுபட்ட இலங்கைத்தீவின் அபிமானம் மிக்க இராணுவம் 1949 ஆம் ஆண்டு ஒக்டோபர் 10 ஆம் திகதி 1949 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க இராணுவச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசாக மாறியதையடுத்து சிலோன் இராணுவம் என உருவாக்கப்பட்ட இந்த அமைப்பானது இலங்கை இராணுவம் என பெயர்மாற்றப்பட்டது. இன்று இலங்கை இராணுவமானது சகல இனத்தவர்களையும் உள்ளடக்கிய உதவிப்படை, காலாட்படை மற்றும் சேவைப்படை என்பனவாக 24 படையணிகள் நிரந்தர மற்றும் தொண்டர் படைகளுள் உள்வாங்கப்பட்டுள்ளன.

இலங்கை இராணுவம் இந்நாட்டில் நீண்ட காலமாக நிலை கொண்டிருந்த பிரிவினைவாதம் மற்றும் பயங்கரவாத்திற்கு எதிரான மனிதாபிமான நடவடிக்கையினை வெற்றிகரமாக எதிர்கொண்டு நாட்டின் ஒருமைப்பாட்டை நிலை நிறுத்துவதில் மிக முக்கியமான பங்களிப்பை வழங்கியது. யுத்தத்தின் பின்னர் இராணுவமானது

தேசத்தின் பாதுகாப்பிற்கு உறுதுணையாக இருக்கும் அதேவேளை அபிவிருத்திக்கும் தனது முழுமையான பங்களிப்பினை வழங்கி வருகின்றது.

2009 ஆம் ஆண்டில் நிறைவுற்ற மனிதாபிமான நடவடிக்கைகளின் பின்னர், இலங்கை இராணுவமானது நாட்டு மக்களின் வாழ்கைத் தரத்தினை மேம்படுத்தும் முகமாக பல்வேறு விதமான அபிவிருத்திப் பணிகள் மற்றும் சமூக நலன் சார்ந்த செயற்பாடுகளில் தன்னை அர்ப்பணித்து வருகிறது. அந்த வகையில் வீடற்ற வறிய குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணித்து கொடுத்தல், பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் ஊக்குவிப்பு தொகைகளை வழங்கல், பொது மக்களுக்கான உலர் உணவுப் பொதிகளை அன்பளிப்பு செய்தல், வைத்தியசாலைகள், பாடசாலைகள், வீதிகள் மற்றும் மதஸ்தானங்கள் போன்ற பொது இடங்களை நிர் மாணித்தல் மற்றும் புனர்நிர்மாணம் செய்தல், வீதிகள் விஸ்தரித்தல், செப்பனிடல், மைதானங்கள் மற்றும் கேட்போர் கூடங்களை புனரமைத்தல், விளையாட்ட ரங்குகள் மற்றும் மேம்பாலங்கள் அமைத்தல் மற்றும் பலநோக்கு கட்டிடங்களை நிர்மாணித்தல் போன்ற சில வற்றை குறிப்பிடலாம்.

அண்மையில் கொவிட் – 19 பரவல் தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா யாழ்ப்பாணத்தின் கொவிட் – 19 பரவல் நிலைமை தொடர்பில் ஆராய் வதற்காக சென்றிருந்தார். இதன்போது நாட்டின் சுதந்தி ரதினத்தை முன்னிட்டு ஜனாதிபதி பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்ட புலிகள் அமைப் பின் 15 முன்னாள் போராளிகளை சந்தித்து கலந்துரை யாடியதோடு அவர்களது பிரச்சினைகளை ஆராய்ந்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்வ தற்கான சுய தொழில் முயற்சிகளை முன்னெடுப்பதற் காக ஒவ்வொருவருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் என்ற அடிப்படையில் நிதியுதவியை வழங்கியதானது இராணுவத்தின் மனிதாபி மான செயற்பாட்டுக்கான ஒரு சிறந்த எடுத் துக்காட்டாகும் .

ஒரு நாட்டு இராணுவத்தின் கடமைகள் பரந்துபட்டவையாக உள்ளன. அந்தவகை யில் இராணுவத்தின் முதன்மைப் பணியா னது நாட்டுமக்கள், உடமைகள் மற்றும் எல்லைகளைப் பாதுகாத்தல் ஆகும். அந்த வகையில் வெள்ளப்பெருக்கு, சூறாவளி, நிலச்சரிவு மற்றும் காட்டுத்தீ போன்ற திடீர் அனர்த்தங்களின் போது மீட்புப் பணிகளில் ஈடுபடுகிறது. இதற்காக நாடு முழுவதும் துறைசார் நிபுணத்துவம் பெற்ற படைக்கு முக்களை விரைவு நடவடிக்கைகளில் ஈடு படுத்தக் கூடிய வகையில் நிலைநிறுத்தித் தியுள்ளது.

முழு உலக நாடுகளையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸின் பரவலை கட்டுப்படுத்துவதில் அதிக பங்களிப்பினை செய்த ஒரே அமைப்பு இலங்கை இராணுவமாகும். தற்போதைய பாதுகாப்பு பதவி நிலை தலைவரும் இராணுவத் தளபதியும் கொவிட் – 19 பரவல் தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையத்தின் தலைவருமான ஜெனரல் ஷவேந்திர சில் வாவின் சிறந்த முகாமைத்துவ திறன்களுக்கு அமைவாக இலங்கை இராணுவத் திடமுள்ள திறமையான ஆளணி வளங்கள் மற்றும் நுட்பங்களை பயன்படுத்தி நாட்டில் கொவிட் வைரஸ் தொற்றின் முதலாவது மற்றும் இரண்டாவது அலையானது பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டது மட் டுமல்லாது, தற்பொழுது எதிர்பாராத விதமாக அதிகரித்துள்ள கொரோனா பரவலையும் கட்டுப்படுத்த தனது முழுமையான ஒத்துழைப்பினை வழங்கி வருகின்றது. இதற்காக நாடு முழுவதும் நூற்றுக்கும் மேற்பட்ட தனி மைப்படுத்தல் நிலையங்கள், இடை நிலை பராமரிப்பு நிலையங்கள் என் பனவற்றை குறுகிய காலத்திற்குள் நிர்மாணித்து பாரிய பங்களிப்பை வழங்கி வருகிறது.

கொரோனா தெற்று பரவலினால் பாதிப்புக்குள்ளான நாட்டினை இயல்பு நிலைக்கு விரைவாக கொண்டு வரும் முகமாக, இராணுவமானது கொவிட் 19 தடுப்பூசி திட்டத்தினையும் முன்னெடுத்துவருகிறது. உலக சுகதார அமைப்பின் அறிக்கையின் பிரகாரம் கொவிட்19 வைரஸ் பரவலுக்கு எதிராக அறிமுகப்படுத் தப்பட்ட தடுப்பூசியின் மூலம் நாட்டில் அவ்வைரஸினால் ஏற்படும் மரண வீதம் வீழ்ச்சியடையும் என தெரிவிக்கப் பட்டுள்ளது. எனவே பொருளாதார மற்றும் உயிரிழப் புகளுக்கு ஏதுவாக அமையும் இந்த கொடிய வைரஸ் பரவலினை கட்டுப்படுத்தி நாட்டில் உயிரிழப்பினைக் குறைத்து நாட்டினை பொருளாதார ரீதியாக மீளக்கட் டியெழுப்பும் முகமாக நாடுபூராகவும் இந்த தடுப்பூசித் திட்டமானது இராணுவத்தினரால் விரைவாக முன்னெ டுக்கப்பட்டு வருகிறது.

நாட்டின் முடக்கத்தின் போது பல்வேறு இன னல்களுக்கு முகம்கொடுத்த மக்களுக்கு மரக்கறி வகைகள், உணவுப் பொருட்கள், சமைத்த உணவுகள் மற்றும் மருந்துப் பொருட்கள் போன்ற அத்தியாவசிய தேவைகள் பலவற்றை இராணுவம் நிவர்த்தி செய்தது. தேசத்தின் நலனில் அக்கறை கொள்வதில் இராணுவம் முன்னிலை வகிக்கின்றது என்பதற்கு இராணுவத்தின் சமீபத்திய கொரொனா கட்டுப்பட்டு தனிமைப்படுத்தல் நுட்பமானது ஒரு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்த செயற்பாட்டின் மூலம் இராணுவம் தேசத்தின் பாதுகாவலர்கள் என்பது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதியின் எண்ணக்கருவான துருமிதுரு நவரட்டக் எனும் இராணுவத்தின் விவசாய மேம்பாடு மற்றும் நாட்டை பசுமையாக்கும் திட்டத்தின்கீழ், பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அந்த வகையில் நாடளாவிய ரீதியில் தூர்ந்த மற்றும் சேதம டைந்த குளங்களை புனர்நிர்மாணம் செய்து அதனூடாக பெருமளவான பயிர்ச்செய்கை நிலங்களை பாதுகாத் தது. அதுமாத்திரமன்றி நாடு முழுவதும் காணப்படும் இராணுவ விவசாய பண்ணைகளில் நெற்செய்கை , தென்னை, மா மற்றும் பிற நீண்டகால பயன் தரும் மரங் களை நடும் செயற்றிட்டங்களும் மூலிகைத் தோட்டங்க ளும், நாட்டின் காடுகளை செறிதாக்கலும் அதிகரித்தலும் போன்ற திட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படு கின்றன.

இராணுவ ஊடகப் பிரிவு...

நாட்டில் பல அர்ப்பணிப்பு சேவைகளை முன்னெடுத்து வரும் இராணுவத்தினர் சர்வதேச ரீதியாகவும் தங் களது விளையாட்டு திறமைகளை வெளிப்படுத்தி நாட்டு மக்களை கௌரவப்படுத்தியுள்ளனர். இதற்கு உதார ணமாக அண்மையில் ஜப்பான் டோக்கியோவில் இடம் பெற்ற 2020 பரா ஒலிம்பிக் போட்டியில் இலங்கை இராணுவத்தை பிரதிநிதித்துவப்படுத்தி ஈட்டி எறிதல் போட் டியில் கலந்து கொண்ட ஆணையதிகாரம் பெறா அதிகா ரியான தினேஷ் பிரியந்த ஹேரத் தங்கப் பதக்கத்தினை சுவீகரித்துக் கொண்டதோடு மட்டுமல்லாமல் அப்போட்டி யில் உலக சாதனையினையும் நிகழ்த்தியுள்ளார் என்பது நாட்டிற்கும் இராணுவத்திற்கும் பெருமை சேர்க்கும் ஒரு விடயமாகும்.

தேசத்தின் நலனுக்காக தம்மை அர்ப்பணித்த மற்றும் அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் இராணுவத் தினரால் தாய் நாட்டில் மட்டுமல்லாது சர்வதேச ரீதி யாகவும் பல சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன.

இலங்கை 1957 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிகாக்கும் பணிகளில் தனது பணியை ஆரம்பித்தது. பின்னர், 1960 முதல் 1962 வரை கொங்கோ ஜனநாயகக் குடியரசின் (MONUC) அமைதி காக்கும் பணிக்காக ஒரு சிறிய அளவிலான

படைப்பிரிவை வழங்கியது. தற்போது ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்காக அதிகமான படையினரை வழங்கும் நாடுகளில் இலங் கையும் ஒன்றாகும்.

ஐக்கிய நாடுகளின் உயர்மட்ட ஆலோசனைக் குழுவில் பணியாற்றிய இலங்கையின் முதல் இராணுவ அதிகாரியாக தற்போதய இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா திகழ்கின்றார்

பல தசாப்தகாலமாக, இலங்கை இராணுவம் நியூ யோர்க், சாட், மத்திய ஆபிரிக்க குடியரசு, லெபனான், கொங்கோ, ஹைட்டி, மாலி, தென் சூடான், எத்தியோப் பியா, புருண்டி, அபேய் மற்றும் மேற்கு சஹாரா போன்ற பல நாடுகளில் பணியாற்றியுள்ளதும் குறிப் பிடத்தக்கது.

இலங்கை இராணுவம் குறிப்பிட்ட சில நாடுகளில் உலகளாவிய அமைதி காக்கும் பணிகளுக்கு அதனு டைய பங்களிப்பினை வழங்கியமைக்காக ஐ.நா.வின் சர்வதேச பதக்கங்கள் (UN Medals) வழங்கப்பட்டன.

2014ஆம் ஆண்டில் தென்சூடானின் போர் நகரில் தனது முதல் ஸ்ரீமெட் தரம் 2 வைத்தியசாலையை நிறுவியது. ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கையினால் நன்கு பாராட்டைப் பெற்ற குறித்த வைத்தியசாலையா னது சத்திர சிகிச்சைக் கூடம், பிரசவ அறைகள், தீவிர சிகிச்சைப் பிரிவுகள், அவசர சிகிச்சைப் பிரிவுகள், வெளி நோயாளர் பிரிவு, பல் அறுவைச் சிகிச்சை, மருந்தகம், கதிரியக்கவியல் பிரிவு, ஆய்வுகூடம், ஈ.சி.ஜி அறை உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவு, பிண உறைவிப்பான் அறை ஆகிய வசதிகளை கொண்ட நவீன

வைத்தியசாலையாகும்.

இதுவரை, ஆயிரத்து அறுநூறுக் கும் மேற்பட்ட இராணுவ அதிகாரிகள் மற்றும் பதினேழாயிரத்திற்கும் மேற் பட்ட இராணுவச் சிப்பாய்கள் உட்பட மொத்தம் பத்தொன்பதாயிரத்து முந்நூறுக்கும் மேற்பட்ட இலங்கை இராணுவ வீரர்கள் ஐ.நா அமைதி காக்கும் அமைப்பில் பணியாற்றி யுள்ளனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

சர்வதேச போதை கடத்தல் கும்பலுடன் நடிகர் ஷாருக்கான் மகனுக்கு தொடர்பு?

உள்ளன. அடுத்தக்கட்ட விசாரணைகளில் தான் இது தொடர்பான தகவல்கள் தெரிய வரும்" என்றனர்.

ஆர்யன் கானுக்கு சர்வதேச போதைப்பொருள் கடத்தல் கும்பலுடன் தொடர்பு இருக்கலாம் என்று நீதிமன்றில் போதைப்பொருள் தடுப்பு பிரிவு சார்பில் தெரிவிக்கப்பட்டிருப்பது பாலிவுட் திரை உலகை கடும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது. ஆர்யன் கானின் செல்போனில் இடம்பெற்று உள்ள உரையாடல்களை போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகளில் ஒரு குழுவினர் தனியாக ஆய்வு செய்து வருகிறார்கள்.

அந்த ஆய்வு முடிந்த பிறகுதான் ஆர்யன் கானுடன் தொடர்பில் இருந்தவர்கள் பற்றிய முழு விவரங்களும் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தநிலையில் ஆர்யன் கானை மீட்க பாலிவுட் திரை உலகின் பல்வேறு தரப்பினரும் தீவிர ஆர்வம் காட்டி வருகிறார்கள். இந்தி திரை உலகின் நடிகர், நடிகைகள் தொடர்ந்து ஷாருக்கானுடன் செல்போனில் பேசி ஆறுதல் கூறி வருகிறார்கள். இந்த நடவடிக்கைகளை மும்பை பொலிசார் கண்காணித்து வருவதாக தெரிகிறது. இதற்கிடையே ஆர்யன்கான் மற்றும் அவரது கூட்டாளிகள் 7 பேர் மீதும் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் போதைப்பொருள் பிரிவு சட்டத்தின் கீழ் தண்டனை பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களை சிறிது அளவு வைத்திருந்தாலே ஓராண்டு ஜெயில் மற்றும் ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்க வாய்ப்பு உள்ளது. வெளிநாட்டு போதைப் பொருட்களை வைத்திருப்பது உறுதி செய்யப்பட்டால் 10 ஆண்டுகள் வரை கூட தண்டனை விதிக்க வாய்ப்பு உள்ளது. இதனால் ஆர்யன் கான் விசாரணை தகவல்களை பாலிவுட் திரை உலக பிரமுகர்கள் ஆர்வத்துடன் எதிர்நோக்கி உள்ளனர்.

மும்பையில் இருந்து கோவாவுக்கு கடந்த சனிக்கிழமை சென்ற சொகுசு கப்பலில் போதை பொருட்களுடன் கேளிக்கை விருந்து நடத்திய 8 பேரை போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் கைது செய்தனர். அவர்களில் பிரபல இந்தி நடிகர் ஷாருக் கானின் மகன் ஆர்யன் கானும் ஒருவர் ஆவார். 8 பேரிடமும் சோதனை நடத்தி தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

நேற்று கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்ட 8 பேரையும் வருகிற 7ந் திகதி வரை 3 நாட்கள் காவலில் வைத்து விசாரணை நடத்த போதை பொருள் தடுப்பு பிரிவினர் அனுமதி பெற்றுள்ளனர். அதன்படி இன்று காலை ஆர்யன் கான் உட்பட 8 பேரிடமும் தீவிர விசாரணைகள் நடத்தப்பட்டது. அவர்களது செல்போனில் பதிவாகி இருந்த உரையாடல்கள் மற்றும் புகைப்படங்களை காட்டி அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர். அதற்கு 8 பேரும் அளித்த பதில்கள் வீடியோவில் பதிவு செய்யப்பட்டன. வாக்கு மூலமாகவும் பெறப்பட்டது.

இதற்கிடையே ஆர்யன் கானின் வக்கீல் சதீஷ் கூறுகையில், "போதைப் பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் கூறுவது போன்று ஆர்யன் கான் எந்த தவறும் செய்யவில்லை. இதற்கு முன்பு அவர் மீது எந்த வழக்கும் இல்லை. அவர் அனைத்து விசாரணைகளுக்கும் தயாராக இருக்கிறார்" என்று கூறி உள்ளார்.

ஆனால் போதைப் பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் ஆர்யன்கான் மீது சந்தேகத்தை தெரிவித்து உள்ளனர். அவர்கள் கூறுகையில், "ஆர்யன் கானின் செல்போனில் பதிவாகி இருந்த தொடர்புகள் அனைத்தும் சர்வதேச போதைப்பொருள் கடத்தல் கும்பலுடன் தொடர்பை உறுதிப்படுத்தும் வகையில்

ரசிகர்களுக்கு அதிர்ச்சியளித்த ஸ்ருதி ஹாசன்

தமிழ், தெலுங்கு மொழிகளில் நடித்து மிகவும் பிரபலமான நடிகை ஸ்ருதி ஹாசன், ரசிகர் ஒருவருக்கு போன் நம்பர் கொடுத்து இருக்கிறார்.

ஸ்ருதி ஹாசன் தமிழ் திரையுலகின் பிரபல நடிகரான கமல்ஹாசனின் மகள் ஸ்ருதிஹாசன் தமிழில் அதிக படங்கள் நடிக்கவில்லை என்றாலும் தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளில் ஏராளமான படங்களில் நடித்து தனக்கென தனி ரசிகர்களை வைத்திருக்கிறார்.

சமூக வலைதளத்தில் ஆக்டிவாக இருக்கும் ஸ்ருதிஹாசன் அவ்வபோது புகைப்படங்களை வெளியிட்டு லைக்குகளையும் கமெண்ட்களையும் குவிப்பதை வழக்கமாக வைத்திருப்பார்.

இந்நிலையில் ஸ்ருதிஹாசன் தனது ரசிகர்களுடன் சமூக வலைத்தள பக்கத்தில் கலந்துரையாடியுள்ளார். அப்போது ரசிகர் ஒருவர் உங்கள் போன் நம்பர் வேண்டும் என்று கேட்டுள்ளார்.

அதற்கு ஸ்ருதிஹாசன் 100 என்று கிண்டலாக பதிலளித்துள்ளார். ஸ்ருதிஹாசனின் இந்த பதிலை பலரும் லைக் செய்து வருகின்றனர்.

8 மொழிகளில் பிரம்மாண்டமாக தயாராகும் பிரபாஸின் 25வது படம்

பாகுபலி பட நாயகன் பிரபாஸ் நடிக்க உள்ள 25வது படம் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகி உள்ளது.

பிரபாஸ் 'பாகுபலி' திரைப்படங்கள் மூலம் தேசிய அளவில் கவனம் பெற்றவர் பிரபாஸ். இப்படத்தை தொடர்ந்து 'சாஹோ'வில் நடித்தார். மிகப்பெரிய பட்ஜெட்டில் பிரம்மாண்டமாக உருவான 'சாஹோ' திரைப்படம் கலவையான விமர்சனங்களை சந்தித்தாலும் வசூலை வாரிக்குவித்தது. இதையடுத்து அவருக்கு பிரம்மாண்ட பட வாய்ப்புகள் குவிந்து வருகின்றன. தற்போது 'ராதே ஷ்யாம்', 'ஆதிபுருஷ்', 'சலார்' போன்ற படங்களை கைவசம் வைத்துள்ளார்.

இந்நிலையில், பிரபாஸ் நடிக்கும் 25வது படம் குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதன்படி இப்படத்திற்கு 'ஸ்பிரிட்' என தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. இப்படத்தை சந்தீப் ரெட்டி வங்கா இயக்க உள்ளார். இவர் தெலுங்கில் வெளியாகி வெற்றி பெற்ற அர்ஜுன் ரெட்டி படத்தை இயக்கியவர் ஆவார். இப்படம் தமிழ், தெலுங்கு, இந்தி, மலையாளம், கன்னடம் உள்ளிட 8 மொழிகளில் தயாராக உள்ளது. இப்படத்தை பூஷன் குமார் தயாரிக்க உள்ளார்.

புதிய சாதனை படைத்த மாநாடு டிரெய்லர்

வெங்கட் பிரபு இயக்கத்தில் சிம்பு நடிப்பில் உருவாகி உள்ள மாநாடு திரைப்படம் வருகிற நவம்பர் மாதம் 4ஆம் திகதி தீபாவளி பண்டிகையன்று திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

சிம்பு நடிப்பில் உருவாகி உள்ள படம் மாநாடு. வெங்கட் பிரபு இயக்கியுள்ள இப்படத்தை சுரேஷ் காமாட்சி பெரும் பொருட்செலவில் தயாரித்துள்ளார். இப்படத்தில் சிம்பு அப்துல் காலிக் என்ற கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். சிம்புவுக்கு ஜோடியாக கல்யாணி பிரியதர்ஷனும், வில்லனாக எஸ்.ஜே.சூர்யாவும் நடித்துள்ளனர். ரிச் சர்ட் எம் நாதன் ஒளிப்பதிவு செய்துள்ள இப்படத்திற்கு யுவன் ஷங்கர் ராஜா இசையமைத்துள்ளார்.

மாநாடு படத்தின் டிரெய்லர் கடந்த வாரம் வெளியிடப்பட்டது. ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்ற இந்த டிரெய்லர், தற்போது புதிய சாதனை ஒன்றை படைத்துள்ளது. அதன்படி இப்படத்தின் டிரெய்லர் யூடியூபில் 1 கோடிக்கும் அதிகமான பார்வைகளை பெற்று உள்ளது. சிம்பு நடித்த படத்தின் டிரெய்லர் ஒன்று 1 கோடிக்கும் அதிகமான பார்வைகளைப் பெறுவது இதுவே முதன்முறை. இதனை சிம்பு ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர்.

ரவுடி பேபியாக மாறப்போகும் ஹன்சிகா

அறிமுக இயக்குனர் ராஜா சரவணன் இயக்கத்தில் ஹன்சிகா மோத்வானி நடிக்கவுள்ள 'ரவுடி பேபி' படத்தின் படப்பிடிப்பு பூஜையுடன் துவங்கியுள்ளன. தமிழ், தெலுங்கு, கன்னடம் மொழிகளில் நடித்து வரும் நடிகை ஹன்சிகாவின் நடிப்பில், கதாநாயகிக்கு முக்கியத்துவம் அளிக்கும் படமாக 'மஹா' உருவாகியுள்ளது. சிம்பு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ள இந்தப்படத்தின் டீசர் அண்மையில் வெளியாகி ரசிகர்களிடம் வரவேற்பை பெற்றது. இந்நிலையில் ஹன்சிகாவின் அடுத்தபடம் குறித்த அறிவிப்பு தற்போது வெளியாகியுள்ளது.

தனுஷ் நடிப்பில் வெளியான மாப்பிள்ளை படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமானவர் ஹன்சிகா மோத்வானி. இவர் தமிழ் சினிமாவில் முன்னணி ஹீரோக்களான விஜய், சூர்யா, கார்த்தி, ஜெயம் ரவி உள்ளிட்ட பலருக்கு ஜோடியாக நடித்துள்ளார். இவர் நடிப்பில் மஹா, 105 மினிட்ஸ் ஆகிய படங்கள் ரிலீசுக்காக காத்து கொண்டிருக்கின்றன.

இந்நிலையில், நடிகை ஹன்சிகா மேலும் ஒரு தமிழ் படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இப்படத்துக்கு 'ரவுடி பேபி' என தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. பல முன்னணி இயக்குனர்களுடன் உதவி இயக்குனராகவும் பணியாற்றிய ராஜா சரவணன் இப்படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமாக உள்ளார். மேலும் சத்யராஜ், ரம்யா கிருஷ்ணன் ஆகியோர் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க உள்ளனர்.

தனுஷ், சாய் பல்லவி நடிப்பில் வெளியான மாரி 2 படத்தில் இடம்பெற்ற 'ரவுடி பேபி' பாடலின் வரியை ஹன்சிகாவின் படத்திற்கு தலைப்பாக்கியுள்ளனர். யுவன் ஷங்கர் ராஜா இசையில் வெளியாகி பட்டிதொட்டியெங்கும் பேமஸான பாடல் 'ரவுடி பேபி' என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் ஹன்சிகா நடிக்கவுள்ள 'ரவுடி பேபி' படத்தின் படப்பிடிப்பு துவங்கியுள்ளது. ஏற்கனவே ஹன்சிகா நடிப்பில் உருவாகியுள்ள "105 மினிட்ஸ்" தெலுங்கு படம் ஒரே ஒரு கதாப்பாத்திரத்தை மையமாக கொண்டு, ஒரே ஷாட் டில்படமாக்கப்பட்டுள்ளது. சைக்கலாஜிகல், திரில்லராக உருவாகியுள்ள இந்தப் படத்தை ராஜா துஷ்ஷா இயக்கியுள்ளார். ஒரே ஷாட்டில் எடுக்கப்பட்டு, ஒரே கதாபாத்திரம் நடிக்கும் தெலுங்கு படம் என்கிற சாதனையை இந்த படம் படைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஒல்லியான குஷ்பு

தனது எடைக் குறைப்பு ரகசியத்தை தெரிவித்துள்ளார் குஷ்பு. அதை அறிந்தவர்களோ, எடையை குறைப்பது இவ்வளவு எளிதா என தெரிவித்துள்ளனர்.குஷ்புவின் பெயரை சொன்னாலே அவர் கொழுக் மொழுக் என்று இருந்தது தான் அனைவருக்கும் நினைவுக்கு வரும். இந்நிலையில் அவர் தன் உடல் எடையை வெகுவாக குறைத்து ஒல்லியாகிவிட்டார்.

குஷ்புவின் மூத்த மகள் அவந்திகாவுக்கு 21 வயதாகிறது. 21 வயது பெண்ணுக்கு அம்மா போன்றே தெரியவில்லை. அந்த அளவுக்கு இளமையாக தெரிகிறீர்கள். எடை குறைப்பின் ரகசியத்தை எங்களுக்கும் சொல்லிக்கொடுக்கலாம் அல்லவா என்று ரசிகர்களும், ரசிகைகளும் கேட்டு வந்தார்கள்.

இந்நிலையில் அந்த ரகசியத்தை சொல்லிவிட்டார் குஷ்பு. இன்ஸ்டாகிராமில் வெளியிட்டிருக்கும் வீடியோவில் குஷ்பு கூறியிருப்பதாவது,

தினமும் நடைபயிற்சி செய்வது தான் எடையை குறைக்கும் வழி என்று தெரிவித்துள்ளார்.

குஷ்புவின் வீடியோவை பார்த்தவர்களோ, எடையை குறைப்பது இவ்வளவு எளிது என்று தெரியாமல் போச்சே. இனி நாங்களும் நடைபயிற்சி செய்வோம் என்கிறார்கள்.

நேற்று தான் குஷ்பு தன் பிறந்தநாளை கொண்டாடினார். அவருக்கு வாழ்த்து தெரிவித்தவர்களில் பெரும்பாலானோர் குஷ்புவின் மாற்றத்தை பார்த்து வியந்து கமெண்ட் போட்டிருந்தார்கள்.

தலைமைத்துவப் பண்புகள் நிறைந்த ஆதில் பாக்கிர் மாக்கார்

மர்ஹூம் ஆதில் பாக்கிர் மாக்காரின்
ஐந்தாவது நினைவு தினத்தை முன்னிட்டு எழுதப்பட்டது

ஏ.ஜி.நளீர் அஹமட்

மர்ஹூம் ஆதில் பாக்கிர் மாக்கார் முன்னால் வீடமைப்பு நிர்மாணத்துறை இராஜாங்க அமைச்சரும்,முன்னாள் ஊடகத்துறை அமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் மற்றும் பரீதா ஆகியோரின் நான்காவது புதல்வராவார். 1990 ஆம் ஆண்டு பிறந்து தனது 26 ஆவது வயதில் தனது உயர்கல்விக்காக சென்ற போது 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி லண்டனில் காலமானார்.

பன்முக ஆளுமை மிக்க திறமைசாலியான, தலைமைத்துவப் பண்புகள் நிறைந்த ஒருவர். அனைவராலும் அரவணைக்கப்பட்ட அனைவரையும் அரவணைக்கும் நல்லதொரு எதிர்கால தலைவனை எமது நாடு இழந்து விட்டது.

இலங்கை சட்டக் கல்லூரியில் Atorney at Law வைப் பூர்த்தி செய்து விட்டு, பழம் பெரும் London School of Economics and Political Science இல் ஒப்பீட்டு அரசியல் துறையில் உயர் கல்வியைத் தொடர எதிர்கால உலக தலைவர்களை உருவாக்கும் நோக்கில் ஐக்கிய இராச்சியம் வழங்கும் Chevening புலமைப்பரிசிலில் தெரிவு செய்யப்பட்டு லண்டன் சென்றிருந்த வேளை இறைவன் தன் பக்கம் அழைத்துக் கொண்டான். புகழ் பெற்ற பாக்கிர் மாக்கார் குடும்பத்தின் புதிய தலைமுறை அரசியல் வாரிசாக பலராலும் கருதப்பட்டார். அனைவருடனும் இன்முகத்தோடு பழகுபவர். பண்பானவர், பணிவானவர்.

திஜீவிகள், சர்வமத தலைவர்கள், அரசியல்வாதிகள், பொதுமக்களுடன் மிகவும் இனிமையாக பழகி அவர்கள் அனைவரினதும் நன்மதிப்பை சிறுவயது முதல் பெற்றுக் கொண்டார். இளமைக் காலத்தில் நல்லனவற்றின் பால் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட ஆதில் பாக்கிர் மாக்காருடைய மறுமை வாழ்வை ஒளியூட்ட இறைவன் போதுமானவன்.

தான் கற்றதிலிருந்து சமூகத்திற்கும் நாட்டிற்கும் சேவையாற்ற வேண்டும் என்ற உயரிய நோக்கில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பான பணிப்பாளராக செயற்பட்ட ஒருவர்.தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் சர்வதேச குழுவை உருவாக்கி இந்நாட்டு இளைஞர் யுவதிகளுக்கு சர்வதேச பங்கேற்புக்கான வாயில்களை திறக்க முற்பட்டார்.இயல்பான ஆற்றலும் திறமையும் கொண்ட கிராமப்புற இளைஞர்கள் எத்தகைய அரசியல் தலையீடுகளும் இன்றி

பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்த பின்னர் சமூக சேவையிலும் தனது தந்தையின் அரசியல் பணிகளிலும் ஒத்துழைத்தார். உலமாக்கள், புத்

உயர் பதவிகளுக்கு வர வாய்ப்பளித்தவர். சட்டத்தரணி சசிந்து துலான்ஞன இதற்கு ஓர் சிறந்த உதாரணமாகும். இவர் உருவாக்கிய சர்வதேச குழு(International Pool) நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலிருந்தும் 78 இளைஞர்களை உள்ளடக்கி இருந்தது. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 3 இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.தேர்தேடுப்புச் செயற்பாடுகளுக்கு ஆதில் பாக்கிர் மாக்கார் மட்டக்களப்பு, கிளிநொச்சி, முல்லைதீவு ஆகிய மாவட்டங்களுக்கு விஜயம் செய்தது நினைவிற்கு வருகிறது. இந்த இளைஞர்கள் பல்வேறு மாநாடுகள், உச்சி மாநாடுகள், இளைஞர் பரிமாற்ற நிகழ்ச்சிகள் மற்றும் பிற சர்வதேச மன்றங்களில் நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தினர்.இந்திய இலங்கை இளைஞர் நட்புறவு சங்கத்தை ஸ்தாபித்து முதல் முதலாக 100 இளைஞர்களை பரிமாற்ற நிகழ்ச்சிக்காக இந்தியா அனுப்பினார். இந்த எண்ணக்கருவின் முன்னோடி ஆதில் பாக்கிர் மாக்காராவார். இத்தகைய எண்ணக்கரு உருவாக்கங்களுக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தடையாக இருக்கவில்லை. இன்று தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இலங்கை இளைஞர்களை இணைத்துக் கொள்ள வேண்டும்.இலங்கையிலுள்ள பெரும்பான்மை இனத்துவ இளைஞர்களுக்குரிய ஒரு கட்டமைப்பல்ல. தமிழ்,முஸ்லிம் சகல இளைஞர்களுக்குமுரிய கட்டமைப்பு அது. இங்கு கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு விடயமுண்டு. இன்றைய இளைஞர்கள் தத்தமது சமூகத்திற்குள் மாத்திரமுள்ள இளைஞர் அமைப்புகளில் இணைந்து செயற்படுவது என்ற வட்டத்திற்கு வெளியே இத்தகைய தேசிய கட்டமைப்புகளில் இணைந்து செல்வாக்கு செலுத்த முன்வர வேண்டும்.செல்வாக்கு ஆற்றல்களை இங்கு தான் பிரயோகிக்க வேண்டும்.இவை இந்நாட்டிலுள்ள ஜனநாயக பங்கேற்புகளுக்கான களமாகும்.

2015 இல் ஐ.நா இளைஞர் (UN Youth Delegate) பிரதிநிதிகள் தெரிவு முறையில் இலங்கையைப் பிரதிநித்துவப்படுத்தி அங்கத்துவம் பெற்று கருத்

துரைத்தார். தன்னுடைய அரசியல் நிலைப்பாடு வேறாக இருந்தாலும் அப்போதைய மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஐநாவில் உரையாற்றும் போது நாட்டிற்காகவே குரல் கொடுத்தார். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைக்கட்டமைப்பையே அங்கு சுட்டிக்காட்டினார். டீ.பி.ஜாயாவின் பாசறையில் அரசியல் கற்ற பாக்கிர் மாக்கார் குடும்பத்தின் இளம் தலை வரும் அதே அடிச்சுவடுகளையே பின்பற்றினார்.

தனது தந்தையின் நேரடி அரசியல் பயிற்றுவிப்பில் கட்சி அரசியலுக்குள் புகுந்த ஆதில் பாக்கிர் மாக்கார் ஐக்கிய தேசிய கட்சியின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்களிப்பினையும் பெற்றுக் கொள்ள பணி செய்தவர். தந்தையின் நேரடி அரசியல் பயிற்றுவிப்பு அவருடைய ஆளுமையை பிரயோக ரீதியாக புடம் போட்டது என்றால் அது மிகையாகாது. கட்சி அரசியலில் தன்னை ஈடுபடுத்திய அவர், ஆரம்பம் முதலே ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை சார்ந்த விடயங்களில் கவனம் செலுத்தி கட்சியின் யதார்த்தமான கொள்கையின் பிரகாரம் சமூக மக்கள் உணர்திறன் பால் நின்று கட்சிக் கட்டமைப்பை பலப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

அமரர் வி.டி.வி. தெய்வநாயகம் பிள்ளை

இலங்கை மண்ணில் கிளை விட்ட இந்திய ஆலமரம்

சுகி. சிவம்

கொழும்பு ஜெயந்திநகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்ரமணியதிருக்கோவில் தர்மகர்த்தாவும், வி.டி.வி. நிறுவனங்களின் ஸ்தாபகரும், இலங்கையில் தமிழும் சைவமும் தளைத்தோங்கபெரும் பணியாற்றியவருமான அருட் செல்வர் தேச பந்து வி.டி.வி. தெய்வநாயகம் பிள்ளையின் நூற்றுப்பத்தாவது ஜனனதின நிகழ்வுகள் அன்னாரின் இல்லத்தில் அண்மையில் நடைபெற்றன. தமிழகத்தின் தலைசிறந்த ஆன்மீகபேச்சாளர்களில் ஒருவரான சுகி. சிவம் வி.டி.வி. தெய்வநாயகம் பிள்ளை பற்றி வழங்கிய குறிப்பு.

வணிகம், சமயம், தமிழ் வளர்ச்சி, விடாமுயற்சி இவற்றின் தாய்வீடு. பிறந்தநாட்டுக்கும் வளர்ந்த நாட்டுக்கும் இடையில் விளங்கிய மானுடப்பாலம். சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம் என்ற பாரதி வாக்கினை வாழ்வால் விளக்கிய கலாசாரப் பாலம் வி.டி.வி. தெய்வநாயகம் பிள்ளை. எளிய கல்விதான் எனினும், எல்லோரையும் பார்வையாலேயே படித்துவிடும் பாரம்பரியக் கல்வி அதிகம் உடையவர்.

ஜிந்துப்பிட்டி முருகனே செந்தில் வாழ் முருகன் என்று உடலில் உயிர் இருக்கும் வரை அந்த முருகனைத் தரிசிக்க நாளும் தவித்த நல்லமனம் அவர் மனம். கடையில் ஆயிரம் வேலைகளை இருப்பினும் நடையில் தளர்ச்சி நலிவுவந்தே துயர் தரினும் ஜிந்துப்பிட்டிசெவ்வேள் திருக்கோவிலுக்கு வந்துபோவதை உயிர்க் கடமையாகக் கொண்டவர் ஐயா. தமிழ்நாட்டுப் பாடகர்கள், பேச்சாளர்கள், உபன்யாசகர்கள், நாதஸ்வர கலைஞர்கள் யார் வந்தாலும்,வாழை இலைவிரித்து, வாய் நிறைய சிரித்து,வாஞ்சை மிக அழைத்து வயிறார உணவிடும் ஊர் திரும்பும் கலைஞர்களின் உளம் நிரம்பும் வகையில், பரிசுப் பொருட்கள் பலவழங்கும் பண்பாளர். வாழ்வின் தொடக்கத்தில் உடல் உழைப்பு கலந்த கடும் உழைப்பு. வணிகரான பின்னரோ கடையில் கடும் உழைப்பு. கணக்குப் பார்த்து கடை அடைத்து கண்ணில் உறக்கம் வலை பின்ன வீடு திரும்பும் ஐயா உறங்கிக் கிடக்கும் பிள்ளைகளை வாரிஅணைத்து,வாயில் பண்டங்களை ஊட்டிமகிழ்ந்த உயர்வான தந்தை.

அரசியலில் ஆயிரம் கட்சிகள்.. ஆயிரம் கட்சிகள் என்று சுற்றிச் சுழன்றடித்த சூறாவளியிலும் தான் நிலை குலையாமல் கம்பீரமாய் நின்று,கால் ஊன்றிவென்று காலத்தை உண்ட கண்ணபிரானாக விளங்கியவர் ஐயா வி.டி.வி. தெய்வநாயகம்.

நான் கோவையில் குடியிருந்த காலத்தில்,முப்பத்தைந்து ஆண்டுகளுக்கும் முன்னர், இலங்கைக்கு என்னை அழைத்தார் ஐயா. எப்போது போர்? எப்போது அமைதி.. எங்கே குண்டு வெடிக்கும்? எங்கே கலவரம் பிறக்கும் என்று தெரியாத போர் மோகம் சூழ்ந்த பொழுது அது. இலங்கையா? இப்போதா? திரும்புகிற வாய்ப்புள்ள ஊராக இருந்தால் வருகிறேன் என்று மறுத்தேன். கோவையில் கிரைண்டர் தயாரித்து இவர்களுக்கு அனுப்பும் தொழிலதிபர் வீட்டுக்கு வந்து ஐயாபற்றி சொன்ன வார்த்தை இது..' இந்தியாவில் டாடா,பிர்லா மாதிரி இலங்கையின் டாடா,பிர்லா இவர்.. போதுமா? பிளேனில் இருந்து இறங்கி மீண்டும் பிளேன் ஏறும் வரை உங்களோடு ராணுவவீரரைக் கூட நிறுத்தும் சக்திஉடையவர். பத்திரமாகப் பார்த்துக் கொள்வார்' என்று தைரியம் சொல்லிய பின்னரே வந்தேன்.

சொன்னபடி என்னைப் பாதுகாத்து ஈஸ்வரன் ஐயா வீட்டில் தங்க வைத்து, தங்கத்தட்டில் வைத்த மாதிரி பாதுகாத்தார். அம்மாவும் சரி, ஐயாவும் சரி அன்பு காட்டுவதில் நீயா நானா என்று போட்டி போட்டு உபசரிப்பார்கள்.

போர்க்காலத்தில் கடுமையான நேரத்தில் இலங்கையைவிட்டு இந்தியாவர வேண்டிய சூழலில் மண்டியிட்டு அந்த இலங்கை மண்ணை முத்தமிட்டு, என்னை வாழவைத்த மண்ணேநீ அமைதியாக வேண்டும் என்று நன்றி பாராட்டி கண்ணீருடன் புறப்பட்டார். சபதப்படி இலங்கை திரும்பி, ஃபீனிக்ஸ் பறவைபோல் தொடக்கத்திலிருந்து வாழ்வைத் தொடங்கி வரலாறு படைத்தவள்ளல் ஐயா.

வெற்றிலைகாவி ஏறிய உதடுகள், கண்ணாடிக்குள் வைரமாய் ஜொலிக்கும் தராசுக் கண்கள்,வெள்ளைச் சட்டைக்குள் தேக்குமரமாய்த் தெறிக்கும் கறுப்பு உடல்,கறுப்பில் ஜொலிக்கும் கழுத்துச் சங்கிலி, அதில் கடவுள் அருளாய்த் திரண்ட உருத்திராட்சம், அடிக்கடிவிரல்களில் உருட்டப்படும் வைர மோதிரம், கட்டுக் குடுமியைத் தனக்கே உரியதங்கக் கீரிடம் போல் தலையழகாய் முடிந்து வைத்துக் கொள்ளும் தனித்திறன்,பாசம் நேசம் கனிந்து பனியாய் உருகும் பக்குவ மொழிகள்.. எதையும் நான் மறக்க வில்லை. அன்றும் இன்றும் என்றும் அவர் என்னுடன் இருப்பதாகவே அனுபவிக்கிறேன்.

சிறு விளம்பரங்கள்

தினகரன் வாரமஞ்சரி

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

வர்த்தகம்

201 வியாபார வாய்ப்புகள்

வாசனைத் திரவியங்களுக்கான விநியோகத்தர்கள் தேவை. கொழும்பு (வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு) தேவைப்பாடுகள் வங்கி உத்தரவாதம், போதுமான களஞ்சிய வசதிகள், போக்குவரத்து வசதிகள் / விநியோக வாகனம். தொடர்பு 0705993113/ 0704323558 059818

208 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு/குத்தகைக்கு

இருமாடி கட்டிடம் குத்தகைக்கு விற்பனைக்கு பேலியகொட நீர்கொழும்பு வீதிக்கு அருகில். 2684747/0774581119 058652

243 பண்ணை மற்றும் பண்ணை உற்பத்திகள்

பால் கொள்கலன்கள் விற்பனை. அலுமினியம் (தரம் IS64430) மற்றும் துருப்பிடிக்காத உருக்கு. (தரம் AISI 151304) பால் உற்பத்தி மற்றும் உணவு உற்பத்திக்கு பொருத்தமானது. தொடர்பு 0705993113/ 0704323558. 059829

வேலைவாய்ப்பு

308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

சந்தைப்படுத்தல் முகாமையாளர்/ நிறைவேற்று அலுவலர் (அனு பவமுள்ளவர்) காப்புறுதிக் கம்பனியின் பொரளைக் கிளைக்குத் தேவை. சம்பளம் மற்றும் படிகள் 25,000 50,000. 0773679252, 077 3587804, 0777718451 060759

312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

கம்பஹா டயர் நிறுவனத்திற்கு பயிற்சி பெற்ற/ பெறாத ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர். கூடுதல் சம்பளம். உணவு, தங்குமிடம். 07823944 69 060593

317 வெற்றிடங்கள் டெயிலர்கள்/ டிரஸ்மேக்கர்கள்

தங்கொட்டுவையில் அமைந்துள்ள துணி உற்பத்தித் தொழிற்சாலைக்கு ஆண்/ பெண் ஊழியர்கள் தேவை. ஒரு நாள் சம்பளம் ரூ. 1,200/ முதல் ரூ. 1,500/ மாதாந்தம் ரூ. 50,000 வரை வழங்கப்படும். இலவச தங்குமிட வசதியுடன் உணவு கொடுப்பனவு வழங்கப்படும். நேரில் வரவும். இல. 08, கைத்தொழில் பேட்டை, தங்கொட்டுவை. தொடர்புகளுக்கு 0772229947/ 077 2884959 061090

வத்தளையில் அமைந்துள்ள எமது துணி உற்பத்தித் தொழிற்சாலைக்கு ஆண்/ பெண் ஊழியர்கள் தேவை. ஒரு நாள் சம்பளம் ரூ. 1,200/ இலவச தங்குமிட வசதியுடன் சகாய விலையில் மூன்று நேரமும் உணவும் வழங்கப்படும். நேரில் வரவும். இல. 18, வெளியமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொடர்புக ளுக்கு. 0766200300 061092

319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

பெண் வைத்தியரின் வீட்டில் தங்கி குழந்தையொன்றை பார்த்துக்கொண்டு வேலை செய்வதற்கு பெண் தேவை. பிலியந்தலை 0774948080 060890

வீட்டில் தங்கிப் பணியாற்றுவதற்கு வயது 30 60 பணிப்பெண் தேவை. அனைத்து வசதிகளுடன், (கட்டில் தொலைக்காட்சி பெட்டி, காற்றாடி) அறை வழங்கப்படும் தொ.பே. 0773569055 058820

வீட்டுப் பணிப்பெண்கள், வேலையாட்கள் தேவை, வயது 16 35 வயதிற்கு இடைப்பட்டவர்கள், அனுபவம் தேவையில்லை, நல்ல சம்பளம். வேலை நிபந்தனைகள் உண்டு. தொடர்பு 75/1 W.A. சில்வா மாவத்தை, கொழும்பு 6, அழைப்பு எண்கள். 2591169, 0755091379 060774

ஹோமாக மகணக்காளரின் வீட்டில் வேலை செய்வதற்கு பெண் தேவை. கவர்ச்சியான சம்பளம் வேறாக அறை மற்றும் வசதிகள் வழங்கப்படும். 0773603555 059711

320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

கொத்து ரைஸ் பாஸ் தேவை 0770766368 060607

திறமையான பேக்கரி பாஸ்/ உதவியாளர்கள் (நன்றாக வேலை தெரிந்த) தேவை. சம்பளம் 2000/ முதல். சமுத்ரா பேக்கரி கணேமுல்ல. 0766574583, 0703356397 059347

பிலியந்தலை கௌரவமான இந்திய ஹோட்டலுக்கு, வெயிட்டர் கிச்சன் ஹெல்பர், இடியப்பம் தயாரிக்கக் கூடியவர்களுக்கு கவர்ச்சியான சம்பளம். தங்குமிடம் மருத்துவ வசதிகள். அழையுங்கள். 0723593039, 0714755696/ 078 6848698 060897

321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

தொழிற்சாலைக்கு பயிற்சி பெற்ற பெறாத ஊழியர் (சோடிகள்) / Twin தொழில்நுட்ப கலை ஞர் (பயிற்சி பெற்ற/ பெறாத) தேவை. வாராந்த சம்பளம் + OT இலவசமாக தங்குமிடம்/ மின்சாரம் (காஸ்/ Free Wi-Fi). விசாரணை 0771042510 060856

புத்தளம் பிரதேசத்தில் தென்னை/ கலப்பு பயிர் செய்துள்ள காணியில் (25 ஏக்கர்) தங்கி வேலை செய்வதற்கு விரும்புபவர்கள் தேவை. பயிர்ச் செய்கைக்கு திறமையான குடும்பம் விரும்பத்தக்கது. அழையுங்கள். 0718221131 060620

322 வெற்றிடங்கள் மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்

செட்டரிங் வேலை மற்றும் கம்பி வேலை தெரிந்தவர்கள் தேவை. 0757666510 060869

F.R. பொறியியல் தனியார் நிறுவனம், கொத்தனார் கூலி. 2700 கொத்தன் கை உதவியாளர் கூலி. 2000 குழாய் பொறுத்துநர் கூலி 2150 குழாய் பொறுத்துநர் கை உதவியாளர் கூலி 1500. உடனடியாக வேலைக்கு ஆட்கள் தேவை. தொலைபேசி இலக்கம் 0705201969 059558

323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்

புத்தளம் பண்ணைக்கு தங்கி சேவையாற்றக்கூடிய தொழிலாளர்கள்/ தொழிலாளர் குடும்பம் உடன் தேவை. 0765 278154, 077 9896774, 0718244218 060908

325 தொழில்துறை பொது

காஸ் விநியோகிக்கும் நிறுவனத்திற்கு வாகன உதவியாளர் தேவை. (தங்குமிடம் மற்றும் உணவு இலவசம்) கம்பஹா அருகில் இருப்போர் விரும்பத்தக்கது. 0778332451, 0769118193 060588

நீங்கள் வேலையிலிருந்து ஓய்வு பெற்ற ஒருவரா? இல்லையெனில் தற்போது வேலை தேடுபவரா அவ்வாறாயின் மாதாந்தம் ரூ.100000 வருமானம் பெற்றுக்கொள்வதற்கு அழையுங்கள் நில்மினி. 0777729977. தமிழ் பேசுவோர் அழையுங்கள் விக்னேஷ்வரன் 0776575005. 060015

புறக்கோட்டை அச்சுத்தாள் விற்பனை செய்யும் நிறுவனத்திற்கு பைன்டிங் வேலை தெரிந்த உடனடியாகத் தேவை. 0777313478. 059933

வெலிவேரியா, ஹேனேகம இல் 2 st/ 4st பஜாஜ் ஆட்டோக்களை பழுதுபார்ப்பதற்கு கெரேஜ் மெகனிக் வேலை தெரிந்த ஒருவர் தேவைப்படுகிறார். உணவு மற்றும் தங்குமிட வசதி செய்து தரப்படும். மாதக் கொடுப்பனவு 80% சதவிகிதம் அல்லது உங்கள் விருப்பத்திற்கேற்ப கலந்துரையாடி பெற்றுக்கொள்ள முடியும். 0714094314, 0771332751 061089

ஹங்வெல்ல கைத்தொழிற்சாலைக்கு ஊழியர்கள் தேவை. 8 மணி நேரத்திற்கு ஆண் ஊழியர் ரூ. 1000 1200, பெண் ஊழியர் ரூ. 800 1000 0773077813, 0722273273. 060611

சொந்த விடயம்

517 அழகு சிகிச்சை/ சிகை அலங்காரம்

புத்தளம் பிரபல சலூன் ஒன்றிற்கு தலைமயிர் வெட்டுவதற்கு திறமையான ஆண் தேவை. தங்குமிட வசதிகள். கூடுதல் சம்பளம். 0778931446 060632

528 தங்குமிட வசதிகள்

கொழும்பு6, வெள்ளவத்தையில், பெண்களுக்காக தளபாடமுள்ள அறைகள், இணைக்கப்பட்ட குளியலறைகள், உணவு அறை, சமையலறை, குக்கர், வொஷர், குளிர்சாதனப் பெட்டி உண்டு 75/1, W.A. சில்வா மாவத்தை, தொலைபேசி 2591169, 0755091379 060764

காணி/தோட்டம்

616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

இரத்மலானை ஜயசுமனாராம வீதியில் அமைந்துள்ள இருமாடி வீட்டுத் தொகுதியின் கீழ் மாடியில் வீடு விற்பனைக்கு. கராஜ் உண்டு. 070 4521052, 0718798174 060907

617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

கடவத்த நகர எல்லையில் புதிய வீடு 10 பேர்ச் இல் மிகவும் கௌரவமான சூழல் ரூ.30 மில்லியன். தொ.பே 0718320784. 059955

ஜாஎல கனாயன் ஹோட்டலில் கிறீன் லீப் ஆரோக்கிய பானம் அண்மையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் முன்னாள் முதல் பெண்மணியும், பிரதமரின் மனைவியுமான ஷிரந்தி ராபக்ஷ பிரதம அதிதியாகவும் வடமாகாண கிறிஸ்தவ அமைப்புகளின் ஒன்றிணைந்த சபையின் தலைவர் வண .பிதா எஸ். சந்திரகுமார் விசேட அதிதியாகவும் பிரியான் மனிக் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் 130ஆவது திருவள்ளுவர் சிலையினை தூத்துக்குடி மாவட்டத்தின் எட்டயபுரம் தாலுக்காவில் கீழ ஈராலில் உள்ள தொன்போஸ்கோ கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில், விளாத்திக்குளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்கண்டேயன் மற்றும் விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் டாக்டர். வி.ஜி.சந்தோசம் இணைந்து திறந்து வைத்தனர். அருகில், கல்லூரியின் செயலர் அருள்முனைவர் செ.விக்டர் அந்தோணிராஜ், கல்லூரியின் முதல்வர் அருள்முனைவர் அ.செ.ஜோசப் சார்லஸ் ஆகியோர் காணப்படுகின்றனர்.

அப்பளத்தை சாப்பிட்ட 5 வயது மகளுக்கு சூடு

கிளிநொச்சி குறூப் நிருபர்

அக்கரையான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஸ்கந்தபுரம் விநாயகர் குடியிருப்பு பகுதியில் நேற்று முன்தினம் தாயார் சமைத்து வைத்த உணவின் அப்பளத்தை 5 வயது மகள் தாயாருக்கு தெரியாமல் சாப்பிட்ட காரணத்தினால் குழந்தையின் வாயில் நெருப்பால் சுட்ட தாய் அக்கராயன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவத்தை அவதானித்த சிறுமியின் தாத்தா அக்கராயன் பொலிசாருக்கு வழங்கிய தகவலுக்கு அமைய குறித்த தாய் கைது செய்யப்பட்டுள்ளார். சிறுமி கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். சிறுமியின் தந்தை தொழிலுக்குச் சென்ற சமயம் இச் சம்பவம் நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன் வாரமஞ்சரி BUDGET ADZ It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845

Ph.D. / DBA
Specially Designed for Busy Senior Professionals & Academics to FAST TRACK Their Goals
• U.G.C. RECOGNIZED
• FLEXIBLE PAYMENTS PLANS
TOTAL PROGRAM FEE: LKR 975,000/-
10% OFF on Full Payments
ICBM Campus Level 37, West Tower, WTC, Colombo 01.
Register Now : 0112 577 277 | 0772 467 277

Mathematics Online Tutoring
Cambridge / Edexcel (Grade 7 -12)
Wasantha G.Hewage
M.A. (Mathematics), USA
Post Graduate Diploma (Mathematics Education), USA
Certified Mathematics Teacher (Grades 7 - 12) in USA & Canada
B.Sc. (Engineering)
30 Years of experience of teaching / tutoring Mathematics in the USA, Canada & Sri Lanka
Produced Sri Lanka's No. 1 Student in Cambridge O/L in 2009 & 2011 while teaching at Lyceum International School
Phone : +94 775 466 065 (WhatsApp)
wasanthagar@yahoo.com

Wanted
English Medium Teacher
Nearby
Kandana / Rilaulla / Ja - ela
Ability to do the school Home works and Online Lessons for Grade 1 (Daughter) & Grade 4 (Son)
We will discuss the time schedule after school started.
• Candidate can apply island wide
• Well knowledge in 3 languages
• Who interested to do the teaching can also apply
Email : startrhr@outlook.com 0740 241 717

Advertise Here
தினகரன் வாரமஞ்சரி BUDGET ADZ
11.8cm (Height) x 8cm (Width)
Rs. 2,000/- +VAT
Contacts :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

EXPLORE WAREHOUSE & VALUE ADDITION CENTRE @ PELIYAGODA
Container Transport | Storage | Manpower Services | Export / Import Documentation | Value Addition
Goods prepared for export can be safely stored and released to the port on your notice.
It works 100% on your advice and does not require a representative of your organization.
Activities include safe storage of imported goods and increase in value if required.
Explore Value Addition Center No. 278, Biyagama Road, Peliyagoda.
info@explore-tea.com | www.explore-tea.com 0728 877 678

FINANCIAL SPONSORSHIP
ALL KIND OF VISA CONSULTANCY
CALL US SOON
WIN WIN CONSULTANTS
0777-283385
44/1D, Highlevel Road, Delkanda Junction, Nugegoda.
Email : winwinconsultants.lk

හදිසි රැකියා අවස්ථා உடனடி வேலை வாய்ப்பு
දඹකොටුව - கொහுබත් කර්මාන්ත ශාලාව
(පිරිමි අය පමණි. නවාතැන් පහසුකම් නොමිලේ)
දවල් කාලය සඳහා රු. 1,400ක මුදලක් (උදේ 6.00 - 18.00)
රාත්‍රී කාලය සඳහා රු. 1,500ක මුදලක් (රාත්‍රී 18.00 - උදේ 6.00)
• ආහාර, නවාතැන් පහසුකම් නොමිලේ
• පසු වැටුප ගෙවනු ලැබේ.
• ග්‍රාම සේවා සහතිකය සමඟ පැමිණෙන්න
පැමිණීමේ දීමනාව රු.5000/-
0755 309 802 0755 309 716 (WhatsApp only)
classictea@hotmail.com

பலாங்கொட பிளான்டேஷன் பிஎல்சி

தேயிலை தொழிற்சாலைகள் குத்தகைக்கு

எமது நிறுவனத்திற்கு சொந்தமான பின்வரும் செயற்படாத தேயிலை தொழிற்சாலைகள் குத்தகைக்கு வழங்கப்படவுள்ளன.

- **நன்பெரியல் தேயிலை** மேலதிகாரி 0777 539 204
  தொழிற்சாலை, பெலிவுல்லோய, பலாங்கொட
- **கலதுரை தேயிலை** மேலதிகாரி 0773 945 404
  தொழிற்சாலை, கிரிஎல்ல
- **ஹக்ரஸ்லேண்ட் தேயிலை** மேலதிகாரி 0777 539 216
  தொழிற்சாலை, ராஸ்சகல, பலாங்கொட

மேற்குறித்த தேயிலை தொழிற்சாலைகளை கண்காணிப்பு செய்திட, தோட்ட மேலதிகாரிகளுக்கு அழைத்திடுங்கள். மேலதிக தகவல்களை பிரதான நிறைவேற்று அதிகாரி - தேயிலை, 0762 348 108 எனும் இலக்கத்திற்கு அழைத்து பெற்றிட முடியும்.

தயவுசெய்து உங்கள் பெயர், முகவரி மற்றும் தொடர்பு விபரங்கள் மற்றும் ஒரு வருட காலத்திற்கு செலுத்த ஒப்புக்கொள்ளும் குத்தகை தொகையுடன், கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2021 நவம்பர் 10ம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர் - நிதி மற்றும் நிர்வாகம்
பலாங்கொட பிளான்டேஷன்ஸ் பிஎல்சி
த.பெட்டி 06, பாம் கார்டன்,
இரத்தினபுரி.
தொ.பேசி : 0772 663 911

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

விலைமனுக்களுக்கான அழைப்பு

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

AHEAD திட்டம்

தேசத்தின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்து பெருமை கொள்வோம்

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் பட்டப்படிப்பில் புதிய போக்குகளை முன்னெடுத்துள்ளது. தேசிய வள தளத்திற்கு மேலதிக பெருமை சேர்ப்பதை கருத்தில் கொள்வதன் மூலம் தொடர்ந்து கல்விக்காகவும் பங்களிப்புச் செய்கிறது. பல்கலைக்கழகத்தின் கல்வித்திட்டமானது தமது தொழில்வழங்குநர்களுக்கு பெறுமதியை ஏற்படுத்த திறமையான புதிய தலைமுறை பட்டதாரிகளை உருவாக்குவதற்கு கவனமாக வடிவமைத்துள்ளது. இந்த சிறந்த தேசிய முயற்சியில் நீங்களும் ஒரு பங்குதாரராகலாம்.

பெறுகை அறிவித்தல்

பின்வருவனவற்றை வழங்குவதற்கு தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் திட்ட பெறுகைக் குழு, தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இல.	விபரம்	கேள்விமனு இல.	விலைமனு பிணை பெறுமதி (ரூபா)	மீளளிக்கப்படாத வைப்பு (ரூபா)	விலைமனு மூடப்படும் திகதி மற்றும் நேரம்
01	மேசைக் கணினிகள் மற்றும் UPS வழங்கல், விநியோகம், நிறுவுதல் மற்றும் செயல் விளக்கமளித்தல்	UWA/AHEAD/ ELTAELSE/FAS /NS/ GOODS/ OE/20	218,000.00	4,250.00	2021 நவம்பர் 1 அன்று பி.ப. 2.00

மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு 82592579 என்ற இலங்கை வங்கி கணக்கு இலக்கத்திற்கு நேரடியாக வைப்புச் செய்வது அல்லது எந்த ஒரு வேலை நாட்களிலும் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00 இற்கு இடையே ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் AHEAD/OTS அலுவலகத்திற்கு ஒவ்வொரு கேள்விமனுவுக்கும் முறையே மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திய பற்றுச்சீட்டை வழங்கி (AHEAD/OTS) பெறுகை பிரதிப் பணிப்பாளருக்கு எழுத்துமூலம் விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து 2021 ஒக்டோபர் 29 ஆம் திகதி பி.ப. 3.00 வரை எந்த ஒரு விலைமனுதாரர்கள் மூலமும் விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். http.//www.uwu.ac.lk/procurement/ என்ற பல்கலைக்கழக இணையதள முகவரியில் இருந்தும் விலைமனு ஆவணங்களை விலைமனுதாரருக்கு தரவிறக்கம் செய்ய முடியும். பல்கலைக்கழக இணையதளத்தில் இருந்து விலைமனு ஆவணங்களை பெறுபவர்கள் அசல் ரொக்கப்பண பற்றுச்சீட்டு/ வைப்பு ரசீதுடன் பூர்த்திசெய்யப்பட்ட ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும். மேல் குறிப்பிடப்பட்டவாறு 82592579 என்ற கணக்கு இலக்கத்திற்கு ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், AHEAD திட்டத்தின் பெயரில் இலங்கை வங்கியின் எந்த ஒரு கிளையிலும் கட்டணங்களை செலுத்த முடியும். (விலைமனுதாரர்களுக்கு விலைமனு ஆவணங்களை கட்டணம் இன்றி பரீட்சிக்கலாம்.)

விலைமனுக்களை 2021 நவம்பர் 1 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப அல்லது சேர்ப்பதற்கு வேண்டும் என்பதோடு அதன் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர் அல்லது (அதிகாரம் அளிக்கப்பட்ட கடிதம் ஒன்றுடன்) அவர்தம் அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதி பங்கேற்க அனுமதிக்கப்படுவார். கேள்விமனுக்கள் முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறை ஒன்றில் மூடப்பட்டு அந்தக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தொடர்புடைய கேள்விமனு இலக்கத்தை குறிப்பிட வேண்டும் என்பதோடு, தலைவர், திட்ட பெறுகைக் குழு, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், பஸ்ஸர வீதி, பதுளை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவதற்கு அல்லது ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்பு பெட்டியில் இடுவதற்கு முடியும்.

055-3127378 என்ற தொலைபேசி இலக்கத்தில் பெறுகை பிரதி பணிப்பாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெற முடியும்.

தலைவர்
திட்ட பெறுகை குழு (பல்கலைக்கழகம்)
ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
பதுளை
2021.10.10

பாதுகாப்பு அமைச்சு

விலைமனுக்கோரல்

SIS ஆவண முகாமைத்துவ அமைப்புகளின் வன்பொருள் மற்றும் மென்பொருள் வழங்கல், நிறுவல் மற்றும் பராமரிப்பு சேவைகளுக்கான விலைமனுக்கோரல்

IFB இலக்கம் : MOD/FD/PD/16/II-1/2021

1. பாதுகாப்பு அமைச்சு சார்பாக அமைச்சரவையின் கொள்முதல் குழுவின் தலைவரினால் ஆவண முகாமைத்துவ அமைப்புகளின் வன்பொருள் மற்றும் மென்பொருள் வழங்கல், நிறுவல் மற்றும் பராமரிப்பு சேவைகளை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.
2. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் கொள்முதல் வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய போட்டி மனுகோரல் நடைமுறைகளுக்கமைய மனகோரல் நடைபெறும்.
3. மதிப்பீட்டிற்கு பரிசீலிக்க மற்றும் ஒப்பந்த விருதுக்கு தகுதியினை பெற, மனுதாரர் வன்பொருள் மற்றும் / அல்லது மென்பொருளின் கீழ் உள்ள அனைத்து பொருட்களுக்கும் மனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். முழுமையற்ற மனுக்கள் கருத்தில் கொள்ளப்படமல் நிராகரிக்கப்படும்.
4. தகவல் தொழினுட்ப வன்பொருள், மென்பொருள் மற்றும் வலையமைப்பின் உள்கட்டமைப்பு வசதியினை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயல்படுத்தல் ஒப்பந்தம் அமுலுக்கு வந்த நாளிலிருந்து **நூற்று என்பது (180)** நாட்களுக்குள் நிறைவுசெய்தல் வேண்டும்.
5. இம்மனுக்கோரலில் வெளிநாட்டு மனுதாரர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.
6. இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக காணப்படுவதுடன் மேலும் கடந்த பத்து (10) வருடங்களாக செயற்படும் நிறுவனமாக காணப்படல் வேண்டும்.
7. ஒப்பந்தங்களை வழங்குவதற்கான தகுதியினை பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஏனைய குறைந்தபட்ச தகுதிகளாவன :
   a. Microsoft உரிமம் பெற்ற தீர்வு வழங்குனராக இருத்தல் வேண்டும்.
   b. பாதுகாப்பு மற்றும் தரவு மையம் உட்பட குறைந்தது 12 தங்க திறன்களை கொண்டிருத்தல்
   c. கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ.120 மில்லியனுக்கு குறையாத மதிப்புள்ள, இந்த திட்டத்தின் இயல்பு மற்றும் சிக்கலான தன்மைக்கு ஒத்த மின்னணு தரவு மையங்களை நிறுவுவதற்கான குறைந்தபட்சம் ஐந்து (05) ஒப்பந்தங்களை வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல்,
   d. மனுதாரர்களால் முன்மொழியப்பட்ட அனைத்து தர அடையாளம் / தயாரிப்புகள் இலங்கையில் குறைந்தது ஐந்து (05) வருடகால பழமையினை கொண்டிருக்க வேண்டும்.
   e. ஒப்பந்த முற்பண செலுத்துதலுடன் கூடுதலாக, ரூ.50 மில்லியன் பணப்புழக்கத்தை பூர்த்தி செய்ய திரவ சொத்துக்கள், கடன் அல்லாத உண்மையான சொத்துக்கள், கடன் சங்கிலிகள் மற்றும் பிற நிதி வழிகள் போன்ற நிதி ஆதாரங்கள் இருக்க வேண்டும் அல்லது அணுகுமுறை இருத்தல் வேண்டும்.
   f. முக்கிய ஊழியர் அமைப்பினால் முன்மொழியப்பட்ட தயாரிப்புகள் தொடர்பாக சான்றிதழ் பெற்ற பொறியியளாலர்களால் உருவாக்கப்பட வேண்டும்.
   g. 24X7 கணினி வன்பொருள் மற்றும் மென்பொருள் இற்கான தொழில்நுட்ப உதவியாளர் / உதவி மையங்கள் காணப்படல் வேண்டும்.
   h. கட்டமைப்பிற்காக முன்மொழியப்பட்ட உபகரணங்களை நிறுவதற்கு உற்பத்தியாளரின் / உள்ளூர் முகவரின் அங்கீகாரத்தினை பெற்றிருத்தல் வேண்டும்.
   i. கடந்த 3 ஆண்டுகளில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கையின்படி, குறைந்தபட்ச வருடாந்திர வருவாய் **ரூ.200 மில்லியனாக** காணப்பட வேண்டும்.
8. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2021.10.11** ஆம் திகதி முதல் **2021.11.01** ஆம் திகதி வரை **மு.ப.08.30** மணியிலிருந்து **பி.ப.4.00** மணி வரையான காலப்பகுதியினுள் தகவல் தொழிட்ப பிரிவின் தலைவர், **(தொலைபேசி : 071-3680880 மின்னஞ்சல்: admin@sis.gov.lk)** ஊடாக மேலதிக விபரங்களை வேலை நாட்களில் பெற்றுக்கொள்ள முடியும்.
9. மனுதாரர்கள் **2021.10.11** ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் எழுத்து மூல விண்ணப்பத்தை மீள் செலுத்தப்படாத **இருபத்தி ஐயாயிரம் ரூபா (ரூ.25,000.00)** கட்டணத்தை பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக கட்டிட தொகுதி, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, **தலைமை நிதி அதிகாரியிடம்** சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். கட்டணம் செலுத்தும் முறை பணமாக செலுத்தப்பட வேண்டும்.
10. **2021.10.18** ஆம் திகதி **1000** மணித்தியாலம், பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் (BMCH), கொழும்பு 07 அறை இல.104 எனும் முகவரியில் முன் மனுக் கூட்டம் நடைபெறும்.
11. முறையாக பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை பிரதிகளுடன் **2021.11.02** ஆம் திகதி **11.00** மணித்தியாலங்களுக்கு முன்னர் **தலைமை நிதி அதிகாரி I, இரண்டாம் மாடி, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டே** எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். நேரம் பிந்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
12. அனைத்து மனுக்களும் மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயல்படும் ஒரு வணிக வங்கியிலிருந்து பெறப்பட்ட **இருபத்தி ஐயாயிரம் (2,500,000.00)** இலங்கை ரூபாயின் **"மனுப்-பாதுகாப்பு"** உடன் நிபந்தனையற்ற மற்றும் கோரிக்கை (மனு கடைசித்திகதியிலிருந்து மனு திறக்கப்படும் நாட்கள் உள்ளடங்களாக 119 நாட்கள்) மனு பாதுகாப்பின் பயனாளிகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருக்க வேண்டும்.
13. மனுக்கோரல் முடிவடைந்த நாளிலிருந்து **தொண்ணூற்றொன்று (91)** நாட்களுக்கு மனுக்கள் செல்லுபடியாகும்.
14. மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் தலைமை நிதி அதிகாரி I, இரண்டாம் மாடி, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டே எனும் முகவரியில் திறக்கப்படும்.
15. மனுக்கள் திறப்பதற்கு குறைந்தது மூன்று (03) நாட்களுக்கு முன்னர் பங்கேற்கும் நபரின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் / கடவுச்சீட்டு இலக்கம் என்பன மனுதாரரினால் தலைமை நிதி அதிகாரி, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டே எனும் முகவரியில் எழுத்துப்பூர்வமாக தெரியப்படுத்த வேண்டும்.
16. மனுதாரரினால் மனுக்களைத் தயாரிப்பதற்கு அல்லது சமர்ப்பிப்பதற்கு ஏற்பட்ட எந்தவொரு செலவினையும் பாதுகாப்பு அமைச்சு பொறுப்பேற்காது.

தலைவர்,
அமைச்சின் கொள்முதல் குழு
பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக கட்டிட தொகுதி,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே.

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை

கரையோர பாதுகாப்பு மற்றும் தாழ் நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

கேள்விகோரல்

மின்பிறப்பாக்கி இயந்திரம் (12KW GENERATOR)

கொள்வனவு செய்வதற்காக வழங்கல்கள் நிறுவனத்திலிருந்து கேள்வி கோரல்

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் தென் மாகாண ஆய்வுகூடத்திற்கு மின்பிறப்பாக்கி இயந்திரத்தை (12KW GENERATOR) கொள்வனவு செய்வதுடன் சம்பந்தப்பட்ட வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

உபகரண தேவைப்பாடு	மாணியம்	கேள்விப் பிணை பெறுமதி	வேலை முடிவடையும் காலம்	ஆவணப் பெறுமதி
தென் மாகாண ஆய்வுகூடத்திற்கு மின் பிறப்பாக்கி இயந்திரத்தை கொள்வனவு செய்தல்	ரூ.2.0 மில்லியன்	ரூ.28,000.00	30 நாட்கள்	ரூ.4500.00

இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற வழங்குநர்களுக்கு 2021 ஒக்டோபர் 11 முதல் 2021 நவம்பர் 01 வரை மு.ப.10.00 முதல் பி.ப.2.00 இற்கு இடைப்பட்ட காலத்திற்குள் அரச வேலை நாட்களில் கீழ்க்காணும் முகவரியில் அமைந்துள்ள கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையிலிருந்து அல்லது www.mepa.gov.lk இணையதளத்திற்கு பிரவேசித்து, குறித்த மாதிரிகள் மற்றும் கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம். இதற்காக மீளளிக்கப்படாத ரூ.4500.00 கட்டணத்தை காசாளரிடம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளுடன் " மூலப் பிரதி" மற்றும் "நகல்பிரதி" என்று குறிப்பிட்டு, வேறு வேறாக இரு உறைகளில் இட்டு அதன்பின் அவற்றை ஒரு உறையில் இட்டு பொறியிட்டு 2021 நவம்பர் 01ஆம் திகதி பி.ப.2.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை இல.177, நாவல வீதி, நாரஹேன்பிட்ட, கொழும்பு - 05 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது மேற்படி முகவரியில் அமைந்துள்ள இவ் அதிகாரசபையின் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் " (12KW GENERATOR) " என்று குறிப்பிடல் வேண்டும்.

தொடர்புகள் - 0112554247, 0112554006 அல்லது 0706470321

பொருத்தமான வழங்குநர் ஒருவரை தேர்ந்தெடுத்தல் பற்றிய இறுதித்தீர்மானம் எடுக்கும் உரிமை பெறுகைக்குழுவிற்கு உரியது.

தலைவர் (பெறுகைக்குழு)
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
177, நாவல வீதி,
நாரஹேன்பிட்ட,
கொழும்பு - 05.

Daily News Classifieds, the Housewives' companion

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT, WE HAVE IT
Sunday Observer ADZ Auto Focus

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer ADZ

- Auto Focus
Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369 011 2 429 368 E-mail adzsuo@gmail.com

தமிழ்த் திரையிசைப் பாடல்களில் உச்சம் தொட்ட கவிஞர் பிறைசூடன்... வாழ்வும், சாதனைகளும்!

ரஜினி நடித்த 'ராஜாதி ராஜா' படத்தில் இளையராஜா இசையில் 'மீனம்மா மீனம்மா கண்கள் மீனம்மா' என்ற பாடலின் புகழ் திரையுலகின் பார்வையை இவர் பக்கம் திருப்பியது. 'பணக்காரன்' படத்தில் 'நூறு வருஷம் இந்த மாப்பிள்ளையும் பொண்ணும்தான்' என்னும் வாழ்த்துப்பாடல் பட்டி தொட்டியெங்கும் ஒலித்தது.

தமிழ்த் திரையிசைப் பாடல்கள் வரலாற்றில் முக்கியமான பாடலாசிரியர்களில் ஒருவர் கவிஞர் பிறைசூடன். இவர் தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர், கவிஞர் மற்றும் நடிகர் என பன்முகத் திறமை கொண்டவர். கொஞ்ச நாள்களாக உடல்நலம் சரியில்லாமல் இருந்தவர், கடந்த வெள்ளியன்று (8.10.2021) காலமானார்.

இவர் இதுவரை திரைப்படங்களில் 2,000 பாடல்கள், தனிப் பாடல்கள் 7,000 பாடல்கள் என சுமார் 10,000 பாடல்களை எழுதியுள்ளார். தமிழக அரசின் சிறந்த பாடலாசிரியருக்கான விருதை மூன்று முறை பெற்றவர்.

ஆஸ்கர் விருதுக்கு இந்தியாவில் இருந்து திரைப்படங்களை அனுப்பும் தேர்வுக்குழு உறுப்பினராக இருந்தார். ரஜினியின் 'அண்ணாத்த' படத்தில் கவிஞர் பிறைசூடனும் நடித்திருக்கிறார்.

1985ல் ஆர்.சி.சக்தியின் 'சிறை' படத்தில் எம்.எஸ்.விஸ்வநாதன் இசையில் 'ராசாத்தி ரோசாப் பூவே' என்னும் பாடலை எழுதி திரைப்படத் துறையில் பாடலாசிரியராக அறிமுகமான கவிஞர் பிறைசூடன்.

ரஜினி நடித்த 'ராஜாதி ராஜா' படத்தில் இளையராஜா இசையில் 'மீனம்மா மீனம்மா கண்கள் மீனம்மா' என்ற பாடலின் புகழ் திரையுலகின் பார்வையை இவர் பக்கம் திருப்பியது.

பிறகு, 'பணக்காரன்' படத்தில் 'நூறு வருஷம் இந்த மாப்பிள்ளையும் பொண்ணும்தான்' என்னும் வாழ்த்துப்பாடல் பட்டி தொட்டியெங்கும் ஒலித்தது.

வசந்த் இயக்கிய 'கேளடி கண்மணி'யில் 'தென்றல் தான் திங்கள்தான் நாளும் சிந்தும்' என்னும் பாடல், ஈரமான ரோஜாவேயில் 'கலகலக்கும் மணி ஓசை சலசலக்கும் குயில் ஓசை மனதினில் பல கனவுகள் மலரும்' எனும் காதல் பாடல் அந்தக் கால கல்லூரி மாணவர்களின் மனதைக் கொள்ளைகொண்ட பாடல். இளையராஜாவின் இசையில் இவர் எழுதிய பல பாடல்கள் சூப்பர் ஹிட்டாகின.

1991ல் 'என் ராசாவின் மனசிலே' படத்தில் 'சோல பசுங்கிளியே சொந்தமுள்ள பூங்கொடியே ஈச்ச இளங் குறுத்தே என் தாயி சோலையம்மா' பாடலுக்காக, தமிழக அரசின் சிறந்த பாடலாசிரியருக்கான விருதைப் பெற்றார்.

'இதயம்' படத்தில் 'இதயமே இதயமே' பாடலில் இசையுடன் இவரின் வரிகள் காதல் தோல்வியின் வலியில் நனைத்தது. 'கோபுர வாசலிலே' படத்தில் 'காதல் கவிதைகள் படித்துடும் நேரம்', உன்னை நெனச்சேன் பாட்டுப் படிச்சேனில் 'என்னைத் தொட்டு அள்ளிக் கொண்ட மன்னன் பேரும் என்னடி', ஆர்.கே.செல்வமணி இயக்கிய 'செம்பருத்தி' படத்தில் 'நடந்தால் இரண்டடி இருந்தால் நான்கடி படுத்தால் ஆறடிபோதும் எனும் பாடல், 'அமரன்' படத்தில் 'வெத்தல போட்ட ஷோக்குல' என்னும் பாடல் என இவரின் வெற்றிப் பாடல்கள் நீள்கின்றன. ஏ.ஆர்.ரஹ்மான் விளம்பரங்களுக்கு இசையமைத்துக்கொண்டிருந்தபோது அவற்றுக்கு ஜிங்கில்ஸ் எழுதியிருக்கிறார்.

பிறகு 'ஸ்டார்' படத்தில் 'ரசிகா ரசிகா என் ரசிகா ரசிகா' பாடலை எழுதினார். 'ஸ்ரீராம ராஜ்யம்' உட்பட சில மொழிமாற்றுப் படங்களுக்கு பாடல்களோடு வசனங்களையும் எழுதியிருக்கிறார்.

நிறைய பக்திப் பாடல்களையும் எழுதியுள்ள இவர், அவருடைய கவிதைகளை 'தாலாட்டு முதல் தாலாட்டு வரை' என்னும் தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளார். தமிழ் மொழிப் புலமையையும் திரையிசைப் பாடல் வரிகளின் நுட்பங்களை விளக்கும் திறமையையும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலம் வெளிப்படுத்தினார்.

சிதம்பரம் அருகே 'ஆனைக்காரன் சத்திரத்'தில் 1956 பெப்ரவரி 6ல் பிறந்தவர். நன்னிலத்தில் படித்தவர். இவரது இயற்பெயர் சந்திரசேகர், 'தனசேகர்', 'ராஜசேகர்', கவிஞர் சேகர், கவிஞர் சந்துரு என்று பல பெயர்களில் கவிதைகள், பாடல்கள் எழுதியிருக்கிறார். வானொலியில் எழுதிய பாடலுக்கு பிறைசூடன் என்கிற பெயரைத் தேர்வு செய்ததால் அப் பெயர் நிலைத்து விட்டது.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
சுகாதார அமைச்சு

அங்கொட தேசிய தொற்றுநோய் நிறுவனத்தில் (NIID) ஆய்வுகூட கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல்

விலைமனுக்களுக்கான அழைப்பு

திகதி	**2021 ஒக்டோபர் 10ஆம் திகதி**
தலைப்பு மற்றும் கடன்/ மானிய இல.	**ADB Loan 3727 SRI:** சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம்
ஒப்பந்தத்தின் தலைப்பு	அங்கொட தேசிய தொற்றுநோய் நிறுவனத்தில் **(NIID)** ஆய்வுகூட கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல்
இலக்கம்	**HSEP/PMU/PRO/29.1/28/2021**
விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி	2021 நவம்பர் 10ஆம் திகதி.

01. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்ட கிரயச் செலவிற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) நிதியிடலை பெற்றுள்ளதுடன் இந்த நிதியிடலின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் தகுதியுள்ள வள நாடுகளின் விலைமனுதாரர்களும் இதில் பங்குபற்றலாம்.

02. அங்கொட தேசிய தொற்றுநோய் நிறுவனத்தில் ஆய்வுகூட கட்டிடத் தொகுதியின் நிர்மாணம் மற்றும் பூர்த்தியாக்கல் வேலைகளுக்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை சுகாதார அமைச்சின் செயலாளர் (வேலை கொள்வோர்) அழைக்கின்றார்.

3. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிலையான விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பாவித்து ஆசிய அபிவிருத்தி வங்கியின் பெறுகை வழிகாட்டிகளுக்கமைவாக இரு கடித உறையுடன் ஒற்றைக் கட்ட செயல்முறைக்கமைய திறந்த போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் விலைமனு ஆவணங்களில் விபரிக்கப்பட்டுள்ள தகுதி வாய்ந்த நாடுகளுக்கு திறக்கப்பட்டுள்ளன.

4. பின்வரும் தகைமைகளுடன் தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மட்டும் இந்த விலைமனுக் கோரலில் பங்குபற்றலாம்.

அ. நிதியிடல்

(i) முன்னைய நிதியல் ஆற்றுகை –விலைமனுதாரரின் தற்போதைய நிதி நிலைமையை விபரப்படுத்துவதற்காக கடந்த மூன்று வருடங்களுக்கான (2018/2019, 2019/2020 மற்றும் 2020/2021) கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) சராசரி வருடாந்த நிர்மாணப் புரள்வு – விலைமனுதாரரின் (பங்குதாரர்கள் மற்றும் இணை நிறுவனங்கள் உட்பட) ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிர்மாணப் புரள்வாக 529 மில்லியன் இலங்கை ரூபாவைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அல்லது கடந்த 3 வருடங்களில் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட மொத்தக் கொடுப்பனவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) நிதியிடல் வளம் - விலைமனுதாரர் (ஏற்புடையதாக இருந்தால் - பங்குதாரர்கள் மற்றும் இணை நிறுவனங்கள்) தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒப்பந்தங்களின் நிதியியல் கடப்பாட்டு பொறுப்புகள் தவிர்த்து இந்த ஒப்பந்தத்திற்கான மொத்தத் தேவைப்பாடாக 71.44 மில்லியன் இலங்கை ரூபா அல்லது அதிகமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

முழுமையான தகவுத்திறன் தகைமைகள் விலைமனு ஆவணங்களில் விபரப்படுத்தப்பட்டுள்ளன.

ஆ. அனுபவம்

(i) இதனையொத்த தன்மை மற்றும் அளவுடனான ஒப்பந்தங்கள் - விலைமனுதாரர் (பங்குதாரர்கள் மற்றும் இணை நிறுவனங்கள் உட்பட – ஏற்புடையதானால்) இதனையொத்த உத்தேச வேலைகளில் கடந்த 5 வருடங்களில் திருப்திகரமாக அல்லது போதுமான அளவில் ஒப்பந்தக்காரராக அல்லது இணை பங்குதாரராக அல்லது உப ஒப்பந்தக்காரராக ஆகக்குறைந்தது ஒரு ஒப்பந்தத்தையாவது சித்திகரமான முறையில் பங்குபற்றி பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். விலைமனுதாரரின் பங்குபற்றல் பெறுமதி 211.67 மில்லியன் இலங்கை ரூபாவிற்கும் மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.

5. மேலதிக தகவலைப் பெறுவதற்கும் விலைமனுக்கோரல் ஆவணங்களை வேலை நாட்களில் (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில்) இலவசமாக பரீட்சிப்பதற்கும் விலைமனுதாரர்கள் பின்வரும் வழிகளினூடாக தொடர்பு கொள்ளல் வேண்டும்.

செயற்றிட்டப் பணிப்பாளர் - சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம்,
இல. 3/19, கின்சி வீதி,
கொழும்பு-08, இலங்கை.

மின்னஞ்சல் : pmu@hsep.lk
தொலைபேசி இலக்கம் : +94 112 697 173, +94 112 056 535
தொலைநகல் : +94 112 697 163

6. விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று 2021 ஒக்டோபர் 22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மேலேயுள்ள முகவரியில் தொழில் வழங்குநரினால் நடாத்தப்படும். அனைத்து விலைமனுதாரர்களும் இந்த விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு சமுகமளிக்கும்படி திடமாக அறிவுறுத்தப்படுகின்றனர்.

7. ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்வதற்குத் தகுதியுள்ள விலைமனுதாரர்கள் 2021 நவம்பர் 09ஆம் திகதியன்று பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன்னராக 40,000.00 இலங்கை ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திய பின்னர், எழுத்து மூலமான கோரிக்கை/ விண்ணப்பமொன்றை மேலேயுள்ள முகவரிக்கு செய்வதன் அங்கொட தேசிய தொற்றுநோய் நிறுவனத்தில் ஆய்வுகூட கட்டிடத் தொகுதியின் நிர்மாணமான வேலைகளின் பெறுகைக்கான விலைமனுக்கோரல் ஆவணங்களை வழங்குமாறு விண்ணப்பித்தல் வேண்டும்.

8. பணக்கொடுப்பனவு முறைமையானது வங்கி வரைவு அல்லது ''செயலாளர், சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு க/இ 7040309'' அல்லது ரொக்கப் பணத்தில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் அல்லது இலங்கை வங்கியின் 7040309 என்ற வங்கி கணக்கிலக்கத்திற்கு நேரடியாக வரவு வைத்தல் வேண்டும்.

9. விலைமனுக்கோரல் ஆவணமானது முறையே வெளிநாட்டு ஒப்படைத்தலுக்காக விமான சேவை மூலம் அல்லது தரை மார்க்கமாக அல்லது தூதஞ்சல் மூலமாக உள்ளூர் ஒப்படைத்தலுக்காக 8ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்திற்கு மேலதிக கட்டணமாக 100 அமெரிக்க டாலர்கள் மற்றும் 5000.00 இலங்கை ரூபாவில் செலுத்தலாம். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்பட மாட்டாது.

10. விலைமனு ஆவணங்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள 5.25 மில்லியன் இலங்கை ரூபா விலைமனுப்பிணையுடன் 2021 நவம்பர் 10ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னராக மேலேயுள்ள 5ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறான முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுப்பிணையானது வங்கி உத்தரவாதப் பாங்கில் சமர்ப்பிக்கப்படுமானால், ''செயற்றிட்ட பணிப்பாளர் - சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம்'' என்ற பெயரில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து விலைமனுக்கோரல் படிவங்களின் 4ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள உருமாதிரியை பாவித்து வழங்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.

11. விலைமனுக்கள் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணையானது விலைமனுக்கள் திறக்கப்படும் திகதியிலிருந்து 118 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

12. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிந்தவுடன் உடனடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

13. விலைமனுக்களின் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பாக விலைமனுதாரர்களுக்கேற்படும் எந்தவொரு கிரயச் செலவு அல்லது செலவினங்களுக்கும் சுகாதார அமைச்சின் சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டமானது பொறுப்பேற்க மாட்டாது.

தலைவர், செயற்றிட்ட பெறுகைக் குழு,
சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம்,
இல. 3/19, கின்சி வீதி,
கொழும்பு-08, இலங்கை.

தொலைபேசி இலக்கம் : +94 112 697 173/+94 112 056 535 தொலைநகல்: +94 112 697 163
மின்னஞ்சல் : pmu@ hsep.lk

ஈ.டி.ஐ. பினான்ஸ் எல்டிடி

மீட்கப்படாத அடகு தங்க ஆபரணங்களின் பகிரங்க ஏல விற்பனை

ஈ.டி.ஐ. பினான்ஸ் எல்டிடி இன் பின்வரும் கிளைகளில், 2020.02.28, 2020.03.31, 2020.04.30 மற்றும் 2020.05.31 திகதிகள் வரை அடகு வைக்கப்பட்டு 2021.11.02 அன்று அல்லது அதற்கு முன்னர் மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் தலைமை அலுவலகத்தில் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்கப்படும். ஒவ்வொரு நாளும் மு.ப.9.30 மணிக்கு ஏல விற்பனை ஆரம்பமாகும்.

அடகு வைக்கப் பட்ட திகதி	அடகு வைக்கப்பட்ட கிளைகள	ஏல விற்பனை நடைபெறும் இடம் மற்றும் திகதி
2020.02.28 2020.03.31 2020.04.30 2020.05.31 வரை	அம்பாறை, அம்பலாங்கொடை, பதுளை, பண்டாரவளை, எஹலியகொடை, எம்பிலிபிட்டிய, தில்ஸமஹராமை, குருநாகல், மாத்தறை, மொனராகலை, வெலிமடை, இரத்தினபுரி, அவிசாவளை, தெமட்டகொட, கம்பஹா, ஹோமாகம, மஹரகம, ஹொரண, களுத்துறை, கடவத்தை, கிரிபத்கொட, கொட்டாஞ்சேனை, பிலியந்தல, மொறட்டுவை, கல்கிசை, நீர்கொழும்பு, பொரளை, (டீ.எஸ்.எஸ். மாவத்தை) வெள்ளவத்தை -99, மத்துகம, தம்புள்ளை	இல.114, வோர்ட் பிளேஸ், கொழும்பு -07 பொரளை கிளை 03-11-2021

இந்த ஏல விற்பனையில் கலந்துகொள்ளும் அனைவரும், தமது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டும்.

மேலதிக அறிவித்தல்களின்றி குறித்த ஏல விற்பனையை இரத்துச் செய்யும், ஒன்றிணைக்கும் அல்லது பிற்போடும் உரிமையை, குறித்த நிறுவனமானது தன்வசம் வைத்துள்ளது.

இல. 114, வோர்ட் பிளேஸ், கொழும்பு -07.
தொலைபேசி இலக்கம்: 0117534200, பெக்ஸ் இலக்கம்: 0112674435

குறுக்கெழுத்துப் போட்டி இல. 332

01	02	03	04	05	
06	07			08	
09		10	11	12	13
14	15		16	17	
	18	19			20
21	22	23		24	25

பெயர் .....

வகுப்பு .....

பாடசாலை பெயர் .....

பாடசாலை முகவரி .....

.....

....

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

இடமிருந்து வலம்

(1) கொரோனா வைரஸ் தொற்று ஆபத்தில் இருந்து, மக்களைக் காப்பாற்றுவதற்காக மக்கள் இதனையே முதலில் நம்ப வேண்டும்.

(6) நாம் சுறுசுறுப்பாக புதிய நாள் ஒன்றின் பணிகளை ஆரம்பிப்பதற்கான விடியல் பொழுது. (தலைகீழான சொல்)

(10) நோயைக் குணப்படுத்த வேண்டுமானால் இது அவசியம்.

(14) அரசன் என்ற பொருள் தருகின்ற சொல். (தலைகீழான சொல்)

(16) பொருளொன்றின் பயண (நகர்வு) வேகத்தை அறிவதற்கு பயன்படுத்தப்படுகின்ற சொல்.

(18) உணவு வேளை தாமதமாகி விட்டால் தோன்றிவிடும் உணர்வு.

(21) நம் ஒவ்வொருவருக்கும் முதல் தெய்வம்.

(24) நரம்பிசை வாத்தியக் கருவி.

மேலிருந்து கீழ்

(1) மக்கள் கூட்டமொன்றுக்குத் தலைமை தாங்குபவன் இவன்.

(2) புவியின் வெப்பத்தை உரியபடி பேணுவதிலும், வளியில் ஒட்சிசன் அளவை பேணுவதிலும் பிரதான பங்காற்றுவது. உயிரினங்களின் இருப்பிடம். (தலைகீழான சொல்)

(5) தனது உடலில் சுரக்கும் ஒருவகை திரவத்தால் வலை பின்னி, சிறு பூச்சிகளை சிக்க வைத்து இரையாகக் கொள்ளும் உயிரினம்.

(11) முட்டையின் உள்ளே உள்ளது. (தலைகீழான சொல்)

(15) நாம் ஒவ்வொருவரும் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டிய சீற்ற உணர்வு.

(19) மீன்களில் இருந்து தயாரிக்கப்படும், வன்மைத் தன்மை நிறைந்த உணவுப் பொருள். (தலைகீழான சொல்)

(21) குளத்தில் நீரைத் தேக்கி வைப்பதற்கான தடுப்புச் சுவர்.

போட்டி இல. 332

சிறுவர் உலகம்

தினகரன் வாரமஞ்சரி

த.பெ.இல.834.

கொழும்பு

நாட்டின் தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக பாடசாலைகள் இயங்காததாலும் தபால் சேவை சீராக இல்லாததாலும், குறுக்கெழுத்துப் போட்டிகளுக்கான பரிசில்கள் வழங்கப்படாது என்பதை எமது சிறார்களுக்கு அறியத் தருகின்றோம். ஆனாலும் ஆர்வம் கொண்ட சிறார்களுக்காக குறுக்கெழுத்துப் போட்டிகள் தொடர்ந்தும் இடம்பெறும். (ஆர்)

குறளமுதம் :

பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி
இன்னாசெய் யாமை தலை.

தெளிவுரை :

ஒருவன் தன்னோடு பொருந்தாமல் வேறுபடுதலைக் கருதி அன்பில்லாதவற்றைச் செய்தாலும், தான் இகல் கொண்டு அவனுக்குத் துன்பம் செய்யாதிருத்தல் சிறந்தது.

அம்மா சொல் கேள்!

செழிப்பான ஒரு புல்வெளியில் ஆடுகள் மேய்ந்துகொண்டிருந்தன. அவற்றை மேய்த்து வந்தவன், மரத்தடியில் உட்கார்ந்து கண் மூடி, புல்லாங்குழல் வாசித்துக்கொண்டிருந்தான்.

புல்வெளியைச் சுற்றி வேலி போடப்பட்டிருந்தது. அதன் அருகே, ஓர் ஆட்டுக்குட்டி

மேய்ந்து கொண்டிருந்தது. வேலிக்கு வெளிப் பக்கம் இருந்த ஓநாய் ஒன்று ஆட்டுக் குட்டியைப் பார்த்தது.

வேலிக்குள் முகத்தை நுழைத்துக்கொண்டு, ஓநாய் எதையோ பார்ப்பது போல பாசாங்கு செய்தது. அதைப் பார்த்த ஓர் ஆட்டுக்குட்டி, "உனக்கு என்னவேண்டும்?" என்று கேட்டது.

ஓநாயும் "நண்பா, நண்பா..." இங்கே இளசான புல் கிடைக்குமா என்று பார்க்கி றேன்! இளம்புல் என்றால் எனக்கு ரொம்பப் பிரியம். அதைத் தின்று, ஜில்லென்று தண்ணீர் குடித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! உங்களுக்கெல்லாம் அந்த யோகம் கிடைத்திருக்கிறது! எனக்கு அது கிடைக்கவில்லை.." என்று வருத்தத்துடன் கூறியது.

"அப்படியா! நீ புல்லா சாப்பிடுவாய்? நீ மாமிசத்தைத்தான் சாப்பிடுவாய் என்று என் அம்மாவும் அப்பாவும் சொன்னார்களே?" என்று ஆச்சரியத்துடன் கேட்டது ஆட்டுக் குட்டி.

"சேச்சே.. அதெலாம் சுத்தப் பொய்!" என்றது ஓநாய்.

"அப்படியென்றால் இரு. நான் வெளியே வந்து, மலையின் அந்தப் பக்கம் இளம்புல் இருக்குமிடத்தைக் காட்டுகிறேன். நாம் இரண்டு பேரும் போய், அதைச் சாப்பிட்டுவிட்டு, ஃப் ரெண்ட்ஸாக ஜாலியாகச் சுற்றலாம்!" என்று சொல்லிவிட்டு ஆட்டுக்குட்டி வேலி இடுக்கின் வழியாக நுழைந்து, ஓநாயின் பக்கம் போயிற்று.

"உடனே ஓநாய் அதன்மீது பாய்ந்து அதைக் கொன்று தின்றது.

அந்த ஆட்டுக் குட்டிக்குத் தானாகத் தெரிய வில்லை. அது போகட்டும், பரவாயில்லை.. அனுபவம் நிறைந்த அம்மா, அப்பா பேச்சை கேட்டிருந்தால், மதிப்பு வாய்ந்த, தன் உயிரை இழந்திருக்காது அல்லவா?

செ. கீர்த்தனா,
கொட்டகலை.

இவ்வார மழலையர்

அத்விக் - அஜய்,

ரஸ்கின் பிரியதர்ஷினி,
சித்தங்கேணி, யாழ்ப்பாணம்.

வி. திரிவேத்,
தரம் 02, ஜே.எம்.சி சர்வதேச கல்லூரி,
நீர்கொழும்பு.

கே. கிஷாலன்,
தரம் 06, லசாலி ஆங்கில பாடசாலை,
கொட்டாஞ்சேனை.

ராசிதா ரிபாய்,
தரம் 05, களுஸாஹிரா ஆரம்பப் பாடசாலை,
தர்கா நகர்.

வி. அபிசாலினி
தரம் 02B, வெள்ளவத்தை சைவ மங்கையர் கல்லூரி,
கொழும்பு 06.

வெற்றிக்கு துணைபுரியும் ஆர்வம்

இவ்வுலக வாழ்வில் வெற்றிபெற வேண்டும் என்பதே அனைவரினதும் விருப்பமும் ஆசையுமாகும். அதற்காக மண்ணிலும், விண்ணிலும் எத்தனையோ போட்டிகளில் உலக மக்கள் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களில் சிலர் மண்ணுலகிலிருந்து விண்ணுலகம் சென்று வெற்றியும் பெற்றுள்ளனர். வியக்கத்தக்க சாதனைகளையும் படைத்துள்ளனர்.

ஆனால் நம்மில் சிலர் வாழ்க்கையில் வெற்றி பெற முடியாமல் அவஸ்தைப்படுவதையும் காண்கின்றோம். இவர்கள் வெற்றியைத் தேடி எங்கோ அலைகின்றனர். இதை எங்கும் தேடி அலைய வேண்டியதில்லை. அது எமது செயற்பாட்டில்தான் தங்கியிருக்கின்றது என்பதை பெரும்பாலானோர் அறிந்துகொள்ளத் தவறி விடுகின்றனர்.

உயர்வான எண்ணங்கள் மனச்சோர்வற்ற விடா முயற்சிகள் ஆர்வத்தோடு மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான செயற்பாடுகளுமே இந்த வெற்றிப் படிகளாகும். ஆர்வம் இல்லாத மனிதன் இறக்கை எற்ற பறவைக்கு ஒப்பானவன் என்பது பழமொழியாகும். ஆகவே வாழ்வில் வெற்றியைப் பெற்று உயர்வடைவதற்கு ஆர்வம் என்ற உணர்வும் நமக்கு கட்டாயத் தேவையாகும்.

நமது அன்றாட வாழ்வில் எடுத்த காரியத்தை வெற்றியோடு முடிக்க வேண்டுமாயின் ஆர்வம் என்ற உணர்வு எமக்கு கட்டாயம் தேவையாகும். ஆர்வம் நம்மில் திடமாக இருக்குமாயின் எம்மைச் சூழ்ந்துள்ள இன்னல்களும், இடையூறுகளும் ஆர்வம் என்ற உணர்வின் முன் மண்டியிட்டு மறைந்தே போகும்.

ஆகாயத்தில் பறவைபோல் பறக்கக்கூடிய விமானத்தை தயாரிக்க வேண்டுமென்ற உயர்வான எண்ணம் ரைட் சகோதரர்களுக்கு சிறுவயதிலேயே ஏற்பட்டது. ஆர்வத்தோடு முயற்சிகளை மேற்கொண்டனர். உலகம் போற்றும் வெற்றியும் கண்டனர்.

கணனியைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற ஆர்வம் சார்லஸ் பபேஜ் என்பவருக்கு ஏற்பட்டது. மனச்சோர்வற்ற விடாமுயற்சியுடன் செயற்பட்டார், வெற்றியும் கண்டார். கணனி உலகத்திற்கு அறிமுகமானது. அதன் மூலமாக இன்று பல லட்சக்கணக்கான செயற்பாடுகள் இடம்பெற்று வருவதையும் நாம் அறிவோம்.

உலகுக்கு தேவையான சாதனங்களை கண்டுபிடிக்க வேண்டுமென்ற தணியாத ஆர்வம் அக்கால அறிஞர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் ஏற்பட்டது. ஆர்வத்தோடு ஆராய்ச்சியில் ஈடுபட்ட பிரேட்ரிக் பன்ரிங் என்பவர் இன்சுலின் மருந்தைக் கண்டுபிடித்தார். இம்மருந்தின் மூலம் இன்று உலகிலே எத்தனையோ நோயாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

ஆர்வத்துடன் ஈடுபட்ட தோமஸ் அல்வா எடிசன் மின்குமிழைக் கண்டுபிடித்தார். ஜோர்ஜ் ஸ்டீவன்சன் புகையிரதத்தைக் கண்டுபிடித்தார். கிரஹம்பெல் என்பவரால் தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டது. சேர் ஜசக் நியூட்டன் என்பவரால் புவி ஈர்ப்புவிசை கண்டுபிடிக்கப்பட்டது.

எலன் மஸ்க் என்பவர் மின்சாரத்தினால் இயங்கும் காரைக் கண்டுபிடித்தார். மார்க் ஸக்கர்பேர்க் என்பவரால் முகப்புத்தகம் (Facebook) கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வாறு எத்தனையோ கண்டுபிடிப்புக்கள் அத்தனைக்கும் ஆர்வமே துணையாக அமைந்தது.

மேலும் அன்று மனிதன் கற்பனையில் கூட நினைத்திராத அப்பலோ விண்வெளிப் பயணங்கள் இன்னும் இவைபோல் மண்ணிலும் விண்ணிலும் விரிந்து செல்லும் நாம் அறிந்ததும் அறியாததுமான எத்தனையோ விஞ்ஞான சாதனைகள், அத்தனைக்கும் விடாமுயற்சிகளோடு கூடிய ஆர்வமே காரணமாக அமைந்தன.

எனவே எதிர்காலத்தில் நாம் உயர்வான எண்ணங்களையும் மனச்சோர்வற்ற விடாமுயற்சிகளையும் ஆர்வத்தோடு கூடிய செயற்பாடுகளையும் கடைப்பிடித்து வெற்றிக்கு துணைபுரியும் ஆர்வம் என்ற உணர்வுக்கு உயிரூட்டி வாழ்க்கையில் நாமும் வெற்றி பெறுவோமாக.

M.T.A. கபூர்,
நிந்தவூர்

விடுகதைகள்

- இவன் வாலுக்கு வையகமே நடுங்கும் அவன் யார்?
  தேள்
- பிடுங்கலாம் நடமுடியாது அது என்ன?
  தலைமுடி
- உடம்பில்லா ஒருவன் பத்து சட்டை அணீந்திருப்பான்? அவன் யார்?
  வெங்காயம்
- கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பான். அவன் யார்?
  கரும்பு
- மரத்தின் மேலே தொங்குவது மலைப் பாம்பல்ல அது என்ன?
  விழுது
- இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது அது என்ன?
  பட்டாசு
- ஆலமரம் தூங்க அவனியெல்லாம் தூங்க, சீரங்கம் தூங்க திருப்பாற்கடல் தூங்க, ஒருவன் மட்டும் தூங்கவில்லை அவன் யார்?
  மூச்சு
- கொதிக்கும் கிணற்றில் குதித்துக் குண்டாகி வருவான். அவன் யார்?
  பூரி
- கருப்பு நிறமுடையவன், கபடம் அதிகம் கொண்டவன், கூவி அழைத்தால் வந்திடுவான், கூட்டம் சேர்த்தும் வந்திடுவான் – அவன் யார்?
  காகம்
- பச்சை பொட்டிக்குள் வெள்ளை முத்துகள் ?
  வெண்டைக்காய்

வெள்ளைக்கொக்கு

ஆத்தங்கர ஓரத்தின் மீன்குஞ்சுகள்
அலையாய் அலைந்து நீந்தித்தாம் அதை
காத்து நின்ற வெள்ளக்
கொக்கு கவ்வி மீனைப் பிடிச்சுதாம்

ஓடிவந்த மீனைக் கண்டதும்
ஓற்றைக் காலில் நின்றகொக்கு சொண்டால்
வடிவாகவே பிடித்த மீன் குஞ்சை
வாயில் தின்னப் பார்த்ததாம்

கூட்டில் இருந்த குஞ்சுகளுக்கு
ஊட்ட உணவை சேர்த்ததாம் குஞ்சுகள்
வாடி வதங்கி வாட்டமடைந்ததும்
தாயைக் கண்டு மகிழ்ந்ததாம்

வெள்ளை கொக்கைப் பிடிக்க வேண்டி
வேடன் வலைவிரித்து நின்றானாம்
கள்ளப் பார்வை பார்த்த கொக்கு
கலைந்து கானகம் சிறை மீட்ட பறந்ததாம்..!

வீரசொக்கன்

கல்வி பற்றிய பொன்மொழிகள்

★ தொழில் இல்லாத கல்வி நீரின்றி வாடும் மரத்தை போன்றது.!

★ கல்வி என்பது பல மூட்டை நூல்களை வாசிப்பது இல்லை.. அடக்கம்.. ஒழுங்கு.. அறம்.. மற்றும் நீதி இவற்றின் முன்மாதிரி ஆகும்.!

★ படிப்பு, படிப்பு என்று பலரும் படித்துக்கொண்டே இருக்கிறார்கள் சிலர் நமது சிந்தனை சக்தியை இழப்பது வரை படிக்கிறார்கள். படிப்பதை நிறுத்தி விட்டு முதலில் படித்ததைப் பற்றி சிந்தியுங்கள்.

★ ஒழுக்கம் உண்டாகாத இலக்கியக் கல்வியால் ஒருவித பயனும் கிடையாது.

என். வினோமதிவதனி, லுணுகலை.

மாணவர் கழக அனுமதி

மாணவர் பெயர் .....

பிறந்த திகதி .....

வகுப்பு .....

பாடசாலை .....

.....

.....

வகுப்பாசிரியர் கையொப்பம்

வர்ணப் புகைப்படம்

மாணவர் கழகம்
சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல.834 கொழும்பு.

விளையாட்டு

விரலில் சத்திரசிகிச்சை:

பென் ஸ்டோக்ஸ் ஆஷஸ் தொடரில் பங்கேற்பாரா?

பென் ஸ்டோக்ஸ் விரலில் அறுவை சிகிச்சை மேற் கொண்டுள்ளதால் ஆஷஸ் தொடரை இழக்க நேரிடும் என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் தவிர்க்க முடியாத வீரர்களுள் ஒருவர் பென் ஸ்டோக்ஸ். கடந்த 2019 ஆம் ஆண்டு இங்கிலாந்து அணி முதன் முறையாக உலகக் கிண்ணத்தை வென்றதில் இவரின் பங்கு மிக முக்கியமானதாக அமைந்தது. இவர் கடந்த ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற ஐ.பி.எல். போட்டியில் விளை யாடிய போது அவரது கை விரலில் காயம் ஏற்பட்டது. இதனையடுத்து தனது காயத்திற்கு சிகிச்சை எடுத் துக்கொண்டார்.

தற்போது இரண்டாவது முறையாக விரலில் ஏற் பட்ட காயத்திற்காக சிகிச்சை எடுத்துக்கொண்டுள்ளார். இதனால் அவர் எதிர்வரும் டிசம்பர் மாதம் அவுஸ்தி ரேலியாவில் நடைபெறும் ஆஷஸ் தொடரில் பங் கேற்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக இங்கி லாந்து கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. புகழ்பெற்ற ஆஷஸ் தொடரானது டிசம்பர் 8ம் திகதி பிரிஸ்பே னில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

பென் ஸ்டோக்ஸ் கடந்த 2019ஆம் ஆண்டு நடந்த ஆஷஸ் போட்டியின் போது தோற்கும் நிலையில் இருந்த தனது அணியை போராடி ஆட்டமிழக்காமல் 135 ஓட்டங்கள் எடுத்து ஒரு விக்கெட் வித்தியாசத் தில் வெற்றி பெறச்செய்தார். காயம் காரணமாக ஏற் கனவே அவர் இருபது ஓவர் உலகக்கோப்பை போட்டி யில் இருந்து விலகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை கிரிக்கெட்டின் அனுசரணையாளராகும் AstroPay நிறுவனம்

ஐக்கிய இராச்சியம், லத்தின் அமெரிக்கா ஆகி யவற்றை மையமாக கொண்டு இயங்கும் கட்ட ணத் தீர்வு நிறுவனமான AstroPay ஒக்டோபர் மாதம் 17ஆம் திகதி தொடக்கம் நவம்பர் மாதம் 14ஆம் திகதி வரை ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமான் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ள ரி 20 உலகக் கிண்ணத்தில் இலங்கை கிரிக்கெட் அணியின் பிரதான அனுச ரணையாளராக செயற்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

கால்பந்து அணிகளின் முன்னணி அனுசரணையாளராக திகழும் AstroPay நிறுவனம் இலங்கை கிரிக் கெட் அணிக்கு அனுசரணை வழங் கியே, முதன் முறையாக கிரிக்கெட் அணியொன்றுக்கு அனுசரணை வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் AstroPay நிறுவ னம் இலங்கை கிரிக்கெட் மேற் கொண்ட ஒப்பந்தங்களுக்கு அமைய, அந்த நிறுவனத்தின் இலட்சினையா னது இலங்கை கிரிக்கெட் அணியின் ஜேர்சியிலும் (Jersey), பயிற்சி ஜேர் சியிலும் காணப்படும் எனத் தெரி விக்கப்பட்டிருக்கின்றது. மறுமு னையில், AstroPay நிறுவனத்தின் வர்த்தக இலட்சினை இலங்கை கிரிக்கெட் அணியின் இணையத ளத்திலும், அதன் சமூக வலைதள கணக்குகளிலும் காணப்ப டும் எனக் குறிப்பிடப்பட்ட டிருக்கின்றது.

இலங்கை அணிக்கு அனு சரணையாளர்களாக மாறி யிருக்கும் விடயம் குறித்து தெரிவித்திருக்கும் AstroPay நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரியான Mikael Lijtenstein கால்பந்தினை அடுத்து சர்வதேச கிரிக்கெட் அணி யொன்றுக்கு அனுசரணை வழங்கி யதில் மகிழ்ச்சியுடன் காணப்படுவ தாக தெரிவித்திருந்தார்.

மறுமுனையில் புதிய அனுசர ணையாளர்கள் இலங்கை கிரிக்கெட் டுடன் ரி 20 உலகக் கிண்ணத்திற் காக கைகோர்த்திருப்பது, மகிழ்ச்சி தரும் விடயமாக அமைகின்றது என இலங்கை கிரிக்கெட் சபையின் நிறைவேற்று அதிகாரி அஷ்லி டி சில்வா குறிப்பிட்டிருக்கின்றார்.

20க்கு20 கிரிக்கெட்

400 சிக்சர்கள்; ரோகித் சாதனை!

20க்கு20 கிரிக்கெட்டில் 400 சிக்சர்கள் அடித்த முதல் இந்திய வீரர் என்ற சாதனையை படைத்தார் ரோகித் சர்மா .

ஐ.பி.எல். கிரிக்கெட்டின் 51வது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியும் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியும் மோதின. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவர் ரோகித் சர்மா பந்துவீச்சு தேர்வு செய்தார்.

அதன் படி முதலில் களம் இறங்கிய ராஜஸ்தான் அணி 9 விக்கெட்டுகளை இழந்து 90 ஓட்டங்கள் மட்டுமே எடுத் தது.

இதையடுத்து 91 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய மும்பை அணி 8.2 ஓவரில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 94 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் மும்பை அணி வெற்றி பெற்றது.

மும்பை அணியில் அதிகபட்சமாக இஷான் கிஷான் அதிரடியாக விளையாடி அரை சதம் அடித்து (50) ஓட்டங் கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

மும்பை அணியின் தலைவர் ரோகித் சர்மா 22 ரன்க ளில் ஆட்டமிழந்தார். இந்த போட்டியில் ரோஹித் சர்மா ஒரு சிக்ஸ் அடித்தார். இந்த சிக்ஸரினால் 20 ஓவர் கிரிக் கெட்டில் 400 சிக்சர்கள் அடித்த முதல் இந்திய வீரர் என்ற சாதனையை படைத்தார்.

இந்திய, பாகிஸ்தான் உலகக்கிண்ண போட்டி

தயாராக காத்திருக்கும் வெற்றுக் காசோலை அதிர்வ்டம்

2021 ஐசிசி உலக ரி 20 போட்டியில் பரம எதிரியான இந்தியாவை தோற்கடித்து பாபர் அசாம் தலைமையிலான அணி புதிய சாதனை நிலைநாட்டுமா என ஒட்டுமொத்த இரசிகர்களதும் எதிர்பார்ப்பாக காணப்படு கின்றது.

கிரீன் ஆர்மி, விராட் கோஹ்லி தலைமை யிலான இந்திய அணியை உலகக் கோப்பை யில் வீழ்த்தினால், பாகிஸ்தானின் கிரிக்கெட் சபைக்கு ஒரு வெற்று காசோலை தயாராக உள்ளது எனும் தகவல் ஆச்சரியமளிக்கிறது.

ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமானில் இந்தியா நடத்தும் ஐசிசி உலக ரி 20 யின் 2021 பதிப்பில் கோஹ்லி தலைமையிலான இந்திய அணி பரம போட்டியாளர்களான பாகிஸ்தானுடன் தங்கள் போட்டியை வரும் 24 ம் திகதி தொடங்க உள்ளது.

இந்தியாவுக்கு எதிரான நீண்டகால உல ககக்கோப்பை தோல்வியை அஸாம் தலை மையிலான அணி முடிவுக்கு கொண்டுவரும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட்டின் பல கிரிக் கெட் வீரர்கள் மற்றும் பிரபலங்கள் நம்பிக் கையுடன் உள்ளனர். பிசிபியின் தலைவராக சமீபத்தில் நியமிக்கப்பட்ட ராஜா, பாகிஸ்தா னில் கிரிக்கெட்டை மேம்படுத்துவதாக உறு தியளித்தார்.

கிரிக்கெட் பாகிஸ்தானால் தாக்கல் செய் யப்பட்ட அறிக்கையின்படி, உலகக் கிண் ணத்தில் இந்தியாவை தோற்கடித்ததற்கான வெகுமதியாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு ஒரு வெற்று காசோலை தயாராக இருப்பதாக பாரிய முதலீட்டாளர்களுள் ஒருவர் தெரிவித்ததாக ரமீஸ் ராஜா வெளிப்ப டுத்தினார்.

"ஐசிசியின் நிதியில் பிசிபி 50 சதவிகிதம் இயங்குகிறது. ஆனால் ஐசிசிக்கு 90 சதவீத நிதி இந்தியாவிலிருந்து வருகிறது என்பதும் இங்கே முக்கியமானது. ஐசிசிக்கு இந்தியா நிதியளிப்பதை நிறுத்தினால், பிசிபி ஐசிசிக்கு பூஜ்ஜிய சதவீத நிதியை வழங்குவதால் பிசிபி சரிந்துவிடக்கூடும் என்று நான் பயப்படுகி றேன். ஆயினும் பாகிஸ்தான் கிரிக்கெட்டை வலுவாக மாற்ற நான் உறுதியாக இருக்கி றேன் என்றார் ரமீஸ் ராஜா.

பாகிஸ்தானின் கிரிக்கெட் பொருளாதா ரத்தை மேம்படுத்துவதும் பிசிபி தலைவர் பதவியில் அவருக்கு இரண்டு பெரிய சவால் கள் என்று ராஜா நம்புகிறார். ஒவ்வொரு வரு டமும் குறைந்தது நான்கு மில்லியன் ரூபாய் சம்பாதிக்க வேண்டும் என்று நாங்கள் விரும் புவதால், உள்நாட்டு கிரிக்கெட் வீரர்களின் சம்பளத்தை ஒரு லட்சம் ரூபாய் உயர்த்தி யுள்ளோம். இது தொடர்பாக பிசிபி ஆதரவா ளர்களைத் தேடுகிறது, "என்று அவர் மேலும் கூறினார்.

ஆக மொத்தத்தில் பாகிஸ்தான் அணி அணி இந்தியாவை தோற்கடித்தால் வெற் றுக்காசோலை மூலம் எவ்வளவு கிடைக்கும் என்பதே எல்லோரதும் இப்போதைய எதிர் பார்ப்பாகும்.

பந்துவீச்சாளர்களால் 2014 இல் உலக சாதனை படைத்த இலங்கை

இலங்கை கிரிக்கெட் அணியின் பொற்காலமாக கருதப்பட்ட 2014ஆம் ஆண்டில் நடைபெற்ற ரி 20 உலகக் கிண்ணத் தொடரில் குழு 1 இல் காணப்பட்ட இலங்கை அணிக்கும், நெதர் லாந்து அணிக்கும் இடையி லான குழுநிலை போட்டி யில், மிகப் பெரிய சாதனை ஒன்றினை இலங்கை அணி செய்திருந்தது.

ஒரு காலத்தில், கத்துக் குட்டி கிரிக்கெட் அணிகள் இலங்கை அணியுடன் கிரிக்கெட் போட்டி களில் விளையாடும் சந்தர்ப்பம் ஒன்று உரு வாகினால், இலங்கை கிரிக்கெட் அணி கத்துக்குட்டி அணிகளை வைத்து சில சாதனைகள் செய்துவிடுவது வழக்கமாக காணப்பட்டிருந்தது. இவ்வாறான சாத னையொன்றே இலங்கை – நெதர்லாந்து அணிகள் இடையிலான ரி 20 போட்டியின் போதும் நடைபெற்றிருந்தது.

பங்களாதேஷின் சட்டோக்ராம் நகரில் ஆரம்பித்த நெதர்லாந்து – இலங்கை இடையிலான குறித்த போட்டியில் தினேஷ் சந்திமால் தலைமையில் களமி றங்கிய இலங்கை கிரிக்கெட் அணி, போட் டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பாடும் சந்தர்ப்பத்தினை பீட்டர் போரன் தலைமையிலான நெதர் லாந்து அணிக்கு வழங்கியது.

தொடர்ந்து இலங்கை அணிக்கு எதிரான போட்டியில் நல்ல ஆரம்பம் ஒன்றினை அடையும் என்ற எதிர்பார்ப்புடன் களமி றங்கிய நெதர்லாந்து அணிக்கு ஆரம்பத் தில் இருந்தே இலங்கை பந்துவீச்சாளர்கள் மூலம் அதிர்ச்சி உருவாக்கப்பட்டிருந்தது.

போட்டியின் முதல் ஓவரினை வீசிய இலங்கை அணியின் வேகப் பந்துவீச்சா ளரான நுவான் குலசேகர தனது ஓவரின் மூன்றாவது பந்தில் நெதர்லாந்தின் ஆரம் பத் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான ஸ்டீபன் மேய்பேர்க்கினை பிடியெடுப்பு மூலம் ஓட்டம் எதுவுமின்றி ஓய்வறை அனுப்பினார். இதன் பின்னர், போட்டி யின் அடுத்த ஓவரினை வீசிய அஞ்சலோ மெத்திவ்ஸ் நெதர்லாந்தின் முன்வரிசை துடுப்பாட்டவீரர்கள் இருவரினை ஓய்வ றைக்கு அனுப்பினார். இதில் மைக்கல் ஸ்வார்ட் ஓட்டம் எதனையும் பெறாமல் விக்கெட்காப்பாளர் குமார் சங்கக்காரவி டம் பிடிகொடுத்திருக்க, வெஸ்லி பர்ரெஸி ஒரு ஓட்டத்துடன் மீண்டும் பிடியெடுப் பில் வெளியேறியமை குறிப்பிடத்தக்கது. இதனால், ஒரு ஓட்டத்திற்கு 3 விக்கெட்டுக் களை இழந்து நெதர்லாந்து அணி தொடக் கத்திலேயே தடுமாற்றம் காட்டியது.

இதனையடுத்து போட்டியின் நான்கா வது ஓவரில் மீண்டும் அசத்திய அஞ்சலோ மெத்திவ்ஸ், நெதர்லாந்து அணியின் நான் காவது விக்கெட்டினை வீழ்த்தினார். நான் காவது விக்கெட்டாக அதன் தலைவர் பீட்டர் போரன் ஓட்டம் எதனையும் பெறாது எல்பிடபிள்யு முறையில் தனது விக்கெட்டினைப் பறிகொடுத்தார்.

அதனையடுத்து அவ்வணி தமக்கு ஏற்பட்ட சரிவினை சரி செய்ய முயன்ற போதும், 5ஆவது விக்கெட் 25 ஓட்டங்கள் பெற்ற போது ரன்அவுட் முறையில் பறி போனது. திசர பெரேராவினால் ரன் அவுட் செய்யப்பட்ட பென் கூப்பர் 8 ஓட்டங்களு டன் வெளியேறினார்.

நெதர்லாந்து அணி தமது ஐந்தாவது விக்கெட்டினை அடுத்து மிகப் பெரிய அனர்த்தம் ஒன்றுக்கு முகம் கொடுத்தது. அவ்வணியின் மத்திய வரிசை வீரர்கள் இலங்கையின் வேகப் புயலான லசித் மாலிங்கவினை எதிர்கொள்ள முடியாமல் தமது விக்கெட்டுக்களை மிக வேகமாக பறிகொடுத்தனர். இதன் பின்னர், மாயஜால சுழல்பந்துவீச்சாளரான அஜந்த மெண்டிஸ் தனது பந்துவீச்சு மூலம் நெதர்லாந்து அணிக்கு மீண்டும் நெருக்கடியினை உரு வாக்கினார்.

இதனால் நெதர்லாந்து அணி தமது இறுதி 5 விக்கெட்டுக் களையும் வெறும் 14 ஓட்டங்களுக்குள் பறிகொடுத்து, மொத்தமாக 39 ஓட்டங்க ளுக்குள் தமது அனைத்து விக்கெட்டுக்க ளையும் இழந்து ரி 20 சர்வதேசப் போட் டிகளில் அப்போது அணியொன்று பதிவு செய்த மிகக் குறைந்த ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இது நெதர்லாந்து அணி அவர்களது கிரிக்கெட் வரலாற்றில் வெளிப்படுத்திய மிகப் பெரிய தர்ம சங்கட துடுப்பாட்டமாகவும் மாறியிருந்தது.

நெதர்லாந்தினை 39 ஓட்டங்களுக்குள் மடக்கியதன் மூலம் ரி 20 உலகக் கிண்ணப் போட்டிகளில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற அணியாகவும், எதிரணியினை அதிகுறைந்த ஓட்டங்களுக்குள் மடக்கிய அணியாகவும் இலங்கை ஒரு வரலாற்று சாதனையினைப் படைத்தது.

தொடர்ந்து நெதர்லாந்து அணியுடனான போட்டியில் 9 விக்கெட்டுக்களால் வெற்றி யினைப் பதிவு செய்த இலங்கை கிரிக்கெட் அணி, தமது குழுவிலும் முதல் இடம் பெற்று, அரையிறுதி, இறுதிப் போட்டி என அனைத்திலும் வெற்றி பெற்று 2014ஆம் ஆண்டு ரி 20 உலகக் கிண்ண வெற்றியாளராகவும் மகுடம் சூடியது.

மறுமுனையில் நெதர்லாந்திற்கு எதிரான போட்டியில் இலங்கை அணி சார்பில் எதிர்பாராத திருப்பங்களை ஏற்படுத்த கார ணமாக இருந்த அஞ்சலோ மெத்திவ்ஸ் ஆட்டநாயகன் விருதினை வென்றிருந்த மையும் குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலிய கால்பந்து சங்க முறைகேடு

குற்றச்சாட்டுகளை விசாரிக்க உறுதியளிப்பு

இளைய பெண் வீரர்கள் மற்றும் அதிகாரிகளை துஷ்பிரயோகம் செய்பவர்களைப் பாதுகாப்பதை தாம் பார்த்ததாக ஓய்வு பெற்ற வீராங்கனை லிசா டி வன்னா கூறுகிறார்.

சமீபத்தில் ஓய்வுபெற்ற சர்வதேச ஸ்ட்ரைக்கர் லிசா டி வன்னா தனது தொழில் வாழ்க்கையில் பாலியல் வன்கொடுமை, துன்புறுத்தல் மற்றும் கொடுமைப்படுத்துதல் ஆகியவற்றால் பாதிக்கப்பட் டதாகக் கூறியதை அடுத்து, அவுஸ்திரேலியா கால் பந்து சங்கம் துஷ்பிரயோக குற்றச்சாட்டுகளை விசா ரிக்க உறுதியளித்துள்ளது.

அவுஸ்திரேலியா கால்பந்து சங்கம் புதன்கிழமை ஒரு அறிக்கையில், எந்தவொரு துஷ்பிரயோக குற்றச் சாட்டுகளையும் விசாரிப்பதாகவும், நாட்டில் ஊக்க மருந்து மற்றும் ஊழலை மேற்பார்வையிடும் அரசு நிறுவனமான ஸ்போர்ட் இன்டெக்ரிட்டி அவுஸ்திரே லியா (எஸ்ஐஏ) வீரர்கள் மற்றும் ஊழியர்களுக்கான சுயாதீன புகார் செயல்முறையை மேற்பார்வையிடும் என்றும் கூறியுள்ளது.

முன்னாள் வட கரோலினா தலைமை பயிற்சியா ளர் பால் ரிலே மீது தவறான நடத்தை குற்றச்சாட்டு கள் குறித்து கருத்து தெரிவித்த அமெரிக்க சர்வதேச வீரர் மேகன் ராபினோவின் ட்விட்டர் பதிலுக்கு டி வன்னா தனது ஆரம்ப குற்றச்சாட்டுகளை கூறினார்.

36 வயதான டி வன்னா, இரண்டு தசாப்தங்க ளாக தனது நாட்டிற்காக 150 முறை விளையாடி 47 கோல்களை அடித்தார், அவர் இளம் பெண்கள் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகம் செய்பவர்களைப் பாதுகாக்கும் அமைப்பைப் பார்த்ததாக பதிலளித்தார்.

"விளைவுகள் இருக்க வேண்டும். பொறுப்புணர்வு இருக்க வேண்டும், "என்று அவர் நியூஸ் கார்ப்ஸ் ஊடகத்திற்கு அளித்த பேட்டியில் கூறினார்.

"நான் பல வருடங்களாக எல்லா நிலைகளிலும் கலாசாரப் பிரச்சினைகளைக் கண்டேன் ஆண்கள் மற்றும் பெண்கள் மற்றும் வரும் பெண்கள் தைரி யமாக இருக்க வேண்டும், மேலும் இதைச் சந்தித்த பெண்களும் தைரியமாக இருக்க வேண்டும் மற்றும் அவர்கள் தனியாக இல்லை என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

"நான் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டேனா? ஆம். நான் கொடுமைப்படுத்தப்பட்டேனா? ஆம். ஒதுக் கப்பட்டேனா? ஆம். எனக்கு சங்கடத்தை ஏற்படுத்திய விஷயங்களை நான் பார்த்திருக்கிறேனா? ஆம்."

அவுஸ்திரேலியா கால்பந்து சங்க தலைமை நிர்வாகி ஜேம்ஸ் ஜோன்சன், "அனைத்து கால்பந்து வீரர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் பாதுகாப் பான, உள்ளடக்கிய சூழலுக்கு நாங்கள் உறுதிபூண் டுள்ளோம்."

"எங்கள் விளையாட்டில் துஷ்பிரயோகம், துன் புறுத்தல் அல்லது கொடுமைப்படுத்துதல் ஆகி யவற்றுக்கு இடமில்லை, இந்த பிரச்சினைகளை நேரடியாகக் கையாளும் போது எங்களைப் போன்ற நிறுவனங்கள் முன்னிலை வகிக்க வேண்டும்."

அவுஸ்திரேலியா கால்பந்து சங்கம் சமீபத்தில் ஒரு சுயாதீன புகார்கள் செயல்முறை பற்றி விவாதிக்க ஸ்போர்ட் இன்டெக்ரிட்டி அவுஸ்திரேலியா அணு கியதாகவும், ஜோன்சனை சரியான நேரத்தில்" அறி விப்பை வரவேற்றதாகவும் கூறினார்.

அமெரிக்கவில் நடந்த ஊழலை அடுத்து டி வன்னா தனது குற்றச்சாட்டுகளை பகிரங்கப்படுத்தினார், அங்கு தேசிய மகளிர் கால்பந்து லீக் வார இறுதி நா ட்களில் விளையாட்டுகளை நிறுத்தியது மற்றும் அதன் ஆணையாளர் நீண்டகால பயிற்சியாளர் சம் பந்தப்பட்ட பாலியல் துன்புறுத்தல் மற்றும் தவறான நடத்தை குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில் விலகினார்.

அவுஸ்திரேலியா கால்பந்து சங்கம் செவ்வாயன்று ஒரு அறிக்கையில் தனது "குறைகள்" பற்றி விவா திக்க டி வன்னாவை சந்தித்ததாகக் கூறினார், ஆனால் ஊடகங்களில் அவர் கூறிய சில குற்றச்சாட்டுகள் அப்போது எழுப்பப்படவில்லை.

சமீபத்தில் ஓய்வுபெற்ற மற்றொரு அவுஸ்திரேலிய வீராங்கனை, ராலி டாப்சன், அவர் கொள்ளை நடத் தைக்கு இலக்காக இருப்பதாகக் கூறினார்.

தொழில்முறை கால்பந்து வீரர்கள் அவுஸ்திரே லியா, வீரர்களின் சங்கம், குற்றச்சாட்டுகள் குறித்து ஆழ்ந்த கவலையை தெரிவித்தது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 ஒக்டோபர் மாதம் 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

வாழ்வாதாரமா சேதாரமா 193

பெண்களை கற்காலத்துக்கே தள்ளிவிடும் தொலைக்காட்சி நாடகங்களுக்கு முடிவே கிடையாதா?

'நாடகமல்ல பாடகம் நம்மடதல்ல இது இரவல்' வரவர தொலைக்காட்சித் தொடர்களின் தொல்லை தாங்க முடியவில்லை. என்னதான் இலங்கையில் பல அலைவரிசைகளில் ஒளிபரப்பு நடந்தாலும், தென்னிந்திய தொலைக்காட்சிகளை பார்ப்பவர் களே அதிகம். நாமும் நமது வாழ்வும் இப்போது அந்த நாடகங்களினால்தான் கட்டமைக்கப்படு கின்றன.

வாழ்வாதாரமாக நாம் கொண்டாடும் விழாக் கள் சடங்குகள் சம்பிரதாயங்கள், ஏன் வழிபா டுகளைக்கூட மாற்றிக்கொண்டு வருகின்றன. இந்த தொலைக்காட்சித் தொடர்கள். அணியும் ஆடைகள் மாறுகின்றன. சமைக்கும் பாணி மாற்றம் கண்டுவிட்டது. சமையல் பாத்திரங்க ளும் சமையலறைகளும்கூட மாறி வருகிறது. ஏனோ தானோ என இல்லாமல் புதுப்புது சோஸ் வகைகள், மசாலாத்தூள் வகைகள் சரக்குகள் என் பல வகையில் நாம் மாறியிருக்கிறோம் எப் பவாவது அஜீரணம் கண்டால் மட்டுமே உபயோ கித்த இஞ்சி பூடு என்பவை அன்றாட உணவாகி அதன் மருத்துவ தன்மையை மாற்றிக் கொண் டுவிட்டோம். என்ன புரியவில்லையா? ஒரு அரு மருந்தை நாம் மருந்தாக பயன்படுத்தாமல் அன்றாட உணவாக பயன்படுத்தும் போது அது மருந்தாக இருக்கும் தன் குணத்தை மாற்றி அன்றாட உணவின் குணத்தை கொண்டுவிடும். தினமும் நாம் அருந்தும் தேநீர் முன்னொரு காலத்தில் காச்சலுக்கு மருந்தாக வேலை செய் திருக்கிறது. இப்போது தேநீருக்கு காச்சலை போக்கும் குணம் இருக்கிறதா அதுதான் நமது ரத்தத்தில் சாதாரணமாக கலந்துவிட்டதே.

உதாரணமாக சொறிக்கு (எக்ஸிமா) மருந்து செய்யும்போது நாட்டு மருத்துவத்தில் முதலில் பழுதடையும் பொருட்களை வைத்துக் கட்டுவார் கள். பின்னர் ஒரு மூலிகை வைத்துக்கட்ட புண்கா யும் பிறகு அதுவே புது உற்சாகத்துடன் பிறகும் அரும்பும் சட்டென வைத்தியர் மூலிகையை மாற்றுவார் பழையபடி காயும் மூன்று நான்கு மருந்துக்குப்பின் மறுபடி கொதிக்கும். வைத்தி யர் மருந்தை மாற்றுவார். இப்படியாக கிருமிகள் மருந்தைப் பழகப்பழக வைத்தியரும் விடாமல் மருந்தை மாற்றி கிருமிகளை ஏமாற்றி நோயை மாற்றிவிடுவார்.

குறிப்பாக அகில உலகமும் பெண்களை முன்னுக்கு கொண்டு வர அரும்பாடு பட்டுக் கொண்டிருக்க இந்த தொலைக்காட்சித் தொடர்கள் அவர்களை எப்படி பழைய இடத் துக்கு கொண்டுபோய் வீட்டுக்குள் தள்ளி கதவை அடைப்பது என்பதில் குறியாக இருக் கின்றன. எந்தத் தொடரிலும் பெண்களை சிந்திக் கும் ஆற்றல் உள்ளவர்களாக படைப்பதில்லை அப்படி படைத்தாலும் அந்தப் பெண் கணவனுக் கும் மாமியாருக்கும் அடங்கி தன் திறமைகளை மூட்டைகட்டிவிட்டு பயிர்ப்புடன் நடந்து கொள்ள வேண்டும்..

பழைய சினிமாக்களில் கவனித்திருப்பீர்கள் நம்பியார் அல்லது வீரப்பா பெரிய வில்லன் களாக வருவார்கள் சூழ்ச்சியில் மாட்டி கட்டிய மனைவியையே கைவிட்டு தாசி வீடே தஞ்சமாக கிடந்த கதாநாயகன் படம் முடியும் தறுவாயில் தன் மனைவியை தேடி வருவான். அக்கணத் தில் அவள் அவனுடைய காலில் விழுந்து கதறி 'அத்தான் என்னை மன்னித்து ஏற்றுக் கொள் ளுங்கள் அத்தான்' என்பாள். இவர் அவளைத் தூக்கி கண்களை துடைப்பார் அவன் செய்த கொடுமைகளுக்காக அவன் கேட்பது 'என்னை மன்னித்துவிடு' என்ற வாய்ச்சொல்மட்டுமே.

படைக்கு மருந்து செய்வது போல பெண் களுக்கு தாலி எவ்வளவு முக்கியம் கணவன் எவ்வளவு முக்கியம் மாமியார் எத்துணை பெரி யவர். கணவனுடைய குடும்பமே அவளுடைய குடும்பம் எவ்வளவுதான் கொடுமை செய்தாலும் அந்த வீட்டிலேயே அடங்கிக் கிடக்க வேண்டும் மீறி தாய்வீட்டுக்கு வந்தால் தாய் ஏற்றுக் கொள்ளமாட்டாள். அது அவளுடைய குடும் பத்துக்கு அவமானம். இப்படி எத்தனை விதமாக பெண்களுக்கு போதனை நடக் கிறது. ஒரு ஆண் செய்யும் பாரதூரமான குற்றமும் சகசமாகி விடுகிறது. உதாரண மாக ஒரு பெண்ணை ஒருவன் கதறக்க தற அடியாட்களுடன் போய் தூக்கிவந்து தாலி கட்டுகிறான். அந்தப்பெண் தனக்கு ஒவ்வாத வாழ்க்கையை வாழ நிர்ப்பந்திக்கப் படுகிறாள் ஆனால் பாருங்கள் அவன் கட்டிய தாலியை அவள் கழற்றவே கூடாது என போதிக் கப்படுகிறது. அந்த ஆணை அவள் காதலிக்க வும் செய்கிறாளாம். எப்படிப்பட்ட பேத்தல் இத்த னைக்கும் அவள் படித்த பெண்.

ஒருபெண் தனியாளாக பல ரவுடிகளை அடித்து நொருக்குகிறாள். மல்யுத்தத்திலும் ஆண் களோடு போரிட்டு வெல்கிறாள் தொழிலிலும் சகலகலா வல்லவளாக இருக்கிறாள் ஆனால் பாருங்கள் இவ்வளவு வல்லமை உள்ளவளுக்கு கருப்பைமட்டும் பலமில்லையாம். தொலைக் காட்சித் தொடர்களில் எந்தக் கதாநாயகியும் குழந்தைப்பேறு அடைந்தபின் அவளுடைய கருவைக்கலைக்க கங்கணம் கட்டிக்கொண்டு போராடும் வில்லர்கள் கூட்டத்தை சமாளித்தாக வேண்டும். கருக்கலைப்பதற்கென்ற எத்தனை வழிமுறைகள் உண்டோ அத்தனையும் இவர்க ளுக்கு அத்துப்படி. தெரியாதவர்களுக்கும் ஒரு வழிகாட்டி. என்ன இருந்தும் என்ன சுகப்பிரசவம் யாருக்கும் நடவாது.

ஆடை அணிமணி, அவிழ்த்துப் போடும் நாகரீகம் எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ளும் நமது பெண்கள், இந்த தாலி 'சென்ரிமென்ரை' மட்டும் ஏற்க மறுத்து விடுவார்களோ என்ற பயம் வந்துதா. புதிதாக ஒரு தொடரை ஆரம்பித்து... இந்திய இலங்கைப் பெண்ணல்ல அமெரிக்கா விலே படித்துவிட்டு வருகிற பெண் தாலிதான் புனிதம் என்று சொல்லப்போக, கதாநாயகன் அவளை இழுத்துக் கொண்டு போய் அந்தக் கோவிலிலேயே மஞ்சள் கயிற்றை கட்டிவிட் டான். அத்தோடு விடாமல்,' இப்ப சொல்லு நீ எனக்கு பெண்டாட்டியா? மஞ்சள் கயித்தில அப்பிடி என்ன இருக்கு'என்றொரு கேள்வியை யும் போட்டானா...நம்ம பொண்ணு அவன் பின்னாலேயே போயிட்டா... வீட்டுக்கு போனால் அவளுடைய அப்பா உனக்கு உந்த கயிறு தேவையில்லை. அவிழ்த்துப் போட்டு தலை முழுகு என்கிறார் அந்தப்பத்தினி அந்த தாலியு டன் அலைவதுதான் நாடகம். ஊரில யாராவது இப்படி நடந்தா போலீஸில் முறைப்பாடு போடா தீங்க அவன் எப்படிப்பட்ட ரவுடியாக இருந்தாலும் அவனையே தொடந்து பதிவிரதை என்பதை நீரூபியுங்கள். என்பது பெண்களுக்கு கொடுக் கப்படும் நாட்டுமருந்து.

இவற்றையெல்லாம் தூக்கிச் சாப்பிட்டுவிடும் பெரிய பொய் மூட்டை ஒன்று கணவனும் மனை வியும் திருமணமானதிலிருந்தே ஒரே அறையில் சில நாடகங்களில் ஒரே கட்டிலிலும் படுத்து தூங் குவார்கள். வருசம் போனாலும், அவர்களுக் குள் எதுவும் நடக்காது கேக்கவே புல்லரிக்குது. எங்கள் மண்ணில் இப்படிப்பட்ட யோகிகளையும் உருவாக்க தொலைக்காட்சித் தொடர்கள் உதவு கின்றன வென்றால்... நாடுதழுவிய அளவில் சிறுவர் துஸ்பிரயோகம் ???

கொஞ்ச நாட்களாக பாம்புகளும் ஆவிக ளும் பிடித்தாட்டிய நாடகங்கள் முடிவுக்கு வர

இப்போது தீய சக்திகளும் தூய சக்திகளும் போராடும் புதிய அம்சங்களுடன் தொடர்கள் வரு கிறதாம்.

காலம் எவ்வளவுதான் மாறினாலும் இன்னும் மாறாத தாத்தா பாட்டிகளும் இந்த தொடர்களுக் குள் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருப்பதால் தான் என்னிடம் இந்த கேள்விகளை எய்தார்கள். எனக்கும் இன்னும் புரியாத சில விடயங்கள் இருக்கத்தான் செய்கின்றன. தொலைக்காட்சி களை மன்னித்து விடலாம் எனத் தோன்றுகிறது. காரணம் அவற்றின் தாய் சினிமாதானே. சினி மாவில் நாம் பனிபெய்து மூடிக்கிடக்கும் ஒரு பாழ் வெளியில் கோட் சூட் சகிதம் சப்பாத்துக ளும் கையுறைகளும் அணிந்து, கதாநாயகன் ஆடிப்பாட, அரையில் கட்டிய அரையடித்துணியு டன் கையுறை காலுறைகளை மட்டும் காவலாக கொண்டு கதாநாயகி ஆடுகிறாள். இப்ப எனக் கொரு சந்தேகம் யார் கெட்டிக்காரர். பெண்களை மெல்லியலார் என்பது எவ்வளவு பொய். இப்போது முழுக்க முழுக்க எமது வாழ்க்கையை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் தொலைக்காட் சித் தொடர்களும் தென்னிந்திய சினிமாவும்... எங்களை உய்ய விடப்போவதில்லை. திருமண வைபவங்களுக்காக மணமகளுக்கு டான்ஸ் ஆடப்பழக்கி விடும் மாஸ்டர்களுக்கு இப்ப தட்டுப் பாடாம். இனி வீதியில் டூயட் பாடி ஆடப்போகும் சோடிகளையும் எதிர் பார்க்கலாம்.

மதங்களைக் கடந்த மகான் சீரடிசாயி பாபா

சீரடி சாயி பாபா அவதரித்த, மற்றும் மகா சமாதியடைந்த நன்நாள் அக் 15ம் திகதி, வெள்ளிக்கிழமை, விஜயதசமி திகதியன்றா கும். உலகில் அவதரித்த மகான்களில் முதன்மை யானவர் அவர்.

மதங்களுக்கு இடையே அன்பு, பொறுமை, நல்லெண்ணம் போன்றவற்றை ஏற்படுத்தி, மக்களை, அவரவர் மதத்தைப் பின்பற்ற வைத்தார், அனைத்து மக்களும் ஒற்றுமையு டன் இருக்கவேண்டும். போராடி, வாதாடுவது நன்றன்று, எனவே விவாதிக்கவேண்டாம். மற்ற வர்களுடன் போட்டி போடவேண்டாம். தியாகம், யோகம், ஞானம் போன்ற வழிகள் மூலம் கடவுளை அறிந்துகொள்ளுங்கள். யாராவது, ஏதாவது தீமையை உங்களுக்குச் செய்தால், அதற்காகப் பழிக்குப் பழி வாங்காதீர்கள். நீங்கள் ஏதேனும் செய்ய இயலுமானால் பிறருக்குச் சிறித எவிலேனும் நன்மை செய்யுங்கள். அதுபோதும்' இதுதான் சீரடி பாபாவின் உபதேசம். சீரடி சாயி மத மாற்றத்தை எப்போதும் எதிர்த்துவந்தவர். ஒரு தடவை, ஒரு மதத்திலிருந்து, இன்னொரு மதத் திற்கு மாறிய ஒருவர், பாபாவை தரிசனம் செய்ய வந் தபோது, அந்த பக்தரின் முகத்தில் வேகமாகத் தட்டி, கோபத்துடன் 'என்னடா, உனக்கு நீயே ஒரு தகப்ப னைத் தேடிக் கொண்டுவிட்டாயா?'என்று கடிந்து கொண்டதுண்டு. அவர் தன் வாழ்வில் இரண்டு வேறு வேறு சம்பவங்களின் மூலமாக, தான் மதங்களுக்கு அப்பால்பட்டவன் என்பதை நிருபித்துள்ளார்.

ரோஹில்லா என்ற ஒரு வாட்சாட்டமான இளைஞன் , சீரடிக்கு வந்து, பாபாவுடன் தங்கியி ருந்தான். இரவும் பகலும் மிகச் சத்தமாக, கடும் குரலில் பாடிக்கொண்டிருந்தான். இதனால் ஏனைய பக்தர்கள் அசௌகர்யம் அடைந்து, பகவானிடம் முறையிட்டார்கள். அதற்கு பகவான், அந்த பக்தர்களைக் கடிந்துகொண் டார். 'நீங்கள் எல்லாம் உங்கள் வேலையைப் பாருங்கள். ரோஹில்லாவை யாரும் தொந் தரவு செய்யவேண்டாம். அவன் பெரும் குரலெடுத்து ஏன் பாடுகிறான் என்பது உங்களுக்குத் தெரியுமா? அவனுக்கு ஒரு மனைவி இருக்கிறாள்.

அவள் மிகவும் கெட்டவள். அவள் இங்கே வந்து அவனைத் தொந்தரவு செய்கிறாள். ஆனால் ரோஹில்லா சத்தம் போட்டு பிரார்த் தனை செய்வதால் அவளால் உள்ளே நுழைய முடியவில்லை. அதனால் நானும், அவனும் மகிழ்ச்சியாக இங்கே இருக்கி றோம்'என்று சொன்னார் பாபா.

பக்தர்கள் யாரும் வாயே திறக்கவில்லை. ஆனால் உண்மையில் நடந்தது என்ன வென்றாள், அந்த ரோஹில்லாவுக்குத் திருமணமே ஆகவில்லை. மனைவி என்று பாபா சொன்னது, அவனது துர்புத்தியைத் தான். அதாவது கெட்ட எண்ணங்கள். அவற் றைப் போக்குவதற்காகத்தான் அவன் பாபா முன் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தான். அதுதான் உண்மை.

மேகா என்ற இந்து, ரொம்பவும் ஆச்சாரம் கொண்ட அந்தண குலத்தைச் சார்ந்த ஒருவன், தான் வழிபடும் சிவனின் அவதாரம் தான் சீரடி பாபா என்ற எண்ணத்தில், அவனது மேலாளர், டெபுட்டி கலெக்டர் எல்.வி.சாத்தே வற்புறுத்தலின் காரணமாக, சீரடிக்கு வந்தபோது, பாபா மசூதியி லிருப்பதைப் பார்த்துவிட்டு, அவர் ஒரு இஸ்லாமி யர் என்பதால், மனமில்லாமல் வெறுப்புடன் மசூ திக்குள் அரைமனதுடன் நுழைந்தான்.

(30ஆம் பக்கம் பார்க்க)

எஸ். டி. எஸ். உதய நாயகம் ...✍
(சீரடி சாயி மத்திய நிலையம், இலங்கை)

தேநீர் கடை

தேக்கு மரம் இன்னும் நெடு உயரம் வளர்ந்தது; அது பூவெடுத்துக் காய்க் கத் தயாரான பொழுது காலிதீன் மாமா அதனருகில் ஒரு தேநீர் கடைபோட்டு விடுவார். சுற்றி வர வயல் அதன் விதைப்புக் காலம் முதல் அறுவடை நாட்கள் வரை கடை தொடர்ந்து நடக்கும்; பாடசாலை லீவு நாட்களில் வாப்பாவோடு மாமாவின் கடைக்குப் போய் தங்கி விட்டது எனக்கு இன்றும் நினைவிருக்கிறது; பஸ்ஸில் பயணம் செய்துதான் அந்தக் கடைக்குப் போக வேண்டும்; மணல் கும் பங்களும் தாவரக் காடுகளும் இடை வழிகளில் தென்படும் போதெல்லாம் வெள்ளாவி மணக்கும்; சுவாசத்தை நிதா னமாக ஒரு தடவை ஆழ்த்தி இழுத்து விடுவேன்; வாப்பா ஒரு சாக்கில் நிலக் கடலை நிறைத்து வந்திருப்பார்; மாமாவின் கடையைச் சுற்றி வெட்ட வெளியாகத் தெரியும் நிலத்தில் பதித்து விடுவதே அவரின் நோக்கம்; சிறு முளை வருகின்ற பொழுதில் நான் சின்னச் சின்னக் குச்சிகளால் செய்கின்ற பொம்மை வீடுகள் போல தட்டாச் சுள்ளிகளால் குட்டி குட்டியாய் குடிசைகள் போடுவார்; நிழலுக்கும் பாதுகாப்புக்கும் அது சாலப் பொருந்தும்...

அந்தக் கடை நிலத்தின் விலாவில் விவசாயி ஒருவர் கயிற்றுக் கட்டிலில் மல்லாந்திருந்தது கடையின் பொத்தல் வழியாகத் தெரிந்தது; அவர் இயற்கையுடன் இயைந்து நிம்மதியான உறக்கத்தி லிருந்தார்; பக்கத்திலிருந்தவர்களை உற்றுப் பார்த் தேன்; அந்தரத்தில் கைகள் உயர்ந்திருந்தன; நாவு களும் கட்டுப்பாடில்லாத அசைவுகளுடன் மாமன், மருமகன் என்ற வார்த்தைகளும் அடிபட்டன; அவர்களால் மழுப்பலான புன்னகையைக் கூட என்னை நோக்கி வீச முடியாமல் பேசிக் கொண் டிருந்தனர்...

நடுவில் இன்னும் கொஞ்சப்பேர் "காலம் மாறுது இல்லையா அதுக்குத் தக்கபடி மனுஷனும் மாறிக் கறான்.. என்ன தம்பி நம்ம நாட்டுக்கு டீ.கோப்பி வந்து நூறு வருஷம் இருக்குமா? அதுக்கு முன்னால ஆக்கள் எதக் குடிச்சான் கிளி? மோரு, தயிரு, இளநீரு என்றிருக்குமோ? சர்பத் எப்படா வந்த? ஆ சோடா .. இஞ்சப் பாரன் பசுப்பால் கடும் தட்டுப்பாடே... அதன நம்பியிருந்தவன் பொழப்பும் நாறிப் போச்சு.. நீட்டிக் கிடந்த வாங்கில் ஆள் மாறி ஆட்கள் கதையும் கேள்விகளுமாய் இருப்பார்கள்...

முன்பெல்லாம் தெருவில் ஏதாவது நடந்தால் பக்கத்திலுள்ள தேநீர் கடைகள்மூலம்தான் செய் திகள் பரவும்; தினமும் காலையில் நடைப் பயிற் சிக்குப் போனவர்கள்போல் கூடுவார்கள்; மூலை முடுக்குச் சந்து பொந்துகளில் நடப்பவைகளை அங்கு கொட்டி அலசுவார்கள்; ஈரைப் பேனாக்கிப் பேனைப் பெருமாளாக்கிப் பேசி முடிப்பார்கள்; வேறொரு நினைப்பாகப் போனால் கூடக் கூப்பிடு வார்கள்; அவர் விஷயம் என்னாச்சு ஏதாச்சுன்னு துருவி எடுப்பார்கள்; "அதெல்லாம் நமக்கெதற்கு; நம்ம நம்ம கதைக்கு வருவோம்.." என்பவரோடு "அவரே பாடி ஆடட்டும்" என்ற தொனியில் வாய்த் தர்க்கம் முற்றிச் சண்டையிலும் முடியும்...

கறுவல்ர சந்தி, அங்கேதான் ஒரு கீற்றுக் குடி சையில் எங்கள் முஸ்தபா மச்சான் கடை வைத் திருந்தார்; அதிகாலை ஐந்து மணிக்கு அடுப்பைப் பற்ற வைத்தால் இரவு பத்து மணிக்கு அணைக் கும் வரைக்கும் வேலையிருக்கும்; பாத்திரங்கள் கழுவிக் கவிழ்த்து விட்டுப் பொயிலரில் சிரட்டைக் கரி கொட்டித் தணல் மூட்டுவார்; அப்பம் சுடுபவர் களுக்கு இன்றைக்கு எத்தனை தேவையென்று அறிவிக்கவும் அவரே ஓடுவார்; இத்தனைக்கும் திருமணம் செய்து கொள்ளாலாமல் ஒண்டிக் கட்டை யாகவே ஐம்பதைத் தாண்டியிருந்தார்

இவர் தேநீரின் முதல் மிடரை உறிஞ்சியவர்கள் அப்படியே கண்களை மூடிக் கொள்வார்கள்; மூடிய கண்களைத் திறக்காமலேயே அடுத்தடுத்த மிடறு களை இறக்கி அனுபவிப்பது தெரியும்; இப்படி நாக்கை அடிமைப் படுத்தி வைத்திருப்பவர்கள் கடைக்குத் தொடர்ந்து வருவார்கள்; அங்கு இரு சக்கர வண்டிகள் அதிகம் சார்த்தப்பட்டிருக்கும்; தேநீர் போடும் முஸ்தபா மச்சானுக்குக் கொஞ்சம் ஞாபக மறதிதான்; இல்லையென்றால் நேற்றுக் கடைக்கு வந்து போனவரிடம் "எங்க தம்பி மிச்ச நாளாக் காணலயே" என்பாரா...

ருசியான தேநீர் குடிப்பதற்கு எவ்வளவு தொலைவு வேண்டுமானாலும் அலுப்பில்லாமல் சுகமாக நடக்கலாம்; அதற்குப் பழக்கப்பட்டவர்களே அவரின் வாடிக்கையாளர்கள்; பால் டீ போட்டாலும் கும்முன்னு மணக்கும்; அதன் வாசத்தில் பறந்து வருபவர்களில் சுறாத் தண்டயலும் ஒருவர்; நாவு கேட்கிறதுக்கு ஒரு தேயிலைத் தண்ணி கூடப் போடத் தெரியாமல் வாழ்ந்தென்ன பயன் "ராங்கிக் காரிகள்" என்று வீட்டில் உள்ளவர்களுக்குத் திட்டிக் கொண்டே கடை வாசலில் ஏறுவார்;

எனக்கு அரை கிளாஸ் அளவுக்குத்தான் டீ குடித்துப் பழக்கம்; இது போதுமென்று கொஞ்ச மாய் எடுத்துக் கொண்டு மீதத்தை வைத்திருந்து குடிப்பேன்; மச்சானின் கடைக்கு வந்தால் வீட் டுக்குப்போகும் நினைவு கூட இல்லாமல் அங்கு ஓர் ஓரமாகச் சீட்டாடுபவர்களைக் கண்டு அவர் கள் கதைகளையும் ரசித்திருப்பேன்; கம்பியினால் ஒட்டப்பட்ட தூக்கு; அதன் நடுவில் பெரிய ஒரு தண்ணீர் கிளாசும் பக்கத்தில் நான்கு சிறிய பூப் போட்ட கிளாஸ்களும் சொருகலாம்; பால்டீ, தேநீர் என்று கேட்பவர்களுக்கு உடனுக்குடன் கொண்டு சென்று கொடுப்பதை நான் அதீத கொண்டாட்ட மாய் எண்ணுவேன்... அந்தக் கண்ணாடி அலு மாரிக்குள் இடவலமாகத் தெரிகின்ற தேயிலைப் பக்கெற்றுகளில் ஒரு பெண் கட்டிலில் உட்க்கார்ந் திருப்பாள்; அவள், வளர்ந்திருக்கும் தலைய ணையைத் தொடுகின்ற முடியுடன் மெலிவாகத் தெரிவாள்; அன்றைய எல்லாப் பக்கெற்றுகளி லும் Transporte de Ervas Aromalsicus என்று எழுதப்பட்டிருக்கும்; இந்த மூன்று வார்த்தைகளின் முதல் எழுத்துக்களும் இணைந்தே TEA என்று வந்திருக்கலாம்; சிலோன் டீ, டன்கூன் டீ, ராணித் தேயிலை, எலிசெத் டீ, மகாலிங்கம், தோமஸ் டீ, மோட்ஷா, கேத்தரின் குயின், டீ டைம், ஆப்ர கான்ஷா, ஷென்னோங், விவசாயி, கொழுந்து என்றெல்லாம் தேயிலைகள் கிடைத்தன; இவை பொதி செய்யப்பட்ட டின்கள் திறக்கின்றபோது உள் ளிருந்து வாசம் உச்சியில் ஏறும்...

முஸ்தபா மச்சான் தேயிலையைப் பாகம் பாக மாகப் பிரித்து அதன் உள்ளீடுகளை விதவிதமாக ஒப்புவிப்பார்; கறுப்பான தேயிலைத் தூள் ஆகாது என்பார்; அதில் சுண்ணாம்பு கலந்திருப்பதாக அடித்துக் கூறுவார்; துகள்கள் கையில் ஒட்டக் கூடாதாம்; அரிந்த இலைகள் இரு விரல்களுக் கிடையே உருள வேண்டுமாம்; நாசிக்கு நேரே கம்மென வாசம் எழும்பினால் கலப்புத் தூள் என்பார்; எப்பவும் இவர் கதை கேட்டபடி உள்ளங் கைகளுக்கிடையே கிளாஸை உருட்டி உருட்டி அதன் இதமான சூட்டைத் தோல்களில் ஊடுருவ விட்டு மிடறு மிடறாய் குடிக்கும் தேநீர் பிரியர்கள் அழகே தனிதான்; இதனை விட அவர்கள் எதிர் பார்ப் பிற்கு ஒரு பெரிய கதாகலாட்சேபமே பண்ணுவார்; நல்ல தேநீருக்குப் பால் காய்ச்சுதல் மிக முக்கியம் என்பதுபோல் டீ ஐ இழுத்து ஆற்றுவார்; நுரை மேலெழுந்து கிளாஸின் ஓரம் வழியே வண்டு கட்டி யதுபோல் தெரியும்; அவரையே இமை வெட்டாது பார்த்திருப்போர் டீ குடிப்பதையே மறந்து விடுவர்...

முதலில் தண்ணீர் சேர்க்காது பசுப் பாலை நன்றாக முறுகக் காய்ச்சுவார்; பொங்கிக் கத கதத் துவரும் பால் பாத்திரத்தை அவர் கையில் கட்டித் தொங்கும் துணியால் பிடித்து சற்று ஆறும் படி சுழற்றி ஆவியை வெளியேற்றுவார்; பால் கரு காமல் இரண்டு மூன்று முறை துழாவிவிட்டுப் பிறிதாக ஓரிடத்தில் தள்ளி வைப்பார்; பிறகு ஓர் இயணத்தில் அளவாகத் தண்ணீரும் தேயிலைத் தூளும் எடுத்து அடுப்பில் சாட்டிக் கொதிக்க விடுவார்; நன்றாகச் சாறு ஊறியதும் ஏலவே காய்ச்சிய பாலை ஊற்றிப் பொங்கும் தருணத்தில் எடுத்துப் பரிமாறு வார்... எங்கள் பாடசாலை அருகில் சுருட்டர் என்பவர் ஒரு தேநீர் கடை வைத்திருந்தார்; அவர் கைமுடி யிலிருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டே பணிஸ் தருகின்றபோது இடைவேளைக்குப் பிறகு பாடசாலை விட்டு பணிஸ் கொதுப்ப வேண்டும் போலிருக்கும்; எந்நேரமும் சுருட்டுத்தான் புகைப் பார்; அதனால்தான் சுருட்டரின் கடை என்று பெயர் வந்திருக்கலாம்; அவர் ஒரு தீவிர எம்.ஜீ.ஆர் ரசிகர்; அவர் மீது கொண்ட பற்றில் சரோஜா தேவியின் தோளோடு கையைப் பிடித்து நிற்கின்ற பெரிய போஸ்ட்டர் ஒன்றுடன் விதவிதமான புகைப்படங்க ளைக் கடை முழுவதும் ஒட்டி வைத்திருந்தார்; எம். ஜீ.ஆர் நடித்த படங்களில் ஜோடிப் பாடல்களை மட்டுமே அங்குள்ள டேப் செட்டில் ஒலிக்க விடுவார்; கடையின் வெளிப் பக்கத்தில், கழுத்தில் வளை யமாகச் சிவப்பு நிறத்தில் ஆரம் போட்ட பச்சைக் கிளியொன்றைக் கூட்டில் அடைத்து வைத்திருந் தார்; அது இருந்துவிட்டுப் போடும் முதல் ஒலிப்பில் "அன்பே. அன்பே" என்பதுபோல் கேட்கும்...இவரும் பொதுவாக வியாபாரத்தில் பேய் பிடித்த மனிதராக எனக்குத் தெரியவில்லை; "எப்போதுமே கொழுக்கில் கொதிக்க ஊற்றிய தேநீரை மீளவும் ஆற்றக் கூடாது; சுவை மங்கிவிடும்" என்பார்; பால் தேயிலையென் றால் "அப்படியே ஆவி வெளியேறி ஆடை படர விட வேண்டும்; ஆடையை எடுத்துப் போட்டு விட்டுப் பிறகு குடித்துப் பார் சொர்க்கம் தெரியும்" என்பார்; முதன் முதல் கலர் தொலைக்காட்சிப் பெட்டியை அவர் கடையில்தான் பார்த்த ஞாபகம்; சிறிய போத் தல்களில் குட்டான், சர்க்கரைத் துண்டுகள் நிறைந் திருக்கும்; அதனைப் பல்லிடையே வைத்துக் கடித் துக் கொண்டு ஊதி ஊதி அவர்கள் சூடாற்றித் தேநீர் குடிக்கின்ற அழகில் சொக்கியிருப்பேன்; நண்பர்க ளோடு சேர்ந்து அவர் கடை முன்றலில் கூடுக்கின்ற போதெல்லாம் "என்ன டிவி பிடிச்சிருக்கா" என்பார்; அருகில் நின்றிருக்கும் தோழர்களோடு சேர்ந்து "உங்க டீயும் பிடிச்சிருக்கு.." என்போம்.

"புதிய வாழ்விற்கான தைரியத்தை" வழங்கும் குமாரிக்கா

இலங்கையின் முன்னணி கூந்தல் பராமரிப்பு தரக்குறியீடான குமாரிகா, புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இயற்கையான கூந்தல் மூலமான சிகைகளின் தேவையை அதிகரிப்பதனை நோக்கமாகக் கொண்ட பிரச்சாரத்தை முன்னெடுத்துள்ளது. ஒவ்வொரு பெண்ணும், அவரவர் தோற்றத்தைப் பொருட்படுத்தாமல் அழகாக இருக்க வேண்டும் எனும் கருத்தியலை பிரசாரம் செய்ய விரும்பும் குமாரிகா, அதன் உரிய தருணத்திலான மற்றுமொரு முயற்சியின் தொடக்கமான, புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெண்களுக்காக, இயற்கையான கூந்தல் மூலமான சிகைகளை அன்பளிப்பாக வழங்கும் 'சொந்துரு திரியவந்தி' (அழகினால் தைரியமாக்கப்படுபவள்) தேசிய திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

குமாரிகா அதன் பங்குதாரர்களான, இந்திரா புற்றுநோய் அறக்கட்டளை மற்றும் அலுத்கம, பெந்தோட்டை மற்றும் கல்கிஸ்ஸை லயன்ஸ் கிளப்புகளுடன், இலங்கை புற்றுநோயியல் நிபுணர்களின் கல்லூரியின் ஒருங்கிணைப்பு ஆதரவுடன் இந்த முயற்சியைத் ஆரம்பித்துள்ளது.

ஒன்லைன் மூலம் இடம்பெற்ற இதன் ஆரம்ப நிகழ்வில், சுகாதார அமைச்சின் செயலாளர் சஞ்ஜீவ முனசிங்க, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன, இலங்கை புற்றுநோயியல் நிபுணர்களின் கல்லூரியின் செயலாளர் வைத்தியர் டாக்டர் சச்சினி மலவியாராச்சி, இந்திரா புற்றுநோய் அறக்கட்டளையின் தலைவர் வைத்தியர் லங்கா ஜயசூரிய திஸாநாயக்க, மாவட்ட முன்னாள் லயன் ஆளுநர் சாந்தனி விதான மற்றும் ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் நிர்வாக பணிப்பாளர்/குழுமத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி கஸ்தூரி செல்லராஜா வில்சன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

அனைத்து நிலைகளிலும் பெண்களின் அழகைக் கொண்டாடும் அதே வேளையில், கீமோதெரபி சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட நோயாளிகள் கோரிக்கை விடுக்குமிடத்து, ஒரு பராமரிப்பு பொதியொன்றை நன்கொடையாக அளிப்பதே இப்பிரசாரத்தின் நோக்கமாகும். கீமோதெரபியின் ஆரம்பத்திலேயே நோயாளிகளுக்கு இந்த பராமரிப்பு பொதி விநியோகிக்கப்படும். பொதுவாக கீமோதெரபி ஆரம்பித்து இரண்டு முதல் நான்கு வாரங்களுக்குள் கூந்தல் உதிர்வதால், நீளத்துடனான இயற்கையான கூந்தலைக் தயார் நிலையிலுள்ள சிகையை பயன்படுத்தக் கூடியதாக இருக்கும். இந்த பராமரிப்பு பொதியில், அளவுக்கேற்ப சரிசெய்யக்கூடிய பட்டி கொண்டதும் தோள்பட்டை வரை கையேடு ஆகியன அடங்குகின்றன.

இலங்கையர்களுக்கும் இப்பொழுது Coke Zero

இலங்கையில் CocaCola இன்னும் சுவையான மற்றும் புத்துணர்ச்சியூட்டும் செய்முறையில், அழகிய புதிய பக்கேஜிங்கில், தனித்துவமிக்க கிளசிக் Coke இற்கு நுகர்வோரை அழைத்துச் செல்லும் வகையில், தமது புதிய CocaCola Zero வினை அறிமுகப்படுத்தியது. அந்த வகையில் இலங்கையின் நுகர்வோர் தற்பொழுது சீனி மற்றும் கலோரிகள் அற்ற புதிய Coke Zero வினை அனுபவித்திட முடியும்.

CocaCola Zero 2005ஆம் ஆண்டில் உலகளாவிய ரீதியில் தொடங்கப்பட்டது. அத்துடன் 2017 இல் சுவை மறுசீரமைக்கப்பட்டு ஊழஉயஊழடய வின் உன்னதமான பழைமையான சுவைக்கு அண்மித்த வகையில் தயாரித்தது. பட்டியலிடப்பட்ட அனைத்து உள்ளடக்க பொருட்களும் ஊட்டச்சத்து தகவல்களும் ஒரே மாதிரியாக இருக்கும் போது புதிய CocaCola Zero செய்முறையானது மேலும் அவ்விடைவெளியைக் குறைத்து ஊழமந பிரியர்களுக்கு தங்களுக்கு மிகவும் பிடித்த பானத்தை அனுபவிக்கவும் சீரான வாழ்க்கை முறையைத் தழுவிக் கொள்ளவும் உதவுகிறது.

CocaCola Beverages Sri Lanka வின் முகாமைத்துவப் பணிப்பாளர் மயாங்க் அரோரா கருத்து தெரிவிக்கையில்,

'Coke Zero வின் சுவை இலங்கையிலும் மற்றும் உலகளாவிய ரீதியிலும் சிறந்த வெற்றியைத் தந்தது. சில வருட காலங்களுக்கு முன்னர் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து கிடைக்கப்பெற்ற உறுதியான நுகர்வோர் பிரதிபலிப்பில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். ஒரு சீரான வாழ்க்கை முறையை தேடும் இன்றைய இளைஞர்கள் தாங்கள் உட்கொள்ளும் உணவைப் பற்றி கவலைப்படாமல் நுகரக்கூடிய ஒரு சிறந்த பானம் ஆகும். அதிக விருப்பத்தேர்வு மற்றும் மாறுபாடுகளை எதிர்ப்பார்க்கும் இளம் வயதினருக்கு இது மிகவும் ஏற்றது ஆகும். இது அவர்களின் பிஸியான வாழ்க்கை முறையை பூர்த்தி செய்வதுடன் அவர்கள் தங்கள் நண்பர்கள், குடும்பங்கள் மற்றும் சக ஊழியர்களுடன் தங்கள் வாழ்க்கையை அவர்கள் விருப்பப்படியே அனுபவிக்கின்றனர். இப்புதிய அறிமுகத்துடன் நுகர்வோருக்கு கிளசிக் கோக் சுவைக்கு இன்னும் நெருக்கமான சுவையைக் கொண்ட பானத்தினை நாம் வழங்குகிறோம்.' எனத் தெரிவித்தார்.

'பயின்ற பணியாட்களை' உருவாக்கும் பிறண்டிக்ஸ் இன் 'Ran Daru Abhises' புலமைப்பரிசு

இலங்கையின் முன்னணி ஆடைகள் உற்பத்தியாளர்களில் ஒன்றான பிறண்டிக்ஸ், இலங்கை முழுவதிலுமிருந்து பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகிய மாணவர்களுக்கான 'Ran Daru Abhises' புலமைப்பரிசில் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. அரச பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகிய மாணவர்களுக்கு தமது உயர் கல்வியை தடையின்றி தொடர்வதற்கு உதவும் வகையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், நாட்டின் எதிர்காலத்தில் பயின்ற பணியாட்களை வலிமைப்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளது.

இந்த அறிமுகநிகழ்வு 2021 ஒக்டோபர் 1 ஆம் திகதி அமைந்த உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு, கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் பங்கேற்புடன் இடம்பெற்றது. இந்தத் திட்டத்தின் கீழ் முதலாவது புலமைப்பரிசில்

மட்டக்களப்பைச் சேர்ந்த கே. அக்சிகாவுக்கு வழங்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தில் 2019 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் உயிரியல் கட்டமைப்பு தொழில்நுட்பப் பிரிவில் முதலாமிடத்தையும், நாடு முழுவதிலும் இரண்டாமிடத்தையும் இவர் பெற்று, கொழும்பு பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்துக்கு தெரிவாகியிருந்தார். உயர் தர பெறுபேறுகள் கிடைக்கும் வரை, இவர் மட்டக்களப்பு பிறண்டிக்ஸ் தொழிற்சாலையில் பணியாற்றியிருந்ததுடன், இக்காலப்ப குதியில் சிறப்பாக தமது பணிகளை முன்னெடுத்திருந்தார்.

இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன கருத்துத் தெரிவிக்கையில், "'Ran Daru Abhises' புலமைப்பரிசில் திட்டத்தினூடாக கல்விச் செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கும் பிறண்டிக்ஸ் நிறுவனத்தின் தீர்மானத்தை கல்வி அமைச்சு பெரிதும் வரவேற்கின்றது.

'திரிசக்தி' திட்டத்தை விரிவாக்கியுள்ள கொமர்ஷல் வங்கி

தனது 'திரிசக்தி' கடன் திட்டத்தை பாவிக்கும் நுண் தொழில்முயற்சியாளர்களுக்கு ஆதரவளித்து வரும் வழிமுறைகளை மாற்றியமைப்பதற்கான முன்னோடித் திட்டம் ஒன்றை கொமர்ஷல் வங்கி முன்னெடுத்துள்ளது. நிதி மற்றும் வலுவூட்டல் செயற்பாடுகளை உள்ளடக்கிய ஒரு பரவலான மற்றும் முழுஅளவிலான தலையீட்டுக்கு வழிவகுக்கும் வகையில் இது அமையவுள்ளது.

வர்த்தக ரீதியாக கிராமிய அடி மட்டங்களில் வாழ்வாதார சந்தர்ப்பங்களுக்கு நிதியை வழங்கும் வகையில் அறிமுகம் செய்யப்பட்ட திரிசக்தி, தனிப்பட்ட கடன் பெறுபவர்களை மட்டும் நலனடையச் செய்யும் வகையிலன்றி எல்லா பங்குதாரர்களையும் அவரவர் பெறுமானச் சங்கிலியின் கீழ் நன்மையடைச் செய்யும் வகையில் மேம்படுத்தப்படவுள்ளது. இது வெற்றியையும் வளர்ச்சியையும் மேலும் கோடிட்டுக் காட்டுவதாக அமையும் என்று வங்கி அறிவித்துள்ளது.

இந்த மேம்படுத்தல்களானது நுண் தொழில்முயற்சியாளர்களுக்கு நிதி மற்றும் நிதி அற்ற சேவைகளை வழங்குவதன் மூலம் அவர்களது உற்பத்தி சங்கிலி ஆற்றலை மேலும் அதிகரிக்கச் செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. 'திரிசக்தி பெறுமானச் சங்கிலி அபிவிருத்தித் திட்டம்'

மற்றும் 'திரிசக்தி நிலைத்தன்மை தொழில்முயற்சி அபிவிருத்தித் திட்டம்' என இரு திட்டங்களின் கீழ் இவை கொண்டு வரப்படவுள்ளன. நிலைத்தன்மை முன்முயற்சிகள், அறிவு அபிவிருத்தி, ஆற்றல் கட்டமைப்பு என்பனவற்றை உள்ளடக்கியதாக இது அமைந்துள்ளது.

திரிசக்தி பெறுமானச் சங்கிலி அபிவிருத்தித் திட்டம் என்பது ஒட்டு மொத்த பெறுமானச் சங்கிலியை அதன் உற்பத்தி முதல் பொருள் நுகர்வோரைச் சென்றடையும் வரை தனியார் மற்றும் பொதுப் பங்காளிகளின் பங்கேற்றலின் முக்கியத்துவம் மற்றும் தேவை என்பனவற்றைப் புரிந்து கொள்ளல் மூலம் உற்பத்தித்திறன், இலாபமீட்டல் என்பனவற்றை அதிகரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய நேரடி விற்பனைத்துறை – 179.3 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உலகளாவிய சக்தி மையம்

தொற்றுநோயினால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியில் இருந்து உலகமானது மீண்டு வரும் நிலையில் நேரடி விற்பனைத் துறையானது 170க்கு மேற்பட்ட நாடுகளின் வாடிக்கையாளர்களினை அடையும் வகையில் வலுவான விற்பனைத் தளத்தினை பேணி வருகிறது. நேரடி விற்பனைத் துறையானது கோவிட் 19 நிலைமையின் மத்தியிலும் இணையத்தள வளங்களுக்கு தனது வர்த்தக பொறிமுறையை மாற்றியதன் மூலம் வளர்ச்சியடைந்துள்ளது.

நேரடி விற்பனை சங்கத்தின் புள்ளி விபரங்களுக்கு இணங்க ஆசிய பசுபிக் ஆனது உலகளாவிய நேரடி விற்பனை பிரிவுடன் ஜப்பான், சீனா, கொரியா, மலேசியா, தாய்வான், தாய்லாந்து, அவுஸ்திரேலியா, பிலிபைன்ஸ், மற்றும் இந்தோனேசியா உலகில் முன்னணி வகிப்பதுடன் பிரமாண்டமான வளர்ச்சி சாத்தியத்துடன் பில்லியன் டொலர் சந்தைகளை உள்ளடக்கியுள்ளதாக துறைசார் வல்லுனர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

தெற்காசியாவில் இந்தியாவானது முன்னணி வகிக்கும் நிலையில் இதில் 60% இனர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது, இந்தியாவினை நோக்கும்போது இத்துறையில் தினமும் அனுபவ வளர்ச்சியுடைந்து வருவதை மதிப்பீடுகள் காண்பிக்கின்றன.

நேரடி விற்பனைத் துறையின் அதிவேகமான வளர்ச்சியானது நேரடி விற்பனையாளர்களுக்கான அதிகாரம் அளிக்கும் மற்றும் ஈடுபாட்டினை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் காரணமாகவே நிகழ்ந்துள்ளதாக ஆய்வாளர்கள் நம்புகின்றனர். இந்தியாவில் உதாரணமாக இத்துறையானது இவ்வருடத்தில் ரூபா 15,930 கோடியினை அடையும் என சங்கமானது கருதுகிறது.

உலகளாவியரீதியில் நேரடி விற்பனைத்துறையானது உலகின் மிகவும்முன்னேற்றமடைந்த மற்றும் உயர் ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தைகளில் இருப்பு நிறுவப்பட்டதன் மூலம் நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டது. 1885 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்காவில் முதலாவது தென்மேற்கு நிறுவனம் அமைக்கப்பட்டதன் மூலம் இத்துறையானது ஆரம்பிக்கப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவினை அடிப்படையாகக்கொண்ட மிகவும் புகழ் பெற்றதும் நம்பகத் தன்மை வாய்ந்ததுமாக அழகு சாதன நிறுவனமான அவோன் திகழ்வதுடன் இது பெண்களுக்கு பொருளாதார சுதந்திர அதிகாரத்தை அளித்து வருவதுடன் அவோன் பெண் ஆனவள் உயர் தரம் வாய்ந்த அணிகள் மற்றும் முக ஒப்பனை உத்திகளுக்கு புகழ் பெற்றுள்ளார். அவோன் ஆனது 2018 ஆம் ஆண்டு 5.57 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக பெற்ற நிலையில் உலகின் நேரடி விற்பனை வலையமைப்பில் பதிவு செய்யப்பட்ட 100 நிறுவனங்களில் இரண்டாவதாக தரப்படுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய அமெரிக்க நேரடி விற்பனை சங்கமானது முன்னோடி அங்கத்தவர்களுடன் 1910 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. துறையானது வடிவமைக்கப்பட்ட வழியில் நுகர்வோர் உற்பத்திகளை பார்வையிட்டு இலகுவில் தமது வீடுகளில் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. டப்பர்வெயார் விருந்து நிகழ்வுகளில் பெண்கள் தமது நண்பர்களுக்கு டப்பர் வெயார்களை அறிமுப்படுத்தக்கூடியதாக இருந்ததால் நேரடி விற்பனையில் மட்டுமே கவனம் செலுத்தி ஒருசக்திவாய்ந்த நிறுவனமாக வளர்ந்தது.

பட்டியலில் முதலாவதாக தரப்படுத்தப்பட்ட பாரிய நேரடி விற்பனையாளர்கள் அம்வேய் ஆகும் இதனை உலகளாவியரீதியில் பல நிறுவனங்கள் பின்பற்றுகின்றன.

தேசிய சித்திர மற்றும் பேச்சுப் போட்டிகளை அறிமுகம் செய்யும் Stop Child Cruelty Trust அமைப்பு

சிறுவர் தினத்தை நினைவுகூரும் ஒரு புதிய அணுகுமுறையாக, Stop Child Cruelty Trust (SCC) அமைப்பானது பல்வேறு பொதுத் திட்டங்கள் மூலம் சிறுவர்களின் அடிப்படை உரிமைகள் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்க #ஓர்எண் மட்டுமே சிறுவர் பாதுகாப்பு மாதத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

#ஓர்எண் மட்டுமே சிறுவர் பாதுகாப்பு மாதத்தின் கீழ் நடத்தப்படும் தேசிய சித்திர மற்றும் பேச்சுப் போட்டியின் அறிமுகமே இந்த மெய்நிகர் நிகழ்வின் சிறப்பம்சமாகும். 6 வயது முதல் 18 வயது வரையிலான பிள்ளைகளுக்கு நாட்டின் சிறுவர் பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் குறித்த தனித்துவமான சொந்த முன்னோக்கைப் பகிர்ந்து கொள்ளவும், அவர்களின் நலன் சார்ந்த தீர்மானம் மேற்கொள்வதில் நேரடியாக ஈடுபட ஊக்குவிக்கவும் ஒரு தளத்தை உருவாக்குவதை இந்த போட்டி நோக்கமாகக் கொண்டுள்ளது.

குறிப்பாக, பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு விளைவிக்கப்படும் உடல் ரீதியான தண்டனையை சட்டவிரோதமானதாகவும், சிறுவர்களின் உரிமையை மீறுவதாகவும் உயர் நீதிமன்றம் அங்கீகரித்ததன் பின்னணியில் இதனை மேற்கொள்வதாகும். இந்த நோக்கத்தை வலுப்படுத்த, SCC உம் அதே எண்ணம் கொண்ட சிவில் சமூக அமைப்புகள், மற்றும் அரசு சாரா அமைப்புகளுடன் இணைந்து இலங்கையின் முதல் சிறுவர் பாதுகாப்பு கூட்டணியை உருவாக்க கைகோர்க்கின்றது.

#ஓர்எண் மட்டுமே சிறுவர் பாதுகாப்பு மாதத்தின் பின்னால் உள்ள நோக்கம் தொடர்பில் தனது கருத்தை எடுத்துரைத்த, அமைப்பின் தலைவியான வைத்தியர் துஷ் விக்ரமநாயக்க, இலங்கையில் முன்னெப்போதும் இல்லாத வகையில் சிறுவர் மீதான துஷ்பிரயோகங்கள் அதிகரித்திருந்தாலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நமது சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் மேற்கொண்ட முயற்சிகள் போதுமானவையாக தெரிவியவில்லை.

வாரபலன்*

10 ஞாயிறு).10.2021 16 (சனி).10.2021

கலாநிதி சிவஶ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

மேஷம்

சுக்கிரன் சப்தமஸ்தானத்தில் சஞ்சாரம் செய்துக்கொண்டிருக்கின்றார். எனவே, வாழக்கைத்துணைவழியே எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும். அவர்களின் உத்தியோகத்திற்காக ஏதேனும் ஏற்பாடுகள் செய்திருந்தால் அவை கைகூடும். திருமணம் , மணிவிழா போன்ற சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். இப்போது சுக்கிரன் விருச்சிகத்திற்கு சஞ்சாரம் செய்துகொண்டிருக்கின்றார். அங்குள்ள கேதுவோடு சுக்கிரன் சேர்ந்து சஞ்சாரம் செய்வதால் கணவன் மனைவியிடையே சிறுசிறு சச்சரவுகள் தோன்றலாம்.

இடபம்

விருச்சிக இராசியில் சுக்கிரன் சஞ்சாரம் செய்யத் தொடங்கியிருக்கின்றார். இராசிநாதன் சப்தமஸ்தானத்தில் சஞ்சரிக்கும் அந்நேரம் ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரிகள் அனுகூலமாக நடந்துக்கொள்ளவர். உத்தியோகத்தில் உயர் பதவிகள் கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படும். குடும்பத்தில் சுபகாரிய பேச்சுக்கள் கைக்கூடும். பயணங்கள் பலன் தரும். வாழக்கைத்துணைக்கு வேலைகள் கிடைத்து வருமானம் வரலாம்.

மிதுனம்

விருச்சிக இராசியில் சுக்கிரன் சஞ்சாரம் செய்துகொண்டிருக்கின்றார். உங்கள் இராசிக்கு 5 , 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் 6 ஆம் இடத்துக்கு வரும்போது நல்ல மாற்றங்களை கொடுக்கலாம். குறிப்பாக பிள்ளைகளின் திருமண காரியங்கள் கைக்கூடும். அவர்களின் உத்தியோகம் தொடர்பாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு நல்ல பொறுப்புக்கள் வரலாம். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. வழக்குகளின் முடிவுகள் உங்களுக்கு சாதகமாக முடியும்.

கடகம்

விருச்சிக இராசியில் சுக்கிரன் சஞ்சாரம் செய்துகொண்டிருந்தார். உங்கள் இராசிக்கு 4 ஆம், 11 ஆம் ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் பஞ்சமஸ்தானத்தில் சஞ்சரிக்கும்போது பெண்பிள்ளைகளுக்கான சுப செலவுகள் இல்லத்தில் இடம்பெறும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினை அகலும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அடகுவைத்த நகைகளை மீட்பீர்கள். என்றோ வாங்கிய இடம் பலமடங்கு விலை உயர்ந்து உங்கள் பணத்தேவைகளை பூர்த்திசெய்யும். வழக்கு முடிவுகளும் உங்களுக்கு சாதகமாக முடியும்.

சிம்மம்

சுக்கிரன் இப்போது 3 ஆம் இடத்தில் சகாயஸ்தானத்தில் சஞ்சாரம் செய்துகொண்டிருக்கின்றார். விருச்சிக இராசியில் இவர் இப்போது இடம்பெயர்ந்துள்ளார். சகாயஸ்தானம் , தொழில்ஸ்தானத்திற்கு அதிபதியான சுக்கிரன் சுகஸ்தானத்தில் 4 ஆம் இடத்தில் சஞ்சரிப்பது அற்புதமான நேரமாகும். அங்கிருந்து தொழில்ஸ்தானத்தை 10 ஆம் இடத்தைப் பார்ப்பதால் நல்ல வளர்ச்சி உண்டு. தொழில் சிறப்பாக இருக்கும். குறிப்பாக ஆடை, ஆபரணம் வாங்கும் யோகம் உண்டு. இல்லத்தில் நல்ல சம்பவங்கள் இடம்பெறும்.

கன்னி

குடும்பஸ்தானத்தில் சுக்கிரன் சஞ்சாரம் செய்துகொண்டிருக்கின்றார். அவர் இப்போது 2 ஆம் இடத்திலிருந்து 3 ஆம் இடமான சகாயஸ்த்தானத்தில் விருச்சிகத்தில் சஞ்சாரம் செய்ய தொடங்கியிருக்கின்றார். 2 ஆம் , 9 ஆம் ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் சகாயஸ்தானத்தில் அதாவது 3 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும்போது குடும்ப முன்னேற்றம் கூடும். கொடுக்கல் வாங்கல் திருப்தித்தரும். மங்கள ஓசை இல்லத்தில் கேட்கவில்யையே என்ற கவலை அகலும். வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்து அழைப்பும் வரலாம்.

துலாம்

விருச்சிக இராசியில் சுக்கிரன் சஞ்சாரம் செய்ய தொடங்கியிருக்கின்றார். இராசிநாதன் தனஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்நேரத்தில் தனவரவு தாராளமாக இருக்கும். எடுத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும். கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்வீர்கள். மங்கள நிகழ்வுகள் இல்லத்தில் ஒன்றன் பின் ஒன்றாக நடைபெற தொடங்கும். அஷ்டமாதிபதியாகவும் சுக்கிரன் விளங்குவதால் இழப்புகளை ஈடுசெய்ய வாய்ப்புக்கள் கிடைக்கும்.

விருச்சிகம்

விரயஸ்தானத்தில் சஞ்சாரம் செய்துகொண்டிருந்த சுக்கிரன் இப்போது உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்க தொடங்கியிருக்கின்றார். சப்தம 7 ஆம் இடம் விரயாதிபதி 12 ஆம் இடம் ஆகியவற்றுக்குரிய சுக்கிரன் உங்கள் இராசியில் சஞ்சரிப்பது யோகம்தான். மனைவி, மக்கள் வழியில் மகிழ்ச்சிக்குரிய தகவல் வரலாம். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. வெளிநாட்டு பயணத்தடை நீங்கும். இல்லத்தில் சுபகாரியங்கள் இடம்பெற வழிபிறக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு சில சலுகைகள் கிடைக்கலாம்.

தனுசு

விருச்சிக இராசியில் சுக்கிரன் சஞ்சாரம் செய்துகொண்டிருக்கின்றார். உங்களுடைய இராசிக்கு 6 ஆம் ருண , ரோக , சத்ருதானத்துக்குரியவரும் இலாபஸ்தானமான 11 ஆம் இடத்துக்கு அதிபதியுமான சுக்கிரன் விரயஸ்தானமான 12 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும்போது சுப பயணங்கள் அதிகரிக்கும். திட்டமிடாமல் செய்யும் காரியங்கள் கூட வெற்றியாகும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் குணம் அறிந்து செயற்படுவீர்கள். பெண்வழி பிரச்சினைகள் அகலும். தடைப்பட்ட காரியங்கள் நிறைவேறும்.

மகரம்

விருச்சிக இராசியில் சுக்கிரன் இப்போது சஞ்சாரம் செய்துகொண்டிருந்தார். உங்கள் இராசிக்கு பூர்வபுண்ணியஸ்தானமான 5 ஆம் இடத்துக்கும் தொழில்ஸ்தானமான 10 ஆம் இடத்துக்கும் அதிபதியான சுக்கிரன் இலாபஸ்தானத்திற்கு வரும்போது 11 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும்போது மிகுந்த நன்மைகளை செய்வார். குறிப்பாக தொழில் முன்னேற்றம் அதிகரிக்கும். புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பார்கள். பெண்பிள்ளைகளில் சுப சடங்குகள் நடைபெறும். பூர்வீக சொத்துக்களில் இருந்து பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும்.

கும்பம்

விருச்சிக இராசியில் இப்போது சுக்கிரன் சஞ்சாரம் செய்துகொண்டிருக்கின்றார். உங்கள் இராசிக்கு சுகஸ்தானமான 4 ஆம் இடத்துக்கும். மற்றும் 9 ஆம் இடத்துக்கு அதிபதியான சுக்கிரன் 10 ஆம் இடத்தில் தொழில்ஸ்தானத்தில் சஞ்சரிக்கும்போது நல்ல வாய்ப்புக்கள் பலவும் இல்லம் தேடிவரும். குறிப்பாக தொழிலில் இருந்த மந்தநிலை மாறும். துணிந்து சில முடிவுகள் எடுத்து வளர்ச்சி அதிகரிக்க வழிவகுத்துக்கொள்வீர்கள். வாடகை கட்டிடத்தில் நடைபெறும் தொழில் சொந்த கட்டிடத்துக்கு மாறும். ஆடை, ஆபரணம், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குவீர்கள்.

மீனம்

விருச்சிக இராசியில் சுக்கிரன் இப்போது சஞ்சாரம் செய்துகொண்டிருக்கின்றார். உங்கள் இராசிக்கு சகாயஸ்தானமான 3 ஆம் இடத்துக்கும் அட்டமஸ்தானமான 8 ஆம் இடத்துக்கும் அதிபதியான சுக்கிரன் பாக்கியஸ்தானமான 9 ஆம் இடத்துக்கு வரும்போது சகோதரர்களால் நன்மை கிடைக்கும். தந்தைவழி உறவில் இருந்த பிரச்சினைகள் அகலும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக தீரும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. வாடகை வீட்டில் இருப்பவர்கள்' சொந்த வீட்டிற்கு செல்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த தொழில்மாற்றம், இடமாற்றம் ஏற்படலாம்.

கவிச்செழுமைக்கு ஓர் இலக்கணமாய் 'நீங்களும் எழுதலாம்'

எஸ்.ஆர். தனபாலசிங்கத்தை ஆசிரியராகக் கொண்டு திருகோணமலையிலிருந்து வெளிவரும் நீங்களும் எழுதலாம் இருமாத கவிதை இதழின் 28 ஆவது இதழ் அண்மையில் வெளிவந்துள்ளது, இவ்விதழில் மொத்தமாக 20 கவிதைகளும் சில நூல்கள் பற்றிய விபரக் குறிப்புக்களும் முக்கிய சில பதிவுகளும் இடம்பெற்றுள்ளன. முகப்படத்தில் கொரோனா கொவிட் 19 இன் தோற்றப் படங்கள் சில சித்தரித்துக் காட்டப்பட்டிருப்பது இன்றையகால தேவையின் முக்கிய அம்சமாக அமைந்துள்ளது. இதில் இடம்பெற்றுள்ள கவிதைகளில் அநேகமானவை இளம் தலைமுறைக் கவிஞர்களுடைய கவிதைகள் என்பது குறிப்பிடத்தக்கது. கவிதையின் முக்கியத்துவம், தேவைப்பாடு முக்கியபங்கு வகித்திருப்பது சந்தோசமளிக்கிறது.

'நீங்களும் எழுதலாம்' என்ற இருமாத கவிதை இதழை தொடர்ச்சியாக ஐந்து வருடங்களுக்கும் மேலாக வெளியிட்டுவரும் . எஸ்.ஆர். தனபாலசிங்கம் சிரேஷ்ட எழுத்தாளராகவும் சஞ்சிகையாசிரியராகவும் தேசிய, சர்வதேச மட்டங்களில் நன்கு அறியப்பட்ட வர். இவர் கவிதை மீதுள்ள பற்றுதலினால் கவியிதழ் வெளியீட்டு முயற்சியினைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்கின்றார்.

பல்வேறு பொருளாதார நெடுக்கடிகள், பிரச்சினைகள் நேர்ந்தபோதும் அவற்றை எல்லாம் புறந்தள்ளிவிட்டு தனது இலக்கிய முயற்சியின் இலக்கில் உறுதியாக தடம்பதித்துச் செல்வதில் முன்னிலை வகிக்கின்றார் நீங்களும் எழுதலாம் ஆசிரியர் திரு. எஸ்.ஆர். தனபாலசிங்கம். கவிதைமீது அவருக்குள்ள ஈர்ப்பு இந்த சஞ்சிகையினைத் தொடர்ந்து வெளியிடத் தூண்டுதலாய் அமைகிறது என்பது இதன் மூலம் நன்கு புலனாகின்றது.

கலை இலக்கிய நிகழ்வுகள் நடைபெறும் இடங்களிலெல்லாம் எஸ்.ஆர். தனபாலசிங்கம் பிரசன்னமாயிருப்பார். அந்தளவு அவரின் இலக்கியச் செயற்பாடுகள் முன்னுரிமை பெற்று விளங்கும். எவரையும் பின்தள்ளி முன்செல்ல விரும்பாத இவர் தனது சிறந்த பண்பியல்புகள் மூலமாக அடுத்தவர் மனங்களில் தனக்கென ஓர் இடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளார்.

கவிதைகளை மிக ஆழமாக நேசிக்கும் எஸ்.ஆர். தனபாலசிங்கம் 'நீங்களும் எழுதலாம்' கவிதை இதழ் மூலமாக களமமைத்து ஊக்குவிப்புச் செய்ததில் நூற்றுக்கணக்கான இளந் தலைமுறைக் கவிஞர்கள் உருவாகியிருப்பது மகிழ்ச்சி தரக்கூடியதொரு செய்தியாகும்.

இவ்விதழில் இடம்பெற்றுள்ள 20 கவிதைகளும் கவிச் செழுமையைப் பறைசாற்றுவதாய் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. கவிதைகளோடு மட்டும் நின்றுவிடாமல் மேலும் பல தகவல்களும் உள்ளடக்கம் பெற்றிருப்பதானது முக்கியமான அம்சமாக அமைகிறது. அந்தவகையில் கலை இலக்கிய உலகில் பிரகாசித்து காலஞ் சென்றவர்களுடைய நினைவுப் பதிவுகள் முக்கியமான தகவலாய் அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

'நீங்களும் எழுதலாம்' கவி இதழுக்காக கிடைக்கப்பெற்ற நூல்களின் விபரங்கள் பலவும் இதில் இடம்பெற்றிருக்கின்றன. அப்பாக்களும் அம்மாக்களும், மண்ணில் மலர்ந்தவை, எங்கட புத்தகங்கள், வாழ்வியல் அனுபவப் பகிர்வு பாகம் 03, உயரப் பார் ஆகிய நூல்களின் விபரக் குறிப்புக்களும் அத்துடன் நூல் அறிமுகக் குறிப்பு ஆகிய விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும் 'நீங்களும் எழுதலாம்' 27 ஆவது இதழ் அறிமுகமும் இலக்கிய உரையாடலும் போன்ற விபரங்களும் இடம்பெற்று இதழிலின் கனதியை அதிகரித்து நிற்கின்றது.

இவ்விதழிலுள்ள கவிதைகள் எல்லாம் தரமானவையாக அமைந்திருப்பது கவியுலக செழுமையினை எடுத்துக் காட்டுகிறது. ஓர் ஏழை விவசாயியின் செயற்பாடு, முக்கியத்துவம் என்பவற்றை அப்படியே தனது கவிதையில் படம்பிடித்துக் காட்டுகிறார் சிவராசா ஓசாநிதி.

ஏர்பூட்டி வயலுழுதான்
ஏழை மகன் விவசாயி
முத்துமணி வியர்வை
முத்தாய் நிலத்தில் சிந்த
அல்லும் பகலும்
அயராது பாடுபட்டு
நிலத்தை பண்படுத்தி
விதைத்தான் நெல் அதனை

மறைந்த கவிஞர் கவிமணி நீலாபாலனின் கவிதைமிக அருமையாக அமைந்துள்ளது. 'உன்னை நீ வென்று காட்டு' என்று அவர் பகரும் அறிவுரை கனதியும் கருத்தாழமும் மிக்கதாக அமைந்துள்ளதால் வாசகர்களை தன்பால் ஈர்த்துச் செல்கிறது அந்தக் கவிதை.

ஒருமுறை ஒருமுறை
எனச் சொல்லி பலமுறை
துள்ளிக் குதித்து விழுந்தேன்
உளுக்குச் சுளுக்கென்று
உடைந்து தகர்ந்ததை
ஒட்டிப் பொருத்தி வைத்தேன்
வரும்வரும் என்று நான்
முயன்று முயன்றிங்கே
விழுந்து நொறுங்கிப் போனேன்
வந்தது எனச் சொல்ல
ஒன்றுமில்லை மீண்டும்
முயன்று பார்ப்பேன்.

கவிமணி நீலாபாலன் எம்மை விட்டுப் பிரிந்து சென்றாலும் அவரது கவிகள் சாகாவரம் பெற்று வாழும் தன்மையுடன் திகழ்கின்றது.

திருகோணமலை மாவட்டத்தின் முதுபெரும் எழுத்தாளரான திருமலை சுந்தா உண்மையும் பொய்யும் என்ற தனது கவிதையில்,

மனதில் எழுந்து நடனமிடும்
அந்த வினாக்கள்
விடையறியா வினாக்களுடன்
வேப்ப மரத்தை எத்தனை
தடவைகள் பார்ப்பது?

பார்வையும் வேம்பும்
சேர்ந்து எப்போதாவது
பயணிக்கின்றதா?

இல்லையென்று சொல்ல
முடியாமல்தான்..

வாழ்க்கைப் பயணிகளான நாம் எங்களின் பயணத்தை ஒவ்வொரு விநாடியும் முடிப்பதில் 'கண்ணும் கருத்துமாய்' என்று திருமலை சுந்தா இந்தக் கவிதையில் குறிப்பிடுகின்றார்.

இன்று உலகை ஆட்டிப் படைக்கும் கொரோனா வைரசின் தாக்கமும் அதனால் உலகம் படும் பாடு பற்றியும் கவிஞரும் ஊடகவியலாளருமான அ. அச்சுதன் தனது வைரசால் வந்தவினை எனும் கவிதையில் மிக அழகாகப் பதிவிட்டுள்ளார்.

முழு உலகையும்
முடக்கியது கொரோனா
வளமான நாடுகளும்
கோவிட் 19 இல்
வலுவிழந்து போனது!

வல்லரசு நாடுகளும்
அல்லல் உற்றுப்போனது
எல்லா நாட்டினிலும்
இறந்தோர்கள் ஏராளம்

இயல்பு வாழ்க்கையினை கொரோனா எட்டி உதைப்பதால் எமது எதிர்காலம் சிறக்க வாய்ப்பு கிடைக்குமா என்றும் அவர் தனது கவிதையில் அங்கலாய்க்கின்றார்.

மொத்தத்தில் நல்ல படிப்பினை தரக்கூடிய கவிதைகள், விடயங்கள் பலவற்றையும் தாங்கி வெளிவந்திருக்கும் நீங்களும் எழுதலாம் கவிதை இதழ் 28 கவிஞர்கள், வாசகர்களின் ஆதரவை மென்மேலும் பெற்று மேலோங்கும் எனத் திடமாக நம்பலாம். ஆசிரியரின் முயற்சிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்!!!

கலாபூஷணம் பீ.ரீ. அலீஸ்
கிண்ணியா 07

செல்ஃபி புகழ் கொரில்லா டகாசி: தன்னை மீட்டவரின் மடியில் உயிர்விட்ட சோகம்

டகாசி என்ற மலைவாழ் கொரில்லாவை உங்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கும். ஆம் ரேஞ்சருடன் இயல்பாக செல்ஃபிக்கு போஸ் கொடுத்த கொரில்லாவின் பெயர்தான் டகாசி. அப்போது கொரில்லாவின் அந்த செல்ஃபி புகைப்படம் வைரலானது.

ஆனால் இப்போது அந்த கொரில்லா தனது 14 வயதில் நீண்ட உடல்நலக் குறைவுக்கு பிறகு உயிரிழந்துள்ளது.

அதுவும் குழந்தையாக தன்னை மீட்ட அண்ட்ரே பவுமா என்ற அந்த ரேஞ்சரின் மடியில். காங்கோ ஜனநாயக குடியரசில் உள்ள ஆப்ரிக்காவின் பழமையான தேசிய பூங்காவான, விருங்கா கொரில்லா காப்பகத்தில்தான் அந்த 14 வயது பெண் கொரில்லா உயிரிழந்துள்ளது.

2007ஆம் ஆண்டு கடத்தல்காரர்கள் டகாசியின் பெற்றோரை கொன்றுவிட்டிருந்தபோது இரு மாத குழந்தையாக இருந்த டகாசியை பவுமா மீட்டெடுட்டெத்தார். பவுமா அதை மீட்டபோது அது உயிரற்ற தனது தாயின் உடலை பிடித்து தொங்கி கொண்டிருந்தது.

டகாசி குடும்பத்தை சேர்ந்த கொரில்லாக்கள் ஏதும் அங்கு இல்லாத காரணத்தால் தொடர்ந்து டகாசியை வனத்தில் விடுவது பாதுகாப்பில்லை என பவுமா முடிவு செய்தார்.

எனவே பவுமா மேலாளராக இருந்த கொரில்லா காப்பகத்தில் டகாசியை வளர்க்க முடிவு செய்தார்.

டகாசியும், மற்றொரு பெண் கொரில்லாவும் 2019ஆம் ஆண்டு ரேஞ்சர் ஒருவரின் செல்ஃபியில் குறுக்கிட்டு இயல்பாக போஸ் கொடுத்த புகைப்படம் வைரலானபோது டகாசி சர்வதேச புகழை அடைந்தது.

"அந்த கொரில்லாக்கள் தங்களை வளர்த்த ரேஞ்சர்களை போல நடந்து கொள்ள முயற்சி செய்தது," என அந்த பூங்காவின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரேஞ்சர்களுக்கும் கொரில்லாக்களுக்கு ஒரு பாசப் பிணைப்பு ஏற்பட்டது. 2014ஆம் ஆண்டு பிபிசியிடம் பேசிய பவுமா அந்த கொரில்லாவை தனது மகளை போல நேசிப்பதாக தெரிவித்தார்.

"பொதுவாக மலைவாழ் கொரில்லாக்கள் உகாண்டா, ருவாண்டா மற்றும் காங்கோ தேசிய பூங்காக்களில் உள்ள காடுகளில் வாழுகின்றன. ஆனால் பருவநிலை மாற்றம், கடத்தல்காரர்கள், மனித ஆக்கிரமிப்புகள் ஆகியவை கொரில்லாக்களுக்கு அழிவை ஏற்படுத்துகின்றன.

டகாசி ஒரு அழிந்து வரும் மலைவாழ் கொரில்லாக்கள் இனத்தை சேர்ந்தது

காங்கோ ஜனநாயக குடியரசு பகுதியின் கிழக்கில் உள்ளது விருங்கா. அந்த பகுதியில் அரசுக்கு பல்வேறு ஆயுதக் குழுக்களுக்கும் சண்டை ஏற்பட்டு வருகிறது. அதில் சில ஆயுத குழுக்கள் அந்த தேசிய பூங்காக்களில் மறைந்துள்ளனர். அங்கு அவர்கள் அடிக்கடி விலங்குகளை சட்டவிரோதமாக கடத்துகின்றனர்.

டகாசியின் அறிமுகம் கிடைத்த பிறகு மனிதர்கள் மற்றும் மனித குரங்கினங்களுக்கு இடையே உள்ள தொடர்பு குறித்து தான் புரிந்து கொண்டதாகவும், மனிதர்கள் எப்படு பாட்டாயினும் கொரில்லாக்களை பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்து தெரிந்து கொண்டதாகவும் பவுமா வியாழனன்று தெரிவித்திருந்தார்.

"நான் அவளை எனது குழந்தையை போல நேசித்தேன். அவளின் துறுதுறுப்பு சுபாவம், எப்போதெல்லாம் நான் அவளுடன் பேசினேனோ அப்போதெல்லாம் என் முகத்தில் புன்னகையை வர வைத்தது." என்று பவுமா தெரிவித்தார்.

ருஹுன பல்கலைக்கழகம் – மாத்தறை

விலைமனுக்களுக்கான சிறப்பு அறிவித்தல் (IFB)

ருஹுன பல்கலைக்கழக, பொறியியல் பீடத்திற்கான கடற்படை கட்டிடக்கலை மென்பொருள், ஆய்வுகூட உபகரணம், கணினி மற்றும் துணைப்பொருட்களின் வழங்கல், விநியோகம், நிறுவுதல், செயற்பட வைத்தல், சோதனை மற்றும் பராமரிப்பு

2021 செப்டெம்பர் 22 ஆம் திகதி Zoom வழியாக நடைபெற்ற விலைமனுவுக்கு முந்திய சந்திப்புக்கு பின்னரான முடிவுக்கு அமைய விபரக்குறிப்புகளின் மாற்றங்கள் காரணமாக 2021 ஒக்டோபர் 25 ஆம் திகதிக்கு மேலுள்ள விலைமனுவின் இறுதித் திகதி ஒத்தி வைக்கப்பட்டுள்ளதை அனைத்து பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களுக்கும் ருஹுன பல்கலைக்கழக, துணைவேந்தரின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் அறியத் தரப்படுகிறது.

விலைமனு ஆவணங்களை ஏற்கனவே பெற்றுள்ள விலைமனுதாரர்களுக்கு திருத்தப்பட்ட விலைமனுக்களை நாம் அறிவித்துள்ளோம் என்பதோடு புதிய விபரக்குறிப்புகளுக்கு கூறுவிலை குறிப்பிடப்படல் வேண்டும்.

உங்களுக்கு மேலும் தெளிவைப் பெற வேண்டுமாயின், "sabsupp2@admin.ruh.ac.lk" அல்லது "ab@eng.ruh.ac.lk" உடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
ருஹுன பல்கலைக்கழகம்,
வெல்லமடம, மாத்தறை.
2021 ஒக்டோபர் 10

முன்மொழிவுக் கோரிக்கை (ஆர்எப்பி)

கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

இலங்கையின் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கான கணனி வலையமைப்பு விற்பனை முனையத் தீர்வு (POS)

உடன்படிக்கை இலக்கம் : SMCMC/ADM/04/Co.Dev.PC/1

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் சார்பாக அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்டுள்ள கொள்வனவுக் குழுவினால் இலங்கையின் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான கணனி வலையமைப்பு விற்பனை முனைய முறைமையை (POS) வடிவமைத்தல், தாபித்தல், தனிப்பயனாக்கல் (customization), பயிற்சியளித்தல், இயங்குநிலைக்கு கொண்டுவருதல், அமுலாக்குதல், சேவைகள் மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளுதல் ஆகியவற்றுக்கான தகுதிவாய்ந்த
வர்த்தக நிறுவனங்களிடமிருந்து முன்மொழிவுக் கோரிக்கைக்கான (ஆர்எப்பி) அழைப்பு விடுக்கப்படுகின்றது.
முன்மொழியப்பட்ட இத்தீர்வானது, 5 வருட காலப் பகுதிகளில் 2000 பலநோக்குக் கூட்டுறவு விற்பனை நிலையங்களில் அமுல்படுத்தப்படுதல் வேண்டும். இத்தீர்வானது விரிவாக்கம் செய்யக்கூடிய விற்பனை அலகு மென்பொருள் தீர்வொன்றையும், அத்துடன் கூட்டுறவு மாதிரிப்
படிவங்களுக்கு அமைய இருப்பு முகாமைத்துவம், கொடுக்கல் வாங்கல்களை பதிவிடல், மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த கணக்குகளை அறிக்கையிடல்களை உள்ளடக்கியதாகவும் மற்றும் முகாமைத்துவ தகவல் அமைப்பு சேவைக் கட்டுப்பாட்டு அம்சம் (MIS dashboard) ஆகியவற்றையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.
ஆகக் குறைந்தது 6 வருடங்கள் பொதுவான மற்றும் விசேட அனுபவங்களைக் கொண்டுள்ள
மென்பொருள் தீர்வு வழங்குநர்கள் எழுத்து மூலமான கடிதமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் 2021 ஐப்பசி 11 ஆம் திகதி முதல் ஐப்பசி 25 ஆம் திகதி வரை சாதாரண வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை திருப்பிச் செலுத்தப்படாத 15,000/- ரூபா கட்டணத்தை செலுத்தி ஆங்கிலத்திலான முழுமையான தொகுதி ஆவணங்களினை கொள்வனவு செய்ய முடியும். முன்மொழிவுக் கோரிக்கைக்கான கேள்வி விலைமனு கோரல் ஆவணங்கள், மதிப்பீட்டு அளவுகோல்கள், தேவைப்படும் சேவைகளின் விபரங்கள், மேலதிக
விசேட அம்சங்கள், மாதிரிப்படிவங்கள் ஆகியன உள்ளடங்கும். தேசிய கொள்முதல் முகவரகத்தினால் வெளியிடப்பட்ட அரச கொள்முதல் வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ள இரு கடிதஉறை பெறுகை நடைமுறை அத்துடன் தரம் மற்றும் செலவு அடிப்படையிலான தெரிவின்
அடிப்படையிலும் (QCBS) மென்பொருள் தீர்வு வழங்குநர் தெரிவு செய்யப்படுவார்.
மேலதிக விபரங்களை 011-268-1186 எனும் தொலைபேசி இலக்கம் அல்லது 0777-412-342 எனும் கையடக்கத் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக சிரேஷ்ட உதவிச் செயலாளர் திரு மு. முபாரக் அவர்களைத் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும். அவரின் மின்னஞ்சல் முகவரி mcs3sas@gmail.com.

தலைவர்,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்வனவு ஆலோசனைக் குழு (CAPC),
கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும்
நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்கஅமைச்சு
8 ஆம் மாடி, எச் கியூ கொழும்பு கட்டிடம்,
464 ஏ, ரி.பி. ஜயா மாவத்த, கொழும்பு - 10.

பெறுகை அறிவித்தல்

இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்

குத்தகை/ வாடகை அடிப்படையில் கட்டிட வசதியை பெற்றுக்கொள்ளல்

கேள்விமனு குறிப்பு: AD/1/BLG /153/2021

கேள்விமனு இறுதித் திகதி மற்றும் நேரம்: 2021.11.01 அன்று மு.ப. 11.30

இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் மூலம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அரச ஒசுசல கிளைகளுக்காக பொருத்தமான கட்டிடம் ஒன்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்காக கேள்விமனுக் கோரல்.

01. அளுத்கம	04. பத்தரமுல்லை	07. மட்டக்களப்பு	10. சிலாபம்
02. கடுவலை	05. கேகாலை	08. மாலபே	11. மன்னார்
03. முல்லைத்தீவு	06. நுவரெலியா	09. தலவத்துகொட	12. வவுனியா

குறித்த கட்டிடம் மேல் குறிப்பிடப்பட்ட நகர எல்லைக்குள் வர்த்தகச் சூழல் ஒன்றில் அமைந்திருத்தல் வேண்டும் என்பதோடு 1000 சதுர அடி அல்லது அதற்கு மேல் தரைத் தளத்தைக் கொண்டதாக மூன்று முனை மின்சாரம், சுத்தமான குடிநீர், தொலைபேசி மற்றும் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான வசதிகள் உட்பட அனைத்து வசதிகளையும் கொண்டதாக இருத்தல் வேண்டும். 25ºC க்கு மேற்படாத தட்பவெப்பநிலையின் கீழ் வளிச்சீராக்கிக் கட்டமைப்பு இருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.

கட்டிடத்தின் உரிமையாளரின் பெயர், முகவரி, முன்மொழியப்படும் கட்டிடத்தின் முகவரி, எதிர்பார்க்கப்படும் மாதாந்த வாடகை, சதுரஅடி அளவு, கட்டிடத் திட்டம், உறுதியின் பிரதி, காணி பொழிப்பு அறிக்கை மற்றும் அமைந்திருக்கும் இடம், இரு தொலைபேசி இலக்கங்கள் உட்பட அனைத்து விபரங்களையும் உள்ளடக்கிய முத்திரை பொறிக்கப்பட்ட விண்ணப்பங்களை தலைவர், திணைக்கள பெறுகைக் குழு என்ற பெயரில் கீழுள்ள முகவரிக்கு 2021.11.01 ஆம் திகதி மு.ப. 11.30க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இல்லையேல் அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும்.

கட்டிட உரிமையாளர் மூலம் அனுப்பப்படுகின்ற விண்ணப்பங்கள் மாத்திரம் கருத்தில் கொள்ளப்படும்.

கேள்விமனுதாரர்கள் கீழ் தரப்பட்டுள்ள நிபந்தனைகளை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும்.

01. விலைமனுக்களை இரு பிரதிகளைக் கொண்டதாக "மூலப் பிரதி" மற்றும் "நகல் பிரதி" என தெளிவாகக் குறிப்பிட்டு வெவ்வேறாக உறைகளில் இடுதல் வேண்டும்.

02. கேள்விமனுவின் "மூலப் பிரதி" மற்றும் "நகல் பிரதி" முறையாக முத்திரை பொறித்தல் வேண்டும். (அதற்காக ஸ்டேப்ளர் முட்கள் பயன்படுத்தலாகாது) குறித்த உறைகளின் இடது பக்க மேல் மூலையில், கேள்விமனு இலக்கம், நேரம் மற்றும் இறுதித் திகதியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

03. மாற்று விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

கேள்விமனுக்கள் ஏற்பது முடிவுற்ற உடன் கேள்விமனுக்களை திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பதோடு அந்த சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க அனுமதி உள்ளது.

தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,
இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்,
"மெஹெவர பியச"
16 ஆவது மாடி,
இலக்கம் 41, கிருள வீதி,
கொழும்பு 05.
தொ.இல.: 0112 320 356 - 9

ராஜகிரியவில் கட்டிட வேலைத்தளத்தில்
வெற்றிடங்கள்

● தொழிலாளர்கள்	● டைல் செய்வோர்
● தச்சு வேலையாட்கள்	● மேசன்
● பொலிஷ் செய்வோர் (பலகை)	● பெயின்டர்
● அலுமினிய இணைப்பாளர்கள் Fabricators	

அழையுங்கள்:
0778867141/0716577489/0112860777

BE BETTER INFORMED!
News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
AVAILABLE AT
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
LAKE HOUSE

பெறுகை அறிவித்தல்

சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகார சபை

ஒப்பந்த இல. SNSCA/PRO/ 371/2021

01. சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகார சபையின் உள்ளக விளையாட்டரங்கில் உள்ள நீச்சல் தடாக நீர் சுத்திகரிப்பு வசதிகளுக்கான உத்தேச மேம்படுத்தல் வேலைகள் தொடர்பில் 2021-09-19ஆம் திகதிய தினகரன், சிலுமின, Sunday Observer பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விலைக்கோரலுக்கு இயைபாக 2021-09-30ஆம் திகதி திறப்பதற்கிருந்த விலைமனுக்கள் நாட்டில் நிலவும் கொவிட் தொற்று நிலைமை காரணமாக மீண்டும் 2021-10-22ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. இதன்பொருட்டு முன்னர் விலைக்கோரல் படிவங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் மீண்டும் விலைமனுக்களை பெற்றுக்கொள்ளத் தேவையில்லை என்பதுடன் அவ்வாறு பெற்றுக்கொண்ட விலைக்கோரல் ஆவணங்கள் மூலம் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம் என்பதோடு, விலைமனுக்கள் திறக்கப்படும் தினம் மட்டும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதாக தயவுடன் அறியத்தரப்படுகின்றது.

04. இதில் ஆர்வம் காட்டுபவர்கள் எழுத்துமூல விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் விலைக்கோரல் ஆவணங்களை 2021-10-11ஆம் திகதி முதல் 2021-10-21ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் வருகை தந்து 15,000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை அதிகார சபைக்குச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

05. இதன்பொருட்டு முன்னர் விலைக்கோரல் படிவங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் மீண்டும் விலைமனுக்களை பெற்றுக்கொள்ளத் தேவையில்லை என்பதுடன் அவ்வாறு பெற்றுக்கொண்ட விலைக்கோரல் ஆவணங்கள் மூலம் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

06. இந்த விலைக்கோரலுக்கு இயைபான பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

- EM1 தரத்தின் கீழ் மின்சாரம் மற்றும் பொறிமுறை சேவையின் கீழான பதிவு (EM1 for Electrical and Mechanical Services)
- C5 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் கட்டிட நிர்மாணத்தின் கீழ் பதிவு (C5 or above for Building Construction)
- SP1 தரத்தின் கீழ் நீச்சல் தடாக நிர்மாணம் தொடர்பிலான பதிவு (SP1 for Specialized Construction contractors for swimming pool if preferable)
- குறைந்தபட்சம் 06 வருடத்திற்கான கம்பனி பதிவு

07. விலைக்கோரல் பிணை 750,000.00 ரூபாவாகும் என்பதுடன் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு வர்த்தக வங்கியிலும் பெற்றுக்கொண்ட 119 நாட்களுக்குச் செல்லுபடியாகும் பிணை முறியாகவிருத்தல் வேண்டும்.

08. விலைமனுக்கள் 2021-10-22ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் நிர்வாகக் கட்டிடத்தில் திறக்கப்படும் என்பதுடன் அன்றைய தினம் அல்லது அதற்கு முன் இயைபுடைய விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

தலைவர்,
பெறுகைக் குழு,
சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகார சபை,
த.பெ. 2211, ஆர்தர் டி சில்வா மாவத்தை,
கொழும்பு-13.
தொலைபேசி : 0112445677/ தொலைநகல்: 0112445675
மின்னஞ்சல் : psnsca@yahoo.com

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கீழ்வரும் சேவைகளை வழங்குவதற்காக விலைமனு கோரல் 2021 / 2022

நாவல, நுகேகொடையில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிரதான நூலகம் மற்றும் கொழும்பு பிராந்திய நிலையத்தில் 2021/2022 ஆண்டுகளில் கீழ்வரும் சேவைகளை வழங்குவதற்காக விலைமனு கோரப்பட்டுள்ளது. (இவ் ஒப்பந்தத்திற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சகல சேவைகளையும் வழங்க வேண்டியதுடன் இதற்குத் தேவைப்படுகின்ற சகல உபகரணங்கள் மற்றும் ஏனையவை உங்களினால் வழங்கப்படுதல் வேண்டும்.

1. நகல் பிரதி எடுக்கும் சேவைகள் (போட்டோ காப்பி சேவைகள்)
2. லேசர் நகல் பிரதி எடுக்கும் சேவைகள் (கறுப்பு வெள்ளை / நிறம்)
3. பைன்டிங்
4. லமினேட்டிங்
5. ஸ்கேனிங்

உரிய விலைமனுக்கள் 2021 ஒக்டோபர் 11 முதல் நவம்பர் மாதம் 01 ஆம் திகதி வரையில், வார நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 2.00 மணிக்கு இடையில் சிரேஷ்ட உதவி பதிவாளர் / பொது நிர்வாகப் பிரிவு ஊடாக ரூபா 500.00 மீள அளிக்கப்படாத வைப்பு பணத்தை செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும். இதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 02 சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்களை இட்டுள்ள கடித உறையின் இடதுபக்க மேல் முலையில் **"நகல் பிரதி மற்றும் ஏனைய சேவைகளை வழங்குவதற்கான விலைமனு"** எனக்குறிப்பிட்டு நவம்பர் 02 .ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக " தலைவர், பெறுகைக் குழு, பொது நிர்வாகப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொடை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது பொது நிர்வாகப் பிரிவில் உள்ள விலைமனுப் பெட்டியில் இட முடியும். நவம்பர் 02 .ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு விலைமனு திறக்கப்படும். தெளிவற்ற, பூரணமற்ற, அல்லது தாமதமாக கிடைக்கப் பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

ஒவ்வொரு பிரிவிற்கும் மாதாந்தம் தேவைப்படும் என எதிர்பார்க்கப்படுகின்ற நகல் பிரதிகளின் எண்ணிக்கை கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் பிரதான நூலகம் - நாவலை (30,000 பிரதிகள்)
கொழும்பு பிராந்திய நிலையம் - (20,000 பிரதிகள்)

இதற்கு மேலதிகமாக ஒரு நிலையத்திற்கு மாதாந்தம் தலா 3000.00 ரூபாய் மாதாந்த வாடகை செலுத்துதல் வேண்டும்.

பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் முடிவே இறுதி முடிவாகும்.

பதிவாளர்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
நாவல,
நுகேகொட.

பெறுகை அறிவித்தல்

பாதுகாப்பு அமைச்சு

திருத்தப்பட்ட பெறுகை அறிவித்தல்

இலங்கை தரைப்படை - 2021

1. 2021ஆம் ஆண்டில் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இலங்கை தரைப்படைக்கு கொள்வனவு செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள ALL TERRAIN VEHICLE (ATV) க:100 ஐ கொள்வனவு செய்து கொள்வதற்காக, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையகத் தொகுதி, ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவினால் 2021 ஆகஸ்ட் 15ஆம் திகதி சிலுமின, சண்டேஒப்சவர், தினகரன் வாரமஞ்சரி ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள, விலைமனுத்திறக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த திகதி, முதல் முறையாக 2021.10.13 வரை நீடிப்புச் செய்யப்பட்டது. 2021.09.28 அன்று நடைபெற்ற விலைமனு முன்னோடிச் சந்திப்பின் போது (Pre bid meeting) திருத்தி அமைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான திருத்தப்பட்ட அறிக்கை விலைமனுதாரர்களுக்கு வழங்கல் மற்றும் முழு உலகிலும் வியாபித்துள்ள Covid 19 தொற்று நோய் நிலைமை காரணமாக விலைமனுத் திறக்கப்படும் திகதி 2021.10.21 வரை மீண்டும் நீடிப்புச் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

தொடர் இலக்கம்	விலைமனு இலக்கம்	விபரம்	எண்ணிக்கை	விலைமனுக் கோரல் முறை	விலை மனுவின் செல்லுபடிக் காலம்	விலைமனுப் பிணை முறியின் செல்லுபடிக் காலம்	விலைமனுத் திறக்க உத்திதேசிக் கப்பட்டுள்ள திகதி மற்றும் நேரம்	விலைமனுப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய காலம்
01	MOD/ SLA/13/2021	ALL TERRAIN VEHICLE (ATV)	100 NOs	சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல்	2022.01.20	2022.02.19	2021.10.21 அன்று 1400 மணிக்கு	2021.08.16 முதல் 2021.10.21 வரை

2. 2021 ஆகஸ்ட் 15ஆம் திகதி சிலுமின, சண்டே ஒப்சவர், தினகரன் வாரமஞ்சரி ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏனைய அனைத்து நிபந்தனைகள் மற்றும் விதிகள் மாற்றமின்றி அமையும்.

தலைவர்
பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு,
பாதுகாப்பு அமைச்சு,
பாதுகாப்பு தலைமையக தொகுதி,
ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே, இலங்கை.

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk

களனிப் பல்கலைக்கழகம் - இலங்கை

வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்காக 2021-11-01ஆம் திகதி வரை என்னால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

விஞ்ஞான பீடம்

01 **பௌதிகவியல் மற்றும் இலத்திரனியல் விஞ்ஞான கல்விப் பிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்) / விரிவுரையாளர் (சேவை உறுதிப்படுத்தப்படாத) / சிரேஷ்ட விரிவுரையாளர் II/I

02. **புள்ளிவிபரவியல் மற்றும் கணனி விஞ்ஞான கல்வி பிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்) / விரிவுரையாளர் (சேவை உறுதிப்படுத்தப்படாத) / சிரேஷ்ட விரிவுரையாளர் II/I

03. **விளையாட்டுத்துறை மற்றும் உடற்பயிற்சி விஞ்ஞான பிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்) / விரிவுரையாளர் (சேவை உறுதிப்படுத்தப்படாத) / சிரேஷ்ட விரிவுரையாளர் II/I

மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பதவிக்காவும் சேர்த்துக் கொள்வதற்கான தகைமைகள் மற்றும் இயைபுடைய சகல தகவல்களையும் https://www.kln.ac.lk/vacancies ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

சம்பள அளவு

1. விரிவுரையாளர் (பயிலுநர்)
ரூபா 54,600 – 10 x 1,335 - 67,590 p.m. (*U-AC 3 (IV)*) (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 136,110.00)

2. விரிவுரையாளர் (சேவை உறுதிப்படுத்தப்படாத)
ரூபா 69,580 – 5 x 1,630 – 77,730 p.m. (*U-AC 3 (II)*) (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 182,445.00)

3. சிரேஷ்ட விரிவுரையாளர்
ரூபா 79,360 – 11 x 1,630 – 97,290 p.m. (*U-AC 3 (II)*) - (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 222,865.00)

4. சிரேஷ்ட விரிவுரையாளர் - **I**
ரூபா 91,310 – 7 x 2,170 – 106,500 p.m. (*U –AC 3 (I)*) - (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 255,250.00)

விண்ணப்பிக்கும் முறை

இந்த பதவியின் பொருட்டான விண்ணப்பங்கள் நிகழ்நிலை (online) ஊடாக மட்டுமே விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேற்படி பதவிக்குரித்தான விண்ணப்பப் படிவங்கள் மற்றும் விபரங்களை https://www.kln.ac.lk/vacancies எனும் பல்கலைக்கழக இணையதளத்திற்குப் பிரவேசித்து உரிய விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை தரவிறக்கம் (Downloads) செய்துகொள்ளலாம். ஸ்கேன் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உட்பட சகல சான்றிதழ்களின் பிரதிகளை applysc@kln.ac.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு 2021-11-01ஆம் திகதி அல்லது அதற்கு முன் அனுப்புதல் வேண்டும். மின்னஞ்சலில் விடயத்தின் கீழ் இயைபுடைய ''திணைக்களம்'' மற்றும் ''விண்ணப்பிக்கும் பதவி'' என்பவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற, தெளிவற்ற மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரச கூட்டுத்தாபனம், நியதிகள் சட்டச்சபை, பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைமையினூடாக சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறான விண்ணப்பங்களை 2021-11-01ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் முன் பிரதியொன்றை (ஸ்கேன் செய்யப்பட்டது) applysc@kln.ac.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை குறும்பட்டியலிடும் முழுமையான உரிமையை பல்கலைக்கழகம் தன்னகத்தே கொண்டுள்ளது.

பதிவாளர்
களனிப் பல்கலைக்கழகம்,
களனி.
2021-10-05

வ/ப இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

தொழில் வாய்ப்புகள்

வ/ப லங்கா மின்சார (தனியார்) நிறுவனமானது நீர்கொழும்பிலிருந்து காலி வரையிலான கடலோர வழியில் அதனது ஏழு கிளைகளினூடாக 500,000 பாவனையாளர்களுக்கு மின்சாரத்தை விநியோகம் செய்கின்ற அமைப்பாகும். 1500 ஊழியர்கள் பணியாற்றும் நிறுவனத்தில் பின்வரும் பதவிக்கு தகுதிவாய்ந்த நபர்களைத் தேடுகின்றனர்.

1. வாடிக்கையாளர் சேவை அத்தியட்சகர் (Customer Services Superintendent)

கல்வித் தகைமைகள்	அ. தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா (NDT) - மின் சக்தி அல்லது ஆ. மின்சாரப் பொறியியலில் உயர் தேசிய டிப்ளோமா அல்லது இ. பொறியியல் சேவையில் தேசிய டிப்ளோமா (மின்சாரப் பொறியியல்) அல்லது ஈ. தொழில்நுட்பவியலில் டிப்ளோமா (மின்சாரப் பொறியியல்) - (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் அல்லது உ. மின்சாரப் பொறியியலில் சிட்டி அன்ட் கைட்ஸ் உயர் டிப்ளோமா (செயல்முறை மற்றும் கோட்பாடுகளில் முழுமையான சான்றிதழ்)
தொழில் அறிவு	மின்சாரம் வழங்கல் முறைமைக்கான செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பில் தொழில்நுட்ப அதிகாரியாக ஆகக் குறைந்தது 10 வருட அனுபவம்
ஏனைய தேவைப்பாடுகள்	• கணனி ஆற்றல் • ஆங்கிலத்தில் வேலை செய்யும் அறிவுத்திறன்
வயது	2021-10-20ஆம் திகதியில் 50 வயதிற்குட்பட்டவர்கள்

2. நிர்வாக அதிகாரி (Administrative Officer)

கல்வித் தகைமைகள்	க.பொ.த. (உ/த) பரீட்சையில் நான்கு (04) பாடங்கள் / மூன்று (03) பாடங்களில் சித்தி (பொருத்தமானது) அத்துடன் NIBM/CIPM நிறுவனத்தின் மனிதவள முகாமைத்துவத்தில் டிப்ளோமா அல்லது மனிதவள முகாமைத்துவத்தில் பட்டம் அல்லது உயர்கல்வித் தகைமை
அனுபவம்	எழுதுவினைஞர் மற்றும் அதுசார்ந்த துறையில் 10 வருட அனுபவம்
ஏனைய தகைமைகள்	கணனி ஆற்றல் திறமை சகிதம் கைத்தொழில் உறவுகள் மற்றும் தொழிலாளர் சட்டம் பற்றிய அறிவு விரும்பத்தக்கதாக கருதப்படுகின்றது.
வயது	2021-10-20ஆம் திகதியில் 40 வயதிற்குட்பட்டவர்கள்

தெரிவு செய்யப்படும் அபேட்சர்களுக்கு ஒரு பரந்த அளவிலான சலுகைகளுடன் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

உங்கள் சுயதரவு, சான்றிதழ்களின் பிரதிகள் அத்துடன் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொடர்பிலக்கங்களை 2021 ஒக்டோபர் 20ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் நபருக்குக் கிடைக்கும் வகையில் தயவு செய்து அனுப்பவும்.

தபாலுறையின் இடது பக்க மேல் பக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

தலைவர் - மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்
வ/ப இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்,
1ஆம் மாடி, ஈ.எச். குரே கட்டிடம்.
411, காலி வீதி,
கொழும்பு-03.
மின்னஞ்சல்: general@leco.lk

அமெரிக்க தூதரகம், கொழும்பு

பாதுகாப்பு அதிகாரி [ஆண் / பெண்]

இந்த பதவிக்கு விண்ணப்பிக்குமாறு நாம் ஆண்களையும் பெண்களையும் ஊக்குவிக்கின்றோம். இன, நிற, மத, பால் நிலை அல்லது தேசியம், அரசியல் தொடர்புகள், பால்நிலை மாற்றங்கள், திருணம உறவு என்பனவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டாது அனைவருக்கும் சமனான சந்தர்ப்பத்தை வழங்கும் வகையிலான பன்மைத்துவ தொழிற்படை ஒன்றை அமெரிக்க தூதரகம் எதிர்பார்க்கின்றது.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுடாக அமெரிக்க தூதரக காரியாலயத்திற்கு சொந்தமான சொத்துக்கள் மற்றும் நபர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன், நெருப்பு அல்லது கொள்ளைச் சம்பவங்களிலிருந்து சொத்துக்களை பாதுகாத்தல் உள்ளிட்ட அனைத்து காவல் சேவைகளும் வழங்கப்படுதல் வேண்டும்.

வேலை நேரம் வாரத்தில் 60 மணித்தியாலங்கள் மாதச்சம்பளம் 100,313/-

தொழிலுக்கான தகுதி:

1. **கல்வி:** ஆரம்பகல்வியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் **(விண்ணப்பதாரிகள் 5ம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல்)**

2. **தொழில் அனுபவம்:** இராணுவம், பொலிஸ் அல்லது தனியார் பாதுகாப்பு சேவை பிரிவில் குறைந்தபட்சம் இரண்டு வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

3. **மொழித்திறன்:** மட்டம் 1 இல் (சரளமான அறிவு) ஆங்கிலம் வாசித்தல், எழுதுதல், பேசுதல் திறன்கள் அவசியம். **(இந்த ஆற்றல் பரிசீலிக்கப்படும்)**
மட்டம் 111 இல் (சிறந்த செயல்திறன் அறிவு) சிங்களம் அல்லது தமிழ் மொழி வாசித்தல், எழுதுதல், பேசுதல் திறன்கள் அவசியம்.

4. **தொழில் அனுபவம்:** அவசர நிலைமைகளின் போது செயலாற்றல் மற்றும் செயன்முறைகள், அறிவித்தல் செயற்பாடுகள் தொடர்பில் சிறந்த புரிதலைக் கொண்டிருத்தல். நவீன பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் செயன்முறைகளை பயன்படுத்துவதில் அனுபவமிருத்தல். அத்துடன் கலாசார தரங்கள் மற்றும் சமூக சட்டங்கள் தொடர்பிலான அறிவைக் கொண்டிருத்தல்.

5. **திறன்கள் மற்றும் ஆற்றல்:** பாதுகாப்பு பதாகையை செயற்படுத்தல் மற்றும் திடீர் அனர்த்த எச்சரிக்கை விடுத்தல், பொது தொடர்பாடல் கட்டமைப்புகளை செயற்படுத்தும் விதம் தொடர்பான அறிவை வளர்க்கும் திறனைக் கொண்டிருத்தல். நவீன பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் ரேடியோ தொலைத்தொடர்பு உபகரணங்களை பயன்படுத்தும் அறிவு அவசியம். சுயமாக செயற்படும் வெளி டிப்ரேலேடர் இயந்திரம், தீயணைப்பு உபகரணம் மற்றும் தனிநபர் பாதுகாப்பு உபகரணங்களை கையாளும் திறனைக் கொண்டிருத்தல். பல்வேறு வகையான காலநிலைகளுக்கு மத்தியிலும் நீண்ட நேரத்திற்கு நின்ற நிலையில் அல்லது அமர்ந்த நிலையில் இருப்பதற்கான உடற்தகுதியைக் கொண்டிருத்தல், பகலிரவு, வாரயிறுதி அல்லது விடுமுறை நாட்களிலும் வேலை நேர அட்டவணைக்கமைய சேவை செய்வதற்கான நெகிழ்வுத்தன்மையைக் கொண்டிருத்தல்.

விண்ணப்பிக்கும் முறை:

மேலதிக விபரங்களுக்கு https://lk.usembassy.gov/embassy/jobs/ என்ற எமது இணையத்தளத்தை பார்வையிடவும், உங்கள் விண்ணப்பங்களை இணையத்தளத்தின் ஊடாக மின்னணு ஆட்சேர்ப்பு விண்ணப்ப அமைப்பு [ERA] மூலம் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க முடியும். நீங்கள் விண்ணப்பிப்பதற்கு முன்னர் எமது இணையத் தளத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசிக்கவும்.

தேவைப்படும் ஆவணங்கள்:

இந்த பதவிக்கு விண்ணப்பதாரி தனது விண்ணப்பத்தை இணையத்தளத்தின் ஊடாக பின்வரும் ஆவணங்களை மின்னணு பிரதிகளுடன் மின்னணு ஆட்சேர்ப்பு விண்ணப்ப அமைப்பு மூலமாக பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம். அவ்விதம் சமர்ப்பிக்காத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- கல்விச்சான்றிழ்.
- சேவைகால அனுபவ சான்றிதழ்.
- பிரஜாவுரிமையை சான்றுப்படுத்தும் ஆவணங்கள். (அடையாள அட்டை /கடவுச்சீட்டு /வேறு ஆவணங்கள்).

நீங்கள் அனுப்பும் கடிதங்கள் அல்லது மின்னஞ்சல் மூலமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

உங்கள் விண்ணப்பங்கள் **2021 அக்டோபர் 21** ஆம்திகதி அல்லது அதற்கு முன்னர் எமக்கு கிடைக்கப்பெற வேண்டும்.

தெரிவு செய்யப்படுபவர்கள் மாத்திரமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

කෘෂිකර්ම අංශය වාණිජ දැක්මකින් නිවුන් Agriculture Modernization Project

THE WORLD BANK IBRD • IDA

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் - கமத்தொழில் அமைச்சு

IDA Credit No: 5873 LK

பெறுகை அறிவித்தல்

ஊவா மாகாணம், பதுளை மாவட்டத்தில் விதை உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையின் கீழ் பதினவெல வக்கடஹீன்ன விவசாய வீதியை மேம்படுத்தல்

PP NO. LK-MOA-PMU-247005 -CW-RFB

01. கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின் செலவை நோக்கி 58.630 மில்லியன் அமெரிக்க டொலருக்கு இணையாக பல்வேறு நாணயங்களில் சர்வதேச அபிவிருத்தி சம்மேளனத்திடம் (IDA) இருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு பின்வரும் ஒப்பந்தங்களின் கீழான தகுதியான கொடுப்பனவுகளுக்கு இந்த கடனின் பகுதியை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு பின்வரும் பணிகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கமத்தொழில் அமைச்சு, ASM திட்டத்தின் சார்பில் திட்ட பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

ஒப்பந்த இல.	பணிகளின் விபரம்	வெட் தவிர்த்து மதிப்பிடப் படும் செலவு (ரூபா)	ஒப்பந்தக் காலம்	தேவையான தரம்	விலை மனு பிணை தொகை ரூபா	மீளளிக்கப் படாத ரொக்கப் பண வைப்பு ரூபா
LK-MOA-PMU-247005-CW-RFB	ஊவா மாகாணம்,பதுளை மாவட்டத்தில் விதை உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கையின் கீழ் பதினவெல வக்கடஹீன்ன விவசாய வீதியை மேம்படுத்தல்	54.0	5 மாதங்கள்	நெடுஞ்சாலையில் C4 அல்லது அதற்கு மேல்	810,000.00	12,500

03. 2022 பெப்ரவரி 15 ஆம் திகதி வரையான செல்லுபடிக் காலத்துடன் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விலைமனு பிணையுடனும் மேலுள்ள வேலைக்காக கூறுவிலையிடுவதற்கு விலைமனுதாரர்கள் அனுமதிக்கப்படுவர். ஒவ்வொரு ஒப்பந்தத்திற்காகவும் ஒரே ஒரு கூறுவிலை இடுவதற்கு விலைமனுதாரர் ஒருவருக்கு அனுமதிக்கப்படும். ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதியை பெறுவதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் நிர்மாண கைத்தொழில அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) மேலுள்ள அட்டவணையில் கூறப்பட்ட தர நிலைக்காக குறித்த நிர்மாணத் துறையில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

04. உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டிரீதியான விலைமனு (NBC) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.

05. விலைமனு ஆவணத்தின் 4 ஆவது பிரிவில் தேவையான தகைமை குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணத்தின் அட்டவணையில் (பிரிவு 5) தரப்பட்டுள்ளது.

06. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம், திட்ட பணிப்பாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ.பே.: 0112 073044/ 071 7772050/ 0772546633, தொலைநகல்: 0112 877546) (மின்னஞ்சல்: projectengineerasmp@hotmail.com) என்பதோடு எந்த ஒரு வேலை நாட்களிலும் 9:00 மணி தொடக்கம் 14:00 மணி வரை அதே இடத்தில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

07. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு ASM திட்ட அலுவலகம், 123/2, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை என்ற முகவரியில் 2021 ஒக்டோபர் 22 ஆம் திகதி மு.ப. 10.30க்கு இடம்பெறும்.

08. 2022 ஜனவரி 18 ஆம் திகதி வரை விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

09. அட்டவணையில் தரப்பட்ட விபரத்தின்படி விலைமனுவானது விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

10. மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2021 ஒக்டோபர் 11ஆம் திகதி தொடக்கம் 2021 நவம்பர் 02 ஆம் திகதி வரை 9:00 மணி தொடக்கம் 14:00 மணி வரை திட்டப் பணிப்பாளர், விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம், 123/2, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணமாக இருத்தல் வேண்டும்.

11. விலைமனுக்களை 2021.11.02 ஆம் திகதி 14:00 மணி அல்லது அதற்கு முன்னர் திட்டப் பணிப்பாளரின் அலுவலகம், விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம், 123/2, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். மின்னணு விலைமனுக்கள் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. 2021 நவம்பர் 02 ஆம் திகதி 14:00 மணிக்கு குறிப்பிட்ட முகவரியில் ஒருவராக பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

12. முழுமையான விலைமனுக்கள் அசல் மற்றும் நகல் என இரு பிரதிகளில் வெவ்வேறாக சமர்ப்பித்தல் வேண்டும். அசல் மற்றும் நகல் வெவ்வேறாக மூடப்பட்டு முறையே கடித உறைகளில் 'அசல்' மற்றும் 'நகல்' என்று குறிப்பிடுதல் வேண்டும். இரு கடித உறைகளும் முத்திரை பொறிக்கப்பட்ட ஒற்றை கடித உறையில் மூடப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் ஒப்பந்தத்தின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும்.

தலைவர்,
திட்ட பெறுகைக் குழு,
விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம்,
123/2, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை.
திகதி: 2021.10.10

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER Marriage Proposals Decades of Trusted Service

லயத்துக்கு வந்த எமன்

சுமார் முப்பத்தாறு நூல்களுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி சிங்கள இலக்கியத்தை வளம் பெறச் செய்தவர் எழுத்தாளர் பி.எம்.சேனரத்தின. மலையக இந்திய வம்சாவளி மக்களின் வாழ்க்கையை மையப்படுத்தி அவர் 'லயிமக்க அந்தரய' என்ற நூலை எழுதினார். அதில் உள்ள இருபத்தொரு படைப்புகளில் ஒன்றாகிய 'லெய்மட்ட ஆ மருவா' (லயத்துக்கு வந்த எமன்) என்ற கதையின் மொழி பெயர்ப்பு இங்கே வாசகர்களுக்கு தரப்படுகிறது.

சிதம்பரம் கங்காணியை காலன் கவர்ந்த கதை இந்த சிறுகதை. வாசித்துப் பாருங்கள்.

தாம் இதுவரை செய்தவை, கூறியவை, சாதித்தவை அனைத்தையும் அசை போட்டவாறு தனது லயத்தின் முன்னால் அமர்ந்து வெற்றிலை குதப்பிக் கொண்டிருந்தார் பழனி மாமா. சிதம்பரம் கங்காணியின் லயத்திலிருந்து கீழே இறங்கி வரும் தோட்டத்து டொக்டர் அவர் கண்ணில் பட்டார்.

வைத்தியரின் முகத்தின் இறுக்கத்தையும், கவலை படர்ந்த தோற்றத்தையும் அவதானித்த பழனி மாமா, 'சலாங்க ஐயா!' என்று வலது கையை நெற்றியில் வைத்து மரியாதை செய்தார்.

"இந்த தடவை எப்படியாவது கங்காணியை கரை சேர்த்துடனும் துரை" என்றார்.

"இலங்கையில் உள்ள எல்லா டொக்டர்மார்களையும் அழைத்து வந்தாலும் இப்போது அவரை கரை சேர்க்க முடியாது பழனி!" என்றார் டொக்டர்.

"ஐயோ, அப்படி சொல்லாதீங்க டொக்டர் ஐயா, அவரும் என்னைப் போல வயது போன மனுசன். அதோட கல்யாணம் ஆகாத ஒரு மகளும் அவருக்கு இருக்குறா."

"எனக்கு தெரியும் பழனி! இப்படிப் பட்ட நேரத்துல யாராலயும் உதவி செய்ய முடியாது" கூறிக்கொண்டே டொக்டர் கீழே படி இறங்கினார். பழனி மாமா சிதம்பரத்தின் லயத்துக்கு அவரை அறியாமலேயே நடக்கலானார்.

தலைவிரிகோலமாக காணப்பட்ட சிந்தாமணி சிதம்பரம் கங்காணியின் மகள். அவள் தன் வயிற்றைப் பிடித்துக் கொண்டு அழுது புலம்பினாள்.

"ஐயோ என்னோட அப்பா! இந்த உலகத்துல எனக்கு நீங்க மட்டும் தானே இருந்தீங்க! என்னை தனியா வுட்டுட்டு போகவா போறீங்க அப்பா! ஐயோ அப்பா! நீங்க இல்லாம நான் யார இனி அப்பான்னு கூப்பிடப் போறேன்? ஐயோ கடவுளே! இனி நா(ன்) யார் கிட்ட போறது!"

இந்த காட்சியை மேலும் பார்த்துக் கொண்டிருக்க முடியாதவராக பழனி மாமா காம்பிறாவின் உள்ளே போய் விட்டார். இறப்பர் சீட்டொன்றின் மீது படுக்க வைக்கப்பட்டிருந்த சிதம்பரம் கங்காணியின் கழுத்து முதல் பாதங்கள் வரை கம்பளியால் மூடப்பட்டிருந்தது. கம்பளியின் உள்ளே அவரது விலா எலும்புகளின் நிழல் தெரிந்தது. முகம் வாட்ட முற்று கண்கள் குழிவிழுந்து காணப்பட்டன. மிகக் கஷ்டப்பட்டு மூச்சு வாங்கிக் கொண்டிருந்தார். தாடை எலும்புகளிலிருந்து தாடை விலகி விட்டது போன்று காட்சி தந்தது.

அவரது மனைவி ரதி தரையில் விழுந்து அழுது புலம்புகிறார். பழனிமாமாவைக் கண்டவுடனே விம்மி விம்மி அழுதவாறே மூக்கைச் சிந்திக் கொண்டு சேலைத் தலைப்பில் கண்களை துடைத்துக் கொள்வது இரட்டிப்பாகியது.

குளிர்ச்சியான பொழுதில் நீண்ட நித்திரை போன்று அல்லாமல் மரணம் இடி மின்னல் வேகத்துடன் வருவது போன்றதென பழனி மாமா அறிவார். அவர் சிதம்பரத்தின் மகனை பின்புறமாக அழைத்து,

"ஆறுமுகம்! ஒனக்கு சொல்ல வேண்டியது இல்லையே"

"ஆமாங்க மாமா! எனக்கு தெரியுது. அப்பாவுக்கு அவ்ளோ வயசும் இல்லியே"

"எதிர்பார்க்க முடியாதுன்னு தெரியுது தானே. நான் என்னா சொல்றேன்னு ஒனக்கு புரியும்னு நெனைக்கிறேன்!"

"ஆமாங்க மாமா! எனக்கு புரியுது!"

"தைரியமா இரு! பொம்புள புள்ளைகளப் போல ஆம்பிளைங்க நமக்கு அழ முடியாது. மத்தவங்களுக்கு எடுத்துக் காட்டா நீ இருக்கனும்! நீ இந்த குடும்பத்துல மூத்தவன். அதனால் குடும்ப பாரத்த நீ சுமக்கத்தான் வேணும்" இவ்வாறு கூறி பழனிமாமா அடுத்து செய்ய வேண்டியவை பற்றி விளக்கினார். மூன்று தேங்காய்களை உடைத்து தலைமாட்டில் வை. விளக்குள மூன்று திரிகளை நல்லா எரியவிடு! கால் மாட்டுல தேய்காயெண்ணெய் விளக்கு இரவு விடியும் வரை எரியனும். வைகுந்த அம்மானை பாடுற துக்கு முத்து சாமிய கூட்டி வரனும்"

சில நிமிட நேரத்துக்குள் இவை அனைத்தும் நிறைவேறின. வைகுந்த அம்மானையிலிருந்து சில சுலோகங்கள் பாடும் போதே ரதி தனது மார்பில் அடித்துக் கொண்டு இங்கும் அங்குமாக ஓடி அழுது புலம்பத் தொடங்கினாள்.

ஏனைய உறவினர்களுடன் ஆறுமுகத்தைக் கண்ட ரதி அவனை கட்டித் தழுவி வீட்டுக்குள் அழைத்துக் கொண்டாள்.

"ஐயோ மகனே! அப்பாவுக்கு என்னடா நடக்கப் போவுது? பாருடா மகனே!" ரதி கதறுகிறாள்.

"அம்மா! அழ வோணாம்மா! அப்பா வோட கடைசி நேரத்துல இந்த அழுக சத்தம் எல்லாம் அவர் காதுல கேக்க கூடாதும்மா!"

"ஐயோ மகனே! அழுறதுன்னா தோட்டத்துல உள்ள எல்லாரும் இங்க வர்றமாதிரி அழ முடியும்" ரதி அழுதுகொண்டே உலறுகிறாள்.

"பழனிமாமா! இங்க வாங்க கொஞ்சம்" வீட்டுக்குள்ளிருந்த வந்த அழைப்பு காரணமாக அவர் அப்பக்கமாக போனார்.

சிதம்பரம் கங்காணியின் உயிர் ஊசலாடும் கடைசி தறுவாயில் பழனி சோகமாக அதனைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"ஐயோ! நீங்க எவ்வளவு நல்ல மனுஷன். எவ்வளவோ நல்ல வேலைகள் செய்தீங்க. நாம எல்லோருமே அந்த பயணத்தை போய்த்தானாகனும். ஆனா நீங்க முந்திட்டீங்க. அதுவும் நல்லது தான்"

பழனிமாமா கூறியவை சிதம்பரத்துக்குக் கேட்டிருக்கும்.

"புள்ளைகளே! ஆறுமுகம், சிந்தாமணி, ரதி இங்க வாங்க. அப்பா கடைசி மூச்சு உடுறதுக்கு முந்தி கொஞ்சம் பால் ஊத்துங்க!"

ஆறுமுகம் சிந்தாமணியும் சில பால் துளிகளை உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் சிதம்பரத்தின் வாய்க்குள் ஊற்றினர்.

சிதம்பரம் புத்துயிர் பெற்றது போன்று இரண்டு கண்களையும் அகல திறந்து விழிகளை அங்குமிங்கும் திருப்பிப் பார்த்தார். மிகவும் சிரமப்பட்டு ஒரு கையைச் சற்று உயர்த்திய சிதம்பரம், சிந்தாமணியின் கையைப் பிடித்து ஆறுமுகத்தின் கைக்குள் வைத்தார். அப்போது ஊமைப் பெண்ணாக தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும் ரதியையும் விழிகளால் கவனித்தார். ஏதோ கூற முயற்சிப்பது போலிருந்தது அந்த பார்வை.

'ரதி ஒன்னையும் புள்ளைகளையும் கடவுள் பார்ப்பாரு. பழனி என்னோட புள்ளைக " என்று சிரமப்பட்டு கூறும் போது பேச்சு தடைப்பட்டது. திடீரென ஒளி குன்றிய அந்த விழிகள் மூடிக் கொண்டன. மூடிய கண் இமைகளுக்குள் இவ்வளவு நேரமாக தேங்கியிருந்த கண்ணீர்த் துளிகள் சில கண்ணங்கள் இரண்டின் வழியே கீழ்நோக்கி வடிந்தன.

அங்கு குழுமியிருந்த பெண்கள் பிரேதத்தைச் சுற்றி நின்று தலையில் அடித்துக் கொண்டு அழ ஆரம்பித்தனர். பழனிமாமாவின் கட்டளை பிரகாரம் நெருங்கிய உறவினர்கள் சிலர் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு என தாம்பூலத்தை இடித்து அதனுடன் மஞ்சள் கலந்து வாய்க்குள் இட்டு வெள்ளைத் துணியைக் கிழித்து உதடுகளை இணைத்து இறுகக் கட்டி வைத்தனர்.

அத்தோடு, தலைப்பாகையணியாத ஒருவர் உற்றார் உறவினர் சுற்றத்தாருக்கு மரண தகவல்களை அறிவிப்பதற்காக (கேதம் சொல்வதற்கு) தோட்டம் முழுதும் கால்நடையாக செல்லத் தொடங்கினார். விடியும் வரை தப்பு ஓசை தோட்டத்தையே ஒரு கலக்கு கலக்கியது. தப்புக் கலைஞர்கள் பாடும் ஒப்பாரி கேட்போர் மனதில் துயரத்தை ஏற்படுத்தியது.

சமையல் முதலிய அடுப்பங்கரைப் பணிகள் அனைத்தும் இந்த வீட்டிலும் பக்கத்து வீடுகளிலும் முற்றாக நிறுத்தப்பட்டுவிட்டன. மரண வீட்டுக்கு வருவோருக்கு வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை மூலமே உபசரணை நிகழ்ந்தது. மரண வீட்டுக்கு வருவோரை வரவேற்பதற்காக பழனி மாமா உட்பட முக்கிய நபர்கள் வெளியே நின்று கொண்டிருந்தனர். துக்கம் விசாரிப்பதற்கு வருவோர் கைகளைப்பிடித்து விட்டு அறைக்குள் செல்லாயினர். பெண்கள் பித்தளைத் தட்டுகளில் அரிசி, எண்ணெய் என்பனவற்றுடன் 'கோடி' எனப்படும் கூரைப்புடவையுடன் வந்து கொண்டிருந்தனர்.

"இந்த பொம்புள புள்ளைக! அழுகைய நிறுத்துங்க சவத்தை தூக்குறப்போ யாரும் அழக் கூடாது" உரத்த குரலில் கட்டளை பிறப்பித்தார் பழனிமாமா.

"ஆறுமுகம்! நீ தலைப்பக்கமா புடிச்சுக்கோ. சொந்த பந்தங்கள் கால்களைப் பிடித்து பிரேதத்தை பெட்டியில் வையுங்கோ பெட்டி மூடுவதற்கு கடைசி பார்த்துக் கொள்ள வேண்டியவங்க எல்லாம் கங்காணியோட முகத்த பார்த்துக்கலாம்" பழனிமாமாவின் அறிவித்தலைத் தொடர்ந்து சிந்தாமணி பெட்டியை பிடித்துக் கொண்டு அழுதாள். ரதி அங்குமிங்குமாக ஓடி மகனைத் தேடினாள்.

"ஏம்பா நீங்க அப்பாவ கொண்டு போகவா பாக்குறீங்க. அதுக்கு எடம் குடுக்க முடியாது!" மகனைக் கண்டவுடன் கூக்குரலிட்டாள் ரதி. இந்த இடத்திலும் பழனிமாமாவின் தலையீடு அவசியமாகியது.

"ஓய், ஆறுமுகம் பெட்டிய மூடு! அம்மாவ வீட்டுக்குள்ள கூட்டிக்கிட்டு போங்க! பெட்டிய பாடையில வெச்சிக்கிட்டு சீக்கிரம் புறப்படுங்க!" பழனிமாமாவின் கட்டளை பிரகாரம் அனைத்தும் விரைவாக நடைபெற்றன.

பிரேதத்தை அடக்கம் செய்வதற்காக தோட்டத்தின் அடிவாரத்தில் உள்ள சம வெளியொன்றுக்கு கொண்டு செல்வதற்காக அனைவரும் புறப்பட்டனர்.

'பாடை மாத்தி' எனப்படும் சுடுகாட்டுக்கும் வீட்டுக்கும் இடையில் உள்ள முச்சந்தியில் பெண்களை திரும்பிச் செல்லுமாறு உத்தரவிட்ட பழனிமாமா பாடையை திசைமாற்றிக் கொண்டு மேலே நடக்கத் தொடங்கினார்கள்.

"சவத்துக்கு சொந்தகாரங்க முன்னால வாங்கப்பா! பெட்டிய பாடையில் இருந்து இறக்குங்க. பாபரும், டோபியும் அடுத்து செய்ய வேண்டிய வேலைகள சீக்கிரமா செய்யுங்கப்பா"

பிரேதத்தை வெளியில் எடுத்த சலவையாளர் அதன்மீது கோடித்துணிகளை போர்த்தியும், உடம்பில் இருந்த தங்கம் வெள்ளி நகைகளையும், இடுப்பில் இருந்த வெள்ளி அர்ணாகொடியையும் கழற்றி எடுத்து விட்டு பெட்டியை மூடினார். பெட்டி குழிக்குள் இறக்கப்பட்டது. ஆறுமுகம் முதலாவது மண்ணை பெட்டியின் மீது தூவினான். அதன்பிறகு அனைவரும் தம் பங்குக்கு மண் தூவினர்.

"சரி. ஆறுமுகம் தலையை மொட்டை யடிச்சுக்கோ! அதுக்கப்புறமாக உடைக் கிறதுக்கு தண்ணிக்குடத்தோட வா"

பாபர் ஆறுமுகத்தின் தலையை மொட்டையடித்தபிறகு நீர் நிரம்பிய மண்குடத்தை தோளில் தாங்கியபடி ஆறுமுகம் குழியின் அருகில் வந்தான். புதைக்குழியைச் சுற்று ஆறுமுகம் தண்ணீர்க் குடத்துடன் வலம் வந்தான். எளிமையான இறுதிக் கிரியைகள் யாவும் நிறைவுக்கு வந்தன.

சலவைத் தொழிலாளி வெள்ளை வேட்டியை பாதை ஓரத்தில் விரிக்க நடு நாயகமாக பழனிமாமாவும் முக்கிய நபர்களும் உறவினர்களும் அதன் மீது அமர்ந்தனர்.

"கட்டமொய் புடிக்கனும் எல்லாரும் இப்பிடி நெருங்கி வாங்கோ!" பழனிமாமாவின் அழைப்பின்படி அனைவரும் வந்து சில்லறையும், தாளுமாக மொய்ப் பணத்தை வேட்டிமீது போட்டனர்.

டோபி, பாபர், குழி வெட்டியவர்கள், தப்படித்தவர்கள், ஓடும் பிள்ளை ஆகிய அனைவருக்கும் செலுத்த வேண்டிய கூலி அங்கு செலுத்தப்பட்டது.

சிதம்பரம் கங்காணியின் வீட்டுக்குத் திரும்பியவர்கள் வீட்டு வாசலில் செம்பில் இருந்த நீரைத் தொட்டு தலையில் தடவியும் திருநீரை நெற்றியில் பூசிக் கொண்டும் வீட்டு விறாந்தை ஏறினர்.

மாலை சூரியன் மறையும் வேளையில் சிதம்பரம் கங்காணியின் வீட்டு தோப்பில் கூடிய உறவினர்கள் மத்தியில் நேரத்திற்கு வருகை தந்த பழனிமாமா மரியாதைகளோடு அமர்த்தப்பட்டார்.

பாஞ்சாலியோட, சம்மந்தி வீட்டுக்காரவுங்களோட குடும்பத்தாளுக எல்லாரும் உக்காருங்க. இப்போ எண்ணெய் தேய்க்கிற காரியத்தை ஆரம்பிக்கலாம்" பழனி மாமா அறிவித்தார்.

தாய்வழி தந்தைவழி மாமன்மார், மைத்துனர்மார், அமர்ந்திருந்த வரிசையில் முதலில் அமர்ந்திருந்தது ஆறுமுகம். கோவணம் தரித்து காட்சி தந்த அவன் அமர்ந்திருந்தவர்களை நாடிப் போய் உறவினர்களின் தலைகளில் எண்ணெய் தடவினான். பின்னர் அனைவரும் குளித்து முழுகி மறு ஆடைகளை அணிந்து படையல் போடப்பட்ட இடத்தை அடைந்தனர்.

சிதம்பரம் கடைசி மூச்சுவிட்ட இடத்தில் அவர் பாவித்த பொருட்கள் அனைத்தும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அங்கு சாதம், மீன், மரக்கறி, சாராய போத்தல் என்பன வைக்கப்பட்டிருந்தன. ரதியும், சிந்தாமணியும், ஆறுமுகமும் வெண்கல விளக்கை ஏற்றி சிதம்பரத்தை எண்ணி வணங்கினர்.

இரவு ஒன்பது மணியாகிவிட்டது. சாராயம், கோழி இறைச்சியுடனான சாப்பாடு மிக அமைதியாக பரிமாறப்பட்டது. அதன் பின்னர் தலைப்பாகை கட்டும் சம்பிரதாயம் நிகழ்ந்தது.

உறவினர்களும் மைத்துனர்மார்களும் சேர்ந்து ஆறுமுகத்தின் தலையில் தலைப்பாகைக் கட்டினர். சம்பந்திகளுக்கிடையில் இந்த தலைப்பாகைக் கட்டு நிகழ்ந்தது.

எல்லாம் முடிந்த பின்னர் பழனிமாமா பலத்த யோசனையில் ஆழ்ந்திருந்தார். வாழ்க்கையில் மரணத்தைத் தவிர்க்க முடியாது என அவரறிவார். ஆனால் கங்காணியார் விட்டு சென்றிருக்கும் சிந்தாமணியைப் பற்றிய கவலை எழுந்தது.

சிந்தாமணியை அழைத்தார். "சிந்தாமணி, நீ அப்பா இல்லேன்னு இனி கவலப்படாதே! நாங்க எங்க வீட்டுல முடிவு செய்துட்டோம். டவுன்ல தையல் கடை வெச்சிக்கிட்டிருக்கிற என்னோட இரண்டாவது பையனுக்கு நீதான் மால போடப்போற!

ஒருவருஷம் பொறுத்துக்கோ என்னோட மருமகளே!" அவள் கலங்கிய கண்களோடு பழனிமாமாவின் பாதங்களைத் தொட்டு வணங்கினாள்.

சிதம்பரம் கங்காணியின் ஆத்மா சாந்தியடைய இது போதும் என கூறிக் கொண்டே தனது லயத்தை நோக்கி நடக்கலானார் பழனிமாமா.

பி.எம்.சேனரத்ன

தமிழில் : சி.கே.முருகேசு

மதங்களைக் கடந்த மகான்... (25ஆம் பக்கத் தொடர்)

உடனே பாபா கடும்கோபத்துடன் 'அந்த ராஸ்கலை உதைத்து வெளியே தள்ளு!' ' நீ உயர்ந்த ஜாதி, நான் தாழ்ந்த ஜாதி. போ. போய்விடு.' என்று கர்ஜித்தார்.

தனது மனதில் தோன்றிய எண்ணங்களைப் புரிந்துகொண்ட பாபாவின் சக்தியைக்கண்டு மேகா வியந்தான்.

அப்படியே ஒன்றரை வருடங்கள் பல ஆலயங்கள் சென்றுவிட்டு, கடைசியில் மனம் திருந்தி சீரடியில் தஞ்சமடைந்தான். அன்று முதல் பாபாவின் பாதங்களை தினமும் நீரினால் கழுவி, அந்த நீரை பிரசாதமாகப் பருகினான். பல வருடங்கள் பாபாவுக்குச் சேவை செய்த மேகா, பின்னர் சீரடியில் இறந்து போனான்.

பின்நாட்களில், அவனை பாபா தனது உண்மையான பக்தன் என்று கூறிக்கொண்டார். தன்னை நாடி வரும் பக்தர்களைக் கடிந்து கொள்வது போல், நடித்து அவர்களை அவர்களுக்கு உணர்த்துவதுதான் சீரடிபாபாவின் பழக்கம்.

கொழும்பு, புதுச்செட்டித் தெருவிலுள்ள, சீரடி சாயி மத்திய நிலையத்தின் ஆதரவில், நான்கு கால ஆராத்திகள், ஆராதனைகள் அனைத்தும், நாட்டின் சுகாதாரக் கட்டுப்பாடுகளுக்கு அமைவாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இலங்கையில் மிக உயரமான சீரடி இராஜகோபுரம் அடுத்த ஆண்டு, கோலாகலமாக கும்பாபிஷேகத்துடன் திறக்கப்பட வுள்ளது .

பெண்களின் மனநிலையை பாதிக்கும் இன்ஸ்டாகிராம்

இன்ஸ்டாகிராம் போன்ற சமூக ஊடகங்கள் இளம்பெண்களின் மனநிலையை பாதிப்பதாக ஃபேஸ்புக் நடத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளம் தலைமுறைகளிடத்தில் அதிக அளவில் பயன்பாட்டில் இருக்கும் சமூக வலைதளங்களில் ஒன்று இன்ஸ்டாகிராம். இதைப் பயன்படுத்துபவர்களில் 40%க்கும் மேலானோர் 20 வயதுக்குக் குறைவானவர்கள். இந்த நிலையில் சமீபத்தில்,

ஃபேஸ்புக் நிறுவனம் இன்ஸ்டாகிராம் சார்ந்து ஆய்வு ஒன்றை நடத்தி உள்ளது. அந்த ஆய்வின் முடிவுகள்தான் தற்போது இன்ஸ்டாகிராம் பயன்பாடு குறித்த கேள்வியை அதிகரித்துள்ளது.

அதாவது, இன்ஸ்டாகிராம்இளம்பெண்கள் தங்களின் உடல், அழகு, தோற்றம் குறித்து அதிகம் கவலைப்படுவதாக அந்த ஆய்வின் முடிவில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இளம்பெண்கள் ஏற்கெனவே தங்கள் உடல், அழகு, தோற்றம் குறித்த வருத்தத்தில் இருக்கும்போது, இன்ஸ்டாகிராம் பயன்பாடும் மேலும் அக்கவலையை அதிகரித்துள்ளதாக 32% பெண்கள் ஃபேஸ்புக் நடத்திய ஆய்வில் கருத்து தெரிவித்துள்ளனர். தங்கள் உருவத் தோற்றம் குறித்த அச்சத்தையும் இன்ஸ்டாகிராம் ஏற்படுத்தியுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

20 வயதான எமிலி என்ற இளம்பெண் கூறும்போது, "இன்ஸ்டாகிராம் பயன்படுத்துவதால் எனது உடல் அழகானதாக இல்லை என்று உணர்ந்தேன். நான் ஜிம்மிற்கு நிறைய சென்றிருந்தாலும், என் உடல் இன்ஸ்டாகிராமில் தாக்கத்தைச் செலுத்துபவர்களின் உடல்போல் இல்லை என்று வருந்தினேன்" என்றார்.



கசப்பு 1

கடந்த வாரத்தில் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற திரும்பவும் தலிபான் 'நண்பர்கள்' கசப்பில்!

அடிக்கொரு தடவை மூச்சிலும் பேச்சிலும் 'ஷரீயத்' (இஸ்லாமிய விதிமுறைகள்) 'இஹ்லாஸ்' மனத் தூய்மை எனச் சொல்லிக் கொள்கிற இந்த 'நண்பர்கள்' 1996 லிருந்து 2001 வரை 05ஆண்டுகள் ஆப் கானிஸ்தானை ஆண்டபோதும் கிடைத்த வருமானத்தில் முதன்மை

யாக இருந்தது, போதைப் பொருட் களின் வர்த்தகமே!

உலகளாவிய **அபின் போதை** தயாரிப்பில் முன்னணி இடம் வகிப்போர்! மார்க்கம் பேசும் இந்த 'நண்பர்களே! உலக உற்பத்தியில் சுமார் 84 விழுக்காட்டை இவர் களே தன் வசம் கொண்டுள்ளனர். தங்கள் உற்பத்தியைத் தெருக்களில் போட்டு விற்பார்களாமே!

இரண்டாவது தடவையாக ஆட் சியைப் பிடித்துள்ள இந்த அன்பர் கள், போதைப் பயிர்கள் வளர்ப் பதையும், உலகளாவிய கடத்தல் மன்னர்களாக 'மாறுவேடம்' போடு வதையும் சீனா தடுக்க வேண்டும் என,

லான்சு பல்கலைக்கழகத்தின் சர் வதேச விவகாரங்களுக்கான நிபுண ரான வாங் ஜிங்கு தெரிவித்துள்ளார்.

வேறு சில சீன விவசாய வல்லு நர்கள், அபின் பயிர்ச்செய்கைக்கு மாற்றுப் பயிர்களை சீனாவே வழங்க முடியும் என ஆட்சியாளர்க ளுக்குப் பரிந்துரைத்துள்ளனர்.

'யா அல்லாஹ்வே" என்றே விச னிக்க வேண்டியுள்ளது.

இந்தப் பின்னணியில் நம் கண் மணிகளாம் பெண்மணிகளுக்குக் கொடுக்கும் மதிப்பையும் மரியா தையையும் அலசினால் அலங்கோ லங்கள் பல பல பப்பளா!

கிழக்கு காபூலில் உள்ள உயர் பாட சாலைக்கு வெளியே கூடிய ஆறு பெண்கள் கொண்ட குழு ஒன்று, பெண்கள் பாடசாலைக்கு திரும் புவதற்கான உரிமையைக் கோரி கோசம் எழுப்பியுள்ளது. கடும் போக்கு தலிபான்கள் பெண்கள் பாடசாலை திரும்புவதற்கு இந்த மாத ஆரம்பத்தில் தடை கொண்டு வந்தமையே காரணம்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்கள், எமது பேனைகளை உடைக்க வேண்டாம். எமது புத் தங்களை எரிக்க வேண்டாம், எமது பாடசாலைகளை மூட வேண்டாம் என்று கோசங்கள் எழுப்பிப் பதாகைகள் ஏந்தி இருந்தனர்.

ஆறாம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரையிலான மாணவியர் பள்ளிக்கு வர தடை விதிக்கப் பட்டிருப்பது தற்காலிகமான நடவடிக்கைதான். அவர்கள் விரைவில் பள்ளிக்கு திரும்பு வர்" எனத் தலிபான் செய்தித் தொடர்பாளர் ஸபீஹுல்லா முஜாஹித் சமாதானம் சொல் லியும் சரிப்பட்டு வரவில்லை.

பெண்களது கல்வியின் எதிர் காலம் இப்படிக் கேள்விக் குறி என்றால், விளையாட்டுத் துறைக்கு என்ன கதி என்பதை விவரிப்பது வீண். இருந்தாலும் சிலவரிகள்.

விளையாட்டுகளில் பெண்கள் ஈடுபடக்கூடாது என்பது நம் 'இஹ்லாஸ்' காரர்களின் கடுமை யான கட்டளை. அதனால் என்ன நடந்துள்ளது?

ஆப்கானிஸ்தானில் சிறப்பாக செயற்பட்டு வந்த பெண்கள் உதைப்பந்தாட்ட அணி தலிபான் களின் கெடுபிடிகளால் நாட்டை விட்டு வெளியேறி தற்போது போர்த்துக்கல் நாட்டில் தஞ்சம டைந்துள்ளது. பெண்கள் எந்த விளையாட்டுகளிலும் ஈடுபடக்கூ டாது என்பது தலிபான்களின் கண் டிப்பான உத்தரவாகும்.

இந்நிலையில் வீராங்கனைக ளுக்கு அடைக்கலம் கொடுப்பதாக போர்த்துக்கல் அறிவித்துள்ளது. இது குறித்து பெண்கள் அணியினர் கூறும்போது, "நாங்கள் இப்போது பாதுகாப்பாக இருப்பதை உணர் கிறோம். சுதந்திர பறவையாக மாறி இருக்கிறோம். நாங்கள் ஆப் கானிஸ்தானில் இருந்திருந்தால் தலிபான்கள் என்ன வேண்டுமா னாலும் செய்யலாம். எங்கள் உயி ருக்கு உத்தரவாதம் கிடையாது.

நாங்கள் திறமையான கால்பந்து வீராங்கனைகளாக வரவேண்டும் என்பதே எங்கள் கனவு!" என்கி றார்கள்.

ஏற்கெனவே, புதிய அமைச்ச ரவையிலும் பின் ஏற்பட்ட விரி வாக்கத்திலும், கண்மணியாம் பெண்மணி ஒருவருக்குக் கூட இடம் கொடுக்கப்படவில்லை.

ஆட்சியாளர்களின் ஒரு முக் கியப் பிரமுகர் உயர் இடத்தில் வைக்கப்பட்டிருப்பவர், உதிர்த் திருக்கும் ஊத்தை வார்த்தைகள்' இவை: எங்கள் பொம்பிளைகள் வெறும் பிள்ளை பெறும் இயந்தி ரங்களாக மட்டுமே இருக்கணும்' வேற பேச்சு எதுவும் பேசப்ப டாது! நாங்க ஷரீயத் முஸல்மான் கள்!"

ஆண்டவனே! கண்ணீரே காணிக்கை .

கசப்பு 2

'அதானி' இன்றையப் பொழுதில் இரு பிரபலத்தின் பெயர் அதுவும் இந்தியாவிலும் இலங்கையிலும் எக்கச் சக்கமாக.

நம்ம கொழும்பு காலிமுகக் கடலை (கால்பேஸ்) ஊடறுத்து வியாபித்துப் பரந்திருக்கும் 'கடல் அம்மையின்' மேற்கு முனை யத்தை 700 மில்லியன் (ஒரு மில்லியன் – பத்து இலட்சம்)

டொலர்களை அள்ளிக் கொட்டி குத்தகைக்கு எடுத்திருக்கிற ஆசாமி! இன்னும் 35 ஆண்டுக ளுக்குப் பிறகு தான் நம் தாய் நாட் டுக்குத் திரும்ப ஒப்படைப்பார் இவ்வாறு ஒப்படைக்கும் இவரது 'அதானி குழுமம்' வட – இந்தியா வில் இருக்கிறது இவர் கோட்டை!

சிலர் வினவுவீர்கள் இப்படி:

"அப்போ, சீனா, சீனா என்று 'சீனாக்குப் பண்டம்' போல கொடுக்கப்பட்டிருக்கிற கடல் பகு திக்கு என்னாச்சு?"

ஒன்னும் ஆகலே! 'சீனாவுக்குப் பண்டத்தை சீனா லேசாத்தள்ளி விடுமா? அது காலிமுகக் கடற்க ரைப் பிரதேச துறைமுகப்பகுதி யில் தென்புறத்தில் கொள்கலன் முனையம் அமைக்க –

'இது (இவர், அதானி) மேற்குப் புறத்தில் அதே கொள்கலன் முனையம்!

வித்தியாசம்! தெற்கில் ஒரு தேசமே அமைக்கிறது. மேற்கில் ஒரு தேசமோ, நாடோ, காடோ சம்பந்தப்படாமல் அந்தத் தேசத் தின் (இந்தியா) முன்னணி நிறுவன மொன்று சம்பந்தப்படுகிறது.

'ஒரு தனியார் துறை முதலீடு' என்றே அரசியல் அகராதியில் அர்த்தப்படும்.

தற்போதையப் பாரத ஆளும் கட்சியான பா.ஜ.க.வுக்கு நெருக் கமோ நெருக்கம். ஏன், சுற்றிவ ளைப்பு? பிரதமர் மோடியின் செல் லப்பிள்ளை இந்த அதானி!

இந்தளவில் இந்தத் தகவல்களை நிறுத்தி, இன்னொரு பூகம்பச் செய்தியை இப்பொழுது பதிவிடு கின்றேன்.

இந்த அதானி என்கிற தனி மனி தரின் ஒரு நாள் வருமானம் 1002 கோடி! அச்சப்பிழை அல்ல,

1002 – கோடியே!

இதைப் படித்து யார் யாரெல் லாம் மயங்கி விழுந்தீர்களோ, தகவல் தாருங்கள்

"ஐ.ஐ. ஃஎப்.எல்" என்றொரு நிறுவனம், 2020– 2021ஆம் ஆண் டுக்கான இந்தியக் கோடீஸ்வரர்க ளின் பட்டியலை வெளியிட்டுள் ளது. அதிலேயே இத்தகவல்.

அதானி, ஆசியநாட்டின் கோடீஸ் வரர்கள் பட்டியலில் இரண்டாவது நபராம்!

கடந்தாண்டில் இவர் நிறுவனம் ஒவ்வொரு நாளும் 1002கோடி வரு மானம் ஈட்டியுள்ளது. இதன் மூலம் இந்தியாவின் 2ஆவது பெரிய பணக்காரர் என்ற பெருமையை பெற்றுள்ளார். இந்த சொத்து வளர்ச் சியின் மூலம் சீனாவைச் சேர்ந்த குடி தண்ணீர் விநியோகஸ்தர் சாங் ஷன் ஷன் என்னும் கோடீஸ்வரர் பின் தள்ளப்பட்டு அதானி அவர் இடத்தைப் பிடித்துள் ளாராம்.

எதிர்காலத்தில் இலங்கை கால்பேஸ் கடற்கரை மேற் குப்புறத் துறைமுக முனையம் மூலம் முதலிடமே பெற்று விடலாம்! எளிது! எளிது!

இந்தியாவில் கோடீஸ்வரப் பட் டியலில் முதலாம் இடத்தில் இருப்பவர் முகேஷ் அம்பானி பத்து ஆண்டுகளாய்.

இனிப்பு

'கிளார்க்கர்' என எல்லோர் வாயிலும் வருகிற, வார்த்தைக்கு நல்ல தமிழ் 'இலிகிதர்'. அரசு சார்ந்தவருக்கு இன்றைக்கும் செல் வாக்கே! கண்களைப் பொத்திக் கொண்டே கன்னியரைத் 'தானம்' செய்வது இன்றைக்கும் வடக்கில் இருப்பதாகக் கணிக்கிறது பேனா.

இருக்கட்டும் ஒரு யாழ் தமிழ் இலிகிதர் இளைஞனை வைத்து, 70களில (1977?) அவன்படும் இன்னல்களை இனத்து வேசங்களை சித்தரித்து ஒரு மனிதர் – அவர் ஆளுமை மிகு **சுனில் ஆரியரத்தின**, இப்போது முதுமையில் – ஒரு சிங் களப்படம் எடுத்தார்.

என் 'நிழல்' அப்போது கொழும்புத் தலைநக ருக்கு வந்த புதிது (சிங்க ளப் படத்திற்குக் கூட்டிப் போகிறீர்களே?" என்ற வியப்பில் என்னுடன் ஓட்டிக் கொண்டு எம் பயர் தியேட்டருக்குள் (இப்போது இல்லை) 'ஓடுசி' இருக்கையில் அமர்ந்தார்.

திரையிலே **'சருங் கலே'** என்ற சிங்களப் பெயர் பளிச்சிட்டதும்'

"அட! இதென்ன பட்டம்?' என்றவரை அமைதிப்படுத்தினேன்.

இலிகிதர் கதாநாயகன் தோன்றினார் சிங்களம் தெரியாமல் தமிழில் பேசத் தொடங்கினார்!

"என்ன இது? காமினி பொன் சேகாவுக்கு எப்படித் தமிழ் தெரியும்?

'நாடராசா' என்று பெயர் சொல் கிறாரே!" என்று குரலிட்டு என் ரசிப்புக்கு இடையூறு செய்தார் நிழல்!

இப்படத்திற்குப் போனதே ஒரு வரது வேண்டுகோளுக்காகத்தான்.

அவர் திருமதி **யோகா பால சந்திரன்** என நெருங்கிய நண்பர் 'டைம்ஸ்' **பாலச்சந்திரனின்** காதல் கிழத்தி. அச்சமயம் அவர் 'வீரகே சரி' ஆசிரியபீடத்தில்.

"நான் தான் பட வசனகர்த்தா. காமினி பொன்சேகாவுக்குத் தமிழ்ப் பயிற்று வித்து 'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்' குறள் சொல்லிக் கொடுத்து அசத்தியிருக் கிறேன். நீங்கள் மட்டுமல்ல, உங களுக்கு 'நிழலாய் வாய்த்தவருடன் பார்க்கணும்" என்ற அப்பெண் மணியின் பெரிய வேண்டுகோளே 'பட்டம்' திரையில் பறப்பதைப் பார்க்கச் செய்தது.

அதுவொரு அற்புதத்திலும் அற் புதமான அனுபவம்.

சுனில் ஆரியரத்ன நெறியாள்கை செய்ததும், சிங்கள 'சுப்பர் ஸ்டார்' காமினி பொன்சேகா 'நடராசா' வாக நடித்ததும் யாழ். கரவெட்டி யில் ஜாகை இட்டு தமிழ்ப் பகுதிக் காட்சிகளை எடுத்ததும் இன்றைக் கும் புதுமை புரட்சி.

வழக்கம் போல் தமிழ் ரசிகர்கள் பெரும்பாலானோர் 'சருங்கலே' பறப்பதைப் பார்க்காமல் உதாசீ னம்.

சிங்களத் திரைப்படத்துறையின ருங் கூட இத்தகைய அசாதாரண முயற்சிகளைத் தொடர விரும்ப வில்லை.

அதே சுனில் ஆரியரத்ன மட்டும் மற்றுமொரு முயற்சியில் இறங்கி 'சகுந்தலையை சிங்கள ரசிகர்க ளுக்கென மூன்று நான்கு ஆண் டுகளுக்கு முன் வழங்கினார். புத்திசாலியாக தமிழ் டப்பிங் வழங்கவில்லை.

'நடராசா' வாக மாறிய காமினி பொன்சேகா, தன் சொந்தத் தயாரிப்பாக தமிழ் – சிங்கள பிணைப்பை வலியுறுத்த படங்கள் தரவிரும்பி யதுண்டு. எனினும், 2004 செப் டம்பர் 30ல் பிரியாவிடைபெற்று இன்று 17 ஆண்டுகள்.

ஒரு நீண்ட இடைவெளியில் **'சரோஜா'** என்ற தமிழ்ப் பெயரில் ஒரு சிங்களப்படம் **சோமரத்ன திசாநாயக்கா - ரேணுகா** தம்பதி தயாரிப்பு. இது என்ன செய்தி சொல்லியதென்பது நான் அறியா தது (வெளிநாட்டில்).

ஆனால் இதே தம்பதி கடந் தாண்டு ஆரம்பத்தில், **"சுனாமி"** என, அனைவருக்கும் பழக்கப் பட்ட பெயரில் சிங்கள தமிழ்ப் படம் வழங்கி எம்போன்றோர் நெஞ்சங்களில் நிறைந்தார்கள்.

'கசப்பும் இனிப்பும் 20/06/2020ல் நிறையவே என் இனிப்பான பதிவுகள் உள்ளன. அந்தத் தம்பதியர் மீண்டும் 'சுனாமி' யைத் திரையிட காலத்திற்கும் நேரத் திற்குமாகக் காத்திருக்கிறார்கள்.

முதியோரைப் பேணுவோம்...!

ஆடி ஓடிச் செய்கின்ற எந்த வேலைக்கும் ஒரு நாள் ஓய்வு தேவைப்படு கிறது. அதை முதுமை என்கின்றது மானுட பருவத்தின் சுழற்சி.

தொழிலிலிருந்து ஓய்வு, கடந்த காலத்தை மீட்டிப் பார்ப்பதே வாழ்வு, நட்புகள், உற வுகளிடம் இருந்து ஒதுக்கப்பட்ட தனிமை, விருப்பு வெறுப்புக்களை எல்லாம் குழி தோண்டிப் புதைத்துவிட்டு உதடுகள் மட்டும் புன்னகைக்க பழகிப்போன வாழ்க்கை அது முதுமை.

முதுமை என்றால் என்ன ஒருவரின் உடலில் உள்ள கலங்களிலும், தொகுதிகளி லும் மாற்றங்கள் ஏற்பட்டு அவரது உடல் மூளை சம்பந்தப்பட்ட தொழிற்பாடுகளில் ஒரு படிப்படியான தேய்வு ஏற்படுகின்ற நிலையே முதுமை. இது மனித வாழ்க்கை யில் தவிர்க்க முடியாதது. அனைவரும் இறப்புவரை எதிர்கொள்ள வேண்டிய ஒரு கட்டமாகும். இதற்கு எம்மை உடலாலும் மனதாலும் பொருளாதாரக் காரணிகளாலும் தயார்படுத்திக் கொள்ள வேண்டியது கட்டா யமாகும்.

உலகில் எந்த ஒரு உயிரினமும் முதுமைப் பருவத்தை அடைந்தே தீரவேண்டும். முதுமை ஒன்றும் ஒரே இரவில் வந்து விடு வதில்லை. அது ஒரு சுழற்சி. இந்த சுழற் சியை எதிர்கொள்ள உடல் ஆரோக்கியத்தை யும் மன ஆற்றல்களையும் கட்டியெழுப்பி பொருளாதார காரணிகளை திரட்டிக் கொண்டு எம்மை நாம் முதலில் தயார் செய்து கொள்ளவேண்டும்.

இன்று தனது பிள்ளைகளால் கைவிடப் பட்ட பெற்றோர்கள் வீதியோரங்களில் யாசகம் செய்து காலத்தை கழித்து வருகின் றார்கள். இந்த வாழ்க்கை நிலை எத்தனை கொடியது என்பதை ஒவ்வொரு மனித உயிரும் உணர்ந்து கொண்டாலே போதும்.

உயிர்கள் பிறப்பது பாசத்துக்காக உலகம் துடிப்பது பாசத்துக்காக உறவு உள்ளவரை உலகம் நமக்காக பலகோடி உயிர் தோன்றி மடிந்தாலும் பாசம் என்ற வேர் மட்டும் மடியாத பூமி இது.

அவர்கள் வேண்டுவது உங்களின் பணமோ நகையோ அல்ல. கொஞ்சம் அன்பு சின்ன தாக ஒரு கரிசனம் நல்லதாக நாலு வார்த்தை முடிந்தால் கொஞ்சம் உதவி ... அவ்வ ளவுதான். உடலளவில் தளர்ந்திருக்கும் இவர்களை மனதளவில் தேற்ற வேண்டிய பொறுப்பு எம் அனைவருக்கும் உள்ளது.

கொடிது கொடிது முதுமையில் தனிமை கொடிது... வழங்குங்கள் உள்ளூரிலும் வெளியூரிலும் உங்களை வாழ வைத்து அழகு பார்க்கும் உங்கள் பெற்றோருக்கான ஒரு நிமிட நேரத்தையேனும் நாள் ஒன்றில். உங்களுக்கு இருப்பது ஒரே பெற்றோர். அவர் களை உங்கள் ஒவ்வொரு செயல்பாட்டிலும் உடன் நிறுத்திப் பாருங்கள்.

விழுந்து விடுவோமோ என்ற பயத்தில் எழுந்து நடக்கவே பயப்படும் அவர்கள் கரம் பிடித்து நடந்துதான் பாருங்கள். ஒரு குடும் பத்திலோ சமூகத்திலோ முதியோர் இருப் பது என்பது வரப்பிரசாதம். இவர்களின் ஆசீர்வாதம் தீர்க்காயுளை தரவல்லது. அவர் கள் சுமையல்ல. வரம். நமக்காக உழைத்து உருக்குலைந்தவர்கள் அவர்கள். நம்மை வாழ வைத்தவர்கள் அவர்கள். அவர்களை ஒரு தடவையேனும் கனம் பண்ணிப் பாருங் கள் முதியோர் இல்லங்களுக்கு தேவையே ஏற்படாது.

முதுமைப் பருவம் என்பது குழந்தைப் பரு வத்தை விடவும் சிக்கலானது. பிள்ளைகளை பராமரித்து ஆளாக்குவது பெற்றோரின் கடமை என்பது போல எம்மை ஆளாக்கிய பெற்றோரை பாதுகாப்பது பிள்ளைகளாகிய எம் கடமையாகும். அவர்களுக்கு அரசும் முதியோர் நலன் கருதிய தொலைநோக்குப் பார்வையுடன் திட்டங்களை நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். முதியோர் நலன் காக்கும் சட்டங்களால் அவர்கள் பாதுகாக் கப்பட வேண்டும். சமூகத்திலிருந்து அவர் களுக்கான சலுகைகள் ஆதரவுகள் கௌர வத்துக்கான முன்னுரிமைகள் கிடைக்கப்பட வேண்டும். கொரோனா போன்ற கொடிய நோய்த் தொற்றுகளில் இருந்து அவர்கள் பேணிக் காக்கப்பட வேண்டியவர்கள்.

உறங்குவது போன்றது இறப்பு .உறங்கி விழிப்பது போன்றது பிறப்பு என்கின் றார் வள்ளுவர். பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட இந்த வாழ்க்கையில் இளமை என்பதும் முதுமை என்பதும் நாணயத்தின் இருபக்கங்கள் போன்றவை. இளமையை யும் முதுமையையும் மகிமைப்படுத்தவே உலக முதியோர் தினம் மற்றும் சிறுவர் தினம் ஒரே நாளில் கொண்டாடப்படுகின்றது.

குழந்தைப் பருவத்தின் இரண்டாம் கட்டமே முதுமைப்பருவம் இதை அனைவ ரும் உணர்ந்தவர்களாக முதுமையின் தடை தாண்டல்களை வெற்றி கொள்ள உடற்கார ணிகளாலும் உளக்காரணிகளாலும் சமூகக் காரணிகளாலும் அவர்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும். இன்றைய முதுமை நேற்றைய இளமை. இன்றைய இளமை நாளைய முதுமை இது நியதி. அவர்கள் கூண் டுக்கிளிகளாக வீட்டுச் சிறையில் வாழப் பிறக் கவில்லை. சுதந்திரமாக ஆளப்பிறந்தவர்கள். என்றுமே முதியோரைப் பேணுவோமாக...!!

சிவதர்ஷன் சுபாஷினி,...✍
மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்,
வவுனியா.

யாவரும் கேளீர்

பல்சுவை இலக்கியத் திரட்டு 60

தமிழறிஞர், டாக்டர் தி.ஞானசேகரன்

('யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது கணியன் பூங்குன்றனது வரிகள். இதில் கேளிர் என்பது உறவினர் எனப் பொருள்படும். இந்த உறவினருக்கு நான் தரும் பத்தி யாவரும் கேளீர்!)

கொரோனா தொற்றுச் சூழலில் பாதுகாப்பாக வாழப்பழகுவோம்

நாடு முழுவதும் அமல் படுத்தப்பட்ட தனிமைப் படுத்தல் ஊரடங்குச் சட்டம்; ஒக்டோபர் முதலாம் திகதியிலிருந்து தளர்த்தப்பட்டுள்ளது.

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டு நிலைமை ஓரளவுக்கு கட்டுப் படுத்தப்படும்போது, பொதுமக்கள் சுகாதார வழிகாட்டல்களை புறக்கணிப்பதும் சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதும் வழமையாக இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இது மற்றுமொரு அலைக்கு வழி வகுக்கும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இதேவேளை இது குறித்து கருத்துத் தெரிவித்த சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, 'தற்போது உலக நாடுகள் அனைத்திலும் புதிய இயல்பு நிலைக்கு மக்கள் தங்களைத் தயார்படுத்திக் கொண்டிருக்கின்றனர். சர்வதேச நாடுகளில் மக்கள் அதனை செயற்பாட்டு ரீதியில் முன்னெடுக்கின்றனர். நாமும் அவ்வாறான புதிய இயல்பு நிலைக்கு எம்மைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும். அதில் நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கு முன்வருவது கட்டாயமாகும். அவ்வாறு புதிய இயல்பு நிலையை நாம் உள்வாங்கி செயற்படுவதனூடாகவே இந்த அச்சுறுத்தலிலிருந்து வேளியேற முடியும். எதிர்வரும் சில வருடங்களுக்கு உலகம் இந்தப் புதிய இயல்பு நிலைமைக்கு அமையவே இயங்கப் போகிறது. எனவே அதற்கு எம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். நாமும் புதிய இயல்பு நிலையில் எவ்வாறான சுகாதார நடைமுறைகள் இருக்கின்றன என்பது தொடர்பில் தெளிவைப் பெற்று அவற்றைப் பின்பற்றி சகலரும் நடந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்' எனக் கூறியுள்ளார்.

இந்நிலையில் எமது நாட்டில் சகலரும் பொறுப்புடன் செயற்படுவதன் மூலம் புதிய இயல்பு நிலையில் வாழ நம்மைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும்.கொவிட் வைரஸ் தொற்றினை கட்டுப்படுத்தல் செயற்பாடுகளை சுகாதாரத் தரப்பினரும் பாதுகாப்புத் தரப்பினரும் மேற்கொண்டு வருகின்றனர். இவர்களின் இந்தக் கட்டுப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு பொதுமக்களும் தமது பங்களிப்பை நல்குவது அவசியமாகும். சகலரும் ஒன்றிணைந்து சமூக அக்கறையுடன் கூட்டாக பணியாற்றினால் மட்டுமே இந்தக் கொடிய நோயிலிருந்து நாட்டையும் மக்களையும் காப்பாற்ற முடியும்.

எழுத்தாளர் ஜுனைதா ஷெரீப் மறைவு

இலக்கிய வித்தகர் கலாபூஷணம் ஜுனைதா ஷெரீப் 03102021 அன்று அமரரானார் என்ற செய்தி ஈழத்து இலக்கிய உலகை பெரிதும் கவலைக்குள்ளாக்கியுள்ளது.

காத்தான் குடியில் 15.09.1940 அன்று பிறந்த இவரது இயற்பெயர்; கச்சி மொஹமட் மொஹமட்ஷெரீப் என்பதாகும்.

இலங்கை நிர்வாக சேவைக்கு உட்பட்ட பல அரச பணிகளில் கடமையாற்றிய இவர், பிரிவு உதவி அரசாங்க அதிபர், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், திணைக்களப் பணிப்பாளர், அமைச்சுகளின் சிரேஸ்ட உதவிச் செயலாளர் போன்ற பல பதவிகளை வகித்துள்ளார்.

சிறுகதை, நாடகம், நாவல் ஆகிய துறைகளில் எழுதிய இவர் நூற்றுக்கு மேற்பட்ட வானொலி நாடகங்கள், அதே தொகையான சிறுகதைகள், பதினெட்டு நாவல்கள் ஆகியவற்றை எழுதியுள்ளார்.

1967ஆம் ஆண்டு ஜுனைதாவுடனான இவரது திருமணம் இடம் பெற்றது. தனக்கொரு புனைபெயரைச் சூட்டிக்கொள்ள விரும்பிய இவர் தனது மனைவியின் பெயரையும் சேர்த்து 'ஜுனைதா ஷெரீப்' என வைத்துக்கொண்டார்.

இவரது 'சாணைக்கூறை' 'மூன்றாம் முறை', 'சிதைவுகள்', 'சாட்சிகள் இல்லாத சாமத்தில்...' ஆகியவை தொடர்கதைகளாக தினகரனில் வெளிவந்தன. 'காட்டில் எறித்த நிலா', 'ஒவ்வாமுனைக் காந்தங்கள்', 'இது நம்ம சொத்து', ஆகியவை இவரது ஆரம்பகால நாவல்களாகும்.

அவன் ஒன்று நினைக்க என்ற நாவல் வீரகேசரி பிரசுரமாக வெளிவந்தது.

வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பப்பட்ட நாடகங்களில் சிலவற்றைத் தொகுத்து இவர் வெளியிட்ட 'பொன்னாடை' நூல் 1990ஆம் ஆண்டு இலங்கை அரசின் சாகித்திய விருதினைப் பெற்றது. இவரது 'ஜனநாயகர்கள்' நாவல் வட கிழக்கு மாகாண சபையின் சாகித்திய விருதினைப் பெற்றது.

இவர் எழுதிய 'சின்ன மரைக்கார் பெரிய மரைக்கார்' நவீனம் இலங்கை தேசிய அரசினதும் வட கிழக்கு மாகாண சபையினதும் சாகித்திய விருதுகளைப் பெற்றது. சூனியத்தை நோக்கி என்ற நாவல் தஞ்சாவூர் பல்கலைக்கழக கரிகாற்சோழன் விருது பெற்றது.

இவரது சிறுகதைத் தொகுப்புகளாக இளநரை, இவளுக்காகவா?, சலாமத்போ, சீதாக்காதினி, கனவுலகம் ஆகியவை வெளிவந்துள்ளன.

விடியாத இரவு இவர் எழுதிய கடைசி நாவலாகும்.

இவரது பணிகளைப் பாராட்டி இலங்கை அரசின் கலாபூஷணம் விருது, இலங்கை அரசின் 'இலக்கிய வித்தகர்' விருது, காத்தான்குடி பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் 2006இல் 'இலக்கியச் செல்வர்' விருது, காத்தான்குடி நகர சபையினால் 2007ஆம் ஆண்டு சாதனையாளர் விருது என்பன வழங்கப்பட்டன. ஞானம் சஞ்சிகை 2013 ஒக்டோபர் இதழில் இவரை அட்டைப்பட அதிதியாகக் கௌரவித்தது.

டென்மார்க் தேசிய அருங்காட்சியகம்

டென்மார்க் அரசன் ஏழாவது பிறெட்றிக்கின்; அரச வாசஸ்தலமாக 1850இல் விளங்கிய அரச மாளிகை, 1877முதல் தேசிய அருங் காட்சியகமாகப் பாவிக்கப்படுகிறது.

இந்த மாளிகையின் முன்னால் கிரேக்க புராண மரபில் வருகின்ற கடல் தெய்வமான நெப்டியூன் தெய்வத்தின் சிலை அமைந்துள்ளது. இந்தச் சிலையின் மேற்புறத்தில் நீர்த்தாரைகள் சீறியடித்துக் கொண்டிருக்கின்றன. இச்சிலையானது வடமேற்கு ஐரோப்பிய மக்களின் 17ஆம் ஆண்டின் உன்னத நிலையை உருவகப்படுத்துகிறதாம்.

இந்த அருங்காட்சியகத்தின் நுழைவாயிலில், சுற்றிப் பார்ப்பதற்கு வசதியாக ஒரு வரைபடத்தைத் தருகிறார்கள். அதில் காணப்படும் அறை எண்களின் ஒழுங்குப்படி சென்றால் எவ்வித குழப்பமும் இல்லாமல் உள்ளே காட்சிப் பொருட்கள் யாவற்றையும் பார்த்து விடலாம். இங்கு 80 அறைகளில் காட்சிப் பொருட்கள் இருப்பதாக வரைபடக் குறிப்புகள் மூலம் அறிய முடிந்தது.

500 வருட வரலாற்றைக் குறிக்கும் ஓவியங்கள், வரைபடங்கள், தளபாடங்கள், கலைப்பொருட்கள் எனப் பலவகை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பொருட்கள் இங்கு காணப்படுகின்றன. டெனிஸ் வரலாற்றைச் செம்மைபடுத்திய பலதரப்பட்ட காட்சிகள், ஓவியங்கள், சிற்பங்கள் இங்குள்ளன. இந்த அருங்காட்சியகம் நாட்டில் இடம்பெற்ற போர், நாட்டின் வளர்ச்சி, நாட்டில் ஏற்பட்ட

இயற்கை அழிவுகள் போன்றவற்றை முழுமையாகப் பரதிபலிக்கவில்லை என்ற கருத்தும் நிலவுகின்றது.

ஓர் அறையில் மரத்தால் செய்யப்பட்ட 1000 குழல்களைக்கொண்ட ஓர் இசைப்பேழை காணப்பட்டது. இது 1610ஆம் ஆண்டு செய்யப்பட்டதாம். அன்றிலிருந்து இன்றுவரை எவ்வித மாற்றங்களுமின்றி பழுதடையா நிலையில் அது இருக்கிறது. இந்த இசைப்பேழை ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பகல் வேளைகளில் இசைத்துக் காட்டப்படுகிறதாம்.

1605இல் செய்யப்பட்ட சமயப் பிரசார மேடை யொன்றையும் காண முடிந்தது. இது கருங்காலி மரத்தில் செய்யப்பட்டு விளிம்புகள் பொன், வெள்ளி உலோகங்களால் இழைக்கப்பட்டிருந்தன.

இங்குள்ள வழிபாட்டு மண்டபத்தின் சுவர்களில் டெனிஷ; பிரபுக்களின் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. இவற்றைவிட முக்கியஸ்தர்களான நெல்சன்மண்டேலா, வின்சன்ட் சேர்ச்சில் மென்கோமேரி மற்றும் ஏனைய நாடுகளின் தலைவர்கள் சிலரது படங்களும் காணப்படுகின்றன.

இங்குள்ள நடனப் பெருமண்டபம் 50 மீற்றர் நீளமானது. இந்த மண்டபத்தின் சுவர்களில் நான்காம் கிறிஸ்டியனின் வாழ்க்கையைக் குறிக்கும் ஓவியங்களும் அரசபரம்பரையினரின் ஓவியங்களும் காணப்படகின்றன.

இங்கு 1000க்கும் மேற்பட்ட ஓவியங்கள் உள்ளன. இவற்றைவிட இங்குள்ள தளபாடங்கள் அலங்காரப் பொருட்கள், யாவும் அரசகாலத்தின் செழிப்பை பறைசாற்றியவண்ணம் உள்ளன.

இங்குள்ள 26ஆம் இலக்க அறையில் ஒரு பைபிள் காணப்படுகிறது. இந்த பைபிள் மூன்றாவது கிறிஸ்டியன் காலத்தில் 1550ஆம் ஆண்டில் அச்சடிக்கப்பட்டதாம்.

30ஆம் இலக்க அறையில் நான்காம் கிறிஸ்டியனின் வாழ்க்கை தொடர்பான ஓவியங்கள் உள்ளன. இந்த அறையின் மேற்புற சீலிங்கில் கெபியோன் என்ற பெண் தெய்வம்; சுவீடன் நாட்டில் ஒருபகுதியை நான்கு எருதுகள் பூட்டி உழுது கிளப்பியெடுத்து டென்மார்க் நாட்டினுள் கொண்டுவந்த காட்சி வரையப்பட்டுள்ளது. அந்தப் பெரிய ஓவியத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கும்போதே கழுத்து வலிக்கிறது. எப்படித்தான் ஓவியர்கள் அந்த ஓவியத்தை முகட்டுச் சீலிங்கில் வரைந்தார்களோ!

4951ஆம் அறைகளில் ஐந்தாம் பெறிட்றிக் அரசன், அவனது மனைவி ஆகியோரின் வாழ்க்கைக் காட்சிகள் வரையப்பட்டுள்ளன.

(இனி அடுத்த இதழில்)

படித்ததும் பகர்வதும் 65

சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

நல்லதை சொல்கிறோம்

பெற்றோரும் பரீட்சை பெறுபேறுகளும்

கல்வி பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இப்பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் அனைத்து பாடங்களிலும் அதி திறமை சித்தியான 9ஏ சித்தி பெற்றவர்களின் எண்ணிக்கை இம்முறை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. இவ்வாறு அதியுயர் சித்தி பெற்ற மாணவர்களின் பெற்றோர்கள் மகிழ்ச்சியடையும் போது, மிகக் குறைவான சித்தியை பெற்றோரின் பெற்றோர்கள் அதனைப் பார்த்து மனமுடைந்து சோர்ந்து போய்விடக் கூடாது.

அதே போன்று சித்தியடைய தவறிய தமது பிள்ளைகளை தண்டிக்கவோ தூற்றவோ, கேலி செய்யவோ, சித்தியடைந்தோரோடு ஒப்பிட்டு குறைவாக பேசவோ, கூடாது. அத்துடன் இத்தகையவர்களை 'பெயில்' (fail) ஆனவர்கள் அதாவது 'தோல்வியடைந்தவர்கள்' என்று அழைப்பது தவறு. அத்தகையவர்களை "சித்தியடையத் தவறியவர்கள்" என்றே கருத வேண்டும். ஏதோ ஒரு சில காரணங்களுக்காக இப்பரீட்சையில் சித்தியடைய தவறியவர்கள் திறமை அற்றவர்களாகவோ, ஆற்றல் குறைந்தவர்களாகவோ, எதனையும் செய்ய முடியாத வர்களாகவோ இருப்பார்கள் என்று எண்ணிவிடவோ, தீர்மானிக்கவோ கூடாது.

பரீட்சையொன்றின் பெறுபேறு என்பது ஒருவரின் திறமையை முழுமையாக அளவிடும் இறுதியான அளவுகோல் அல்ல. குறித்த பரீட்சையில் சித்தியடையத் தவறிய மாணவன் அடுத்த பரீட்சையில் சிறந்த சித்தியைப் பெறக் கூடும். அதே போன்று அவனது ஆற்றலும், திறமையும் வேறு துறைகளில் அல்லது வேறு விடயங்களில் சிறப்பாக இருக்க முடியும். இவற்றை சரியாக முறையாக தேர்வு செய்து உரிய முறையில் வழி நடத்தும் போது அம்மாணவன் வெற்றியாளனாக உருவாகுவான்.

எனவே, பரீட்சை ஒன்றில் சித்தியடைய தவறியவர் என்பதற்காக தமது பிள்ளைகளை "அவர்கள் எதற்கும் இலாயிக்கற்றவர்கள்" என்று ஒதுக்கி விடாமல், அவர்களது ஆற்றல்களையும் திறமைகளையும் இனங்கண்டு அவர்களை தட்டிக்கொடுத்து, அவர்கள் எத்துறைகளில் ஆற்றல் மிக்கவர்களாக இருக்கிறார்கள் என்பதை தெரிந்து, அறிந்து, புரிந்து அவ்வத்துறைகளில் அவர்களை நெறிப்படுத்தி வழி நடத்தினால் அவர்கள் நிச்சயமாக வெற்றியாளர்களாக மாறுவார்கள்.

க. பொ. த சாதாரணதரப் பரீட்சையின் சித்தி என்பது மாணவரின் க. பொ. த. உயர்தர வகுப்பில் கற்பதற்கான தகுதியைத் தீர்மானிக்கும் ஒரு பொறிமுறையேயன்றி, அவர்களது எதிர்காலத்தையே முடிவு செய்யும் இறுதியான விடயமல்ல என்பதை உணர வேண்டும். பெற்றோர் இவற்றை தெளிவாகப் புரிந்துகொண்டு, பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டியது அவசியமாகும்.

நெஞ்சுக்கு நீதி

சோம்பலும், சோர்வும் சரிவின் குனங்கள்
தயக்கமும் தளர்வும் தோல்வியின் நிழல்கள்
துணிவும் திறனும் உயர்வின் படிகள்
உணர்ந்து உழைத்தால் வெற்றிக் கனிகள்

பிரிந்தார் பெருமை

'கலாபூஷணம்' நந்தினி சேவியர்

இலங்கையின் முது பெரும் எழுத்தாளரும், சமூகப் போராளியுமான நந்தினி சேவியர் கடந்த 2021.09.16 அன்று தனது 72ஆவது வயதில் காலமானார். யாழ் தென்மராட்சி மட்டுவிலை பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிட மாகவும் கொண்டிருந்த இவரது இயற்பெயர் தேவசகாயம் சேவியர்.

1967 முதல் எழுதிவந்த இவர் 'அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்', 'நெல்லிமரப் பள்ளிக்கூடம்', 'நந்தினி சேவியர் படைப்புகள்', பிடித்த சிறுகதைகள் எனும் இலக்கியப் படைப்புகளைத் தந்துள்ளார். "எனக்கு பிடித்த சிறுகதை' எனும் நூலில் 200க்கும் மேற்பட்ட சிறுகதைகளைப் பற்றிய குறிப்புகளையும், அவற்றினை படைத்தவர்களின் விபரங்களையும் பதிவு செய்துள்ளார்.

'ஈழநாடு' பத்திரிகையின் 10வது ஆண்டு விழா அகில இலங்கை நாவல் போட்டியில் 'மேகங்கள்' என்ற நாவலுக்கு இரண்டாம் பரிசு, பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்க 50 வது ஆண்டு நிறைவு நாவல் போட்டியில் 'ஒரு வயதுபோன மனிதரின் வாரிசுகள்' என்ற குறுநாவலுக்கு தங்கப் பதக்கம், 1993 ல் விபவி சுதந்திர இலக்கிய அமைப்பின் சிறந்த சிறுகதைத் தொகுப்புக்கான முதற்பரிசு, 2012ல் 'நெல்லிமரப் பள்ளிக்கூடம்' சிறுகதைத் தொகுதிக்கு சாகித்திய மண்டலப் பரிசு போன்ற பல பரிசுகளையும் விருதுகளையும் தனது எழுத்தாக்கங்களுக்காகப் பெற்று தனது எழுத்தின் சிறப்பை நிறுவியுள்ளார்.

இலக்கியப் பங்களிப்புக்காக 2011ல் கிழக்கு மாகாண முதலமைச்சர் விருது, 2013ல் அரச 'கலாபூஷணம்' விருது, 2015ல் கொடகே வாழ்நாள் சாதனையாளர் விருது, 2014 2015களில் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் 'சங்கச் சான்றோர் விருது', போன்ற விருதுகள் பலவற்றால் நந்தினி சேவியர் கௌரவப்படுத்தப்பட்டுள்ளார்.

தனது அந்திம காலத்தில் சமூக வலைத்தளங்களில் மிகச் சிறப்பாக இயங்கி வந்த இவர், தனது தனிப்பட்ட முக நூல் மூலம் பாரிய இலக்கியப் பணிகளை செய்து கொண்டிருந்தார். நந்தினி சேவியர் இவ்வுலகைவிட்டும் மறைந்தாலும், அவரது இலக்கிய, சமூகப் பணிகள் என்றும் உயிர் வாழும்.

நூலகத்துக்கு ஒரு நூல்

"தியாகத்தின் நிறம் பச்சை"

ஒரு நாட்டின், ஒரு இனத்தின், ஒரு சமூகத்தின் கடந்த கால வரலாறு என்பது அவற்றின் நிகழ்கால, எதிர்கால இருப்புக்கும், வளத்துக்கும், வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும், எழுச்சிக்கும் அத்தியாவசியமாகும். இதனாலேயே தமது வரலாற்றை பாதுகாக்கவும், அவற்றின் உண்மை நிலையை உறுதிப்படுத்தவும் நடவடிக்கை எடுப்பது அவசியமாகிறது.

இந்த விடயத்தில் இந்திய முஸ்லிம்களின் திரிவுபடுத்தப்பட்ட வரலாற்றை திருத்த எடுக்கப்பட்ட ஒரு முற்சியாக பேராசிரியர் மு. அப்துல் சமது எழுதியுள்ள "தியாகத்தின் நிறம் பச்சை" ஆய்வு நூல் அமைந்துள்ளது. இந்த நூலை எழுதிய நோக்கத்தை பேராசிரியர் இவ்வாறு குறிப்பிடுகிறார். "இந்தியாவின் வரலாறு அதிலும் குறிப்பாக இந்திய இஸ்லாமியரின் வரலாறு திருத்தி எழுதப்பட வேண்டும் என்பது இன்றைய காலத்தின் கட்டாயத் தேவை. முஸ்லிம்களைத் தேச விரோதிகள், தேசப்பற்று இல்லாதவர்கள், வன்முறையாளர்கள், இந்த மண்ணின் மரபுகளுடனும் இந்திய தேசத்தின் பண்பாட்டு பாரம் பரியங்களுடனும் ஒத்துப் போகாதவர்கள் என்றெல்லாம் கட்டுக்கதைகள் தீவிரமாகப் பரப்பப்பட்டு வருகின்றன. இந்தச் சூழலில் இந்திய தேசத்தின் விடுதலைப் போரில் பச்சை ரத்தமாய் பரிமாறப்பட்ட இஸ்லாமியர்களின் தியாகங்களும் வரலாறுகளும் மீண்டும் மீண்டும் பேசப்பட வேண்டும்.

இந்த தார்மீக பொறுப்புணர்வின் அடிப்படையில் தான் தியாகத்தின் நிறம் பச்சை என்ற இந்நூலை, நான் அறிந்த வரலாற்று ஆதாரங்களைக் கொண்டு படைத்துள்ளேன்.

இந்திய விடுதலைக்கு இஸ்லாமியர் ஆற்றிய தொண்டுகளை முழுமையாகப் பேசுவதோ, பல்வேறு தளங்களில் நின்று தியாகம் புரிந்தோர் பெயர்களைப் பட்டியலிட்டுக் காட்டுவதோ என் நோக்கமல்ல. என் மனதைப் பாதித்த விசயங்களை மட்டும் உங்களோடு பகிர்ந்து கொள்ளும் ஆர்வத்தை மட்டுமே இந்நூலின் பக்கங்களுக்குள் நான் பத்திரப்படுத்தியுள்ளேன்."

ஆதாரபூர்வமான தகவல்களைத் திரட்டி, 1. முதன்மையானவர்கள், 2. மண்ணிற்காக மார்க்க அறிஞர்கள், 3. விடுதலைப் போரில் வீர மங்கையர், 4. சுதந்திரத்திற்காய் சிறுவர் முதல் முதியோர் வரை, 5. சுதந்திரப் போரில் முஸ்லிம் பாவலர்கள், 6. ஆனந்த சுதந்திரத்துக்காய் அள்ளிக் கொடுத்தோர் எனும் பிரிவுகளின் கீழ் எழுதப்பட்டுள்ள இவ் ஆய்வு நூல் நூலகங்களில் தவறாது இடம்பெற வேண்டிய ஒரு நூலாகும்.

நூல்: **தியாகத்தின் நிறம் பச்சை**, நூலாசிரியர்: **பேராசிரியர் மு. அப்துல் சமது.** பதிப்பு: **நவம்பர் 2012** , பக்கங்கள்: **120,** வெளியீடு: **நேஷனல் பப்ளிஷர்ஸ், தியாகராய நகர், சென்னை.**

சரித்திரத்தில் ஒரு சம்பவம்

லியோ டால்ஸ்டாய்சும் சிறுமியும்!

உலகப் புகழ் பெற்ற ரஷ்ய எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய் ஒரு நாள் ஒரு பூங்காவில் அமர்ந்திருந்தார். அப்போது அங்கு ஒரு பந்துடன் வந்த சிறுமியொருத்தி, டால்ஸ்டாய் அருகே வந்து, அவரைப் பார்த்து 'என்னோடு விளையாட வர்றீங்களா?' என்று கேட்டாள்.



அவரும் ஒப்புக் கொண்டு அந்தச் சிறுமியுடன் சிறிது நேரம் விளையாடினார். மாலை நெருங்கவே, அந்தச் சிறுமி டால்ஸ்டாயிடம், "நான் போய் வருகிறேன்" என்று கூறிவிட்டுக் கிளம்பினாள். அதைக் கேட்ட டால்ஸ்டாய், "உன் அம்மாவிடம் 'நான் டால்ஸ்டாயுடன் விளையாடினேன்' என்று சொல்லு" என்றார்.

அதற்கு அந்தச் சிறுமி, "நீங்களும் உங்கள் அம்மாவிடம், 'நான் மேரியுடன் விளையாடினேன்' என்று சொல்லுங்கள் ' என்றாள்.

உலகமெங்கும் புகழ்பெற்ற தன்னை, அவள் தனக்கு இணையாக நினைத்ததை எண்ணிய போது, தன் நிலையினையுணர்ந்து, தன மனதில் தோன்றிய கர்வத்துக்காக லியோ டால்ஸ்டாய் வெட்கப்பட்டார்.

நீங்கள் எவரை விடவும் உயர்ந்தவெரென்றோ, மதிப்புமிக்கவரென்றோ, அறிவானவரென்றோ, அழகானவரென்றோ, படித்தவரென்றோ உங்களை நீங்களே அளவுக்கதிகமாக உயர்வாக நினைத்துக் கொள்ளாதீர்கள். ஒவ்வொரு மனிதரும் ஒவ்வொரு வகையில் சிறப்புக்குரியவர்கள் என்பதைப் புரிந்துகொள்வோம்.தான்.

செந்தமிழ் அது தேன் தமிழ்

பதினாறும் பெற்று ..!

இல்லறத்தில் இணையும் புதுத் தம்பதிகளை "பதினாறும் பெற்று பெரு வாழ்வு வாழ்க!"என்று வாழ்த்துவது வழக்கம். ஆயினும் இந்த "பதினாறு" என்பதை 'பதினாறு பிள்ளைகள்' என்று சிலர் கேலியாக கதைப்பதுண்டு. உண்மையில் இந்த பதினாறு எவற்றைக் குறிப்பிடுகிறது என்பதை எத்தனை பேர் தேடிப்பார்த்திருப்பார்கள். அந்த 'பதினாறு' குறிப்பிடுவது இவற்றைத்தான்.

01.	புகழ்,	09.	நுகர்ச்சி,
02.	கல்வி,	10.	அறிவு,
03.	வலிமை,	11.	அழகு,
04.	வெற்றி,	12.	பெருமை,
05.	நன் மக்கள்,	13.	இனிமை,
06.	பொன்,	14.	துணிபு,
07.	நெல்,	15.	நோயின்மை,
08.	நல்விதி,	16.	நீண்ட ஆயுள்

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 ஒக்டோபர் மாதம் 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்
2021 ஒக்டோபர் 10 ஞாயிற்றுக்கிழமை

விசித்திர பழக்கம்

இந்தோனேசியாவில் டானா டொரா என்ற தீவில் வசிக்கும் மக்களிடம் விசித்தரமான பழக்கம் ஒன்று இருக்கிறது. அங்கு பிறக்கும் குழந்தைகள் பல் முளைக்கும் முன்னரே இறந்துவிட்டால் அவர்களை புதைக்க மாட்டார்கள். குடும்பத்தினர் சேர்ந்து மரத்தில் பொந்து ஒன்றை தோண்டி குழந்தையின் உடலை வைத்துவிடுவார்கள். மரம் வளர்ந்து குழந்தை உடலை விழுங்கிவிடும்.

இங்குதான் இறந்த உடல்களைத் தோண்டி எடுத்து அவைகளை புத்தாடை அணிவித்து கொண்டாடும் பழக்கமும் இருக்கிறது.

அமெரிக்காவை கொலம்பஸ் கண்டுபிடித்தாரா?

அமெரிக்காவை கண்டுபிடித்தது கொலம்பஸ் என்ற பொத்தாம்பொதுவான பொது அறிவு பல வரலாற்றுச் சம்பவங்களால் கேள்விக்குள்ளானபோதும், இன்றும் இந்தக் கேள்விக்கான 100 புள்ளிகளும் கொலம்பஸ ுக்குத் தான் கிடைக்கிறது. இத்தனைக்கும் ஐரோப்பாவில் கூட இந்தக் கூற்றுக்கு முழுமையான ஆதரவு இல்லை.

உண்மையில் கொலம்பஸுக்கு 500 ஆண்டுகளுக்கு முன்னரே லீப் எரிக்சன் என்பவர் வட அமெரிக்காவை சென்றடைந்தாராம். அதாவது இவரே அமெரிக்காவை அடைந்த முதலாவது ஐரோப்பியர் என்ற வரலாறு கூட ஐரோப்பாவில் பரவலாக நம்பப்படுகின்ற ஒன்று. கொலம்பஸுக்கு முன்னர் இவர் கனடா பக்கமாக குடியேற்றங்களை அமைத்திருந்தாராம்.

எனவே கொலம்பஸ் அமெரிக்காஸ் பிராந்தியத்தை கண்டுபிடித்தபோது அங்கு பெரும் எண்ணிக்கையான மக்கள் வாழ்ந்து வந்தார்கள். அதாவது அந்தப் பிராந்தியத்தில் அப்போது 90 மில்லியன் மக்கள் இருந்தார்களாம். இது அப்போதைய மக்கள் தொகையில் முன்றில் ஒரு பங்கு. எனவே, கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடித்தார் என்ற தர்க்கம் தான் இன்றும் புரியாத ஒன்றாக இருக்கிறது.

அதிகம் சம்பாதித்த விளையாட்டு வீரர் யார் தெரியுமா?

டைகர் வூட்ஸ், கிறிஸ்டியானோ ரொனால்டோ, மெஸ்ஸி போன்ற விளையாட்டு வீரர்கள் இப்படி பணம் சம்பாதிக்கிறார்களே என்று ஆச்சரியப்படுபவர்களுக்கு கயியஸ் அப்புலியஸ் பற்றித் தெரியாதிருக்கும். பண்டைய வரலாற்றில் இவர் தான் பிரபலான விளையாட்டு வீரர். கி.பி 104 தொடக்கம் 146 ஆம் ஆண்டு வரை வாழ்ந்த அப்புலியஸ் தேரோட்ட விளையாட்டு வீரர் ஆவார்.

அவர் இன்றைய மதிப்புப் படி விளையாட்டினால் சம்பாதித்த மொத்தப் பணம் 15 பில்லியன் டொலர்களுக்கு அதிகம். இந்தப் பணம் அப்போதைய ரோமப் பேரரசின் ஒட்டுமொத்த இராணுவத்திற்கும் இரண்டு மாதங்களுக்கு மேல் சம்பளம் வழங்கப் போதுமான காசு. எனவே விளையாட்டின் மூலமாக இதுவரை உலகில் அதிகம் சம்பாதித்த வீரர்கள் வரிசையில் அப்புலியஸ் முதலிடத்தில் இருக்கிறார். அவருடன் ஒப்பிடும்போது டைகர் வூட்ஸ் எல்லாம் கால் தூசுக்கு சமம்.

பூகோள சஞ்சாரம் பிர்தௌஸ்

வேலையைப் பறித்த 'அலாரம் கடிகாரம்'

அலாரம் கடிகாரத்தை கண்டுபிடிப்பதற்கு முன்னர் தூக்கத்தில் இருந்து ஆட்களை எழுப்புவது ஒரு தனித் தொழிலாளர் இருந்திருக்கிறது. வேலைக்குச் செல்வதற்கு காலையிலேயே எழுந்திருப்பதறகாக மக்கள், துயில் எழுப்புபவர்களை பணியில் அமர்த்தி இருக்கிறார்கள். இந்த வேலை இங்கிலாந்து, அயர்லாந்தில் அதிக பிரபலமான தொழில். இவர்களை ஜன்னலைத் தட்டுபவர்கள் என்று அழைப்பார்கள். பெரிய குச்சியை வைத்திருக்கும் இவர்கள் மேல் மாடிகளில் உறங்குபவர்களை அந்தக் குச்சியைக் கொண்டு ஜன்னலைத் தட்டி எழுப்புவார்கள்.

தொழில் புரட்சி காரணமாக நேரத்திற்கு வேலைக்குப் போக வேண்டிய கட்டாயம் எப்போதையும் விடவும் அதிகரித்தபோதே இந்த துயிலெழுப்புவோர்கள் தோன்றினார்கள். 1920கள் வரை இந்தத் தொழில் இருந்து வந்திருக்கிறது. பின்னர் அலாரம் கடிகாரங்கள் சாதாரண மக்களுக்கு வாங்க முடியுமான விலைக்கு கிடைக்க ஆரம்பித்தபோது இந்தத் தொழிலும் காலத்தோடு சேர்த்து காணாமல்போய்விட்டது.

பேசாமலேயே பிரபலமான டிக்டொக் நட்சத்திரம்!

இத்தாலியிலே கடந்த ஆண்டு கொரோனா முடக்கநிலை கடுமையாக அமுல்படுத்தப்பட்டபோது வடக்கு நகரான டூரினுக்கு அருகில் இருக்கும் தொழிட்சாலை ஒன்றில் வேலை பார்த்த கபாலே லாம் தொழிலை இழந்தார்.

அதற்கு பின் வேலை இல்லாமல் வீட்டில் பெற்றோர்கள் மற்றும் மூன்று சகோதரர்களுடன் வெட்டி வேலை பார்த்த அந்த இளைஞன், சும்மா இருக்க முடியாமல் டிக்டொக் செயலியை தறவிறக்கம் செய்தான். அதில் அடிக்கடி வீடியோக்களை பதிவு செய்த கபாலே லாம் அதுவே வேலையாக மாறும் என்று நினைத்திருக்க மாட்டான்.

முகத்தில் நகைச்சுவையாக ஒவ்வொரு பாவனை காட்டி நடனமாடியும், குரும்புச் செயலில் ஈடுபட்டும் அந்த இளைஞன் பதிவிட்ட வீடியோக்கள் மக்களின் விருப்பத்தை பெற்றது.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் நாளாந்த செயற்பாடுகள் பற்றி அவர் கேலியாகச் செய்த வீடியோக்கள் அனைவரையும் கவர்ந்தது. குறிப்பாக பிறர் பதிவேற்றம் செய்யும் வீடியோக்களில் இருக்கக்கூடிய மிகக் கடினமான லைப் ஹெக்ஸ் என்றழைக்கப்படும் வாழ்க்கைக் குறிப்புகளை, கேலி செய்து முகபாவத்துடன் பதிவேற்றம் செய்தது அதிக பிரபலம்.

இதனால் இன்று அவர் டிக்டொக்கில் அதிக பிரபலமானவராக மாறிவிட்டார். அவரை பின்தொடர்பவரின் எண்ணிக்கை 114 மில்லியன்களைக் கடந்துவிட்டது. அவரை விடவும் கலிபோர்னியாவின் நடனக்காரர் சார்லி டாமேலியோ மாத்திரமே அதிக பின்தொடர்வோரை பெற்றவர்.

பேசாமலேயே பலவற்றை உணர்த்தும் மனிதர் என்று இணையவாசிகள் அவருக்குச் செல்லமாகப் பெயர் வைத்துள்ளனர்.

பெண் எழுத்தாளர் 11

நிந்தவூர் முஜாமலா (வானம்பாடி முஜா)

நிந்தவூர் மண்ணின் மீன்பிடி மற்றும் விவசாய குடும்பஸ்தர் மீராலெப்பை றஷீட் மற்றும் அஹமட் லெப்பை சுஹறா தம்பதிகளின் மூன்று பிள்ளைகளில் இரண்டாவது பிள்ளையாக பிறந்தவர் முஜாமலா.

இவர் வளர்ந்து வரும் பெண் எழுத்தாளராவார். முக அடையாளம் இல்லாமல் நீண்டகாலமாக கவிதைகளை முகநூலில் "வானம்பாடி " எனும் புனைப்பெயரில் எழுதிவருகிறார்.

இவர் கல்விப்பிண்ணனி பற்றிக் குறிப்பிடுகையில் ஆரம்பம் முதல் உயர்தரம் வரையில் நிந்தவூர் மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கற்றார். பாடசாலைக் காலங்களில் பாடசாலைமட்ட, கோட்ட , மாகாண மட்டங்களில் தமிழ்த் தினப் போட்டிகள், மீலாதுன் நபி விழா, மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றில் கவிதை, கட்டுரை, சிறுகதையெனப்

பங்குபற்றி பாராட்டுக்களையும், பரிசில்களையும், சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டதாக தெரிவித்தார்.

திருமணத்தின் பின்னர் இலக்கியம் மீதான ஆவர்வம் இயல்பாகவே குறைந்து போக பின்னர் 2008களில் கணவரின் அனுமதியுடன் மீண்டும் இலக்கியம் மீதான பயணத்தை ஆரம்பித்து முகம் காட்டாமல் தன் படைப்புக்களை வாசகர்கள் முன் வைத்து வந்தார்.

பின்னர் இவரது #துளிப்பாக்கள் எனும் முதல் கவிதை 2008ல் தினகரன் தேசியப் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்து ஊர்க்குருவி, வானம்பாடி எனும் புனைப்பெயர்களில் தனது அடையாளத்தை உருவாக்கிக் கொண்ட இவரது ஆக்கங்கள் முகநூலில் பலராலும் அதிக விருப்புக்களை பெற்றுக் கொண்டுள்ளதாக கூறினார்.

அதன் பின்னர் பிறை எப்.எம். இன் மாலை மருதம், சந்தனக் காற்று, சக்தி எப்.எம், கெபிடல் எப்.எம். போன்ற வானொலிகளிலும் இவரது கவிதைகள் இடம்பெற்றன.

எழுத்து, நீர் போன்ற வலைத்தளங்களிலும் மெட்றோ, விடிவெள்ளி,

தமிழன், மித்திரன் உள்ளிட்ட தேசிய பத்திரிகைகள், வளரி, அக்கினிச் சிறகு , துணிந்தெழு , தேடல் இலக்கியம் போன்ற சஞ்சிகைகளும்

இவரது இலக்கியப் படைப்புக்களுக்கான களத்தை வழங்கிக் கொண்டிருக்கின்றன.

இவரது கவிதைகளில் சமூக ஒழுக்க முறைமை, சமூக தாக்கங்கள், ஏக்கங்கள் தொடர்பாகவும் சமூக அவலங்களையும், உணர்வுகளையும், அனுபவங் களையும் கிளர்ந்து முகம் காட்டாமல் தன் எழுத்துக்களால் கவிதையாக எழுதுகிறேன் என தெரிவித்தார்.

2019, 2020 களில் கிழக்கிலங்கை இளைஞர்கள் அமைப்பினால் முறையே சிறந்த ஆளுமை , சிறந்த எழுத்தாளருக்கான விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

அதன் பின்னர் 2020இல் அம்பாறை மாவட்ட செயலகமும் மற்றும் நிந்தவூர்

கலாச்சார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடாத்திய பிரதேச இலக்கிய விழாவில் இவரது கவிதை முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டதுடன் மாவட்ட மட்டத்திலும் வெற்றியினைத் தட்டிக் கொண்டது.

மேலும் வளரி, பன்னாட்டு கலைஞர் சங்கத்தின் அம்பாறை மாவட்ட பிராந்திய இணைப்பாளராகவும், கடற் பறவைகள் இலக்கிய அமைப்பின் பொருளாளராக

வும், நிறைமதி கலை இலக்கிய மன்றத்தின் செயலாளராகவும் ,

தனது இலக்கியச் செயற்பாடுகளில் இவரது

பங்களிப்புக்கள் இருந்து வருகின்றன எனக் குறிப்பிட்டார்.

அத்துடன் இவரது கவிதைக் காதலினால் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கவிதாசாளரத்தின் குரல்வழிக்கவிபாடியாகவும் தொடர்ந்து குரல் கொடுத்தும் வருகிறார்.

மேலும், தூரிகைக்காதல் www.thoorigaikadhal.com எனும் தனது சொந்த வலையத்தளத்தினூடாக இலக்கியப் படைப்புக்களை வாசகர்களுக்கு காட்சிப்படுத்துவதுடன்

அவரது வலைத்தளத்தில் "நீங்களும் எழுதலாமெனும்" பகுதியினூடாக சக படைப்பாளிகளுக்கும் களம் அமைத்துக் கொடுத்துள்ளார்.

இவரது கவி ஆர்வம் கண்டு

இவரை மங்கை நிகழ்ச்சி மூலமாக youth tv இவரது நேர்காணலை ஒலிபரப்பியது. அத்துடன் ...தினக்குரல், தமிழன் பத்திரிகைகள் இவரது செவ்வியை வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் கெப்டன் பதிப்பகத்தின் உடைந்த கப்பல், தங்க நாணயங்கள் போன்ற கவிதைத் தொகுப்பிலும், நிந்தபதி எனும் இலக்கிய தொகுப்பிலும் இவரது கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

இவர் தனது முதலாவது கவிதை நூலை இவ்வருட இறுதிக்குள் வெளியிடும் முனைப்புடன் செயல்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

மஜினா உமறு லெவ்வை
மாவடிப்பள்ளி

பிறந்த நாள் வாழ்த்து

உங்கள் அபிமான செந்தூரம் இதழில் உங்கள் அன்புச் செல்வங்களின் பிறந்தநாள் வாழ்த்துக்களை பிரசுரிக்க தீர்மானித்திருக்கிறோம். குழந்தைகளின் அழகிய நிழற்படம் ஒன்றை மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைத்தால் களமமைத்துக் கொடுக்க தயாராக இருக்கிறோம். குழந்தையின் முழுப் பெயர், பெற்றோரின் பெயர், விலாசம் என்பவற்றுடன் குழந்தையின் பிறப்புச் சான்றிதழ் பிரதி ஒன்றையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

பிறந்தநாள் வாழ்த்து,
செந்தூரம், தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல. 834, கொழும்பு.
Senthooramtkn@gmail.com

அன்புச் செல்வங்களின் படங்களை எமது மின்னஞ்சல் முகவரிக்கோ 0714901181 எனும் வட்ஸ் அப் இலக்கத்திற்கோ அனுப்பலாம்.

நிந்தவூர்
ஏ.எச். பாதிமா சபீஹா ஸம்றூத்
ஒக்டோபர் 05 ஆம் திகதி

10வது பிறந்த தினம் கிண்ணியா ஹிஜ்ரா வீதியில் வசிக்கும் நஜீம் ஸீனத்துல் பஸீரா தம்பதிகளின்
புதல்வி அயானா றுஸ்மின்
2021.10.04 ம் திகதி தனது 10வது பிறந்த நாளை கொண்டாடினார்.

எம்.ஏ.எப். சுமையா
ஒக்டோபர் 14ஆம் திகதி

புதன் கோளை கடக்கும் போது பெபிகொலம்பால் எடுக்கப்பட்ட படங்கள்

புதன் கோளை படம் பிடித்த பெபிகொலம்பு விண்கலம்

ஐரோப்பாவின் பெபிகொலம்பு திட்டம், சூரியனுக்கு மிக அருகில் இருக்கும் புதன் கோளின் முதல் படங்களை அனுப்பியுள்ளது.

புதன்கோளின் மீது அதிவேகமாக பறந்த போது, வெறும் 200 கிலோ மீட்டர் (125 மைல்) உயரத்தில் இந்த படங்களை எடுத்தது அந்த விண்கலம்.

விண்கல கட்டுப்பாட்டாளர்கள் இது போல ஐந்து முறை புதன் கோளுக்கு அருகில் பறக்க திட்டமிட்டுள்ளனர். ஒவ்வொரு முறையும் புதன் கோளின் ஈர்ப்பு விசையைப் பயன்படுத்தி, விண்கலத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்த திட்டமிட்டுள்ளனர்.

பெபிகொலம்பின் வேகம் குறைக்கப்பட்டு, புதன் கோளைச் சுற்றி தனக்கென ஒரு நிலையான சுற்றுவட்டப் பாதையை உருவாக்கிக் கொள்வது தான் அதன் நோக்கம். இத்திட்டம் 2025ஆம் ஆண்டின் இறுதிக்குள் நடக்க வேண்டும்.

பெபிகொலம்பு திட்டத்தின் பக்க வாட்டிலுள்ள குறைந்த தெளிவுத்திறன் கொண்ட கண்காணிப்பு கேமராக்களால் புதன் கோளின் முதல் படங்கள் எடுக்கப் பட்டன.

பெபி தன் உயர் தெளிவுத்திறன் கொண்ட அறிவியல் கேமராக்களைப் பயன்படுத்தவில்லை.

பெபிகொலம்பு அடிப்படையில் இரண்டு விண்கலம். ஒரு பகுதியை ஐரோப்பிய விண்வெளி நிறுவனமான யூரோப்பியன் ஸ்பேஸ் ஏஜென்சி உருவாக்கியது. மற்றொரு பகுதியை ஜப்பானிய விண்வெளி நிறுவனமான ஜாப்பனீஸ் ஸ்பேஸ் ஏஜென்சி (ஜாக்ஸா) உருவாக்கியது.

இந்த இரண்டு பகுதிகளும் ஒன்றோடு ஒன்று இணைந்துள்ள நிலையில் ஐரோப்பிய விண்கலத்தின் உயர் தெளிவுத் திறன் கொண்ட அறிவியல் கேமராக்கள் இரண்டு விண்கலப் பகுதிக்கும் நடுவில் மாட்டிக்கொண்டுள்ளன.

பொறியியல் அல்லது செல்ஃபி கேமராக்கள் கோளின் மேற்பரப்பில் அடையாளம் காணக்கூடிய அம்சங்களை எடுக்க போதுமானவையாக இருக்கின்றன.

இந்த பொறியியல் கேமராக்கள் எடுத்த எளிய கருப்பு வெள்ளை புகைப்படங்கள் சனிக்கிழமை பூமிக்கு வரத் தொடங்கின. எல்லா படங்களும் வந்து சேர்ந்த பின், ஐரோப்பிய விண்வெளி முகமை அனைத்து படங்களையும் தொகுத்து ஒரு குறும்படத்தை உருவாக்கி வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.



குறைந்த தெளிவுத் திறன் கொண்ட கேமராவில் எடுக்கப்படும் படங்களே, புதன் கோளின் முக்கிய அம்சங்களைக் காண போதுமானதாக இருக்கின்றன.

பிரிட்டனின் திறந்தவெளி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் டேவ் ரோத்தேரி, பெபியின் புதன் கோள் புகைப்படங்களைக் கண்டு மகிழ்ச்சிய டைந்ததாக தெரிவித்தார்.

புதன் கோளை அதிவிரைவாக கடக்கும் போது எடுக்கப்பட்ட மகிழ்ச்சிகரமான படங்கள் இவை, இருப்பினும் புதன் கோளின் அற்புதமான பார்வை நமக்கு கிடைத்திருக்கிறது என பிபிசியிடம் கூறினார் அவர்.

"நீங்கள் ஒரு பள்ளமான மேற்பரப்பைக் காண்கிறீர்கள், இருப்பினும் எரிமலை குழம்பு வழிந்தோடிய வழுவழுப்பான தளங்களையும் காண்கிறீர்கள். அதே போல கடந்த காலங்களில் எரிமலை வெடிப்புகள் ஏற்பட்ட ஒளிமயமான பரப்பின் மேல் 10 முதல் 20 மீட்டர் அளவுக்கு விண்வெளியில் காணாமல் போவதைப் பார்க்க முடியும், அந்த வெற்றிடத்தை ஹாலோ என்று நாங்கள் அழைக்கிறோம்."

பெபிகொலம்பு உண்மையாகவே அறிவியல் ஆராய்ச்சி செயல்பாடுகளைத் தொடங்குவதற்கு நீண்ட காலம் இருந்தாலும், சில ஆய்வுக் கருவிகள் புதன் கோளை நெருங்கிச் செல்லும் போது இயக்கப்படுகின்றன.

"எங்களுக்கு அது தொடர்பான தரவுகள் வந்து சேரும்," என்று பிரிட்டனில் இருக்கும் லீசெஸ்டர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முனைவர் சுசி இம்பர் கூறினார். "புதன் கோளுக்கு அருகில் பறக்கும் ஃப்ளை பை நடவடிக்கைகளின் நோக்கம் (மொத்தம் ஆறு ஃப்ளை பைகள் திட்டமிடப்பட்டுள்ளன), பெபிகொலம்புவின் பாதையை மெல்ல மெல்ல மாற்ற உதவுகின்றன. எல்லா படங்களும் வந்து சேர்ந்த பின், ஐரோப்பிய விண்வெளி முகமை அனைத்து படங்களையும் தொகுத்து ஒரு குறும்படத்தை உருவாக்கி வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.



பிரிட்டனின் திறந்தவெளி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் டேவ் ரோத்தேரி, பெபியின் புதன் கோள் புகைப்படங்களைக் கண்டு மகிழ்ச்சிய டைந்ததாக தெரிவித்தார்.

புதன் கோளை அதிவிரைவாக கடக்கும் போது எடுக்கப்பட்ட மகிழ்ச்சிகரமான படங்கள் இவை, இருப்பினும் புதன் கோளின் அற்புதமான பார்வை நமக்கு கிடைத்திருக்கிறது என பிபிசியிடம் கூறினார் அவர்.

"நீங்கள் ஒரு பள்ளமான மேற்பரப்பைக் காண்கிறீர்கள், இருப்பினும் எரிமலை குழம்பு வழிந்தோடிய வழுவழுப்பான தளங்களையும் காண்கிறீர்கள். அதே போல கடந்த காலங்களில் எரிமலை வெடிப்புகள் ஏற்பட்ட ஒளிமயமான பகுதியையும், இன்று காணாமல் போய்க் கொண்டிருக்கும் மேற்பரப்பு பகுதிகளையும் உங்களால் பார்க்க முடியும்.

"நாம் சுற்றுவட்டப் பாதையில் நுழைந்த பின், உண்மையிலேயே உயர் தெளிவுத் திறன் கொண்ட படங்களைப் பார்க்கும் போது, புதன் கோளின் மேற்பரப்பின் மேல் 10 முதல் 20 மீட்டர் அளவுக்கு விண்வெளியில் காணாமல் போவதைப் பார்க்க முடியும், அந்த வெற்றிடத்தை ஹாலோ என்று நாங்கள் அழைக்கிறோம்."

பெபிகொலம்பு உண்மையாகவே அறிவியல் ஆராய்ச்சி செயல்பாடுகளைத் தொடங்குவதற்கு நீண்ட காலம் இருந்தாலும், சில ஆய்வுக் கருவிகள் புதன் கோளை நெருங்கிச் செல்லும் போது இயக்கப்படுகின்றன.

"எங்களுக்கு அது தொடர்பான தரவுகள் வந்து சேரும்," என்று பிரிட்டனில் இருக்கும் லீசெஸ்டர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முனைவர் சுசி இம்பர் கூறினார். "புதன் கோளுக்கு அருகில் பறக்கும் ஃப்ளை பை நடவடிக்கைகளின் நோக்கம் (மொத்தம் ஆறு ஃப்ளை பைகள் திட்டமிடப்பட்டுள்ளன), பெபிகொலம்புவின் பாதையை மெல்ல மெல்ல மாற்ற உதவுவதுதான். "இறுதியில், டிசம்பர் 2025ல், நமது விண்கலமும் புதன் கோளும் ஒரே இடத்தில் இருக்கும், ஒரே திசையில் செல்லும். இறுதியாக, நமது விண்கலத்தை பிரித்து சுற்றுப்பாதையில் செல்லலாம்." என்றார் அவர்.

நன்றி BBC

'தடங்களின் நினைவுகள்' நூல் வெளியீடு

சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் முன்னாள் தலைவரும் சாய்ந்தமருது வைத்தியசாலையின் முன்னாள் பொறுப்பு வைத்திய அதிகாரியுமான டொக்டர் எம்.ஐ.எம்.ஜெமீல் எழுதிய 'தடங்களின் நினைவுகள்' சுயசரிதை நூலின் வெளியீடு வெள்ளிக்கிழமை (01) அவரது இல்லத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட சர்வ சமய சம்மேளனத்தின் தலைவரும் சமாதானத்திற்கான சமயங்களின் இலங்கைச் சபையின் அம்பாறை மாவட்டத் தலைவருமான டாக்டர் எம்.ஐ.எம். ஜெமீல் தனது 77வருடகால வாழ்க்கையை சுயசரிதையாக எழுதி 'தடங்களின் நினைவுகள்' என்ற மகுடத்தின்கீழ் 170பக்கங்களில் வெளியிட்டுள்ளார். இதனை சாய்ந்தமருது சிரேஷ்ட பிரஜைகள் சபை வெளியிட்டுவைத்தது.

இந்த சபையின் செயலாளர் அல்ஹாஜ் எம்.ஐ. அப்துல் ஜப்பார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் நூல் அறிமுகவுரையை முன்னாள் கல்முனை சாஹிறாக் கல்லூரி அதிபரும் மூத்த எழுத்தாளருமான கலாபூசணம் எ. பீர்முகமட்டும் நூல் விமர்சன உரையை மூத்த எழுத்தாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜாவும் நிகழ்த்தினர்.

'பெரியாரை மதியாத சமுகத்தில் பெரியார்கள் உருவாக மாட்டார்கள்' என்பது அறிஞர் சித்திலெவ்வையின் கருத்தாகும். உண்மையில் சமுகத்தில் சேவை செய்தவர்களை அச்சமுகம் மதிக்கத் தவறுமானால் அச்சமுகத்தில் சேவையாளர்கள் உருவாகமாட்டார்கள். அதன் பிரதிபலிப்பே இந்த சுயசரிதை நூல் எழுதுவதற்குக் காரணமாகும் என்று நூலாசிரியர் டாக்டர் எம்.ஐ.எம்.ஜெமீல் ஏற்புரையாற்றியபோது தெரிவித்தார்.

அங்கு அவர்மேலும் ஏற்புரையாற்றுகையில்:

சமுகத்தில் நற்பணியாற்றி நல்லபண்புகளுடன் வாழ்ந்த பெரியோர்களையும் சாதனை படைத்தவர்களையும் பாராட்டிக் கௌரவிக்கும் பழக்கம் குறைவடைந்து வருகிறது. உண்மையில் அப்படிப்பட்ட பெரியவர்களை அச்சமுகம் பாராட்டத் தவறுகின்ற பட்சத்தில் அவர்களாகவே அவர்களது சேவையை

வெளிக்கொணரவேண்டிய தேவை அவசியம் எழுகின்றது. அதன் வெளிப்பாடே இந்த சுயசரிதை.

நான் உண்மையில் பாராட்டையோ கௌரவிப்பையோ எதிர்பார்க்கவில்லை. எனினும் நான்சார்ந்த துறைகளில் நிறுவனங்களில் ஆற்றிய சேவைகளை அவர்கள் வெளிக்கொணர்ந்திருந்தால் அது ஏனைய வருங்கால சந்ததியினருக்கு முன்னுதாரணமாக

இருந்திருக்கும். ஆனால் அது நடைபெறவில்லை. ஆதலால் நானாகவே எனது சுயசரிதையை எழுத உந்தப்பட்டேன். அதன் வெளிப்பாடுதான் இந்த நூல்.

வர்த்தகப் பிரமுகர் முஹம்மட் நஸீர் ஹாஜியார் நூலின் முதற் பிரதியை பெற்றுக் கொண்டார்.

இதன்போது சாய்ந்தமருது வைத்தியசாலையின் ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.ஏ.ஆர்.எம்.மௌலானா நூலாசிரியர் டொக்டர் எம்.ஐ.எம்.ஜெமீலின் வைத்திய மற்றும் கல்வி கலாசார சமூக சேவைகளையும் சமாதான இன ஐக்கிய சிவில் செயற்பாடுகளையும் பாராட்டி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

அத்துடன் நூலாசிரியர் டொக்டர் எம்.ஐ.எம்.ஜெமீல் ஏற்புரையையும் அதிபர் ஏ.ஜீ.எம்.ரிஷாத் நன்றியுரையையும் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் கல்வியியலாளர்கள் உலமாக்கள் மற்றும் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்புப் பிரதிகளை பெற்றுக் கொண்டனர்.

வி.ரி.சகாதேவராஜா

அதிஷ்டத்தில் ஆசை வைக்காமல் வெற்றியைக் கொண்டாட வேண்டும்

கவிஞரும் எழுத்தாளருமான எஸ்.ஏ.இஸ்மத்

பாத்திமா " இரண்டும் ஒன்று", "புதையல் தேடி" என இரண்டு கவிதைத் தொகுதிகளை படைத்து தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்த்தவர் கவிஞரும் எழுத்தாளருமான எஸ்.ஏ.இஸ்மத். இவர் எந்தத் தலைப்பைக் கொடுத்தாலும் எடுத்த எடுப்பிலேயே கவி படைப்பவர். இவரது " புதையல் தேடி" கவிதை நூல் தேசிய சாகித்திய விருதுக்கு பரிந்துரைப்பு செய்யப்பட்ட மூன்று நூல்களில் ஒன்றாக இருக்கின்றது. இது பாராட்டப்பட வேண்டிய ஒன்று. இவர் கல்வித் துறையிலும் கலைத் துறையிலும் நிறைய விருதுகளைத் தனதாக்கியவர். அவருடனான நேர்காணலை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் அளவிலா மகிழ்ச்சியடைகிறேன்.

உங்களுடைய ஆரம்ப கல்வி மற்றும் உயர் தரக் கல்வி பற்றி குறிப்பிட முடியுமா?

என்னுடைய ஆரம்பக் கல்வியை எனது சொந்த ஊராகிய குருநாகல், பானகமுவ கு/இப்/அந்நூர் முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் தரம் ஒன்று தொடக்கம் நான்காம் வகுப்பு வரை பயின்றேன். தரம் இரண்டில் double promotion பெற்று தரம் நான்கில் கல்வி கற்றேன்.

பின்னர் கம்பஹா மாவட்டத்திலுள்ள தற்போது நான் வசிக்குமிடமான பஸ்யால, நாம்புளுவ முஸ்லிம் வித்தியாலயம் தற்போது பாபுஸ்ஸலாம் முஸ்லிம் மஹா வித்தியாலயம் என்றழைக்கப்படும் பாடசாலையில் தரம் 5 தொடக்கம் ஏழு வரை கல்வி பயின்றேன். அதன் பின்னர் மீண்டும் சொந்த ஊராகிய பானகமுவயில் கல்விப் பொது தராதர சாதாரண தரம் வரை கல்வி பயின்றேன். க. பொ. த. சாதாரண தர பரீட்சையில் ஆங்கிலத்தில் அதிவிசேட சித்தியும் மற்றும் அனைத்து பாடங்களிலும் விஷேட சித்திகளையும் பெற்றேன். அதன் பின்னர் கல்விப் பொது தராதர உயர்தரப் படிப்பை மடவளை மதீனா தேசிய பாடசாலையில் பயின்றேன். அங்கு இரண்டு வருடங்கள் கல்வி கற்றேன். அப்போது உயர் தரத்தில் நான்கு பாடங்கள் கற்க வேண்டும். இஸ்லாம் பாடத்தில் அதி விஷேட சித்தியையும் மற்றும் மூன்று திறமைச் சித்திகளையும் பெற்றுக்கொண்டேன்.

உங்களது கல்வி மற்றும் தொழில் தகைமைகள் சேவை அனுபவங்கள் பற்றிக் கூற முடியுமா?

நான் என்னுடைய உயர்தரக் கல்வியைப் பூர்த்தி செய்ததன் பின்னர் பஸ்துண்ரட கல்வியியல் கல்லூரியில் ஆங்கிலம் கற்பித்தலுக்கான தேசிய டிப்ளோமா (Diploma in Teaching English as Second Language) மூன்று வருட பாடநெறியைச் சிறப்பாக பூர்த்தி செய்து அதிவிஷேட சித்தியைப் பெற்று ஆங்கில ஆசிரியராக முதலாவதாக குருணாகல் பரகஹதெனிய தேசிய பாடசாலைக்கு நியமனம் பெற்றுச் சென்றேன். அங்கே இரண்டரை வருடங்கள் மிகவும் சிறப்பாக சேவையாற்றினேன். அதனைத் தொடர்ந்து திருமணத்தின் பின் கணவருடைய ஊரான பஸ்யாலயிற்கு இடமாற்றம் பெற்றுக்கொண்டேன். அதனைத்தொடர்ந்து ஆங்கில ஆசிரிய ஆலோசகராக பின்னர் அதிபராக போட்டிப் பரீட்சைகளில் சித்தி எய்தி அந்தந்த பதவிகளை வகித்தேன். தற்பொழுது இலங்கை அதிபர் சேவை தரம் இரண்டு அதிபராக பஸ்யால எல்லலமுல்ல ஸஹிரா முஸ்லிம் வித்தியாலயத்தில்

கடமையாற்றுகின்றேன். இவ்வருடம் நவம்பர் 16ம் திகதி முதல் இலங்கை அதிபர் சேவை தரம் ஒன்று அதிபராக பதவியுயர்வு பெறவுள்ளேன்.

கல்வி சம்பந்தமாகக் குறிப்பிடுவதென்றால் நான் பேராதெனிய பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழியில் உள்வாரியாக என்னுடைய பட்டப் படிப்பைப் பூரணப்படுத்திக் கொண்டேன். அத்தோடு ஆங்கிலம் சம்பந்தமான பல பாடநெறிகளையும் "Diploma in Teaching English as Second Language " ஒரு வருடக் கற்கை நெறியையும் உள் வாரியாகச் சென்று கல்வி கற்கும் வாய்ப்பு கிடைத்தது. மேலும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் "Advanced Diploma in English for Academic and Administrative Purposes" எனும் ஒரு வருட கற்கை நெறியையும் மிக சிறப்பாக பூர்த்தி செய்து சிறந்த பெறுபேறும் பெற்றேன்.

இதுபோன்று இன்னும் "Certificate Course in Professional Skills Development " English (CCPSD) எனும் மூன்று மாத பாடக் கற்கை நெறியையும் சிறப்பாகக் கற்றேன். மேற்கூறப்பட்ட சகல கற்றல் விடயங்களிலும் எனது கணவர் தற்போது தர்கா நகரில் ஆசிரியர் வாய்மை அபிவிருத்தி நிலையத்தின் முகாமையாளராக விரிவுரையாளராகப் பணிபுரியும் எம்.ஏ.எம்.றிப்தியும் நானும் ஒன்றாகவே இருந்து கற்றல் விடயங்களைத் தொடரக் கிடைத்ததை பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

அதுமட்டுமன்றி கணினித் துறையிலும் தற்கால உலகில் ஈடுகொடுத்து நிற்கக் கூடிய அளவிற்கு கணினி அறிவையும் கற்று எங்களை நாங்கள் இருவருமே வளப்படுத்திக் கொண்டோம். "International Computer Driving License" ICDL பாடநெறியை 2008 இல் மிகவும் சிறப்பாக கற்றுக் கொண்டோம். அடுத்ததாக நான் Post Graduate Diploma in Education Management ஐ முடித்து அதிலும் விஷேட சித்தியினைப் பெற்றுக் கொண்டேன்.

நீங்கள் பாடசாலைகளில் பெற்றுக்கொண்ட பாராட்டுக்கள், விருதுகள், சான்றுகள் பற்றியும் குறிப்பிட முடியுமா?

ஆங்கில தினத்தில் பாடசாலை மட்டத்தில், கோட்ட மட்டத்தில், மாகாண மட்டத்தில் என கையெழுத்துப் பிரதிப் போட்டி, கவிதை பாடல் போட்டிகள், பேச்சுப்போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து நிறைய பாராட்டுகளும் விருதுகளும் பெற்றுள்ளேன்.

மேலும் தமிழிலும் பேச்சுப் போட்டிகளில் பங்கு கொண்டதுண்டு. ஆரம்ப காலத்தில் அதிக அக்கறையுடன் கவிதைகள், கதைகள், கட்டுரைகள், இலக்கணம், இலக்கியம் போன்ற சகல விடயங்களையும் நிறைய வாசிப்பதுண்டு, இதற்கு என்னுடைய தந்தை நிறைய பங்களிப்புச் செய்துள்ளார். என்னுடைய தந்தை நிறைய இலக்கண இலக்கிய புத்தகங்கள் வாங்கித் தருவார். பாடசாலை விடுமுறை காலங்களிலும் பாடசாலை வாசிகசாலையிலிருந்து புத்தகங்களைப் பெற்று வந்து வாசிப்போம். இன்னும் அந்த ஞாபகங்கள் மனதில் பசுமையாக உள்ளது. அத்தோடு வீட்டிலும் ஒரு வாசிகசாலை போன்று ஒரு பெரிய அலுமாரி நிறையப் புத்தகங்கள் உள்ளன. அதனை வாசிப்பதும் மிகவும் சுவை தரக் கூடியதாக இருந்தது. இன்னும் அந்த இனிமையான ஞாபகங்கள் மகிழ்ச்சியைத் தருகின்றன. அதுமட்டுமின்றி விளையாட்டுத் துறையிலும் பங்கேற்று இல்ல மட்டத்தில் கோட்ட மட்டத்தில் நிறைய சான்றிதழ்களும் பெற்றுள்ளேன்.

முதலாவது படைப்பு பத்திரிகையில் வெளி வந்த போது எவ்வாறான ஒரு தாக்கத்தையும் உணர்வுகளையும் ஏற்படுத்தியது? அது பற்றி குறிப்பிட முடியுமா?

இளமைப்பராயம் தொட்டு ஆசிரிய பயிலுனராக இருக்கும் வரைக்கும் எத்தனையோ கவிதைகள் எழுதியுள்ளேன். ஆனால் அவற்றை எந்தப் பத்திரிகைக்கும் அனுப்பியதில்லை. காரணம் அது பற்றிய எந்த வழிகாட்டுதல்களும் கிடைத்ததுமில்லை. பாடசாலை மாணவியாக பின்னர் பயிலுனராக, ஆங்கில ஆசிரியராக, ஆங்கில ஆசிரிய ஆலோசகராக அதன் பின்னர் அதிபர் எனும் பொறுப்பை சுமந்த பின்னர் தான் என்று முதல் கவிதை பத்திரிகையில் பிரசுமானது. நான் அப்போது கஹட்டோவிட்ட முஸ்லிம் மகளிர் வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றிய சந்தர்ப்பம் அது. பாடசாலை மாணவர்களுடைய அடைவுகளை வெற்றி வாகை சூடும் நிகழ்வுகளை நவமணி பத்திரிகைக்கு அனுப்புவது வழக்கம். அந்த சந்தர்ப்பத்தில் தான் என்னுடைய முதலாம் கவிதைப் படைப்பான "இடம் கொடுங்கள் இலை மறைகாய்களுக்கு" எனும் கவிதை நவமணி பத்திரிகையில் வெளியானது. அந்த சந்தர்ப்பத்தில் வெளியான மகிழ்ச்சியின் இன்பம் இன்னும் என் உள்ளத்தில் வழிந்தோடுகிறது. எனது எழுத்துக்களை அதன் கருத்துக்களை கவிதை வடிவில் எழுத்துக்களாக நவமணியில் கண்டபொழுது இனம்புரியாத மகிழ்ச்சியை நான் உணர்ந்தேன். அந்த சந்தர்ப்பத்தில் நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. மீண்டும் பிறந்தது போன்ற ஒரு உணர்வும் இன்னும் நிறைய எழுதி சாதனைகள் பல படைக்க வேண்டும் என்னும் எண்ணமும் எனக்குள் வேர்விட்டது.

அது அழகான உணர்வின் அனுபவ அதிர்வு. அதே அந்த அனுபவம் மென்மேலும் என்னை எழுதத் தூண்டியது. ஒவ்வொரு வாரமும் எழுதினேன். எழுதி அவற்றை பத்திரிகைகளுக்கு அனுப்பி வைத்தேன். அந்த பத்திரிகையில் வரும் என்னுடைய கவிதைகளை வெட்டி எடுத்து நேர்த்தியான முறையில் ஒட்டி சேர்த்து வைப்பேன். எனது முதல் ஆக்கம் நவமணிப் பத்திரிகையில் வருவதற்கு நவமணியின் பிரதம செய்தி ஆசிரியர் எம். எஸ்.எம் ஷாஜஹான் தான் காரணம். எனவே அவர்களுக்கு நான் எனது நன்றியினைத் தெரியப்படுத்திக்கொள்கின்றேன். அவர் மாத்திரம் எனது கவிதையை பத்திரிகையில் பிரசுரிக்காதிருந்தால் எனது இனிய கவிதைகள் அகிலத்தில் மணம் பரப்பியிருக்காது. இரண்டு கவிதை நூல்கள் வெளிவந்திருக்காது.

என்னுடைய கவிதை பத்திரிகையில் வெளிவந்த பொழுது உடலுக்கும் உள்ளத்துக்கும் தெம்பை அளித்தது. மிகுந்த சக்தியையும் தைரியத்தையும் அது கொடுத்தது. அதிபர் எனும் நிர்வாகியாக இருந்து நிறைய வேலைகளை செய்வதற்கு சுறுசுறுப்பையும் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் தைரியத்தையும் மென்மேலும் எனக்கு ஈட்டிக் கொடுத்தது. மேலும் சமூக அவலங்களை சமூகத்திற்குச் சொல்ல வேண்டிய கருத்துக்களை கவிதையாக வடித்து பத்திரிகையில் பிரசுரமானதுமே என்னுடைய மனபாரம் குறைந்ததாக உணர்வேன். மேலும் நான் கவிதை எழுதுவது போல் என்னுடைய மாணவச் செல்வங்களும் என்னுடைய கவிதைகளை வாசிப்பதற்கும் அது போன்று எழுதுவதற்கும் முயற்சித்தார்கள். தற்பொழுதும் முயற்சிக்கிறார்கள். எனவே எனக்கு அவர்களுக்கு வழிகாட்டவும் வாய்ப்பாகவுள்ளது. அது போன்ற கவிதைகளை அவர்கள் படிப்பதற்கு ஏதுவாக அமைந்தது. மாணவர்கள் மாத்திரமன்றி ஆசிரியர்களும் கவிதைகளை எழுதி என்னிடம் கொண்டு வந்து காட்டுவார்கள். எனவே அவர்களையும் ஊக்கப்படுத்தும் முகமாக ஆசிரியர்களுடைய கவிதைகளையும் மாணவர்களுடைய கவிதைகளையும் நானே பத்திரிகைக்கு அனுப்பி அவை பிரசுரமான பின்னர், அவர்களுக்கு அந்த பத்திரிகைப் பிரதி ஒன்றையும் அன்பளிப்பு செய்து வைப்பேன். அதன் விளைவாகவே எனக்குள் மென்மேலும் கவிதை ஊற்று பெருக்கெடுத்தது.

அதன் விளைவாக இன்று இரண்டு கவிதைப் புத்தகங்களை தொகுத்து சமூகத்தின் கரங்களில் ஒப்படைத்த மனத்திருப்தி எனக்குள். இதற்கு அருளாய் வரம் தந்த இறைவனையும் புகழ்ந்து என்னுடைய நன்றியை என்னுடைய ஊக்குவிப்பாளர்கள் ரசிகர்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

ஆரம்பத்தில் நவமணியில் பூத்த என்னுடைய கவிதைகள் பின்னர் விடிவெள்ளி, தினகரன், மெட்ரோ நியுஸ், சுடர் ஒளி, எங்கள் தேசம், மித்திரன் வார மலர், சஞ்சிகைகளான அல்ஹஸனாத், பூங்காவனம், உதயம்(இந்தியா), ஞானம், நீங்களும் எழுதலாம் போன்ற மாதாந்த, மற்றும் காலாண்டு சஞ்சிகைகளிலும் வியூகம் இணையதளத்திலும் என்னுடைய முக நூலிலும் (Fathima Ahamed) பிரசுரமானது. எனவே என்னுடைய கவிதைகளை பிரசுரித்த அந்த செய்தி ஆசிரியர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இன்றும் எனது முதல் படைப்பு பத்திரிகையில் வெளியானது ஒரு பேரானந்தமாக இருந்து கொண்டிருக்கின்றது. அதன் இன்பத்தின் நுகர்ச்சியை இன்னும் நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்.

உங்களது நூல் வெளியீட்டு முயற்சிகள் பற்றி அறியத் தாருங்களேன்.

எனக்கு இதுவரை " இரண்டும் ஒன்று", "புதையல் தேடி" என இரண்டு தமிழ் கவிதை நூல்களை

வெளியிடும் சந்தர்ப்பம் கிடைத்தது. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. இந்த இரு நூல்கள் வெளியிடும் சந்தர்ப்பங்களிலும் எனக்கு மிகவும் பக்கபலமாக இருந்து உறுதுணை வழங்கியவர் எனது அன்புக் கணவரும், ஆசிரிய வாண்மை அபிவிருத்தி நிலையத்தின் முகாமையாளருமான எம்.ஏ. எம்.றிப்தியும் என்னுடைய அன்பு மகன் எம். ஆர்.அகீல் அஹமத் மற்றும் என்னுடைய குடும்ப உறுப்பினர்களும் ஆவர்.

எனவே நான் அவர்களுக்கு முதற்கண் எனது நன்றியைத் தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

அடுத்ததாக எனது முதல் நூலை தயாரிக்கும் சந்தர்ப்பத்தில்

கிண்ணியாவைச் சேர்ந்த கலாபூஷணம் பீ.ரீ.அஸீஸ் எனக்கு பக்கபலமாக இருந்தார். இதில் ISBN இலக்கம் எடுப்பது முதல் இறுதி வரை சகல வழிகாட்டல்களையும் தந்தார். இச்சந்தர்ப்பத்தில் அவர்களுக்கும் நான் எனது நன்றியைத் தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

முதல் நூலை தயாரிப்பதற்கு பெற்ற அனுபவத்தைக் கொண்டு இரண்டாவது நூலை நானே ஓரளவு இலகுவாக சுயமாக செய்து கொள்ள முடிந்தது. இருப்பினும் இந்த நூல் வெளியீட்டின் போதும் ஒரு சிலர் எனக்கு பக்கபலமாக இருந்து பங்களிப்புச் செய்தார்கள். எனவே அவர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

நூல் வெளியீடு என்பது காலத்தால் மறக்க முடியாத ஒரு அனுபவப் பகிர்வு, அனுபவப் பதிவாக உள்ளத்தில் இருந்து கொண்டிருக்கின்றது. என்னுடைய முதல் நூல் வெளியீட்டு விழாவின்போது 300 க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் வருகை தந்தார்கள். அது ஒரு ஆனந்தமான ஒரு சிறிய இலக்கிய விழாவாக இருந்தது. அது பற்றி முன்னாள் தர்கா நகர் கல்வியியல் கல்லூரியின் உப பீடாதிபதி கலைவாதி கலீல் ஆசிரியர் நான் கலந்து கொண்ட "குட்டி இலக்கிய விழா " எனும் தலைப்பில் அன்று தனது அனுபவப் பகிர்வை

நவமணியில் அழகிதொரு கட்டுரையாக வடித்திருந்தார்.

பல கல்விமான்களும் பல கலைமான்களும் பல ஆசிரியர்களும் மாணவர்களும் பெற்றோர்களும் நலன்விரும்பிகளும் பொதுமக்களும் கலந்து சிறப்பித்த இனியதொரு வைபவமாக அது இருந்தது.

அதே போன்று இரண்டாவது நூலுக்கும் அநேகமானோர் வந்து கலந்து கொண்டார்கள். இதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. ஏனெனில் இரண்டு நூல் வெளியீடுகளிலும் என்னுடைய தந்தை, முன்னாள் அதிபர், சமாதான நீதிவானான ஏ.கீ.செய்யது அஹ்மது கலந்துகொண்டமை வாழ்வில் இனிய நிகழ்வாகும்.

அதே சந்தர்ப்பத்தில் கிண்ணியாவைச் சேர்ந்த கலாபூஷணம் பீ.ரீ.அஸீஸ் இலக்கிய ஒன்றியத்தின் மூலமாக எனக்கு "கவியரசி" என பட்டம் தந்து பொன்னாடை போர்த்தி விருதும் கேடயமும் வழங்கி எனக்காக காவியம் பாடி என்னை கௌரவித்தமை வாழ்வில் எனக்கு எல்லையில்லா ஆனந்தத்தைத் தந்தது.

நீங்கள் ஒரு அதிபராக கவிஞராக எழுத்தாளராக சமூகத்திற்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

ஒவ்வொரு நபரையும் இறைவன் ஒரு நோக்கத்திற்காகத் தான் படைத்தான். எனவே அந்த நோக்கத்தை நாம் உணர்ந்து கொண்டு எம்மை நாம் சமூகத்தில் சிறந்த மனிதர்களாக ஆக்கிக்கொள்ள வேண்டும். அதற்காக நாம் பாடுபட்டு உழைக்க வேண்டும். முயற்சி செய்யாமல் கிடைக்கும் எதுவும் அதிஷ்டமாகத் தான் கருதப்படும். மிகுந்த முயற்சியின் விளைவாக கிடைப்பது தான் வெற்றியாக கருதப்படும். எனவே நாம் அதிஷ்டத்தில் ஆசை வைக்காமல் வெற்றியைக் கொண்டாட வேண்டும்.

மேலும் ஒவ்வொருவரும் தனக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஏனெனில் நல்ல சந்தர்ப்பம் என்பது எப்போதும் எம்மை எட்டிப்பார்ப்பதில்லை.

அதே நேரம், வாழ்க்கையில் யாரும் யாருடைய நிம்மதியையோ சந்தோஷத்தையோ சீர்குலைக்க முயலாதீர்கள். அவ்வாறு நீங்கள் மற்றவருடைய வாழ்க்கையை சீர்குலைக்க முயலும் போது அதற்கு தண்டனை இயற்கையாகவே உங்களுக்கு வந்து சேரும். எப்போதும் மற்றவருக்கு நல்லவற்றையே செய்ய விரும்புங்கள். அப்போது உங்களுக்கும் எல்லாம் நல்லதாகவே அமையும். எப்போதும் மற்றவரைத் தாழ்த்தியோ தாக்கியோ பேசாதீர்கள். அவ்வாறு நீங்கள் நடந்து கொண்டால் யாரை நீங்கள் தாக்கியோ தாழ்த்தியோ பேசினீர்களோ அவர்களிடமே நீங்கள் தாழ்ந்து போவீர்கள். இறைவன் தண்டனைகளை உடனுக்குடனே கொடுத்து விடுவான்.

எல். எம். ஹரீஸ்

Model அழகி சுருதி

பிக் பாஸ் தமிழ் 5 சீசன் வீட்டுக்குள் 13வது போட்டியாளராக Model அழகி சுருதி பங்கேற்றுள்ளார்.

இந்த நிகழ்ச்சியின் முதல் போட்டியாளராக இசைவாணி என்ற பாடகி இல்லத்திற்குள் சென்றார் வரிசையாக, , ராஜூ மோகன், மதுமிதா,அபிஷேக் ராஜன், நமிதாமாரி முத்து, பிரியாங்கா, அபிநயா, சின்னபொண்ணு, பவானி ரெட்டி, நதியா மற்றும் வருண், இமான் அண்ணாச்சி என 12 போட்டியாளர்கள் வீட்டில் நுழைந்துள்ளனர்.

Model அழகி சுருதியை 13வது போட்டியாளராக அறிமுகம் செய்து வைத்தார் கமல். அப்போது பேசிய அவர், தான் ஒரு நேஷனல் கூடை பந்தாட்ட வீராங்கனை. மேலும் ஸ்போட்ஸ் கோட்டாவில் எனக்கு இன்ஜினியர் படிக்க வாய்ப்பு கிடைத்ததாக கூறினார்.

அம்மாவின் மருத்துவ தேவைக்கு பணம் தேவைப்பட்டதால் நான் ஈவன்டில் கலந்து கொண்டேன் அதன் மூலமாக எனக்கு ஒரு வாய்ப்பு வந்தது. அதாவது தமிழ் கடவுளை கருப்பாக காட்டுவது, அதன் மூலம் மாடலிங்கில் எனக்கு நல்ல வாய்ப்பு கிடைத்தது என்றார். மேலும், மாடலிங்கிற்கு வருவேன் என்று சத்தியமா எனக்கு தெரியாது. நான் மாடலிங் வந்தது ஒரு விபத்து என்றார்.

Big Boss நிகழ்ச்சி நேரத்தில் சர்ச்சை

பிகபாஸ் நிகழ்ச்சி ஒளிபரப்பாகும் நேரத்திற்கு ரசிகர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

விஜய் டிவியில் பிக்பாஸ் சீசன் 5 நிகழ்ச்சி கடந்த 3ஆம் திகதி தொடங்கியது. இந்த நிகழ்ச்சி 100 நாட்களை கடந்து ஒளிபரப்பாக உள்ளது.

ஆரம்ப நிகழ்ச்சியில் போட்டியாளர்களை அறிமுகப்படுத்தி வைத்த கமல் பிக்பாஸ் வீட்டிற்குள் அனுப்பி வைத்தார்.

அந்த நிகழ்ச்சி அறிமுக நிகழ்ச்சி என்பதால் மாலை 6 மணி முதல் 11 மணி வரை கிராண்ட் லாஞ்ச் நிகழ்ச்சி ஒளிபரப்பானது. இந்நிலையில் வார எபிசோடுகள் வழக்கம் போல் 9 அல்லது 9.30 மணிக்கு தொடங்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் பிக்பாஸ் நிகழ்ச்சிக்கான நேரம் கடைசி வரை அறிவிக்கப்படாமல் இருந்தது. இந்நிலையில் வெளியான பிக்பாஸ் நிகழ்ச்சியின் முதல் புரமோவின் மூலம் பிக்பாஸ் நிகழ்ச்சி வார நாட்களில் ஒளிபரப்பாகும் நேரம் அறிவிக்கப்பட்டது.

ஆனால் பிக்பாஸ் நிகழ்ச்சிக்கான நேரம் கடைசி வரை அறிவிக்கப்படாமல் இருந்தது. இந்நிலையில் இன்று வெளியான பிக்பாஸ் நிகழ்ச்சியின் முதல் புரமோவின் மூலம் பிக்பாஸ் நிகழ்ச்சி வார நாட்களில் ஒளிபரப்பாகும் நேரம் அறிவிக்கப்பட்டது.

இதனை பார்த்து அப்செட் ஆகியுள்ளனர் ரசிகர்கள். காரணம், பிக்பாஸ் நிகழ்ச்சி வார நாட்களில் இரவு 10 மணிக்கு ஒளிபரப்பாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சி ஒளிபரப்பாகும் நேரம் ஒரு மணி நேரம் என்றாலும் கூட 11 மணிக்கு தான் முடியும்.

இது நேரம் கடந்த நேரம் என கடுப்பாகியுள்ளனர் ரசிகர்கள். மக்களின் உடல் நலன் பற்றி நடிகர் கமல்ஹாசனுக்கு அக்கறை இல்லையா? இந்த நேரத்தில் ஒளிப்பரப்ப எப்படி அனுமதித்தார் என்று விமர்சித்து வருகின்றனர்.

வெளி நாடுகளில் உள்ள தமிழர்கள் மற்றும் வெளிநாடுகளில் தங்கி வேலை பார்க்கும் தமிழர்களுக்கு இங்கு ஒளிபரப்பாகும் நேரத்தை காட்டிலும் முன்னதாகவோ அல்லது பின்னதாகவோ நிகழ்ச்சி தொடங்கும். முன்னதாக தொடங்கினால் பிரச்சினை இல்லை. பின்னதாக தொடங்கினால் அவர்கள் பார்ப்பதிலும் சிக்கல் ஏற்படும்.

இதனால் பிக்பாஸ் சீசன் 5 நிகழ்ச்சி ஒளிபரப்பு நேரத்திற்கு எதிர்ப்பு எழுந்துள்ளது. பிக்பாஸ் நேரத்தை மாற்றி அறிக்க வேண்டும் என சமூக வலைதளங்களில் ரசிகர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

ஜகி வேலனின் பேரன் வருண்

நடிகர் வருண் பிக் பாஸ் இல்லத்தில் 11வது போட்டியாளராக நுழைந்தார்.

நான் யார் என்பதை நிரூபிக்க இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்ததாக கூறினார்.

நடிகர் ஜசரி வேலனின் பேரனும், தொழிலதிபர் ஜசரி கணேசின் மருமகன் தான் நடிகர் வருண். ஏ.எல் விஜய்யுடன் உதவி இயக்குனராக பணியாற்றி உள்ளார். இவர், தளபதி விஜய்யின் மெகா ஹிட் திரைப்படமான தலைவாவில் திரைப்படத்தில் நடித்துள்ளார்.

ஒருநாள் இரவில் மற்றும் போகன் திரைப்படத்தில் ஜெயம்ரவியின் நண்பனாக நடித்திருப்பார்.மேலும், வனமகன், நெருப்புடா, சம் டைம்ஸ், எல்.கே.ஜி, கோமாளி , பப்பி, சீறு உள்ளிட்ட திரைப்படங்களில் நடித்து இருக்கிறார். நடிகர் வருணை பிக் பாஸின் நாயகன் கமலஹாசன் ரசிகர்களுக்கு அறிமுகம் செய்து செய்து வைத்தார். அப்போது பேசிய வருண் இந்த நிகழ்ச்சியில் நுழைய முக்கிய காரணம் நான் யார் என்பதை அனைவருக்கும் தெரியபடுத்துவேன் என்று கூறினார்.

கானா இசைவாணி

கானா இசைவாணி பிக் பாஸ் போட்டியின் முதல் போட்டியாளராக கமல்ஹாசன் அறிவித்தார்.

இசைவாணி தனக்கே உரித்தான கானா பாடலை பாடி ரசிகர்களின் கைத்தட்டலை பெற்றார்.

24 வயதான இசைவாணி வட சென்னையை பூர்வீகமாகக் கொண்டவர் கானா இசைவாணி. அப்பா சிவகுமார் ஹார்மோனியம் வாசிப்பவர். கச்சேரி, கலைநிகழ்ச்சிகளில் இசைக்கலைஞராக வேலை பார்த்துக்கொண்டிருக்கிறார்.

உலகின் சிறந்த 100 பெண்களில் ஒருவராக இசைவாணியை தேர்வு செய்து பெருமைப் படுத்தியது BBC. பெண்கள் கால்பதிக்கத் தயங்கும் கானா இசைத்துறையில் சிறந்து விளங்கி வருவதற்காக இந்த அங்கீகாரம் அவருக்குக் கிடைத்தது. இந்தியாவில் இருந்து இப்பட்டியலில் இடம்பிடித்த ஒரே பெண் இசைவாணி தான்.

அப்படியான பழம்பெருமை கொண்ட கானாவில் ஆண்கள் மட்டுமே கோலோச்சி வந்த நிலையில், 'ஐ எம் சாரி ஐயப்பா நான் உள்ள வந்தா என்னப்பா' என்று ஒலிக்கத்தொடங்கியது பெண்ணின் குரல். எல்லோரையும் திரும்பிப்பார்க்க வைத்த அந்த குரல் இசைவாணியுடையது.

பிக் பாஸ் சீசன் 5 நிகழ்ச்சியின் போட்டியாளரான இசைவாணியை கமல் அறிமுகம் செய்துவைத்தார். கானா பாடலை ஆண்கள் மட்டுமே பாட வேண்டும் என்ற நிலையை மாற்றியவர் இசைவாணி என்று கமல் அவரை புகழ்ந்தார்.

இதையடுத்து பேசிய இசைவாணி,என் அப்பா ஒரு ஹார்மோனியக் கலைஞர், என் அப்பாவுக்கு இசை மீது மிகுந்த ஆர்வம். அதனால் எனக்கு இசை வாணி என்று பெயர் வைத்தார். 6 வயதில் இருந்தே எனக்கு இசை மீது மிகுந்த ஆர்வம் இருந்தது. இதனால், அவருடன் பல நிகழ்ச்சிக்கு சென்று பாடி இருக்கிறேன். மேடைநிகழ்ச்சியில் பாடல் பாடும் போது மைக் எப்போ கிடைக்கும் என்று ஏங்குவேன், ஆனால் கடைசியாத்தான் என்கிட்டே மைக் கொடுப்பாங்க. அந்த நேரம் நான் மிகவும் வருத்தப்பட்டு இருக்கேன். ஆனால், இப்போது என்னை முதலில் பாட சொல்றாங்க மகிழ்ச்சியா இருக்கு. அப்பாவின் ஆசையை நான் தற்போது நிறைவேற்றி இருக்கிறேன் என்று பெருமையுடன் கூறினார்.

ஜெமினி கணேசன் சாவித்ரியின் பேரன் அபினய் வட்டி

பிக்பாஸ் நிகழ்ச்சியின் 7வது போட்டியாளராக நடிகர் அபினய் வட்டி பிக்பாஸ் வீட்டுக்குள் சென்றுள்ளார்.

7வது போட்டியாளராக நடிகர் அபினய் வட்டி பிக்பாஸ் வீட்டுக்குள் சென்றுள்ளார். ஜெமினி கணேசன் மற்றும் சாவித்ரியின் பேரன் ஆவார். அபினய் சினிமா நடிகராகவும் உள்ளார். யங் இந்தியா என்ற தெலுங்கு படத்தின் மூலம் சினிமாவுக்கு அறிமுகமானார்.

தமிழில் ராமானுஜன் என்ற படத்தில் நடித்துள்ளார் அபினய். இந்தப் படம் கணித மேதை ராமானுஜனின் வாழ்க்கை வரலா படமாகும். சென்னை 28 2 படத்திலும் நடித்துள்ளார். இதேபோல் சுகர் படத்தில் சிம்ரனுக்கு ஜோடியாக நடித்துள்ளார் அபினய். இந்த படம் விரைவில் திரைக்கு வரவுள்ளது.

அபினய் டென்னிஸ் வீரர் ஆவார். விவசாயத்திலும் ஆர்வம் உள்ள அபினய், ஈசிஆரில் விவசாயம் செய்து வருகிறார். தன்னை பண்ணை தோட்டத்தில் மாடு மற்றும் ஆடுகளையும் வளர்த்து வருகிறார். நடிகர் அபினய்க்கு அபர்ணா என்ற மனைவியும் ஸ்வாஸ்திகா என்ற மகளும் உள்ளனர்.

தற்போது பிக்பாஸ் வீட்டுக்குள் சென்றுள்ளார் அபினய். அபினயுடன் பேசிய கமல் களத்தூர் கண்ணம்மா படத்தில் அவரது தாத்தா மற்றும் பாட்டியுடன் நடித்த அனுபவங்களையும் அப்போது நடந்த சுவாரசிய சம்பவங்களையும் பகிர்ந்து கொண்டார்.

பாலினத்தை கடந்த நமிதா

பிக் பாஸ் தமிழ் வரலாற்றிலேயே முதல் முறையாக திருநங்கை போட்டியாளரான நமிதா மாரிமுத்து 5வது போட்டியாளராக கலந்து கொண்டார்.

சர்வதேச அளவில் மிஸ் வேர்ல்ட் அழகிப் போட்டியில் கலந்து கொண்டு கலக்கியவர் நமிதா மாரிமுத்து.

சிறுவயதில் இருந்து தான் கடந்து வந்த கஷ்டங்கள் குறித்து தனது ஏவியில் நமிதா மாரிமுத்து கூறியது நிச்சயம் ரசிகர்களை உருக வைத்திருக்கும்.

சென்னையை சேர்ந்த பிரபல திருநங்கை மாடல் அழகி நமிதா மாரிமுத்து பிக் பாஸ் சீசன் 5ல் போட்டியாளராக கலந்து கொண்டுள்ளார். முதன்முறையாக திருநங்கை போட்டியாளர் தமிழ் பிக் பாஸ் நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ளது திருநங்கை சமூதாயத்திற்கே பெரிய வரவேற்பை சமூகத்தில் ஏற்படுத்தும் என நம்பி அவர் உள்ளே நுழைந்துள்ளதாக கூறியுள்ளார்.

கடந்த சீசனில் தெலுங்கு பிக் பாஸ் நிகழ்ச்சியில் திருநங்கை போட்டியாளரை இறக்கி மிகப்பெரிய வெற்றியை கண்ட நிலையில், இந்த முறை பிக் பாஸ் தமிழில் மாடல் அழகி நமிதா மாரிமுத்துவை களமிறக்க எண்ட்மோல் ஷைன் நிறுவனம் திட்டமிட்டு இருந்தது. கடந்த சீசன் போல தெரிந்த முகங்கள் இல்லாமல் இந்த சீசனில் பல புதிய முகங்கள் களமிறக்கப்பட்டுள்ளனர்.

மாடல் துறையில் ஆர்வம் ஏற்பட்ட சென்னையை சேர்ந்த நமிதா மாரிமுத்து 2014ல் நடைபெற்ற திருநங்கைகளுக்கான மிஸ் சென்னை போட்டியில் கலந்து கொண்டு டைட்டில் வின் பண்ணியுள்ளார். 2015ல் மிஸ் கூவாகம், 2018ல் மிஸ் இந்தியா என கலக்கிய இவர், சமீபத்தில் சர்வதேச அளவில் ஸ்பெயின் நாட்டில் நடைபெற்ற திருநங்கைகளுக்கான உலக அழகிப் போட்டியில் இந்தியா சார்பாக கலந்து கொண்டார்.

மற்ற போட்டியாளர்களை விட செம உயரமாக (6.1) இருக்கும் நமிதா மாரிமுத்து நீல நிற கவர்ச்சி உடையில் பிக் பாஸ் வீட்டுக்குள் நுழைந்தார். அவரை மற்ற போட்டியாளர்கள் அனைவரும் அண்ணாந்து பார்த்தே கழுத்து வலிக்கும் என்பது மட்டும் கன்ஃபார்ம்.

சகிமார், அஞ்சலி மற்றும் அதுல்யா ரவி நடிப்பில் கடந்த ஆண்டு வெளியான நாடோடிகள் 2 படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து கினிமாவிலும் அறிமுகமானவர் திருநங்கை நமிதா மாரிமுத்து. பிக் பாஸ் நிகழ்ச்சிக்கு பிறகு மேலும், பல படங்களில் இவர் நடிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொரோனா காலத்தில் உணவு இன்றி தவித்த பல ஏழை மக்களுக்கு முடிந்த அளவில் உணவுகள் வழங்கி சேவை செய்துள்ளார் நமிதா மாரிமுத்து. இந்த போட்டியில் ரொம்பவே டஃப்பான போட்டியாளராக இவர் இருப்பார் என்பதில் எந்தவொரு சந்தேகமும் இல்லை என நெட்டிசன்கள் கணித்து இவரது வருகையை பாராட்டி வருகின்றனர்.

கல்வியை இலவசமாக்கிய C.W. கன்னங்கர

கிறிஸ்தோபர் வில்லியம் விஜயகோன் கன்னங்கர இலங்கையின் தென் மாகாணத்திலுள்ள அம்பலாங்கொடயில் ரன்தொம்பே எனும் கிராமத்தில் 1884 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி ஜோன் டேனியல் விஜயகோன் கன்னங்கர, எமிலி விஜயசிங்க தம்பதியினருக்கு மகனாக பிறந்தார். இவரது தந்தை பலப்பிட்டிய நீதிமன்றத்தில் ஓர் உதவி உத்தியோகத்தராக பணியாற்றினார்.

C.W.W. கன்னங்கர தனது ஆரம்பக் கல்வியை ரன்தொம்பேயிலுள்ள வெஸ்லி கல்லூரியில் பயின்றார். கன்னங்கர இளமையில் கல்வியில் சிறந்த முறையில் திறமைகளை வெளிப்படுத்தினார். ஒரு சந்தர்ப்பத்தில் வெஸ்லி கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த காலி, ரிச்மன்ட் கல்லூரியின் அதிபரான வணக்கத்துக்குரிய J.H. டரெல், பரிசளிப்பு விழாவில் அதிகமான பரிசுகளை கன்னங்கரவே பெற்றுக் கொண்டமையைக் கண்டு கன்னங்கரவிடம், "தம்பி, நீ பரிசளிப்பு விழாவில் பெற்ற பரிசுகளை வீட்டுக்கு எடுத்துச் செல்ல மாட்டு வண்டி ஒன்று வேண்டும் என்று கூறினார். மேலும், அவர் கன்னங்கரவுக்கு ரிச்மன்ட் கல்லூரி நிதியத்தின் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றுவதற்கும் வாய்ப்பளித்தார். பரீட்சையில் கணித பாடத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்றமையால் கன்னங்கரவுக்கு புலமைப் பரிசில் கிடைத்தது. இதன்மூலம் ரிச்மன்ட் கல்லூரியின் அனுமதியும் மாணவர் விடுதியில் இலவசமாக தங்குவதற்கான வாய்ப்பும் பெற்றார். ரிச்மன்ட் கல்லூரியில் கன்னங்கர தனது கிராம பாடசாலையான வெஸ்லி கல்லூரியிலும் பார்க்க சிறந்த முறையில் கல்வி வழிகாட்டல்களை பெற்றுக் கொண்டார்.

கன்னங்கர ரிச்மன்ட் கல்லூரியின் மாணவராக இருந்த போது பல்துறையிலும் திறமைகளை வெளிப்படுத்தினார். 1903 இல் நடைபெற்ற கேம்பிரிட்ஜ் சீனியர் பரீட்சையில் கணித பாடத்தில் பிரித்தானிய பேரரசின் பட்டியலிலும் இலங்கைப் பட்டியலிலும் முதல்நிலையில் சித்தியடைந்தார். 1903 இல் ரிச்மன்ட் கல்லூரி விளையாடிய முதல் பதினொரு கிரிக்கெட் போட்டிகளிலும் அணித் தலைவராக செயற்பட்டார். மேலும் அதே வருடத்தில் கல்லூரி காற்பந்து அணியிலும் இடம்பெற்றார். கிரிக்கெட்டிலும் காற்பந்தாட்டத்திலும் சிறப்பான திறமைகளை வெளிக்காட்டி பாராட்டுக்களையும் பெற்றார். மேலும், கன்னங்கர சிறந்த நடிப்பாற்றலும் விவாதத் திறமையும் கொண்டவராக விளங்கினார்.

கன்னங்கர பாடசாலை கல்வியை முடித்துக்கொண்டு ஆசிரியரானதன் பின் ஒரு வழக்கறிஞராக பணியாற்றினார். இலங்கையில் அக்காலத்தில் வலுப் பெற்றுவந்த விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டதன் மூலம் அரசியலுக்குள் நுழைந்தார். 1923 இல் கன்னங்கர இலங்கை சட்டவாக்கப் பேரவைக்கு முதலில் தெரிவானார். தெரிவானதன் பின்னர் அரசாங்க சபைக்கும் தெரிவு செய்யப்பட்டார். இவர் இலங்கை தேசிய காங்கிரஸின் தலைவராகவும் செயற்பட்டார்.

கன்னங்கர கல்லூரிக் கல்வியை முடித்துக் கொண்டதும் ரிச்மன்ட் கல்லூரியிலேயே கணித ஆசிரியராக பணியாற்றினார். பின்பு மொரட்டுவ, பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரியிலும் கொழும்பு வெஸ்லி கல்லூரியிலும் கற்பித்தார்.

கன்னங்கர ஆசிரியராகப் பணியாற்றும் வேளையில் சட்டக்கல்வியை மேற்கொண்டார். 1910 இல் கன்னங்கர ஒரு சட்டத்தரணியாக வெளியேறினார். அதே வருடத்தில் காலியில் சட்டத்தரணியாக பணியாற்றினார். 1922 இல் கன்னங்கர எடித் டி அல்விஸ் எதிரிசிங்க என்பவரை திருமணம் செய்துகொண்டார்.

கன்னங்கர பாடசாலை கல்வியை முடித்துக்கொண்டு ஆசிரியரானதன் பின் ஒரு வழக்கறிஞராக பணியாற்றினார். இலங்கையில் அக்காலத்தில் வலுப் பெற்றுவந்த விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டதன் மூலம் அரசியலுக்குள் நுழைந்தார். 1923 இல் கன்னங்கர இலங்கை சட்டவாக்கப் பேரவைக்கு முதலில் தெரிவானார். தெரிவானதன் பின்னர் அரசாங்க சபைக்கும் தெரிவு செய்யப்பட்டார். இவர் இலங்கை தேசிய காங்கிரஸின் தலைவராகவும் செயற்பட்டார்.

1940 களில் அரசாங்க சபையில் கன்னங்கர கல்வி அமைச்சராக பணியாற்றிய போது, இலங்கையின் கல்வித் துறையில் பாரிய சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார். கன்னங்கர கல்வியை இலவசமாக்கியதன் மூலம் நாட்டின் கிராமப் புறங்களிலுள்ள வறிய மாணவர்கள் உட்பட அனைத்து மாணவர்களும் கல்வி பெறுவதற்கான வாய்ப்பை உருவாக்கினார். மத்திய மகா வித்தியாலயங்கள் எனும் திட்டத்தை ஆரம்பித்ததன் மூலம் நாட்டின் கிராமப் புறங்களில் தரம்வாய்ந்த இரண்டாம் நிலைப் பாடசாலைகளை நிறுவினார். கல்வித்துறையில் கன்னங்கர ஏற்படுத்திய சீர்திருத்தங்களின் விளைவாக, இவர் இலங்கையின் இலவசக் கல்வியின் தந்தை எனப் போற்றப்படுகிறார்.

வழக்கறிஞரும் அரசியல்வாதியுமான கன்னங்கர இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆரம்பமான இலங்கையின் விடுதலைப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்தார். கன்னங்கர இலங்கை அரசாங்க சபையின் முதல் கல்வியமைச்சர் ஆனார். மேலும், நாட்டின் கல்வித்துறையில் பாரிய சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றினார். இவரது சீர்திருத்தங்களால் சமூகத்தின் அனைத்து மட்டத்திலும் இருந்த சிறுவர்கள் கல்வி பயிலக் கூடியதாக இருந்தது.

கன்னங்கர 1969 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 23 ஆம் திகதி கொழும்பில் காலமானார்.

பரீட் இக்பால்
யாழ்ப்பாணம்

பவுசுல்லா – சீதுவை

அஸ்வர் அனூப்

சாரீக் அமீன் – மடவள பஸார்

தனுராக் – நீர்கொழும்பு



ஷஹ்லா – மல்வானை

அனு – வத்தளை

தினகரனின் செந்தூரம் இதழின் செல்பிஉலா பக்கத்தில் உங்களது செல்பிக்களும் இடம்பெற விரும்பினால் selfiulla@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு படத்தையும் விபரங்களையும் அனுப்பி வையுங்கள். செல்பிக்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

செல்ஃபி உலா

ஷானி கஜீவன் – கொட்டாஞ்சேனை

ஜப்ரி – வாங்காமம்

சுபாஷினி – மட்டக்குளிய

பிரகலாதன் – நீர்கொழும்பு

12 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்

நிறம் தீட்டுங்கள்



தொடர்புபடுத்துங்கள்

வழி காட்டுங்கள்



தன்னம்பிக்கையால் தன் விதிக்கே சவால் விடும் 7 வயது மாணவி ஆமினா ரூமி

தனது காயத்தின் கீறல்களை சித்திரமாக வடித்து ஆச்சரியப்படுத்தினார்

சோதனை என்ற குறுகிய வட்டத்திற்குள் முடங்காமல், துவண்டு போகாமல் அச்சோதனைகளை சாதனையாக மாற்றுவதிலே தான் வாழ்க்கை வண்ண மயமாகின்றது. சிறு வயதில் வரும் சோதனைகள் அவர்களின் எதிர்காலத்தையே பாதிக்கக் கூடியது. அவற்றை தடைக்கல்லாக அன்றி படிக்கல்லாக மாற்றி முழு உலகையும் திரும்பிப் பார்க்கவே செய்கின்றனர்.

இரண்டரை வயது முதல் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ள ஏழு வயதான சிறுமி ஆமினா ரூமி கடந்த ஒரு வருடமாக " டயலைஸிஸ்" சிகிச்சைக்கு உட்பட்டு வருகிறார். இருந்தும் துவண்டு விடாது எதிர்கால இலட்சியங்களுடனும் கனவுகளுடனும் வீருநடைபோட்டு வருகிறார் அவர்.

பேருவளை சீனங்கோட்டை ஆரம்ப பாடசாலையில் தரம் இரண்டில் கல்வி பயிலும் சிரேஷ்ட ஊடகவியலாளர் ரூமி ஹாரிஸின் மகள் செல்வி ஆமினா ரூமி தனது காயத்தின் கீறல்களை சித்திரமாக வரைந்து தன்னை அனுதாபமாக பார்க்காமல் ஆச்சரியமாக பார்க்க வைத்துள்ளார்.

அதனாலோ என்னவோ காயத்தின் கீறல்கள் (Scribbles of pain) என்ற தலைப்பில் சர்வதேச சிறுவர் தினத்தில் பேருவளையில் அவரின் இல்லத்தில் சித்திரக் கண்காட்சியொன்று இடம்பெற்றது.

இத்தகைய மோசமான நோயினால் பாதிக்கப்பட்டு ரணங்கள் நிறைந்த சிகிச்சைகளுடன் வாழ்ந்துக் கொண்டிருக்கும் சிறுமி ஆமினா வைத்தியசாலையில் இருந்தும் வீட்டிலிருந்தும் வரைந்த 50 க்கு மேற்பட்ட சித்திரங்கள் " காயத்தின் கீறல்கள்" என்ற கண்காட்சியில் காட்சிக்காக வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் பிரதம அதிதியாக அரும்பு சஞ்சிகை ஆசிரியர் ஹாபிஸ் இஸ்ஸதீன் கலந்துகொண்டதோடு சிறப்பு அதிதிகளாக சிறுவர் விஷேட வைத்தியர் மர்ஜான் ஹூஸைன், பேருவளை சீனங்கோட்டை ஆரம்ப பாடசாலை அதிபர் திருமதி. ஜெஸீலா, வகுப்பாசிரியை திருமதி பாஹிமா,Crown International பாலர் பாடசாலை பணிப்பாளர் ஹிஷாம் கரீம், சிரேஷ்ட மார்க்க அறிஞர் அஷ்ஷேய்க் பாயிஸ் அஷ்ரபி, கொழும்பு பல்கலைகழகத்தின் வருகை தரு விரிவுரையாளரும் எழுத்தாளருமான இப்ஹாம் அஸ்லம், Excell English College பணிப்பாளர் ஹிஷாம் மாக்கான் உட்பட குடும்பத்தினர் மற்றும் சிறுவர்கள் எனப் பலரும் குறித்த நிகழ்வில் கலந்து சிறப்பித்ததோடு பாராட்டி பரிசில்களையும் வழங்கினர்.

ஆமினாவின் வரையும் ஆற்றலை இன்னும் மேம்படுத்தி மேலும் சித்திரங்களை வரைய தூண்டி பலரின் வேண்டுகோளின் பேரில் பிராமாண்டமான ஒரு கண்காட்சியை ஏற்பாடு செய்ய இருப்பதாகவும் அதில் ஆமினாவின் சித்திரங்களை புத்தகமாக ஆவணப்படுத்தி வெளியிட இருப்பதாகவும் ஆமினாவின் தந்தை ரூமி ஹாரிஸ் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட அதிதிகள் உரையாற்றும் போது சித்திரங்களில் தனித்துவம் இருப்பதாகவும் சிறுமி ஆமினா அவரது பாரதூரமான நோய் நிலமைக்கு மத்தியில் இவ்வாறான முயற்சியை மேற்கொண்டமை வியப்பளிப்பதாகவும் ஆமினாவின் திறமைகளை இனங்கண்டு அவருக்கு வாய்ப்பளித்து ஊக்கமளித்துக் கொண்டிருக்கும் பெற்றோர்கள் ஏனைய பெற்றோர்களுக்கு ஒரு முன்னுதாரணம்

என தெரிவித்தனர். அத்துடன் செல்வி ஆமினா ரூமிக்கு விரைவில் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளமையால் இந்நிகழ்வில் ஆமினாவிற்கு பூரண ஆரோக்கியம் வேண்டி அஷ்ஷேய்க் பாயிஸ் அஷ்ரபியினால் பிரார்த்தனை நிகழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆமினாவின் சித்திரக் கண்காட்சியில் கலந்துகொண்ட சீனங்கோட்டை ஆரம்ப பாடசாலை அதிபர் ஜெஸீலா குறிப்பிடுகையில், ஒவ்வொரு சித்திரமும் ஆழ்ந்த கருத்துக்களை வெளிப்படுத்தும் வகையில் நுணுக்கமாக வரையப்பட்டிருப்பதோடு பாடசாலையிலும் ஏனைய சாதாரண மாணவர்களை போல சுறுசுறுப்பாக துடிப்புடன் எல்லா செயற்பாடுகளிலும் பங்கேற்பதாகவும், இறைவன் ஒன்றில் குறை வைத்தால் இன்னொரு விஷேட ஆற்றலை கொடுப்பான் என்பதற்கு ஆமினா சிறந்த எடுத்துக்காட்டாவார் என்றார். தனது பாடசாலை மாணவி இவ்வாறு

நான் நொம்ப பீலி...

மிக ஆர்வத்தோடு பங்கேற்பதாகவும் தெரிவித்தார். கொரோனா இடர்காலத்தில் பாடசாலைகள் மூடப்பட்ட போதிலும் நிகழ்நிலை செயற்பாடுகளில் எல்லாம் பங்கேற்பதோடு ஏனைய மாணவர்களோடு ஒப்பிடுகையில் தானும் சளைத்தவரல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் வாசித்தல், எழுதுதல், வரைதல், ஆடல், பாடல் என எல்லாச் செயற்பாடுகளிலும் பங்கேற்பதோடு தன் வலிகளுக்கு மத்தியில் ஓய்வு நேரங்களை ஆக்கப்பூர்வமான விடயங்களுக்கு அர்பணிப்பதை கண்டு அகமகிழ்வதாகவும் குறிப்பிட்டார்.

ஆமினாவின் தந்தை சிரேஷ்ட ஊடகவியலாளர் ரூமி ஹாரிஸிடம் ஆமினாவின் நிலைமை தொடர்பில் கேட்ட போது ஏழு வயது நிரம்பிய ஏனைய சிறுவர்கள் இதைவிட அழகிய முறையில் சித்திரங்களை வரையக் கூடியவர்களாக இருக்கலாம். இருந்தாலும் ஆமினாவின் சித்திரங்களை கண்காட்சியாகக் கொண்டாட காரணம் இரண்டரை வயது முதல் வைத்தியசாலையும் கையுமாக காலத்தை கழிக்கும் அவள் காயங்களுடனும் வேதனைகளுடனும் ரணங்களுடனும் இருக்கும் மனநிலையில் பென்சிலை கையில் எடுப்பது உண்மையில் மெச்சத்தக்க சாதனையாக தான் கருத முடியும். அவ்வாறான வலிகள் நிறைந்த வாழ்க்கைப் பயணத்தில் அவளது கீறல்களை தான் ஓவியமாக தான் பார்ப்பதாகவும் அவள் இந்த "காயத்தின் கீறல்" கண்காட்சியூடாக இந்த கீறல்களுடாக காயங்களை மறந்து குதூகலமாக இருப்பதாகவும் தெரிவித்தார். மேலும் இம்மாணவிக்கு சிறுபராயம் முதல் அழகாக வரைதல், ஆடல், பாடல், எதை கண்டாலும் கற்பனை செய்து பாடல்கள் இயற்றி தன் மழலை மொழியில் பாடும் ஆற்றல், மிகுதியான ஞாபக சக்தி, தன்னம்பிக்கை போன்ற திறன்களை பெற்று திகழ்வதாகவும் எதிர்காலத்தில் எழுத்துத் துறையில் ஊக்கப்படுத்தி மிளிரச் செய்ய வேண்டுமென தான் பேரவா கொள்வதாகவும் தெரிவித்தார்.

இது போன்ற நோய்வாய்ப்பட்ட குழந்தைகளை பெற்றோர் மூலையில் முடக்காமல் அவர்களின் விஷேட திறன்களை உற்காகத்துடன் செயற்படுவது தனக்கு மகிழ்ச்சி அளிப்பதாகவும் எதிர்காலத்தில் மேலும் பல சாதனைகளை புரிய பிரார்த்திப்பதாகவும் மேலும் தெரிவித்தார்.

ஆமினாவின் வகுப்பாசிரியை திருமதி பாஹிமாவிடம் குறித்த மாணவி மற்றும் அவரின் திறமைகள் தொடர்பில் வினவிய போது ஆமினா நோய் காரணமாக ஒரு மாதமளவு தான் பாடசாலைக்கு வந்த போதிலும் வகுப்பறையில் எல்லாவித கற்றல் கற்பித்தல் மற்றும் பாட இணைச் செயற்பாடுகளிலும் சிறப்பாக துலங்குவதாகவும் இனங்கண்டு சாதாரண பிள்ளைகளை சமூகத்திற்கு அடையாளப்படுத்துவது போன்று அவர்களையும் அடையாளப்படுத்தி அவர்களின் திறமைக்கு உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு வித்துக்குள்ளும் ஒவ்வொரு விருட்சம் ஒழிந்திருப்பது போன்று ஒவ்வொரு பிள்ளையிடமும் உள்ள திறன்கள், ஆற்றல்கள் சரியாக புடம் போடப்பட்டு பட்டைத்தீட்டப்பட வேண்டும்.

ஆமினா என்ற இச்சிறுமி நாடளாவிய ரீதியில் இன்று பேசுபொருளாக மாறியிருப்பது போன்று

ஏனைய மாணவர்களும் விடுமுறை காலத்தில் பயனுள்ள ஏதாவதொன்றை செய்து முன்னிலைக்கு வரவேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும் என்றனர்.

ஆமினா என்ற அந்த பிஞ்சு மாணவியிடம் உங்கள் எதிர்கால இலட்சியம் என்ன? என்று வினவிய போது வைத்தியராவது என்று புன்னகையுடன் கூறினார்.

எல்லா மாணவர்களும் சொல்வது போலவா இவரும் குறிப்பிடுகிறார் என்று இது தொடர்பில் பெற்றோரிடம் கேட்ட போது ஆமினா பாடசாலையில் ஆசிரியர்களோடு காலத்தை கழித்ததை விட கூடுதலாக பெற்றோருக்கு அடுத்த படியாக வைத்தியர்களுடனே நேரத்தை செலவழித்தார், வைத்தியர்களே கூடுதலாக இவரின் இன்ப துன்பங்களில் பங்கேற்றுள்ளதோடு அதிகமாக நோயாளிகளுக்கு உதவக் கூடியவர்களாக இருக்கிறார்கள். இதை அடிக்கடி காண்பதால் இவ்விலக்கை தெரிவு செய்திருக்கலாம் என்றனர்.

மேலும் நோயாளியாக இருந்து மரணித்த எழுத்தாளர் இர்பான் ஹாபிலை போன்று தேசிய ரீதியாக மாத்திரமன்றி சர்வதேச ரீதியாகவும் பிரபல்யமான சாதனையாளராக மாற வேண்டும் என்பதே தங்கள் எதிர்பார்ப்பாகும் என்றனர்.

மாணவி ஆமினா ரூமி பூரண சுகம்பெற்று சாதனைகள் பல படைக்க எமது வாழ்த்துக்களும் நித்தம் பிரார்த்தனைகளும்.

தஸ்லீமா காதர்

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

வேகமாக உடல் எடையை குறைக்கவேண்டுமா?

இன்றைய காலத்தில் உடல் எடையைக் குறைப்பது எளிதான ஒன்று தான். ஆனால் நிரந்தரமாக உடல் எடையைக் குறைப்பது என்பது தான் கடினமான வேலை. ஏனெனில் தற்போதைய நவீன டயட் மற்றும் உடற்பயிற்சிகளை தினமும் பின்பற்றுவதன் மூலம் தற்காலிகமாக உடல் எடையை வேகமாக குறைக்கலாமே தவிர, அவற்றை நிறுத்தினால் மீண்டும் உடல் எடை அதிகரிக்க ஆரம்பிக்கும்.

எனவே உடல் எடையைக் குறைக்க நினைத்தால் இயற்கை வழிகளை குறிப்பாக பக்க விளைவுகள் இல்லாத வழிகளைப் பின்பற்ற முயற்சிக்க வேண்டும். பொதுவாக நிரந்தரமாக உடல் எடையைக் குறைக்க முயலும் போது, அதன் பலன் அவ்வளவு எளிதில் கிடைக்காது. அதற்கு சற்று பொறுமைக் காக்க வேண்டும்.

இங்கு உடல் எடையைக் குறைக்க சில எளிய வழிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைப் படித்து தினமும் பின்பற்றி வந்தால், உடல் எடை கணிசமாக குறைவதை நீங்களே காணலாம்.

எலுமிச்சை மற்றும் உப்பு

தினமும் காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில் வெதுவெதுப்பான நீரில் எலுமிச்சை சாறு மற்றும் உப்பு சேர்த்து குடித்து வர, உடல் எடை குறைய ஆரம்பிப்பதை நன்கு உணர முடியும்.

பூண்டு பால்

45 பூண்டை ஒரு டம்ளர் பாலில் போட்டு பாதியாக சுண்டும் வரை கொதிக்க வைத்து இறக்கி, பாலுடன் பூண்டை சாப்பிட வேண்டும். இதனால் பூண்டு உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புக்களை கரைத்து வெளியேற்றும்.

பசும் பால்

தினமும் வெதுவெதுப்பான பசும் பாலில் தேன் கலந்து குடித்து வர, உடல் எடையில் நல்ல மாற்றம் தெரியும்.

புடலங்காய்

புடலங்காயை தினமும் உணவில் சேர்த்து வந்தால், அது உங்கள் உடல் எடையைக் குறைக்க உதவும். அதிலும் புடலங்காய் பொரியல் செய்து, சப்பாத்தியுடன் சேர்த்து சாப்பிட்டால் அற்புதமாக இருக்கும்.

கரட் மற்றும் மோர்

தினமும் மோரில் கேரட்டை அரைத்து கலந்து குடித்து வர, உடல் எடை குறைவதை நன்கு காணலாம்.

பப்பாளிக் காய்

பப்பாளிக் காயை பருப்புடன் சேர்த்து அடிக்கடி சமைத்து சாப்பிட்டு வர, அதுவும் உடல் எடை குறைய உதவியாக இருக்கும்.

மிளகுத் தூள்

உடல் எடையைக் குறைக்க நினைக்கும் போது காய்கறிகள் சேர்க்கப்பட்ட சூப் செய்து குடிப்பது நல்லது. அப்படி சூப் செய்து குடிக்கும் போது, அதில் மிளகுத் தூளை சேர்த்து குடித்து வர, அதனால் சூப்பின் மணமும், சுவையும் அதிகரிப்பதோடு, உடலில் உள்ள அதிகப்படியான கொழுப்புக்களும் கரையும்.

சூப்

உடல் எடையை வேகமாக குறைக்க நினைத்தால், 23 மாதங்களுக்கு தினமும் இரவில் காய்கறி சூப் செய்து குடித்து வாருங்கள். இதனால் உங்கள் உடலில் கொழுப்புக்கள் சேர்வது கட்டுப்படுத்தப்படும்.

துளசி பானம்

ஒரு டம்ளர் வெதுவெதுப்பான நீரில் 1/2 டீஸ்பூன் துளசியை பேஸ்ட் செய்து சேர்த்து, அத்துடன் தேன் கலந்து காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். இப்படி செய்வதால், உடலில் உள்ள நச்சுக்கள் மற்றும் தேவையற்ற கொழுப்புக்கள் கரைக்கப்பட்டு வெளியேற்றப்படும்.

எலுமிச்சை மற்றும் தேன்

இது அனைவருக்கும் தெரிந்த ஓர் வழி தான். அது வெதுவெதுப்பான நீரில் எலுமிச்சை சாறு மற்றும் தேன் கலந்து, தினமும் காலையில் வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். இப்படி தினமும் செய்து வந்தால், உடல் எடையில் நல்ல மாற்றத்தைக் காணலாம்.

தக்காளி

34 மாதங்களுக்கு தினமும் காலையில் ஒரு தக்காளியை சாப்பிட்டு வர, உடலில் உள்ள கொலஸ்ட்ராலின் அளவு கட்டுப்பாட்டுன் இருப்பதோடு, கொழுப்புக்கள் குறைந்து, உடல் எடையும் குறைய ஆரம்பிக்கும்.

கொள்ளு

உடல் எடையைக் குறைக்க உதவும் உணவுப் பொருட்களில் ஒன்று கொள்ளு. அத்தகைய கொள்ளுவை 12 டேபிள் ஸ்பூன் எடுத்துக் கொண்டு, 1 டம்ளர் நீரில் இரவில் படுக்கும் போது ஊற வைத்து, மறுநாள் காலையில் அந்த நீரைப் பருக வேண்டும். இப்படி தினமும் பின்பற்றி வர, உங்கள் உடல் எடை குறைந்திருப்பதை நீங்கள் காண்பீர்கள்.

முட்டைக்கோஸ்

எடையைக் குறைக்க நினைத்தால், முட்டைக்கோஸை அன்றாட உணவில் சேர்க்க வேண்டும். அதற்கு அந்த முட்டைக்கோஸை சாலட்டாகவோ அல்லது வேறுவிதமாக சமைத்தோ சாப்பிடலாம்.

கறிவேப்பிலை

34 மாதங்களுக்கு தினமும் காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில் 1012 கறிவேப்பிலை இலைகளை உட்கொண்டு வர, நீங்கள் எதிர்பாராத அளவில் உங்களின் உடல் எடையில் நல்ல மாற்றம் தெரியும்.

இஞ்சி சாறு

இஞ்சி சாறு உடலின் மெட்டபாலிச அளவை அதிகரிக்கும். உடலில் மெட்டபாலிசத்தின் அளவு அதிகமானால், கலோரிகள் எரிக்கப்பட்டு, உடல் எடை குறையும். எனவே இஞ்சி சாற்றினை அன்றாடம் ஒரு டம்ளர் பருகி வர உடல் எடை குறையும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

தமிழ்த் திரையிசைப் பாடல்கள்

நயப்பும் வியப்பும் – 23

இரசனையைத் தூண்டும் ஹரிஸ் ஜெயராஜ் பாடல்கள்

தமிழ்த் திரையிசைன் நகர்வில் கடந்த 20 வருடங்களாக தனக்கென தனித்துவ முத்திரையைப் பதித்தவர் இசையமைப்பாளர் ஹரிஸ் ஜெயராஜ். பன்னிரண்டு வயதிலேயே இசைத்துறைக்குள் ஒரு கிற்றார் வாத்தியக் கலைஞராக நுழைந்த இவர் பின்னர் கீபோர்ட் வாத்தியத்தை முறையாகக் கற்றுக்கொண்டு நகரத் தொடங்கினார்.

இசைப்புயல் ரகுமானிடம் உதவியாளராக ஆரம்ப நாட்களில் பணியாற்றிய இவர் மிகுந்த துடிப்பும் இசை ஞானமும் உள்ளா ஒருவராக திகழத் தொடங்கினார். பிரபல இசையமைப்பாளர்கள் பலருடனும் பணியாற்றிய ஒருவராகவும் இருந்திருக்கின்றார்.

2001 ஆம் ஆண்டு "மின்னலே" திரைப்படம் வாயிலாக தமிழ்த் திரைக்குள் இசையமைப்பாளராக அறிமுகமானார். கௌதம் மேனன் அவர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட இவர், "மின்னலே" திரைப்படப் பாடல்களின் ஊடாக நன்கு அவதானம் பெற்றார். தாமரையின் வரிகளிலமைந்த,

"வசீகரா என் நெஞ்சினிக்க
உன் பொன்மடியில்"

என்ற பாடல் அந்த நாட்களில் நல்ல ஹிட் பாடலாக அமைந்து அனைவரையும் கவர்ந்தது.

"மஜ்னு" திரைப்படத்தில் அமைந்த,

"முதற்கனவே முதற்கனவே
மறுபடி ஏன் வந்தாய்"

என்ற பாடலும் வித்தியாசமான ஒரு பாடலாக வெளியாகி பல காதல் நெஞ்சங்களை கொள்ளை கொண்டது.

தொடர்ச்சியான பாடல்களை பிற இசையமைப்பாளர்கள் இசையில் கேட்டுப் பழகிக் கொண்ட ரசிகர்களிற்கு ஹரிஸ் அவர்களின் புதிய பாணி இசைப் பாடல்கள் மெல்லிசையாய் வருடத் தொடங்கியது. மேற்கத்தேய இசைக்குள் கூட கர்நாடக இசையை கோர்த்து வழங்கும் அருமையான பாங்கும் இவருக்கானது ஆகும்.

2002 களில் வெளியான, "சாமுராய்" திரைப்பட பாடல்கள் இவருக்கு மேலும் சிறப்பைப் பெற்றுக் கொடுத்தது. ஹரிஸ் ராகவேந்திரா, ஹரிணி குரலில் உருவான,

"ஆகாயச் சூரியனை
ஒற்றை ஜடையில்"

என்ற பாடலும் திப்பு, ஹரிஹரனின் குரலில் வெளியான,

"மூங்கில் காடுகளே
வண்டு முகரும்"

என்ற பாடல் அனைவராலும் விரும்பி இரசிக்கப்பட்டது. அற்புதமான மெலடி பாடல்களாக அமைந்து வெளியானது. புல்லாங்குழல் வாத்தியத்தை மிக அற்புதமாக பாடல்களில் சேர்த்திருப்பார் ஹரிஸ்.

இயக்குனர் ஹரியின் இயக்கத்தில் 2003இல் வெளியான "சாமி" திரைப்படப் பாடல்கள் அனைத்தும் மெஹா ஹிட் ஆகின. சித்ராவின் குரலில் உருவான,

"இது தானா இது தானா
எதிர்பார்த்த அந்நாளும்"

பாடல் தாமரையின் வரிகளில் அமைந்து மிகச் சிறப்பான ரசனை பூர்வமான பாடலாக அமைந்தது. நிச்சயதார்த்தம் முடிந்து திருமண நாள் நெருங்க நெருங்க ஒவ்வொரு மணப்பெண்ணின் மனதிலும் ஒலிக்கும் கனவைக் கொட்டித் தீர்க்கும் ஒரு பாடலாக இது அமைந்தது.

ஹரிஸின் இசைப்பயணத்தில் மிக முக்கியமான திரைப்படமாக "உள்ளம் கேட்குமே" திரைப்படம் அமைந்தது. குறிப்பாக அனைத்து பாடல்களும் கதைகேற்ப சிறப்பாக அமைந்து அனைவரையும் ரசிக்க வைத்தது. உன்னி கிருஷ்ணன், ஹரிணி குரலில் இடம்பெற்ற,

"மழை மழை என் உலகத்தில்
வருகின்ற முதல் மழை"

என்ற பாடலும் ஹரிஹரனின் குரலில் அமைந்த,

"ஓ மனமே ஓ மனமே
உள்ளிருந்து அழுவது ஏன்"

என்ற பாடல் பிரிவின் தவிப்பை சொல்லும் அற்புதமான உனர்வுப் படையலாக இவரின் இசையில் வெளியானது.

பிரம்மாண்ட இயக்குனர் சங்கர் எப்போதும் இசைப்புயல் ரகுமானுடனேயே வேலைச் செய்து வருகின்ற சூழல் திரைவெளியில் இருந்து வந்துள்ளது. ஆனால், 2005 இல் சங்கர் தனது "அந்நியன்" திரைப்படத்திற்கான இசையமைப்புப் பணியினை ஹரிஸ் இடம் கையளித்தார். மிகப்பெரும் சவாலாக இந்தத் திரைப்படப் பாடல்களை ரகுமானின் சாயலில் இசையமைத்து அனைத்துப் பாடல்களையும் ஹிட் ஆக்கினார்.

ஹரிஹரன், ஹரிணி குரலில் உருவான,

"ஐயங்காரு வீட்டு அழகே
ஐயங்காரு வீட்டு அழகே"

மற்றும்

"அண்டங்காக்கா கொண்டக்காரி
ரண்டக்க ரண்டக்க"

போன்ற பாடல்களை மிக அழகாக செதுக்கினார்.

ஹரிச் ஜெயராஜின் இசை தொடர்பில் பல்ர் சில விமர்சனங்களை முன் வைத்தாலும் அவரது பாடல்கள் ஒவ்வொரு காலத்திற்கும் ஏற்றாற் போல மிகச் சிறப்பான பாடல்களாக அமையப் பெற்ற பாடல்களாக தனித்துத் தெரிகின்றது.

வெற்றி துஷ்யந்தன்

கொழும்பு ஸாஹிராக் கல்லூரி மாணவர்களின் 12 கலை இலக்கிய நூல்கள் வெளியீடு

கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் ஆங்கிலம் மொழிமூலம் கல்விகற்கும் சிரேஷ்ட பிரிவின் 12 மாணவர்களது நூல் வெளியீட்டு வைபவம் கல்லூரியின் அதிபர் றிஸ்வி மரிக்கார் தலைமையில் அப்துல் கபூர் மண்டபத்தில் நடைபெற்றது. இவ் வைபவத்தில் மாணவர்களது கலை, இலக்கியம் மற்றும் சிறுகதைகள் அடங்கிய 12 நூல்கள் வெளியீட்டு வைக்கப்பட்டன.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் கலந்து கொண்டு மாணவர்களது 12 நூல்களின் முதற் பிரதிகளைப் பெற்றுக் கொண்டார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.